எமது புது வருட வாழ்த்துகள்.

பாரத நாட்டில்

ரிக்கார்டுகளை பாதுகாத்துவருவதில்

COCK BRAND FILE

TRADE MUTHUVEL MARK

“சேவல் மார்க்கு”

பைல்கள்தான் மிகச் சிறந்தது.

ஆபீஸ் பைல்கள், காலேஜ் பைல்கள், TAG பைல்கள், லீவர் ஆர்ச் பைல்கள், FOREIGN போர்டு கிளிப்பு பைல்கள், பேன்ஸி டாக்குமெண்ட் கேஸ் பைல்கள் & இதர பேன்ஸி பைல்களும் சிறந்த முறையில் தயார் செய்கிறோம்.

Phone No.	Estd.	Tel.
54	1947	Sahayam

Manufactured by :

MUTHUVEL INDUSTRIES

DINDIGUL. (S. India)

January 1958

பூரண திருப்தி அடைந்தீர்களா ?

சங்கீத விழாக்கள், பொருட்காட்சிகள், பல்வேறு மகாநாடுகள் எல்லாம் பார்க்க சென்னைக்கு வரும் வெளியூர் அன்பர்கள் அவற்றைக் கண்டு கேட்டு மட்டும் முழு திருப்தி அடைய முடியாது. புஹாரியின் வித விதமான உணவு, தின்பண்டங்களையும் உண்டு களித்தால் தான் உங்களின் சென்னை வருகை சிறப்புறும்; பூர்த்தியடையும்.

ஏன் ?

முந்திய ஆண்டுகளில் நீங்கள் சாப்பிட்டிராத சத்தும் ருசியும் நிறைந்த புதுமாதிரியான வட இந்திய தென்னிந்திய, ஐரோப்பிய விசேஷ உணவுகள் புஹாரியில் தயாராகின்றன.

அனைவரும் வந்து புகாரி உணவு வகைகளை உண்டு மகிழுங்கள்.

உணவு சாலைகளில் சிறந்தது புஹாரி

BUHARI HOTELS

MOUNT ROAD, CHINA BAZAAR, MARINA BEACH

பிறை

ஜனவரி 1958
ரபீயுல் ஆகிர் 1377

ஆண்டு மலர்

இஸ்லாமிய இலக்கிய மாதப் பத்திரிகை
ஆசிரியர் :
ஏ. எம். மீரான்
மலர் 2 :: இதழ் 1

198312

பக்கம்

"வாழ்க! வாழ்க!!" 4
ஊழியர் மாநாடு (தலையங்கம்) 5
பிறைக் கதிர் 6
முஸ்லிம்லீக் ஊழியர் மாநாடு ஆலோசனைக்குரிய ஐந்தாண்டுத் திட்டங்கள் 8
தித்திக்கும் திருமறை-எம். அப்துல் வஹ்ஹாப், எம்.ஏ., பி.டி எச். 13
முள் வேலி – கா. அப்துஸ்ஸத்தார் 17
ஆசை (கவிதை) – 'ரஹ்மான்' 28
அவள் செய்த உதவி (சிறுகதை) – 'கவுஸ்' 30
உருவமா, உள்ளமா? – இஸ்மாயீல் கனீ 40
துப்பறியும் விஞ்ஞானம் – அ. அப்துர் ரஹீம் 42
ரோஜா முள் (தொடர் கதை) – 'மகுதூம்' 46
பாத்திரம் அறிந்து...... – மௌலவி ஜைனுல் ஆபிதீன் 58
அப்படி நடந்திருந்தால்......? (சிறுகதை) – 'ஜேயெம்' 59
சோதிடன் கற்ற பாடம் - மௌலவி எஸ். ஏ. ஜைனுல் ஆபிதீன் 69
பிறையே வாழ்க! (வசன கவிதை) – எம். எஸ். எம். ஸுபைர் 71
பிரிவும் பரிவும் (சிறுகதை) – சீதக்காதி 72
நான்கு அங்கங்கள்! மௌலவி எஸ். அப்துல் வஹ்ஹாப் 86
மூதாட்டியின் நீதிமொழி – 'இனுயத்' 91
ஹலீமா பேசினுள் (சிறுகதை) – 'ஜமீலா' 92
நமக்கு வடக்கே...(பிரயாணக் கட்டுரை) – வலங்கைமான் அப்துல்லாஹ் 101
குடுகுடுப்பாண்டி சொல்லும் கதை 4. சீர்வரிசை – ஆர். பி. மல்லாரி 106
கேள்வி பதில் 113
"இறைதோழர் இப்ராஹீம்" (கவிதை)–இபுனு ஜமாலுத்தீன் 116
முன்னணியும்... – எம். ஏ. அக்பர் 118
பின்னணியும்...... – 'மகுதூம்' 119

'பிறை'யில் இடம்பெறும் கதைகளிலுள்ள பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே.

உள்நாடு விலை 50 காசு :: வெளிநாடு விலை 62 காசு
(பத்து அணு)

"வாழ்க! வாழ்க!!"

198312

கா. முகம்மது பாருக்

★

சிந்தைக்கு விருந்தூட்டிச்
சிறப்பீட்டும் கட்டுரையை,
தென்னாட்டு வாழ்வதனைச்
சித்தரிக்கும் தொடர்கதையை,

சிந்திக்கத் தூண்டிவிடும்
சிறப்பான கவிதைகளை,
செவ்வியதாய் அருள்பொழியும்
தூயோனும் இறையோனின்

தித்திக்கும் திருமறையின்
தேன்சொட்டும் கருத்துரையை,
சீரியநற் றீந்தமிழின்
சுவைகொட்டும் சிறுகதையை,

எத்திக்கும் நிலைநாட்டி
எழிலோங்க வழிகாட்டி
இணையில்லாப் பணிபுரியும்
இளம்''பிறை''யே வாழ்கவாழ்க!

இருள்சூழும் உலகினிலே
இன்னொளியைத் தந்துதவி
இடர் களையும் மதியம்போல்
இதயத்திலே நிலைத்துவிட்டாய்!

மருள்சூழும் மக்கள்மனம்
மாண்படையத் துணைபுரிந்து
மணிவிளக்காய் ஒளிர்கின்றாய்!
மனைதோறும் மிளிர்கின்றாய்!

அருந்தமிழில் துறைபோய
அறிஞர்களைக் காட்டுகின்றாய்!
அன்புநெறி இஸ்லாத்தின்
அழகொளியாய் இலங்குகின்றாய்!

ஒருவருடப் பணியினிலே
ஓங்குபுகழ் பெற்றுவிட்டாய்!
உயர்''பிறையே''! ''வாழ்கவாழ்க''
எனவாழ்த்தி மகிழ்ந்திடுவோம்!

ஊழியர் மாநாடு

இம்மாதம் 11, 12 தேதிகளில் தென்னகத்தின் இயற்கைத் தலைநகராம் திருச்சியிலே இந்திய முஸ்லிம் லீக் ஊழியர்கள் மாநாடு கூடுகிறது. இந்தியா விடுதலை பெற்றதற்குப் பின், நாட்டு நடவடிக்கைகளில் முஸ்லிம்களின் குரல் பூரணமாக ஒலிக்கவில்லை. காங்கிரஸ்—லீக் கூட்டு உடம்படிக்கையின் பேரில் நிகழ்ந்த நாட்டுப் பிரிவினைக்கு, லீகை மாத்திரம் பொறுப்பாக்க முயன்றனர் சிலர். முஸ்லிம் லீக் செயல்படக் கூடாது என்று குரல் எழுப்பியவர்களும் இருக்கிறார்கள்.

ஆனால் கடந்த பத்தாண்டு காலத்தில் இத்தகையோரின் கருத்துக்கள் பெருமளவில் மாறிவிட்டன. அமைதியாகச் சேவை செய்யும் முஸ்லிம் லீக் ஸ்தாபனம், மக்கள் நலனுக்குப் பாடுபடுவதையே தன் குறிக்கோளாகக் கொண்டுள்ளது என்பது இவர்களுக்குத் தெளிவாகி வருவது கண்டு மகிழ்கிறோம். இந்நிலையிலே கூடும் முஸ்லிம் லீக் ஊழியர் மாநாடு, முஸ்லிம் லீக் ஊழியர்கள் எவ்வகையில் செயல்பட்டு மக்களுக்குப் பணியாற்றலாம் என்று சிந்தித்து, கலந்தாலோசித்து, திட்டங்கள் தீட்டும் என்று எதிர்பார்க்கிறோம்.

முஸ்லிம்களின் இன்றைய பிற்போக்குக்கு ஒரு பெருங்காரணம், அவர்களுடைய பொருளாதார பலஹீனம் தான் என்று உறுதியாகக் கூறலாம். தமிழக முஸ்லிம்கள் பொருளீட்டச் செல்லும் கடல் கடந்த நாடுகளும், திறந்திருந்த தம் நாட்டு வாயில்களை ஒவ்வொன்றாக அடைத்து வருகின்றன. ஆகவே அங்கிருந்து இனி நாடு திரும்பப்போகும் முஸ்லிம்களும் என்ன தொழில் செய்யப்போகிறார்கள்; எவ்வாறு பொருளீட்டப் போகிறார்கள் என்பதும் இப்பொழுதிருந்தே சிந்திக்க வேண்டியதொரு பிரச்னையாகும்.

பொருள் துறையிலே முன்னேற்றம் காணாது, அரசியல் துறையிலே மட்டும் நம் குரல் ஒலித்துக் கொண்டிருந்தால், நாம் உண்மையான முன்னேற்றம் அடைந்து விட்டதாகச் சொல்லமுடியாது. நம் பொருள்துறை வளம் பெற நாம் ஸ்தாபன ரீதியிலே எவ்வாறு செயல்படலாம் என்பதைப் பிறிதோர் இடத்திலே அனுபவமிக்க ஒரு வழக்கறிஞர் எழுதியிருக்கிறார். மாநாட்டில் கலந்துகொள்ளும் எல்லோர் கவனத்தையும் அது ஈர்க்கும் என்று எண்ணுகிறோம்.

தூய நோக்கும், தூர நோக்கும் கொண்டு மாநாடு திட்டங்கள் தீட்டும் என்று நாம் நம்புகிறோம். மாநாட்டின் தீர்மானங்களை முஸ்லிம்கள் ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர். சமுதாய வரலாற்றிலே திருச்சி மாநாடு தக்க இடம் பெறவேண்டும் என்று ஆசைப்படுகிறோம்.

திருச்சி மாநாடு வெற்றிகரமாக நடைபெற இறைவன் அருள் புரிவானாக.

பிறைக்கதிர்

நேருக்கு மாறு

முன்பெல்லாம், ''நேரு நேருக்கு நேராகவே'' பேசுவார் என்று கூறி நம் சகோதரப் பத்திரிகைகள் சில சந்தோஷப்படுவதுண்டு. ஆனால் பிரதமர் நெஹ்ரு சமீப காலத்தில் ஹிந்தி பற்றி பேசிய பேச்சுக்கள் நேருக்கு மாறாகவிருக்கின்றன.

ஹிந்தியை அனைத்திந்திய ஆட்சி மொழியாக 1965க்குள் புகுத்த முயல்வதை ஹிந்தி மொழி பேசப் படாத எல்லா இராஜ்யங்களும் எதிர்க்கின்றன. தென்னகம் மட்டுமல்ல வங்காளமும், மஹாராஷ்டிரமும், பஞ்சாபும் கூட அந்த முயற்சியைக் கண்டிக்கின்றன. தென்னாட்டில் கட்சி வேறுபாடின்றி எல்லோரும் ஹிந்தி புகுத்துப் படுவதை எதிர்க்கின்றனர்.

கல்கத்தாவில் கூடிய அனைத்திந்திய எழுத்தாளர் மாநாட்டில் பேசும்போது, 'தென்னாட்டில் உணர்ச்சி வசப்பட்டு சிலர் ஏதேதோ பேசுகின்றனர்- வட நாடு முழுவதும் ஒன்றாக தென்னாட்டினர் மீது, அவர்கள் விருபத்துக்கு விரோதமாக ஹிந்தி மொழியைப் புகுத்த முயல்கின்றனர் என்ற அச்சத்துக்கு இடமில்லை'' என்று பொருள்பட பிரதமர் கூறியிருக்கிறார். தபால் நிலையங்களில் விற்கப்படும் கார்டு கவர்களில் என்ன எழுதியிருக்கின்றது என்று புரியாமல் பொதுமக்கள் அவற்றில் காணும் ஹிந்தி எழுத்துக்களைக் கண்டு விழிக்கும் போது அச்சத்துக்கு இடமில்லை என்று சொல்லமுடியுமா? முன்னெல்லாம் இரண்டெழுத்து இங்கிலீஷ் படித்தவர்கள் கூட அதைப் படித்து தெரியாதவர்களுக்குக் கூறும் வாய்ப்பிருந்தது. இப்பொழுது அதுவுமில்லை. இந்தியாவில் உள்ள ஒவ்வொருவரும் மூன்று நான்கு மொழிகளாவது கற்றுக் கொள்ள வேண்டும் என்று தான் விரும்புவதாகவும் நெஹ்ரு குறிப்பிட்டிருக்கிறார்.

அன்றாட வாழ்க்கைக்கே திணறிக் கொண்டிருக்கும் நிலையில் ஒரு மொழியை சரிவரக் கற்பதற்கே வாய்ப்பில்லை; நான்கு மொழி படிக்க வசதியேது என்று பிரதமர் சிந்திக்காதது விந்தையே யாகும்!

★

தமிழ்நாடு முஸ்லிம் லீக் ஊழியர் மாநாட்டின் பொதுச் செயலாளர் ஜனாப் ஏ. எம். யூசுப் பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையில், ''நாட்டுப் பிரிவினைக்குப் பின் முஸ்லிம்கள் தேர்தலில் பங்கெடுத்துக் கொள்வது தவிர, மற்றப்படி அரசியலில் ஒதுங்கியே இருந்து வந்திருக்கிறார்கள். சமீப காலமாக ஜனநாயகத்துக்கு எதிரான சக்திகள் ஜனநாயக ஆட்சி முறையின் அடிப்படையையே அசைக்க ஆரம்பித்திருக்கின்றன. இந்நிலையில் நாட்டுப் பற்றுக் கொண்ட ஐந்து கோடி முஸ்லிம்களும் அமைதியையும், ஜனநாயக உணர்ச்சியையும் போற்றிப் பாதுகாப்பதில் அக்கறை காட்டும் சக்திகளோடு இணைந்து செயலாற்ற முன்னிற்பது பொருத்தமே,'' என்று குறிப்பிட்டு திருச்சியில் நடைபெறவிருக்கும் ஊழியர் மாநாட்டுக்கு நாட்டு நலனிலும் சமுதாய நலனிலும் அக்கரையுள்ள ஒவ்வொரு முஸ்லிமும் முழுமனதுடன் ஒத்துழைப்புத் தரவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்திருக்கின்றார்.

மலரும் மணமும்

அருளாளன் அன்புடையோன் அல்லாஹ்வின் கருணையதால் "பிறை" ஓராண்டு நிறைவு பெற்று, இரண்டாவதாண்டு துவக்க மலரை வெளியிடுகிறது. ஓவியமும், காவியமும்; கனிமொழியும் கட்டுரையும்: சிறுகதையும் நெடுங்கதையுமாக—இது இலக்கிய மலரல்ல இலக்கியச் சோலையாகவே மணக்கிறது. இத்தகைய அழகுச் சோலையை அமைத்துத் தந்த நேரத்திலும் எங்களுக்கு ஓரே ஒரு மனத்தாங்கல்—அதுதான் நாங்கள் விரும்பும் பகுதியெல்லாம் இதில் இடம் பெறச் செய்ய முடியாமை. நாங்கள் திட்டமிட்ட புதுப் பகுதிகளையும் புகுத்த முடியாமல் போயிற்று. மலரில் விடுபட்ட சில அம்சங்களை, அடுத்த இதழில் எட்டுப் பக்கங்களைக் கூட்டி, இடம் பெறச் செய்கிறோம் (இன்ஷா அல்லாஹ்), இயன்றபோதெல்லாம் சாதாரண இதழ்களை 72 பக்கங்களில் வெளியிடத் திட்டமிட்டிருக்கின்றோம். இறைவன் எங்கள் முயற்சிக்கு வெற்றியருள்வானாக. அழகோவியமாக ஓர் ஆண்டு மலர் வெளியிடும் இவ்வேளையில் எங்கள் எழுத்தாளர்களையும், ஓவியர்களையும், வாசகர்களையும், விற்பனையாளர்களையும், விளம்பரதாரர்களையும் வாழ்த்துகிறோம். அவர்கள் ஆதரவு என்றும் கிடைக்க இறை துணை செய்க!

— ஆசிரியர்

முஸ்லிம் லீக் ஊழியர் மாநாடு

ஆலோசனைக்குரிய ஐந்தாண்டுத் திட்டங்கள்

★

"ஊழியன்"

முஸ்லிம் லீக் ஊழியர்கள் மாநாடு இம்மாதம் 11, 12, தேதிகளில் காயிதே மில்லத் ஜனுப் M. முகம்மது இஸ்மாயில் ஸாஹிப் M. P. அவர்கள் தலைமையில் திருச்சியில் கூடவிருக்கிறது. பல ஆண்டுகளுக்குப் பின் முதன் முதலாகக் கூடும் முஸ்லிம்கள் மாநாடு இதுதான். முஸ்லிம்கள் முன் இன்று பல பிரச்னைகள் நிற்கின்றன. கல்வி, பொருளாதாரம், சமூக நலசேவை, (Social Service) கைத்தொழில் முதலிய சகல துறைகளிலும், மற்ற சமூகத்தாரைவிட நாம் பிற்பட்டு இருக்கிறோம். நாம் சிறுபான்மையினராக இருக்கிறோம் என்றாலும், நம் போன்று சிறுபான்மையினராக இருக்கும் வேறு சமூகங்கள் கல்வி, பொருளாதாரம் சமூக நலசேவை முதலியவற்றில் தங்களின் ஐக்கியம், சமூகக் கட்டுப்பாடு மூலம் மேலோங்கி பெரும்பான்மை சமூகத்தாரும் தங்களை மதித்து நடக்கும் வண்ணம் வாழ்கின்றனர் என்பதும் நாம் அறிந்ததே.

ஆகவே முஸ்லிம்களாகிய நாம் இன்று செய்யவேண்டியவை யாவை? முஸ்லிம்களுக்கிடையே உள்ள அறியாமையை நீக்கவும் வறுமையைப் போக்கவும் வகை செய்வது நம்முடைய முதற் கடமையாகும். ஆகவே நாம் வகுக்கும் திட்டங்களில் இவற்றிற்கு முதலிடம் கொடுத்து ஆவன செய்யவேண்டியது நம் தலைவர்கள் பொறுப்பாகும். இந்த நோக்கம் பரிபூரணமாக நிறைவேற பல்லாண்டுகள்; ஏன்; பல தலைமுறைகள் ஆகும் என்றாலும் நாம் தன்னம்பிக்கையுடன் ஐந்தாண்டுத் திட்டங்கள் வகுத்து நம் ஆக்க வேலைகளைச் செய்வோமாயின் நிச்சயம் நாம் கோரிய பலன் விரைவில்—அதாவது ஐந்து ஐந்தாண்டுத் திட்டங்களில்—கணிசமான அளவில் காணமுடியும். ஆகவே, கீழேதரும் யோசனைகளை முஸ்லிம்களும் குறிப்பாக லீக் ஊழியர் மாநாட்டை நடத்துவோரும் தங்களின் சிந்தனைக்கு எடுத்து கவனிக்கும்படியாகக் கேட்டுக் கொள்கிறோம்.

ஐந்தாண்டுத் திட்டங்கள் என்றதும் முஸ்லிம்கள் மலைக்க வேண்டியதில்லை. இது அவர்களுக்குப் புதிதுமல்ல. துருக்கியின் விடுதலை வீரர் முஸ்தபா கமால் தம் நாடு விடுதலை அடைந்ததும் அது பல துறைகளிலும் சீர்கெட்டு, சிறப்பிழந்திருப்பதைக் கண்ணுற்று முதல் ஐந்தாண்டுத் திட்டம், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் என்று திட்டங்கள் வகுத்து, அதை படிப்படியாகக் கல்வி, பொருளாதாரம், கைத்தொழில், வாணிபம் முதலிய எல்லாத் துறைகளிலும் உன்னத நிலையை அடையச் செய்து உலகத்தில் ஏனைய நாடுகள் துருக்கியை மதித்து நடக்கச் செய்தார். இதே மாதிரி நம் சமூக நல ஐந்தாண்டுத் திட்டங்கள் எவ்வாறு அமைய வேண்டும் என்பதைப் பார்ப்போம்.

1. முஸ்லிம் மக்களிடையே கல்வியை, அதிலும் முக்கியமாக பெண் கல்வியைப் பரத்த வழி செய்யவேண்டும். முஸ்லிம் பண்பாடு, வாழ்வு முறை முதலியவற்றிற்கு ஏற்றபடி கல்வியை ஊட்டவேண்டும். இதற்கு தகுந்த முஸ்லிம் ஆசிரியர், ஆசிரியைகள் போதிய அளவு ஏற்படும் வகையில் நாம் ஆசிரியத் தொழிலுக்கு ஊக்கம் அளிக்க வேண்டும். பல உபகாரச் சம்பளம் (Scholarship) இதற்காக பிரத்தியேகமாக ஏற்படுத்தவேண்டும். பல படித்தவர்கள் படிக்காதவர்களுக்கு படித்துக் கொடுக்கவேண்டும். மற்றவர்கள் சமூக சேவை என்று பள்ளி மாணவர்களை "முதியோர் கல்வி"க்கு ஈடுபடுத்துவதுபோல் நாமும் முஸ்லிம் பள்ளிச் சிறுவர்களை ஈடுபடுத்த வேண்டும். இதற்கு கல்வி வாரம் என்று வாரத்தில் விடுமுறை நாட்களில் ஒன்றை ஒதுக்கிவைத்து படித்துக் கொடுக்கச் செய்யவேண்டும். முஸ்லிம்களிடையே சுகாதாரம், நல்லொழுக்கம், முதலியவற்றைப் பரப்புவதிலும் நம் சிறுர்களை ஈடுபடச் செய்ய வேண்டும். லால் பேட்டை முஸ்லிம்கள் அங்குள்ள மதரஸா மாணவர்களுக்கு உணவளித்து, ஆதரித்து வரும் சிறந்த முறையை முஸ்லிம்கள் ஒவ்வோர் ஊரிலும் கல்வி கற்கும் மாணவர், மாணவிகள் விஷயத்தில் பின்பற்றி கல்விகற்க வருவோரின் இன்னல் நீக்க வழி தேட வேண்டும்.

2 (அ) ஒவ்வோர் ஊரிலும் "பைத்துல்மால்" ஏற்படுத்தி, 'ஜகாத்து' வரி வசூலிக்கச் செய்து அதில் ஒரு பகுதியை சேமித்து அந்த ஊரில் உள்ள கைம்பெண்கள், அனுதைகள், முதலியோருக்கு பிரதி மாதமும் அச்சேமிப்பிலிருந்து ஒரு குறிப்பிட்ட தொகை கொடுத்து இவர்களுடைய பசிப்பிணியையும் வறுமையையும் ஓரளவாவது நீக்க வழி செய்யவேண்டும்.

(ஆ) "பைத்துல் மால்" நிதியைக் கொண்டு அந்த ஊரில் கம்பளம் நெய்தல், பாய் முடைதல், தொப்பி செய்தல், நெசவு, தையல், பனியன் செய்தல் முதலிய குடிசைத் தொழில்களை ஏற்படுத்த வேண்டும். இத்தொழில்களில் உற்பத்தியாகும் பொருள்களை அவ்வூரிலுள்ள பொறுப்பு வாய்ந்த இளம் செல்வர்கள் சேகரித்து, விற்று, பொருளாக்கி அத்தொழில்களில் ஈடுபட்டோருக்கு அவற்றின் லாபத்தைக் கிடைக்கச் செய்ய வேண்டும். இப்பணியில் ஈடுபடும் கனவான்கள் அல்லாஹுக்காகவும், தன்னுடைய சமூகத்தின் ஆதரவற்ற விதவைகள், அனுதைகள் முதலியோருக்காகவும் பிரதிபலன் எதுவும் எதிர்பாராது 'உழைப்புதானம்' செய்யவேண்டும். இவ்விதம் வாணியம்பாடி முஸ்லிம் பிரமுகர்கள் "பைத்துல் மால்" ஏற்படுத்தி செயலாற்றி வருவதை முஸ்லிம்கள் மனதில் வைத்து ஒவ்வோர் ஊரிலும் அம்முறையைப் பின்பற்றி முஸ்லிம் சமுதாய நல்வாழ்வுக்காக உழைத்து வரச் செய்ய வேண்டும்.

3. இச்சமயம் முஸ்லிம்கள் தங்களுக்கிடையே பிளவை உண்டாக்கும் வீண் மனஸ்தாபங்கள், சண்டை சச்சரவுகள், போட்டி பூசல்கள் முதலிய சமூகத்தைச் சின்னு பின்னமாக்கும்—பிற்போக்கு சக்திகளுக்கு இடங்கொடுக்காது, கட்டுப்பாடு, ஐக்கியம் முதலிய இணைக்கும் சக்திகளால் ஒன்றுபடவேண்டும். இன்று முஸ்லிம்கள் வழக்குகள் மூலமும், அனுவசிய பல செலவுகள் மூலமும் தங்கள் பொருள்களை எல்லாம் போக்கடித்து ஆண்டியாகி வறுமையாலும் வருத்தத்தாலும் வாடி வதங்கி அல்லலுறுவதைக் காண்கிறோம். இந்நிலையைத் தவிர்க்கவும் வழி தேட வேண்டும். மாவட்டத்துக்கு ஓர் ஊரைத் தேர்ந்தெடுத்து அங்குள்ள முக்கியமான குடும்பத் தலைவர்களைக்

நீங்கள் கோவைக்கு வரும் போது மக்கள் உணவு விடுதியை சந்தியுங்கள்.

கூட்டி முதியோர் சபை (Elders Council) ஒன்றை நிறுவி அவ்வூரிலுள்ள முஸ்லிம்களுக்கிடையில் ஏற்படும் சகல தாவாக்களையும் முதியோர் சபை மூலம் குடிப்பஞ்சாயத்து செய்து தீர்த்துக்கொள்ள வேண்டும். முஸ்லிம்கள்யாவரும்சகோதரர்களே என்ற உறுதியைப் பேணி எல்லோரும் ஒரு குடும்பத்தினர்போல வாழும் சூழ்நிலை நிலவச் செய்யவேண்டும். நமது நாயகம் (ஸல்) அவர்கள் 'ஹஜ்ருல் அஸ்வது' என்னும் கல்லை வைக்கும் விஷயத்தில் எல்லா வகுப்பாருக்கும் பங்கு கொடுத்து எல்லோரையும் மகிழ்வித்ததுபோல் ஒவ்வொரு குடும்பத்தினின்றும் ஒருவரைத் தேர்வு செய்து முதியோர் சபையை அமைக்கவேண்டும். அப்படி ஏற்படுத்தப்படும் சபைக்கு ஒரு தலைவரை ஓராண்டுக்கு மட்டும் தேர்ந்தெடுத்துக் கொள்ளவேண்டும். மறு வருடம் அவர்களில் இன்னொரு நபரை தலைவராக ஆக்கிக்கொள்ள வேண்டும். குடி மத்திசத்திற்கு கட்டுப்படுவதால் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்க வேண்டியது ஏற்படும். இம் முதியோர் சபை அடிக்கடி கூடி, கலந்தாலோசித்து அவ்வூர் முஸ்லிம்கள் முன் நிற்கும் கல்வி, பொருளாதாரம் போன்ற எல்லாப் பிரச்னைகளையும் தீர்த்துக்கொள்ள வழி தேடவேண்டும்.

ஒரு வருடத்திற்கு, இப்படி ஒரு ஜில்லாவுக்கு ஒரு கிராமம் வீதம் நடத்திப் பார்த்து இம்முயற்சியில் வெற்றியும், பலனும் அதே வருஷத்தில் கண்டால் அந்த முறையை மேற்கொண்டு இரண்டு கிராமங்களில் கையாளச் செய்யவேண்டும். இவ்விதம் முதல் ஐந்தாண்டுகளில் ஒவ்வொரு ஜில்லாவிலும் குறைந்தது பத்து கிராமங்களிலாவது முஸ்லிம்கள் "முதியோர் சபையை" ஏற்படுத்தி இஸ்லாமிய முறைப்படி தங்கள் வாழ்க்கைகளை சண்டை சச்சரவு, பிணக்குகள் இன்றி நடத்தி தங்கள் ஊரிலுள்ள முஸ்லிம்களுடைய பிரச்னைகளை சுமுகமாய தீர்த்து வைக்கவேண்டும். ஐந்தாவது ஐந்தாண்டு இறுதியில் நம் மாகாணத்திலுள்ள எல்லா கிராமங்களிலும் முஸ்லிம் முதியோர் சபை நிறுவப்பெற்று முஸ்லிம் நல முன்னேற்ற வேலைகள் ஒழுங்காக நடந்து எல்லாக் குறைபாடுகளும் நீங்கி அவர்கள் நல்வாழ்வுபெறச் செய்ய வேண்டும். "அல்லாஹ்வின் கட்டளையைப் பின் பற்றுங்கள். அல்லாஹ்வின் தூதருக்குக் கீழ்ப்படியுங்கள். மேலும் உங்கள்மீது அதிகாரம் பெற்ற தலைவர்கள் கட்டளைக்கும் கீழ்ப்படியுங்கள்" என்ற வேத வாக்கை ஒவ்வொரு முஸ்லிமும் கடைப்பிடித்து நடக்கவேண்டும். தலைவர்களாக உள்ளவர்கள் ஹஸரத் அபூபக்கர் நாயகம் போன்ற முதியோர் சபையின் யோசனையைக் கேட்டு பாரபக்ஷம் இல்லாது அல்லாஹ்வுக்கு பதில் சொல்ல வேண்டும் என்றுணர்ந்து எல்லோரும் தம் மக்களே என்று கருதி எல்லா விவகாரங்களையும் நேர்மையுடன் தீர்த்து வைக்கவேண்டும். மேலும் அபூபக்கர் நாயகம் அவர்கள் கலீபா ஆன போது மக்களுக்குச் சொன்ன பொன்மொழிகளைத் தலைவர்கள் தங்களுக்கு வழிகாட்டியாக வைத்துக் கொள்ளவேண்டும். குடி மத்திசத்தால் வீண் வழக்குகள் வீண் செலவுகளைத் தீர்க்கலாம். மேலும் முதியோர் சபையில் ஒவ்வொரு குடும்பத் தலைவரும் இருப்பதால் உண்மையை உணர்ந்து சரியான நியாயம் வழங்குவதற்கு வழி இருக்கிறது. ஒருவர் கோரியது அத்தனையும் எங்கும் கிடைத்துவிடாது. நீதி மன்றத்திலும் ஒரு சில வழக்குகள் பாதகமாகவும் போவதைக் காண்கிறோம். ஒருவருக்கொருவர் கொஞ்சம் விட்டுக் கொடுப்பதன் மூலம், நேசமும் சகிப்புத் தன்மையும் சகோதர உணர்ச்சியும் என்றும்

நீங்கள் கோவைக்கு வரும் போது பாம்பே பிரியாணி ஹோட்டலை சந்தியுங்கள்.

நீங்காத நல்லுறவும் அகலாத பேரன்பும் நிலவச் செய்ய முடியும். இதனால் இறுதியில் யாராலும் அழிக்க முடியாத சமூகக் கட்டுப்பாடும், ஒற்றுமையும் ஏற்பட்டு நாட்டிற்கும் சமூகத்திற்கும் பெரும் பலனை அளிக்கும்.

முதியோர் சபைகள் சரிவர பணியாற்றி வருகின்றனவா என்று கவனித்து அச் சபைகள் ஊக்கமாய் வேலை செய்துவர ஒரு மத்திய சபை அமைத்தல் வேண்டும். முதியோர் சபை தனக்கு வேண்டிய யோசனைகளையும் உதவிகளையும் மத்திய சபையிடம் கேட்டுச் செயலாற்றும்.

4. வேலையில்லா முஸ்லிம்களை பல தரப்பட்ட தொழில்களில் ஈடுபடச் செய்யவேண்டும். விவசாயத்தை முஸ்லிம்கள் முக்கிய தொழிலாகக் கொள்ள வேண்டும் முஸ்லிம் நிலச் சுவான்கள் முஸ்லிம்களை பயிர்த் தொழிலை, மேற்கொள்ளச் செய்ய வேண்டும். இதற்கு செல்வாக்குள்ள முஸ்லிம் பிரமுகர்கள் பயிர் செய்யாது கிடைக்கும் புறம்போக்கு வெங்நிலங்களை அரசாங்கத்திடம் இருந்து பெற்று முஸ்லிம்கள் அந் நிலங்களைப் பண்படுத்தி பயிர் செய்யச் செய்தால் ஏழை முஸ்லிம்களுக்கு தொழிலும் ஏற்பட்டு வேலையில்லா குறைபாடும் நீங்கும்.

5. மேலே குறிப்பிட்ட காரியங்களை ஒன்று இரண்டு வருடங்களில் செய்து கொள்ள முடியாது என்பது தெரிந்ததே. ஆகவே நாம் ஐந்து ஐந்தாண்டு திட்டங்கள் வகுத்து, விடா முயற்சியுடன் உழைத்து வருவோமாயின் இருபத்தைந்து வருடங்களில் முஸ்லிம்கள் எல்லாத் துறைகளிலும் உயர்நிலையை அடைந்து எல்லா சமூகத்தாரும் மதிக்கும் அளவு மேம்பட்டு நம் நாட்டிற்கும், நம் சமூகத்திற்கும் பேரும், புகழும் தேடித் தருவர். ஆக்க வேலைகளில் "முதன்மையானோர்" என்ற நற்பெயரும் கிட்டும்; முற்போக்கு சமூகத்தாரைக் கண்டு வெட்கத்தால் நாணி நாம் தலைகுனியவும், பிறர் உதவியைத் தேடி ஓடவும் அவசியம் இராது.

6. முஸ்லிம் சேவா தொண்டர்கள் முஸ்லிம்கள் வதியும் கிராமங்களுக்கு அடிக்கடி சென்று முஸ்லிம்களை ஆக்க வேலைகளில் ஈடுபடச் செய்ய வேண்டும். இதற்கென முஸ்லிம் சேவா தொண்டர் படை ஒன்றை ஒவ்வோர் ஊரிலும் நிறுவ வேண்டும். மாகாண முஸ்லிம்களுக்கென மத்திய தொண்டர் படை ஒன்றை நிறுவி அது ஏனைய தொண்டர் படைகள் சரிவர வேலைகள் செய்து வருகின்றனவா என்று கவனித்து குறைபாடுகள் ஏதும் உண்டாயின் திருத்திக் கொள்ளச் செய்ய வேண்டும்.

7. ஒவ்வொரு வருடமும் முஸ்லிம்களின் மாநாடு ஒன்று அவசியம் கூட்டி பலதுறைகளிலும் முஸ்லிம்களின் நிலைமைகளைப் பரிசீலனை செய்து மேலே குறிப்பிட்டபடி தீட்டிய திட்டங்களின் குறைபாடுகள் இருப்பதைக் கவனித்து, அக் குறைகளை நீக்க நடவடிக்கைகள் எடுப்பதுடன் திட்டப்படியும் காரியங்களை வேகமாக முன்னேறவில்லையாயின் அவை துரிதமாய் நடை

பிறை

முதலாண்டு 'பைண்டு'த் தொகுதி
838 பக்கங்களில்

கருத்து நிறை கட்டுரைகள்; கவினுறு நற்கதைகள்; கன்னலெனும் கவிதைகள், எண்ணற்ற பொன்மொழிகள், இஸ்லாமிய வரலாற்றுக் கட்டுரைகள்.

படிக்கப் படிக்க இனிக்கும் பயனுள்ள தொகுதி.

விலை: 5·25

தபால் செலவு தனி

பெற வேண்டிய வழிகளை நிர்ணயித்து, அமல் நடத்தவும் ஏற்பாடு செய்யவேண்டும்.

8. நம் திட்டங்களைச் சரிவர நிறைவேற்றுவதற்கு நமக்கு தொண்டர் குழு ஒன்றும், பிரச்சாரக்குழு ஒன்றும் அவசியம் தேவை. இவ்விரு குழுவும் முஸ்லிம்களிடையே விடாது பிரசாரம் செய்து, முஸ்லிம்களிடத்தே காணும் அனுசாரம், அதன் காரணமாக ஏற்படும் வீண் செலவுகள் முதலியவற்றை தவிர்க்கச்செய்ய வேண்டும். நல்லொழுக்கம், செல்வாக்கு, சேவா உணர்ச்சி முஸ்லிம் பண்பாடு முதலியன ஒருங்கே பெற்ற நபர்களையே தெரிந்தெடுத்து இக்காரியங்களில் ஈடுபடச் செய்யவேண்டும்.

9. (அ) மத்திய குழுவின் (Central Committee) கல்விப் பிரிவு, சமூக நலப் பிரிவு (Social Welfare Committee) கலாச்சாரப் பிரிவு (Cultural side Committee) கைத்தொழில் பிரிவு, தொழிலில் ஈடுபடுத்தும் பிரிவு (Employment Section) சமூகப் பொருளாதார பிரிவு Social Economic Section) முதலிய பிரிவுகளை அமைத்து மூன்றுமாதங்களுக்கு ஒருமுறையாவது மேற்கண்ட பிரிவுகளின் கூட்டுக்களைக் கூட்டி நிலைமைகளைப் பரிசீலனை செய்து ஆவன செய்ய வேண்டும்.

(ஆ) மத்திய குழு ஏனைய மாவட்டங்களில் நிறுவப்பெற்ற முதியோர் சபையுடன் நெருங்கிய தொடர்பு வைத்து அவ்வப்போது வேண்டிய தகவல்களை ஒவ்வொரு மாவட்டத்தினின்றும் சேகரிக்கவேண்டும்.

(இ) மத்திய குழுவிற்கு முஸ்லிம் சமுதாயத்தை ஒட்டிய தகவல்கள் பொருளாதார, தொழில் அபிவிருத்திக்கான யோசனைகள், முஸ்லிம்களுக்குள் நல்லுறவு ஏற்படுவதற்கான கருத்துக்கள் முதலியவற்றை மாவட்டங்களில் வதியும் முஸ்லிம் தலைவர்கள் தெரிவிக்க வேண்டும். இத் தகவல்களைச் சேகரித்து தொகுத்து, பரிசீலனை செய்வதற்கு சேவா உணர்வும், பொருளியல் துறையில் ஞானமும் உள்ள பட்டதாரிகளின் தன்னலமற்ற உழைப்பைத் தேடிப் பெறவேண்டும்.

10. மாவட்டத்திற்கு இருவர் அடங்கிய ஒரு சிறு கண்டறியும் குழு (Facts Finding Commission) நிறுவி மாவட்டம் முழுவதையும் சுற்றிப் பார்த்து முஸ்லிம்களின் கல்வி, பொருளாதாரம், கலாசாரம் முதலிய நிலைமைகளைக் கண்டறிந்து கல்வியின்மையைப் போக்கவும் வறுமையை நீக்கவும் மாவட்ட மக்களின் கருத்துக்களை அறிந்து தங்களின் பரிசீலனை அறிக்கையை ஆறு மாதங்களுக்குள் சமர்ப்பிக்கவும் செய்ய வேண்டும். எல்லா மாவட்டங்களின் கண்டறியும் குழுவின் பரிசீலனை அறிக்கைகள் வந்ததும் மத்திய குழு அவ்வறிக்கைகளை நன்கு கவனித்து கண்டறியும் குழுவினர்கள் ஒன்றுகூடி ஆலோசனை நடத்த ஏற்பாடு செய்து திட்டம் வகுத்து நோக்கங்கள் நிறைவேற ஆவன செய்யவேண்டும். மாவட்டம் கண்டறியும் குழுவிற்கு முதிர்ந்த அனுபவமும் செல்வாக்கும் படைத்து மக்கள் உயர் நிலையை சதா சிந்தித்துப் பார்க்கும் நபர்களாகப் பொறுக்கி எடுத்து அமைக்க வேண்டும். சான்றாக நெல்லை மாவட்டத்திற்கு ஜனாப்கள் தென்காசி மு. ந. அப்துல் ரஹ்மான் சாஹிபு அவர்கள், கடையநல்லூர் வெ. கா. உ. அப்துர் ரஹ்மான் ஸாஹிபு போன்றவர்களைத் தெரிவு செய்யவேண்டும். இதே போன்று இதர மாவட்டங்களிலும் இரு ஆட்களைப் பொறுக்கி எடுத்து இம் மாபெரும் அரிய முஸ்லிம்களின் ஜீவநாடி வாழ்க்கைப் போராட்டச் சேவையில் ஈடுபடச்செய்ய வேண்டும்.

11. இத் திட்டங்களில் பலவற்றுக்கு அடிப்படையாகப் பொருள் தேவையாகுமாதலால், முதன் முதலில் இவ்வாண்டிலேயே 'ஜகாத் தினம்' என்று ஒரு தினம் கொண்டாடி ஆங்காங்கே 'ஜகாத்தின்' முக்கியத்தையும், அவசியத்தையும் மக்களுக்கு விளக்க வேண்டும். ★

13. அறிவை வளர்க்கும் அழகு நூல்

அல்லாஹ்வின் அருள் பொங்கும் அமுத ஊற்ருக அருமறை விளங்குகிறது; அந்த அமுத ஊற்றின் கண்ணுக, "அருளாளனும், அருபுடையோனுமாகிய ஆண்டவனின் திருநாமத்தால்," [பிஸ்மில்லாஹி......] என்னும் சொற்ருெடர் அமைந்திருக்கிறது என்பதை ஓரளவு ஆய்ந்தோம். "மன்பதைகள் பிணி நீக்கும் மருந்தாக" அருளப்பட்டுள்ள மாமறையில் மக்கள் குலம் உய்ய, உயர, உத்தம வாழ்வு பெற இறையவன் எத்தகைய வழிகளைக் காண்பித்திருக்கின்ருன் என்னும் நெடிய ஆராய்ச்சியைத் துவங்கும் முன்னர், படைப்புக்கள் அனைத்திலும் சிறப்புடையதாக மனுக்குலத்தைப் படைத்த "மாக்கருணை ரஹ்மான்," மனிதனுக்கு மாபெரும் கொடையாக 'அறிவை' அருளியிருக்கின்ருனே அதுபற்றி ஒரு சிறிது கவனிப்போம்.

எம். அப்துல் வஹ்ஹாப் எம்.ஏ., பி.டி.எச்.,

மனிதனின் சிறப்புக்குச்சான்று, அவன் பெற்றிருக்கும் அறிவு: அதுவே ஆண்டவன் அவனுக்கு விசேஷமாக அளித்தநன் கொடை. ஏனென்ருல் இதர கொடைகள் மனிதனுக்கு அருளப்பட்டிருப்பது போல, மிருகத்துக்கும் தரப்பட்டிருக்கிறது. உதாரணமாக உணவை எடுத்துக் கொள்வோம். உடல் வாழ அடிப்படை அவசியமான உணவு மனிதனுக்கு மட்டும் தானு கிடைக்கிறது; உயிர்ப்பிராணிகள் அனைத்துக்கும் அது கிடைக்கவில்லையா?

உயிர்ப் பிராணிகள் எத்தனையோ இருக்கின்றன. அவை தங்கள் ஆகாரத்தைச் சுமந்து திரிவதில்லை. அவற்றுக்கும், உங்களுக்கும் அல்லாஹ்தான் உணவளிக்கிருன். அவன் (யாவரையும்) செவியுறுவோனுகவும், நன்கறிந்தோனுகவும் இருக்கின்ருன் (29 : 60) என்று இறைவன் தன் திருமறையில் குறிப்பிடுவது போல மக்களுக்கும், மாக்களுக்கும் அவன் உணவளிக்கின்ருன்.

இல்லை, மனிதன் தான் வசிப்பதற்கு அழகான இருப்பிடங்கள் அமைத்துக் கொள்கிருன்; ஆகவே இல்லம் அமைக்கும் இயல்பு மனிதனுக்கு இருக்கிறதே அதுதான் சிறப்பான அருள் கொடை என்று

சொல்ல முடியுமா?

"(நபியே!) உம்மிறைவன் தேனீக்கு மலைகளிலும், மரங்களிலும், மனிதர்கள் கட்டும் வீடுகளிலும் கூடுகளை அமைத்துக் கொள்ள உணர்வூட்டினான்." *(16:68)* என்று தேனீக்களுக்குக்கூட அவை உறையும் தலத்தை உண்டு பண்ணக் கூடிய உயர் ஆற்றலை அல்லாஹ் அருளியிருக்கிறான். இன்னும் சின்னஞ் சிறு சிட்டுக் குருவி முதல் உயரப் பறக்கும் இராஜாளி வரை எத்தனையோ வகையான அழகழகான கூடுகள் கட்டுவதை நாம் பார்க்கவில்லையா? வெளியே யுள்ள தட்ப வெட்ப நிலை பாதிக்காமல் இருக்கும் வகையிலும் அவை தங்கள் கூடுகளை அமைத்துக் கொள்கின்றன. ஆகவே இதிற் கூட மனிதனுக்கு மட்டும் விசேஷ அருளை ஆண்டவன் வழங்கியிருக்கிறான் என்று சொல்ல முடியுமா?

மனிதனுக்கு இன்னொரு முக்கியமான தேவை ஆடை; தன் உடலைப் பாதுகாத்துக் கொள்ள நல்ல உடைகளை நெய்து கொள்ளும் ஆற்றலை இறைவன் மனிதனுக்கு அளித்திருக்கிறான். குளிர் பிரதேசத்தில் வாழும் பிராணிகளுக்கும், மெத்தென்றிருக்கும் ரோமத்தைக் கொடுத்து, அவற்றுக்கும் குளிரிலிருந்து பாதுகாவல் கொடுத்திருக்கின்றான் நமைப் படைத்தோன். அழகான, கண்ணைப் பறிக்கும் கவர்ச்சியுடைய ஆடைகளை, மேலணிகளை உண்டாக்கும் திறன் மனிதனுக்கு மட்டுந்தானா உளது? கார்முகில் கண்டு கலாபம் விரித்தாடும் "கான மயிலின்" தோகை அழகில்லையா? பூ மணக்கும் சோலையிலே, புள்ளினங்கள் நடுவினிலே செம்மை அலகாலே செங்காயைக் கொத்திடும் பச்சைப் பசுங்கிளி அழகில்லையா? அதன் பசுமையை வைத்தல்லவா கிளிப்பச்சை என்று மனிதன் நிறத்துக்குப் பெயர் கொடுத்திருக்கின்றான். மேலணிகளால் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளவும், அழகு படுத்திக் கொள்ளவுமுள்ள முறைகள் விலங்கினங்களுக்கு அதிகமாகத் தெரியும். ஆகவே தான்:

"ஆதமுடைய மக்களே! உங்கள் மானத்தை மறைக்கவும், உங்களை அலங்கரிக்கவுமான ஆடைகளை நிச்சயமாய் நாம் தந்திருக்கின்றோம். எனினும் (பாவங்களைக் கரைத்து மறைக்

வாழ்த்துகிறோம்

சமுதாயப் பற்றுள்ள சன்மார்க்க சீலரும், நற்சேவையாளருமான கம்பம் அல்ஹாஜ் E. ஷாஹுல் ஹமீது அவர்களின் திருமகளார் ரஷீதா பேகத்திற்கும், இராஜபாளையம் அல்ஹாஜ் சா. முஹம்மது அப்துல் கனியவர்களின் திருமகனார் அப்துல் ஹமீதுக்கும் 24-11-'57 அன்று கம்பத்திலும்; அன்னாரின் திருமகனார் முஹம்மது அலிக்கும், சா. முஹம்மது அப்துல் கனீ ஹாஜியாரவர்களின் திருமகளார் லத்தீபா பேகத்திற்கும் 28-11-'57 அன்று இராஜபாளையத்திலும் திருமணம் நடந்தேறியது. மணமக்கள் பல் வளமும், பன்னலமும் பெற்று இஸ்லாமியத் திருவாழ்வு வாழ இறையோனிடத்தில் பிரார்த்திக்கிறோம்.

ஆசிரியர்.

கும் பயபக்தியென்னும்) பரிசுத்தத் தன்மையின் ஆடைதான் மிக்க மேலானது...(7:26)

என்று பரிசுத்தத்தை வலியுறுத்தி விட்டான் நாயன்.

ஆக, மனிதன் உணவு, உடை, உறையுந் தலம் ஆகியவற்றைப் பெற்றுக் கொள்ளும் ஆற்றல் படைத்திருப்பதனுல் அவன் மீது இறைவன் தன் விசேஷ அருளைப் பொழிந்திருக்கின்ருன் என்று சொல்ல முடியாது. ஆனுல் படைப்பினங்களில்மனிதன்தான் சிறப்புடையவன் என்பதையும் மறுக்க முடியாது. ஏனென்ருல் இதர படைப்புக்களில் பல மனிதனுக்குப் பயன்படுவதற்காகவே படைக்கப் பட்டிருக்கின்றன; அப்படைப்புகளின் மீது ஆதிக்கம் செலுத்தும் ஆற்றலும் அவனுக்கு அருளப்பட்டிருக்கிறது. ஆதித் தந்தை ஆதம்(அலை) அவர்களுக்கு அமரர்களையே அடிய பணியச் செய்தான் ஆண்டவன். இன்னும் படைப்பினங்களிலே சிறப்பினமாம் மனுக்குலம் தான் உண்டாக்கும் உருவங்களுக்கே வணக்கம் செலுத்துவது தகாது. ஒரே இறைவன் தவிர வேறெந்த சக்திக்கும் அக்குலம் தலை தாழ்த்தக்கூடாது. "வாழ்த்த வாயும், தாழ்த்தச் சென்னியும்." தந்த அத்தலைவன் ஒருவனுக்கே தொழுகையும் வணக்கமும் உரியன என்று எத்திக்கும் தித்திக்கும் இறையுணர்வை இசை முழக்கும் பரிசுத்தத் திருமறை கட்டளையிடுகிறது.

"படைப்புக்கள் அனைத்திலும் மேம்பாடுடையவர்களாக உங்களை ஆக்கி வைத்திருக்கும் நிலையில், அல்லாஹ் அல்லாத ஒன்றை (அல்லது ஒருவனை) உங்கள் வணக்கத்துக்கு உரியதாக (உரியவனுக) நான் ஆக்கி வைப்பேனு" என்று ஆண்டவனே மனிதனிடத்தில் மனுக்குலத்தின் சிறப்பைச் செப்புகிருன்.

அதோடு மனிதனின் சிறப்புக்குச் சான்ருக இதர படைப்பினங்கள் எவ்வாறு அவனுக்குப் பயன்படும்படியாக ஆக்கப்பட்டுள என்பதையும் இறைவன் தன் திருமறையிலே குறிப்பிடுகிருன்.

"அல்லாஹ் பெருங்கடலையும் உங்களுக்கு வசதியாக அமைத்திருக்கின்ருன்..........இன்னும் வானங்களிலும் பூமியிலுமுள்ள யாவையும் (உங்கள் நன்மைக்காக) உங்களுக்கு வசப்படுத்தித் தந்திருக்கின்ருன் (45:12-13)" என்று மனிதனின் மாண்பினை எடுத்துரைக்கும் திருமறை வானங்களும், பூமியும், மாறி மாறி வரும் இரவு பகலும், கடலும் அதன் நீரைக் கிழித்துச் செல்லும் கலங்களும், வரண்ட நிலத்தை வளப்படுத்தும் வான் மழையும், பூமியிலே பரந்து உயிர் வாழும் ஆடு மாடு போன்ற கன்று காலிகளும், பல திசைகளிலும் திருப்பித் திருப்பி வீசும் காற்றும் மனிதனுக்காக, மனிதனின் நன்மைக்காகவே படைக்கப்பட்டிருக்கின்றன என்று உறுதி கூறுகிறது (2:164)

"அவனே இரவையும், பகலையும், சூரியனையும் சந்திரனையும் உங்களுக்காகப் படைத்து தன் கட்டளைக்கிணங்க இயங்க வைத்திருக்கிருன்......(16:12)" என்று கூறி மனிதனின் தனிச்

சிறப்பை இறைவன் விளக்குகின்ருன்.

உணவு, உடை, உறையும் தலம் ஆகியவற்றைப் பெறும் வகையில் மனிதன், விலங்கை விட விசேஷ அருளைப் பெற்ற வகை இல்லை என்பதைப் பார்த்தோம். என்ருலும் கூட "மற்ற படைப்புகளெல்லாம் உன் நன்மைக்காகவே படைக்கப்பட்டிருக்கின்றன" என்று இறையே மனிதனிடத்தில் கூறுகிருன். மனிதனிடத்தில் இருக்கும் எந்தச் சிறப்புக்காக கருணையுள்ள ரஹ்மான் மனிதனுக்கு இத்தகைய மேம்பாட்டைக் கொடுத்தான்.?

இதைப்பற்றி இறவாப் புகழ் பெற்ற இஹ்யா வாயிலாக இமாம் கஸ்ஸாலீ (ரஹ்) கூறுவதைப் பார்க்கலாம்: "மிருகங்களை விட மனிதனுக்குச் சிறப்புத் தருவது அவன் அறிவு (அதை வளப்படுத்தும் கல்வி) தான். மனிதன் தன் பலத்தால், வலுவால் சிறப்படைந்திருக்கின்ருன் என்று சொல்ல முடியாது; ஏனென்ருல் ஒட்டகம் மனிதனிலும் வலுவுடையது. வீரத்தால் அவன் சிறப்புடையோன் என்று கூற முடியாது: ஏனெனில் சிங்கம் புலி போன்ற வன விலங்குகள் இவனிலும் வீரமுடையவை; பெரும் அளவில் உண்ண முடிவதால் அவன் சிறப்புள்ளோன் என்ருலோ காளைமாடு இவனிலும் அதிகமாகத் தின்னும், வீர்ய சக்தியால் மனிதன் சிறப்புக்குரியோன் என்று சொல்லமுடியுமா? சின்னம் சிறு ஊர்க்குருவி இவ்வகையில் மனிதனை விட சக்தியுடையது. ஆகவே மனிதன் அறிவும் கல்வியும் கொண்டே சிறப்புப் பெற்றிருக்கின்ருன்." என்று அப்பேரறிஞர் கூறியிருக்கிருர்கள்,

அறிவுக்கும், அறிவு தேடு தூய பணிக்கும் இஸ்லாம் எத்தகைய உன்னத இடம் கொடுத்திருக்கிறது என்று தித்திக்கும் திருமறையே தெளிவு படுத்துகிறது. மனிதனுக்கு அறிவை அருட் கொடையாகத் தந்த ஆண்டவன், தன் திருத் தூதருக்கு முதன் முதலில் எந்த வாக்கியத்தைக் கற்றுக் கொடுத்தான் தெரியுமா?

"இக்ரஃ பிஸ்மி ரப்பிக......... படைத்த நாயன், உம்மிறைவன்—அவன் திருப்பெயர் கொண்டு ஓதுவீராக! அவன் மனிதனை இரத்தக் கட்டியிலிருந்து படைத்தான். (இன்னும்) ஓதுவீராக! உம்மிறைவன் பெருமைக் குரியோன். அவன் தான் எழுதுகோலைக் கொண்டு கற்றுக் கொடுத்தான். (மனிதன்) அறியாதவற்றையெல்லாம் அவனுக்குக் கற்றுக் கொடுத்தான்...(96 : 1-5)

திருமறையில் இறைவன் அருளிய முதல் வாக்கியத்திலே மனிதனின் தூய பிரதிநிதி எம்பெருமானுர் முஹம்மது நபி (ஸல்) அவர்களை ஓதுமாறு அவன் பணிக்கின்ருன். இன்னும் எழுதுகோலின் மூலமாக மனிதனின் அறிவும் கல்வியும் பெருக தான் வழி வகுத்திருப்பதைச் சுட்டிக் காண்பிக்கிருன்.

துவக்கத்திலேயே அறிவுக்கும், கல்விக்கும் இத்தகைய மகத்தான இடத்தைத் தந்திருக்கும் திருமறை, மனிதனுக்கு இறைவன் அளித்திருக்கும் பேரருளே அறிவு தான் என்று வலியுறுத்தும் திருமறை அறிஞர் உலகில் தித்திக்கும் தீஞ்சுவைக் காப்பியமாகத் திகழ்வதில் வியப்பேது?

(தொடரும்)

முள்வேலி

"அல்லாஹ்" என்றவாறே தொப்பென்று சாய்வு நாற்காலியில் விழுந்தான் ரஹீம். அவனது முகத்தைச் சோகம் சூழ்ந்திருப்பதும் அவன் தபாலாபீஸிலிருந்து நான்கு மணிக்கே திரும்பிவிட்டதையும் உணர்ந்த மேஹருன்னிஸா கலவரமடைந்தாள்.

"என்ன நடந்தது?",—அவள் குரலிலே நடுக்கம் நெளிந்தது.

"அல்லாஹ் சோதனைமேல் சோதனை தருகிறான். இன்று கவுண்டரில் இருநூற்றெழுபது ரூபாய் விட்டுவிட்டேன். ஒருவர் ஸேவிங்ஸ் பாங்க் கணக்கை முடித்துக்கொள்ள வந்தார். அவருக்கு இரண்டாயிரத்து முப்பதுக்குப் பதிலாக இரண்டாயிரத்து முந்நூறு கொடுத்து விட்டேன்...."

"அல்லல்லாஹ்!... அப்புறம்?"

"அவரும் அதை வாங்கிக் கொண்டு போய் விட்டார். அவரை வீட்டில் போய்ப் பார்த்தேன். சென்னைக்குப் போயிருக்கிறாராம். நாளைக் கழித்துத் தான் வருவாராம். மணி நான்காகி விட்டது; பணம் கட்டியாக வேண்டும்."

நிற்கச் சக்தி இழந்த மேஹருன்னிஸா உட்கார்ந்து விட்டாள்; கையால் தாடையைத் தாங்கியவாறே சிந்தனையிலாழ்ந்தாள். மணமாகி வந்த ஓராண்டிற்குள் அவள் கழட்டித் தந்த 'நெக்லேஸ்', எட்டு பவுன் சங்கலி, புஷ்பராகத்தோடும் தொங்கட்டானும், உயர்ந்த கெம்பு பதித்த தலை பில்லைகள் இரண்டும் நினைவிலே வந்து நழுவின. அதைத் தொடர்ந்து ஒரு பெருமூச்சு பிறந்தது; பிரிந்தது.

"இருக்கும் பெரிய நகை இந்த வளையல்கள்தான். இவைகளை வைத்து இருநூற்றெழுபது வாங்க முடியுமா?" என்று நிலவியிருந்த மௌனத்தைக் கலைத்தாள் மேஹருன்னிஸா.

"நான்கு பவுனுக்கு இருநூற்றெழுபது கொடுக்க மாட்டார்கள்......"

"விற்கத்தான் வேண்டும்" என்றவாறே வளையல்

கா. அப்துஸ்ஸத்தார்

வாழ்க்கையில் ஊடாடித் திரியும் சின்னஞ்சிறு நிகழ்ச்சிகள் பலருடைய வாழ்வின் போக்கையே மாற்றி அமைத்து விடுகின்றன. அவற்றை அற்புதமாக எழுதிக் காண்பிப்பவர் அன்பர் அப்துஸ் ஸத்தார்.

களைக் கழற்றினள்; அவள் குரலில் அழுகையின் தொடக்கம் கலந்திருந்தது; விழிகளிலே தேங்கி நின்ற நீர்த்துளிகள் வளையல்களைக் குளிப்பாட்டின.

அவளையே பார்த்துக் கொண்டிருந்த ரஹீமின் மனம் புழுவாய்த் துடித்தது; அத் துடிப்பைப் பொறுக்கமாட்டாமல் நெஞ்சைக் கையால் அழுத்திக் கொண்டான். “அல்லாஹ்,” என்று அவன் வாய் பரிதாபமாக முறையிட்டது.

“அம்மா போட்ட நகைகளிலே மீந்திருந்தவை இவைதான்” என்ற அறிமுகச்சொற்களோடு, மெஹருன்னிஸா வளையல்களை அவன் கையிலே வைத்தாள். அதைக் கேட்ட ரஹீமின் புண்பட்ட நெஞ்சம் சல்லடையாகிவிட்டது. எவ்வளவோ கட்டுப்படுத்தியும் விரும்பாத கண்ணீர் விழியோரங்களிலே உருப்பெற்றது.

நேரமாவதை உணர்ந்ததும் அவசரமாக எழுந்தான்; காசுக்கடைக்குச் சென்முன்; கடைக்காரர் கொடுத்ததை வாங்கிக்கொண்டான். எண்ணி இருநூற்றெழுபது ரூபாய் கட்டும்போது அவனது வயிற்றிலே கொடுந் தீ பற்றி எழுந்தது; காதுகளிலே, “அம்மா போட்ட நகைகளிலே மீந்திருந்தவை இவைதான்” என்ற சொற்கள் எதிரொலித்தன.

ஆபீஸிலிருந்த அத்தனை பேரும் அவனுக்கு அனுதாபந் தெரிவித்தார்கள். “கவலைப்படாதே, ரஹீம்! அந்த ஆசாமி பணத்தைத் தந்துவிடுவார்,” என்ற நண்பன் நாராயணனின் வார்த்தைகள் அவனுக்குத் தெம்பளித்தன.

ஆனால் ஆபீஸை விட்டு வெளியேறியதும் மெஹருன்னிஸாவின் வெறுங்கைகள் அவன் நினைவிலே வந்தன.

“ஆம்; கலியாணமாகி ஓராண்டு முடிவதற்குள்ளே மெஹருனின் மேனியை அலங்கரித்து நின்ற அவ்வளவு நகைகளும் நீங்கிவிட்டன; வளையல்களோடு அந்த அத்தியாயம் முடிந்து விட்டது. நான் செய்து போட்டிருக்கும் தோடு, தொங்கட்டான், மூக்குத்தி இவைதான் இன்று தங்கியிருப்பவை. இவைகளையாவது அல்லாஹ் வாழவிடுவானாக!”

சிந்தனையிலாழ்ந்தவாறேவீட்டிற்குள் நுழைந்த ரஹீம், யாரோ விக்கி விக்கி அழும் சப்தம் கேட்டுத் திடுக்கிட்டான். பரபரப்புடன் அறைக் கதவைத் திறந்துகொண்டு உள்ளே பாய்ந்தான். மெஹருன்னிஸா தலையை மேஜைமீது வைத்து அழுதுகொண்டிருந்தாள்.

"மெஹரூன்! மெஹரூன்!! என்ன?" என்று துடித்தான் ரஹீம்.

"இல்லை...ஒன்றுமில்லை," என்று சுவையற்றுச் சொல்லிக்கொண்டே எழுந்தாள் மெஹருன்னிஸா.

"ஒன்றுமில்லாததற்கு அழுவார்களா? நடந்ததைச் சொல்லேன்."

அவள் பார்வை வெறுங்கைகளின் மீது சேன்றது. மறு விநாடி மெல்லிய உதடுகள் முன் பின் நகர்ந்து பேதப்பட்டன; விக்கலொன்று வெளிப்பட்டது. "ஒன்றுமில்லை...," என்று அவ் விக்கலுக்கிடையே சொல்லி அறையை விட்டு வெளியேறினாள்.

நீண்ட தொரு மூச்சு விட்டான் ரஹீம்; உணர்வற்றுச் சாய்ந்த தலையை மேஜை தடுத்தாட்கொண்டது.

ஆபீஸிலிருந்து வந்தானோ இல்லையோ, "பணம் தந்தாரா அந்த மனிதர்?" என்ற கேள்வியைத் தொடுத்தாள் மெஹருன்னிஸா.

"என்னைப் பார்த்தால் எப்படித் தெரிகிறது?"—எதிர்க் கேள்வி கேட்டான் ரஹீம்.

"மூன்று நாட்களாக இப்படித் தான் இருக்கிறீர்கள்."

"வாழ்க்கை முழுதும் இப்படித் தான் இருந்துவிடுவேனோ என்னவோ? அல்லாஹ் சிலரைக் கஷ்டங் கொடுத்து உலகுக்குக் காட்ட வேண்டுமென்றே படைத்து விட்டான் போலும்."

"அந்த மனிதர் அகப்பட வில்லையா? அல்லது..."

"அல்லது? என்ன? சொல்ல பயமாயிருக்கிறதா? ஆம், நீ நினைத்தது நடந்து விட்டது."

"தெளிவாய்ச் சொல்லுங்களேன்."

"அந்த அயோக்கியன், தான் இரண்டாயிரத்து முப்பது தான் வாங்கியதாகச் சாதித்துவிட்டான்."

"அல்லாஹ்வே! இதென்ன அக்கிரமம்?"

"அக்கிரமம், அயோக்கியத்தனம் எல்லாம் சர்வ சாதாரணமாம் அம் மிருகத்திடம்......வாங்கிய பணம் அவ்வளவையும் கிண்டிரேஸில் தொலைத்தானும்."

"வேண்டும், இன்னும் வேண்டும், அந்த அயோக்கியனுக்கு?"

"நமக்கென்ன லாபம்?"

"வளையல்களைக் கொள்ளையடிக்கவே வந்தானா அவன்? அம்மா போட்ட நகைகளிலே ஒன்று பாக்கியிருக்கிறதே என்று அவனுக்கு உறுத்திக்கொண்டேயிருந்ததோ?"

வார்த்தைகள் முடியுமுன்னே கண்களிலிருந்து காட்டாறு பிறந்து

விட்டது. அக் காட்சியைப்பார்க் கச் சகிக்காத ரஹீம் கண்களை மூடிக்கொண் டான்; வலி தாங் காத உள்ளம் பெருமூச் சொன் றை வெளியேற் றியது.

> **பேராசை**
>
> பேராசையால் வானத்திலிருக்கும் நட்சத் திரங்களையும் பிடித்துவிட வேண்டுமென்று கையை நீட்டும் மனிதன் தன் காலடியில் கிடக்கும் நறுமலர்களை மறந்துவிடுகிறான்.
>
> ஜெரமி பெந்தாம்

"வரும் மாதம் ஜைத்தூனுக்கு கலியாணமாயிற்றே! நான் எந்த முகத்தோடு அம்மா முன் போய் நிற்பேன்?"

"நாமென்ன செய்யலாம் மெஹ ரூன்? நகைகளை விற்று அனுவசியச் செலவு செய்து விடவில்லை. முதலில் மாமு இறந்தார்; பிறகு அம்மாவும் போய்விட்டார்கள். நீ டைபாய்டு ஜுரத்தினால் அவதிப்பட்டாய். தம்பிக்கு ஆயிரம் ரூபாய் டிபாஸிட் கட்டினோம். இல்லாவிட்டால் பி.ஏ.க்கள் எல்லாம் காத்திருக்கும் போது ரஹ்மானுக்கு டெபோ கிளார்க் வேலை கிடைக்குமா? ஒன்றன்பின் ஒன்றாக இழப்பும், தவிப்பும், செலவுந்தான் வருகின் றன. நிம்மதி, மகிழ்ச்சி எள்ளளவும் இல்லையே? கலியாணம் முடிந்த ஓராண்டிற்குள்ளே அல்லாஹ் இவ்வளவு பெருஞ் சுமையைப் போடுவான் என்று நான் எண்ண வில்லை. சீச்சீ! என்ன வாழ்க்கை யடா இது?"

சீராகப் பேசிக்கொண்டே வந்த அவன், கடைசி இரண்டு வாக்கியங் களை மிக மனக்கசப்புடனே சொன்னது, மெஹருன்னிஸாவின் இதயத்தைக் கீறி விட்டது.

"நான் பீடை பிடித்தவள்தான்: அல்லாஹ் என்னை அப்படிப் படைத்துவிட்டான்." என்ற சொற்கள் வேகயாக அவள் வாயி லிருந்து வெளிப்பட்டன.

"நீ ஏன் உன்னை நொந்துகொள் கிறாய்?"

"நான் வந்த பின்னால் தானே இத்தனை துன்பமும் துயரமும் வந்து சேர்ந்தன. கலியாணமாகி ஒரு வருஷங்கூட நகையெல்லாம் போட் டுப் பார்க்கும் அதிர்ஷ்டமில்லையே எனக்கு!"

"நகைகள் போனாலென்ன, அவை களை மீண்டும் பெற முடியாதா? இதற்கேன் இவ்வளவு வேதனைப் படுகிறாய்?"

"ஜைத்தூன் கலியாணம் வரு கிறதே, அதற்கு நான் எப்படிப் போவேன்? அம்மாவுக்கு என்ன பதில் சொல்வேன்? நான் போக வில்லை, நீங்கள் மட்டும் போய் வாருங்கள்."

"தங்கை கலியாணத்திற்குப் போகாத அக்காள் உண்டா?"

"கலியாண வீட்டிலே நான் எப் படி முழு மனசோடு காரியங்களிலே ஈடுபட முடியும்? வருவோரெல்லாம் "ஏன் இப்படி வெற்றுடம்பாய் வந்திருக்கிறாய்?" என்று கேட்டால் நான் என்ன பதில் சொல்வேன்?"

"வெள்ளி செயினும் வளையல் களும் வாங்கி பொன் முலாம் பூசிப் போட்டுக்கொண்டால் போகிறது. ஐந்து ரூபாய் பொன் வாங்கிக் கொடுத்து முலாம் பூசிக்கொண்டால் இரண்டு வருஷங்கள்வரை மெருகு மறையாதாம்."

"இரண்டு வருஷங்கள்வரை நிற்கு மென்பார்கள்; பத்து நாட்கள்கூடத் தங்காது. அங்கு போனபின் வெளுத்துப்போகும்; பிறகு நான் அங்கேயே செத்து மடிய வேண்டி யதுதான். ராஹிலா அப்படித்தான் அவதிப் பட்டாளாம்."

"அப்படி யொன்றும் போய் விடாது. நாராயணனின் மனைவி, தங்கைகள் எல்லாம் இப்படித்தான் மெருகேற்றிப் போட்டுக் கொள்கிறார்கள். இரண்டு வருஷங்கள் வரை நீடித்து வருகிறதென்று அவன்தான் சொன்னான்.''

"போலிகளைப் போட்டெல்லாம் எனக்குப் பழக்கமில்லை; அப்படி என்று அம்மாவுக்குத் தெரிந்தால் அவள் மூச்சே நின்றுவிடும்.''

"'செத்து மடிந்து விடுவேன்', 'மூச்சே நின்று விடும்'—இதெல்லாம் என்ன பேச்சு, மெஹ்ரூன்?''

"நம் குடும்பப் பழக்கத்தைத் தானே சொல்கிறேன்.''

"நகை என்றால் உயிர் என்றெண்ணும் குடும்பமோ?''

"ஆமாம்.''

"உயிரைக்கூடக் கொடுத்து விடுவார்கள், சில பெண்கள்; ஆனால் நகைகளைக் கழற்றித்தர மாட்டார்கள்......நானும் உன்னைப் பலமுறை பார்த்து விட்டேன், நகையைக் கொடுத்த பின்னால் அழுகிறாய்; ஆர்ப்பரிக்கிறாய்; ஆத்திரப் படுகிறாய்......''

"நான் மட்டுந்தானா, உலகத்துப் பெண்களே. அப்படித்தான்''

"அப்படிச் சொல்லி விடாதே. நாராயணனின் மனைவி பூங்காவனம், தான் போட்டிருந்த முப்பது பவுன் நகைகளையும் அவன் கேட்குமுன்னே கழற்றித் தந்திருக்கிறாள்! நாராயணன் அதைப்பற்றி எவ்வளவு பெருமையாய்ச் சொல்வான் தெரியுமா?''

"ஆண் பிள்ளைக்கு இதிலென்ன பெருமையோ? விற்றுச் சாப்பிடவா பெண்ணுக்கு நகை போட்டனுப்புகிறார்கள்?''

"மெஹ்ரூன்!......ஒன்றும் புரியாதவளைப்போலப் பேசுகிறாயே! உன் புருஷனின் வாழ்விலும் தாழ்விலும் உனக்குப் பங்கில்லையா? உன் நகைதானா உனக்குப் பெரிது?''

விருந்தினரை உபசரிப்பதில்
முதன்மை ஸ்தானம் பெற்றது.

தயாரிப்பாளர்:
ஸாம்ஸன் சோடா பாக்டரி.
காரைக்குடி மதுரை.

''எனக்கு வேண்டாம் நகை. ஜைத்தூன் கலியாணத்துக்கு நான் போகவில்லே.''

''மீண்டும் அதே பிடிவாதம். உனக்கென்ன அறிவிருக்கிறதா இல்லேயா?''

''இருப்பதால்தான் போகமாட்டேன் என்கிறேன். வளேயல்கள் எங்கே என்ருல் நீங்கள் பணம் தொலேத்து விட்டீர்கள் என்று சொல்ல எனக்கு வெட்கமா யிருக்காது?''

முகத்தில் பளாரென்று அறைந்தாற்போலிருந்தது ரஹீமுக்கு. மேற்கொண்டு அவனுல் பேச முடியவில்லே. மெஹருன்னிஸா ஏதோ வெற்றி பெற்றவளேப்போல அவ்விடம் விட்டு நீங்கினுள்.

அன்றிரவு ரஹீம் சாப்பிடவில்லே; மெஹருன்னிஸாவைப் பார்க்கவும் அவன் கண்கள் கூசின.

இன்பத் தென்றல் லேசாகத் தாக்கிமெஹருன்னிஸாவை எழுப்பிற்று; எழுந்து உட்கார்ந்தாள்; பழக்கமான 'துஆ'வை ஓதி முகத்தைக் கைகளால் துடைத்த பின் அவள் பார்வை தன் வெறுங் கைகள் மேல் பட்டது. உடனே உள்ளத்திலே வேதனே புகுந்தது; கண்களிலே நீர் ஊற்றெடுத்தது.

லேசாகக் கண்களேத் திறந்த ரஹீமுக்கு காலே விருந்தாகக் காத்திருந்தது, வெறுங் கைகளேப் பார்த்தழும் மெஹருன்னிஸாவின் சோகவுருவம். ''அல்லாஹ்'' என்று தன் மார்பின்மீது ஓங்கி அறைந்து கொண்டான்; முகத்தைத் தலேயணே மீது அமுத்திக்கொண்டு அவன் புழுவாய் நெளிந்தான்.

திடுக்கிட்டு எழுந்து நின்ருள் மெஹருன்னிஸா; அவளுக்கொன்றும் புரியவில்லே.

''என்ன? என்ன செய்கிறது?'' என்று படபடப்புடன் கேட்டாள்.

''கேள், உன் கைகளேக் கேள். உனக்கு நகைகளே வாங்கிப் போடுவதற்குள் எனக்குப் பைத்தியமே பிடித்து விடும் போலிருக்கிறது...... யா அல்லாஹ்''

அப்போதுதான் கணவனின் மனவேதனேயை உணர்ந்தாள் மெஹருன்னிஸா. அவன் இரவுகூடச் சாப்பிடவில்லே என்ற நினேவு வந்ததும் வேகமாக அறையைவிட்டு வெளியேறினுள்.

''ஸார் தந்தி!'' என்ற குரலேக் கேட்டதும் அவள் வாயிற்பக்கம் வரவும் ரஹீம் தந்தியை வாங்குவதற்கும் சரியாயிருந்தது.

மிகச் சாவதானமாக உறையைக் கிழித்தான்; அவன் எத்தகைய பேரிடியையும் தாங்கிக் கொள்ளச் சித்தமாயிருந்தான்; அவனுக்குத்தான் இடிமேல் இடி விழுந்து சோதனேகள் சர்வ சாதாரணமாகி விட்டனவே!

தந்தியை இருவரும் ஏககாலத்தில் படித்தனர். 'ஓ' வென்றழ ஆரம்பித்து விட்டாள் மெஹருன்னிஸா. ரஹீமின் முகத்தில் ஒருவித சலனமுமில்லே. அவனிருந்த நிலேயில், அவன் மாமி கவலே தரும் நிலேமையில் இருப்பதாகச் சொல்லும் தந்தி ஒருவித அதிர்ச்சியையும் அளிக்கவில்லே; அழும் மனேவியைத் தேற்றவும் அவனுக்கு மனமிசையவில்லே.

''வண்டி எப்போது?'' என்று தன்னேத்தானே தேற்றிக்கொண்டு கேட்டாள் மெஹருன்னிஸா.

''ஆறரைக்கு இருக்கிறது; அதற்கு இப்போதே புறப்பட்டால்தான் சரியா யிருக்கும்.''

''இந்த வண்டிக்கே போய் விடுவோம்; புறப்படுங்கள்.''

''எனக்கு லீவெல்லாம் முடிந்து விட்டது; நீ மட்டும் போய்விட்டு வா,'' என்றவாறே சட்டையை மாட்டிக்கொண்டான் ரஹீம்.

வீட்டிலிருந்து கிளம்பியது முதல் ஸ்டேஷனை அடையும்வரை ஒருவருக்கொருவர் பேசிக் கொள்ளவில்லை. ரஹீமுக்குப் பேச்சே பிடிக்கவில்லை. மெஹருன்னிஸாவுக்கோ சிந்தனையெல்லாம் தாயைச் சுற்றியே வட்டமிட்டது.

அன்று வண்டி சரியான நேரத்திற்கு வந்துவிட்டது. "போய் வரட்டுமா?'' என்று அவனை ஏறிட்டுப் பார்த்தாள்.

"உம்...'' என்றவாறே முகத்தை வேறு பக்கந் திருப்பிக்கொண்டான் அவன்.

'உடம்பைக் கவனமாகப் பார்த்துக்கொள்ளுங்கள். அம்மா உடம்பு தேற வேண்டுமென்று 'துஆ' செய்யுங்கள்.''

"சரி, நீ வண்டியிலேறு.''

வண்டி நகர்ந்தது; ரஹீமும் பிளாட்பாரத்தைவிட்டு நகர்ந்தான்.

"நகைகளைப் பற்றியுமா மறந்துவிட்டாள்? நேற்று நடந்த வாக்குவாதங்களை நினைவிலிருந்தே நீக்கிவிட்டாளா? நகைகளைப்பற்றி மாமி கேட்கும்போது என்ன சொல்வாள்? ஒன்றுமே நடவாததைப் போலல்லவா பேசிப்போனுள்! ஆம், தாயின் நினைவிலே எல்லாவற்றையும் மறந்துவிட்டாள்போலும். தாயைக் கண்டபின்னுலே நகையைப்பற்றி நினைத்து அழுவாள். சீச்சி! நகை! நகை!! வாழ்வின் பகை! பகை!!''

வெறுப்புடன், பாதி புகைத்த சிகரெட்டை, வாயிலிருந்து பிடுங்கித் தூர எறிந்தான்.

ஈன்றெடுத்த அன்னை, நன்ருக அமர்ந்திருந்ததைக் கண்ட மகளுக்கு ஏற்பட்ட அதிசயத்தை ஆனந்தம் வென்றது. "அம்மா! உனக்கொன்றும் இல்லையேம்மா?'' என்று கேட்டுக்கொண்டே தாயின் மார்பில் தன்னைப் புதைத்துக்கொண்டாள்.

எதிர்பார்த்ததைப்போல மகளைக் கண்டதும் கிளர்ந்தெழுந்த களிப்பு பஷீராபீவியின் முத்தங்களிலே செயல்பட்டது. "ஆமாம்மா, எனக்கிப்போது ஒன்றுமில்லை. ராத்திரி ஒரு மணிக்கு மாரடைத்தது. மாமு பயந்து போய் உனக்குத் தந்தி கொடுத்துவிட்டார். காலை ஐந்து மணிவரை எனக்கு மூச்சு திணறித் திணறித்தான் வந்ததாம். ஆறுக்கு மேல் தான் என் நினைவு எனக்கு வந்தது. ஒரேயடியாகப் பயந்து போய்விட்டாயா மகளே?'' என்று மகளின் முதுகைத் தட்டியபடியே கேட்டாள்.

"அல்லாஹ் உன்னைக் குணப்படுத்திவிட்டால் பத்து பக்கீர்களுக்கு சோறுபோடுவதாக அல்லாஹ்விடம் வேண்டுதல் செய்து

சூரியாஞ்சனம்

ஒரு சிறந்த பெயின் பாம். தலைவலி, தசைவலி, மார்புச்சளி முதலியவைகளுக்குச் சிறந்தது. ஒரு முறை உபயோகித்தால் இதன் குணத்தைக் கண்டு பெரிதும் பாராட்டுவீர்கள்.

சூரியன் மார்க் பயோரியா பற்பொடி

இந்தப் பற்பொடியை உபயோகித்து வந்தால் பல் வியாதிகள் எதுவும் வராமல் தடுத்து உங்கள் பற்கள் எப்போதும் உறுதியாக இருக்கச் செய்யும்.

MFG; M. A. ரஜாக், சூரியாஞ்சனம் டிப்போ, திண்டுக்கல்

N-B: ஏஜெண்ட் இல்லாத ஊர்களில் ஏஜெண்டுகள் தேவை

கொண்டேன். என் 'துஆ' நிறைவேறிவிட்டது,'' என்று மகிழ்ச்சியுடன் சொன்னாள் மகள்.

இரண்டு நாட்கள் கழிந்தன; கைகளிலே புத்தம் புது ரேடியோ வளையல்கள் கொஞ்சிக் கொண்டிருக்க, அந்த இன்னொலியை ரசித்துக்கொண்டே மெஹருன்னிஸா கணவனுக்குக் கடிதம் எழுதிக் கொண்டிருந்தாள்.

திருச்சி,
17-11-56.

"அன்புக்குரியவருக்கு,

மெஹரூன் ஸலாம் சொல்லி எழுதிக்கொள்வது. அல்லாஹ்வின் அருளால் நான் சுகமாக வீடு வந்து சேர்ந்தேன். அம்மா இப்போது சுகமாக இருக்கிறார்கள். தந்தியடித்த இரவு அவர்களுக்கு மாரடைத்ததாம்; காலை ஆறு மணிக்கு மேல் தான் சுய நினைவு வந்ததாம். ஆனால் இருதயம் மிகவும் பலக் குறைவாக யிருப்பதாகவும், எந்நேரமும் மோசமாகலாமென்றும் டாக்டர் சொல்லிவிட்டார். அதனால் அம்மாவுக்குக் கவலை பிடித்துக் கொண்டது. ஜைத்தூனின் கலியாணத்தை சீக்கிரமாக நடத்தி விட வேண்டுமென்று ஆசைப்பட்டார்கள். மாப்பிள்ளை வீட்டாரும் உள்ளூரானதால் நேற்றே கலந்து பேசி கலியாணத்தை இந்தப் பிறை இருபத்தேழுக்கு வைத்து விட்டார்கள்.

வளையல்களையும், செயினையும் பற்றிக் கேட்டார்கள்; நடந்ததைச் சொன்னேன். நேற்றே என்னை நகைக் கடைக்கு அழைத்துப் போய் ஐந்துபவுனில் செயினும், ஐந்து பவுனில் வளையல்களும் வாங்கிப் போட்டார்கள்.

நீங்கள் நகைகளைப்பற்றி ஒன்றும் கவலைப்பட வேண்டாம். நான் அன்று என்னை மறந்து என்னென்னவோ பேசிவிட்டேன்; மனம் பொறுத்து மன்னித்து விடுங்கள்.

கட்டாயம் கலியாணத்திற்கு வந்து சேரவும்.

மெஹருன்னிஸா."

கடிதத்தைப் படித்ததும் கணவன் மிகவும் சந்தோஷப்படுவான் என்றெண்ணிக் கொண்டே அதை உறையிலிட்டாள். அதே உவகை

உழைப்பிற்கு
சிறந்தது
ஐ. பி. சி.
பேட்டரிகள்

கிடைக்கும் இடம் :—
இம்பீரியல்
பேட்டரி
கம்பெனி
174, வடக்கு வெளி
வீதி, மதுரை.



யுடன் தான் அவனிடமிருந்து உடனுக்குடனே வந்தபதில் கடிதத்தைப் படிக்கத்தொடங்கினுள்.

பன்ருட்டி,
18–11–56.

''அன்புள்ள மெஹரூனுக்கு,

அஸ்ஸலாமு அலைக்கும். உன் கடிதம் கிடைத்தது; மாமியின் உடம்பு தேவலை என்றறிந்து அல்லாஹ்வுக்கு ஷுக்ரு செய்தேன். அவன், மாமியை இன்னும் பல்லாண்டு வாழவைப்பானுக!

ஜைத்தூனின் கலியாணத்துக்கு வருவதற்கு முயற்சிக்கிறேன்; அல்லாஹ்வின் நாட்டமெப்படியோ?

நீ நகைகள் வாங்கியதைப் பற்றி எழுதியிருக்கிருயல்லவா, அதென்னவோ அந்த அறிவிப்பு எனக்கு வேப்பங்காயாகக் கசக்கிறது.

நீ பணக்கார வீட்டுப் பெண். நீ பிறந்ததும், உனக்குப் பொன்னுபரணங்கள் பூட்டி மகிழ்ந்திருப்பார்கள் பெற்ருேர்; சிறுமியா யிருக்கும் போதே பல பவுன்கள் பெறுமானமுள்ள நகைகளைப் போட்டு பள்ளிக்கு அனுப்பி யிருப்பார்கள்; உனது கன்னிப்பருவத்திலே வகை வகையான நகை யாவும் போட்டு ஒரு திருவிழாவே நடத்தி யிருப்பார்கள். குழந்தைப் பருவத்திலிருந்து தொடங்கும் இப் பழக்கம், பெண்கள் தாமாகவே ''இந்த நகை வேண்டும்; அந்த 'நெக்லெஸ்' அழகாயிருக்கே,'' என்று பிய்த்துப் பிடுங்கும் பிடிவாதமாக மாறுகிறது; ''ஐயோ! நகைகளையா கேட்கிறீர்கள்?'' என்று மனமுடைந்து கேட்கத் தூண்டும் இரத்த பாசமாக வளர்ந்து விடுகிறது.

ஆம், உன்மீது குற்றமில்லை. உன் மேனியிலே ஆண்டாண்டுகளாக அமர்ந்திருந்த ஆபரணங்கள் ஊட்டி விட்ட சுவை உன்னை அழச் சொல்கிறது; ஆத்திரப்படச் செய்கிறது; அன்பையும் அப்புறப் படுத்தி விடுகிறது.

நீ என்னை ''அன்புக்குரியவருக்கு,'' என்று வழக்கம் போல் அழைத்திருக்கிருய். உண்மையாகக் கேட்கிறேன், மெஹரூன்; உனது உள்ளத்திலே யாருக்கு முதலிடம்? நகைக்கா? எனக்கா?

நகைகளை எதற்காகப் போடுகிருர்கள்? அழகுக்கு என்கிருபா? அல்லாஹ் உனக்கு அழகைக் குறைத்துக் கொடுக்கவில்லை. உனக்கு நகைகளே தேவையில்லை என்று பல தடவை சொல்லியிருக்கிறேன். அதையெல்லாம் உன் நகைகளை விற்று வயிற்றைக் கழுவ வேண்டுமென்ற எண்ணத்தினுல் சொன்னேன் என்றெண்ணிவிட்டாயா? நகைகளையெல்லாம் கழற்றச் சொல்லி உன் மேனி அழகைக்கண்டு நான் மகிழ்ந்திருக்கின்றேனே, அதைப் பைத்தியக்காரனின் குறும்புத்தனம் என்று நினைத்துக் கொண்டாயா? அல்லது நகை பறிக்கும் நாடகத்தின் ஒத்திகை என்று முடிவு செய்து விட்டாயா? உன் வளையல்கள் அன்றில்லாவிட்டால் நான் எவ்வளவு கஷ்டப்பட்டிருக்க வேண்டும்? நகைகளை அழகுக்கு மட்டும் பெரியோர்கள் போட்டு வைக்கவில்லையே; ஆபத்துக்கு உதவ வேண்டுமென்ற நோக்கமுந்தான் அதில் இழையோடியிருக்கிறது. கணவன் நூறு ரூபாய்க்காக பலரிடம் கால் பிடித்துக் கெஞ்சாக் குறையாகக் கேட்பான்; ஆனுல் தன் மனைவியிடம் மட்டும் அவள் நகைகளைக் கேட்கவே மாட்டான். கேட்டால் ஒரே புலம்பலும், ஓயாச் சண்டையும் ஏற்படுவதை அவன் விரும்புவதில்லை. அத்தகைய அன்பு மிகுந்த துணைவியாக நீ ஆகக் கூடாது என்பதே என் எண்ணம்; விருப்பம்.

நீ அன்று உனது வெறுங் கைகளைப் பார்த்து விம்மி விம்மி அழுதாய், தனக் கெட்டா உயரத்தில் வைக்கப்பட்டிருக்கும் மிட்டாயைச் சுட்டிக் காட்டி அழுகின்ற சிறு குழந்தையைப் போல. எனது

சங்கடத்தைச் சற்று சிந்தித்திருந் தாயானால் உன்மனம் ஆறுதலடைந் திருக்கும்.

உன்னை நகைப்பேய் பிடித் தாட்டுகிறது; நீ அதன் பேயாட் டத்தில் ஆடி அருவருப்பளிக்கிறாய்.

மெஹ்ரூன்! வெளிப்படையாகச் சொல்கிறேன், நகைப்பித்து நமக்கு அமைதி அளிக்காது. அது நம் இன்பவாழ்வின் குறுக்கே நீண்டிருக் கும் முள்வேலி; அதன்மீது நாம் பன்முறை மோதி மோதி மடியத் தான் வேண்டும்.

உன் அன்புள்ள,

ரஹீம்.''

ஆறுகப் பெருக்கெடுத்த கண்ணீரை அவளால் அடக்க முடிய வில்லை; முகத்தைத் தலையணைமீது புதைத்துக் கொண்டு வாய் விட்டுக் கதறினாள்.

உள்ளத்திலே நிறைந்த இன் பத்தோடு வண் டியிலமர்ந்தான் ரஹீம். ''மெஹ ரூனைப் பார்க்கப் போகிறேன்,'' என்று அவன் அடிக்கடி தனக் குத் தானே சொல்லிக் கொண் டான். முதல் தேதிக்குப் பின் அடுத்தடுத்து நான்கு விடுமுறை நாட்கள் வந்ததால் அவனுக்கு ஜைத்தூனின் கலியாணத்துக்கு முன்கூட்டியே புறப்பட வசதியா யிருந்தது.

மெஹருன்னிஸாவின் அழகு மேனியும், அன்புப் பேச்சும் புழங் காதவீட்டிலே அவனுக்குஇன்பமோ அமைதியோ தென்படவில்லை. அவள் வீட்டை விட்டுப் புறப்பட் டுப்போன புதிதில் அவனது மனத் திலே அமைதி நிலவிற்றென்றாலும், பயங்கரமான நகைப் பிரச்னை அவ னுக்கு அளவற்ற ஆத்திரத்தையும், சோகத்தையும் தந்ததென்றாலும், மெஹருன்னிஸாவின் பிரிவை அவன் உணர அதிக நாட்கள் பிடிக்கவில்லை; அவளைப் பார்க்காத இருபது நாட் களும் அவள் அவனுள் எவ்வளவு தூரம் ஊடுருவி விட்டாள் என்பதை அவனுக்கு உணர்த்திற்று. தன் கடிதத்திற்குப் பிறகு அவளிட மிருந்து கடிதமே வராதது அவனுக் குச் சஞ்சலத்தை அளித்தது. அக் கடிதம் அவளிடம் எத்தகைய மாறு தலைப் படைத்தது என்றறிய அவன் எவ்வளவு ஆவலுடன் அவளிட மிருந்து கடிதத்தை எதிர்பார்த் தானோ அவ்வளவுக்கவ்வளவு ஏமாற் றமே அடைந்தான். ஆகவே அவ னும் முன்னறிவிப்பில்லாமலேயே திருச்சிக்குச் சென்று அவளைத் திகைப்பிலாழ்த்த விரும்பினான்.

''மெஹ்ரூன்'' என்றழைத்துக் கொண்டே உள்ளே நுழைந்த ரஹீ மைப் பார்த்த பஷீராபீவிக்கு ஆனந் தம் தாங்க முடியவில்லை.

''வாங்க! வாங்க!!......'' என்று தூண்மறைவிலிருந்து வரவேற்ற வாறே, ''மெஹ்ரூன்! வந்துடுத் தம்மா!'' என்று குரல்கொடுத்தாள் மகளுக்கு.

ஜைத்தூனுக்குத் தலைவாரிப் பின் னிக்கொண்டிருந்த மெஹருன்னிஸா தன் காதுகளையே நம்பவில்லை; அவள் முகத்திலே சட்டென்று பரவிய ஆனந்த உணர்ச்சியைத் துயரம் துரத்தியடித்து விட்டது. ஜைத்தூன் சட்டென்றெழுந்து அடுத்த அறைக்கு ஓடினாள்.

அறையை நோக்கி வரும் கணவ னைப் பார்த்துக்கொண்டே யிருக்க வேண்டுமென்றுதான் மெஹருன் னிஸா விரும்பினாள்; ஆனால் அவள் தலை கீழிறங்கி விட்டது; குற்ற வாளியைப்போல அவள் நின்றிருந் தாள்.

''அஸ்ஸலாமு அலைக்கும்! கைரி யத்தா?'' என்று குறும்புச் சிரிப் புடன் கேட்டபடியே நாற்காலியில் உட்கார்ந்தான் ரஹீம்.

"வ அலேக்..... குமூஸ்ஸலாம்..." என்று கூறும் போது அவள் முகத்திலே வியப்பும் வெட்கமும் ஒன்று கூடின.

"என்னைப் பார்க்க ஆச்சரியமாயிருக்கிறதா, மெஹரூன்?"

"கடிதம் போடக்கூடாதா?"

"நீ போட்டாயோ? என் கடிதம் வந்து சேர்ந்ததா?"

"வந்தது."

"பதில் ஏன் போடவில்லை?"

"உங்களைப் பார்த்துப் பேச வேண்டும் போலிருந்தது; கடிதமெழுதக் கை வரவில்லை" என்று கூறிய பின் அவள் குரல் கம்மிற்று; கண்கள் ஈரமாயின.

"அழாதே, மெஹரூன்! நான் அவசரத்தில் ஏதேதோ எழுதி விட்டேன்......உன்னைப் புண்படுத்தி விட்டேன்."

"இல்லையில்லை, நான்தான் உங்களைப் புண்படுத்தி விட்டேன்; நகைகளுக்காக என்னென்ன வாக்குவாதம்!" என்று சொல்லிக் கொண்டே தன் முகத்தைக் கைகளால் மூடிக்கொண்டாள் மெஹருன்னிஸா. அவளால் அழுகையைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

அப்போது தான் அவள் கைகளிலே ஒலிக்கும் கண்ணாடி வளையல்களைப் பார்த்தான் ரஹீம்; கழுத்திலேயும் சங்கிலியைக் காணோம். பேரதிசயமொன்றைப் பார்க்கும் வழிப்போக்கனைப் போல அவன் பிரமித்து விட்டான்.

"மெஹ்ரூன்! எங்கே அவ்வளையல்கள்? சங்கிலியையும் காணோமே!!"

"அம்மாவிடம் கழற்றிக் கொடுத்து விட்டேன்; முட்களைச் சுமப்பதுபோல் இருந்தது எனக்கு."

"உணர்ச்சியை அடக்கமாட்டாத ரஹீமின் கைகள் அவள் கைகளைப் பற்றிப் பிடித்தன.

"மெஹரூன்! முள்வேலி முறிந்து விட்டது," என்று அவன் தன்னை மறந்து கூவினான்.

★



கற்பக தரு

கற்பக தரு என்பது பனையன்றி வேறில்லை. பனைமரம் 801 உபயோகங்கள் உடையது; இதன் முழு விபரம் 'தால விலாசம்' (பனைமரக் காவியம்) என்ற வடமொழி நூலில் காணப்படுகிறது. கற்பகச் சாற்றிலிருந்து செய்யப்படுவதால் தான் பனைவெல்லத்திற்குக் **கற்பகக் கட்டி** என்று பெயர்; இதுவே நாளடைவில் **கருப்புக் கட்டி** என்று மருவி வழங்கலாயிற்று.

மாலையில் கற்பகதருவான பனையிலிருந்து இறக்கப்படும் பதநீர் மிகவும் தித்திப்பாயும் ஆரோக்கியம் தருவதாகவும் இருக்கும். பனை வெல்லம் கரும்பு சீனியைக் காட்டிலும் சத்து நிறைந்தது என்று நிரூபிக்கப்பட்டுள்ளது.

கூ. சம்புந்தம் (ஈழகேசரி)

ஆசை

உர்து மூலம் :
கவிஞர் இக்பால்

தமிழில் :
'ரஹ்மான்'

உலகத்துச் சபைகளையே உளம்வெறுத்தேன் என்னிறைவா !
உள்ளம் என்னும்
கலைவிளக்கே அணைந்ததன்பின் காசினியின் சபைகளிலே
களிப்பும் உண்டோ ?
கலகலத்த வாழ்வினின்றும் ஓடுகின்றேன் பேச்சொலியும்
கலைந்து மாளும்
நிலைபெற்ற மௌனத்தை நாடுகின்றேன் இதுவேஎன்
நெஞ்சின் ஆசை !

குன்றருகே எனக்காகக் கட்டியதோர் சிறிய எழிற்
குடிசை வேண்டும் ;
கன்றவரும் துயர்நீங்கித் தனிமையிலே வாழ்நாட்கள்
கழிக்க வேண்டும் ;
நின்றுளைக்கும் புவிக்கவலை எனும்கூர்முள் நெஞ்சினின்றும்
நீங்க வேண்டும் ;
தென்றலிலே மிதந்துவரும் பறவைகளின் குரலிசையில்
திளைக்க வேண்டும்.

கிளர்ந்துவரும் நீரோடைச் சலசலப்பில் தாள இசை
கேட்க வேண்டும் ;
வளர்ந்துவரும் அரும்பவிழ்ந்து காதலியின் மனச்செய்தி
வழங்க வேண்டும் ;
தெளிந்ததொரு சிறுகோப்பை தனில்எனக்கு உலகமெலாம்
தெரிய வேண்டும் ;
இளங்கரமே தலையணையாய்ப் புல்வெளியே பஞ்சணையாய்
இருக்க வேண்டும்.

தனிமைக்குப் புகழ்ஓங்க, ஆர்ப்பரிப்பு தலைகுனிந்து
நாண வேண்டும் ;
கனிவாக என்னுடனே இசைக்குயிலும் நட்பாடிக்
களிக்க வேண்டும் ;
கனிமரங்கள் பசுங்கொடிகள் இருமருங்கும் அணியணியாய்க்
காண வேண்டும் :
இனிமைதரும் இவ்வனப்பை நதிப்புனலும் எதிர்நிழலில்
காட்ட வேண்டும்.

கோலமலைச் சிகரத்தின் கொள்ளைஎழில் உளம்கொள்ளை
கொள்ள வேண்டும்;
பாலைநிகர் நீரலைகள் எழுந்தெழுந்தக் காட்சியினைப்
பார்க்க வேண்டும்;
காலமெலாம் பசும்புற்கள் காசினியின் மடியினிலே
துயில வேண்டும்.
மேலெழுந்த செடிகளினைச் சுற்றிச்சுற்றி ஆற்றின்நீர்
மின்ன வேண்டும்.

சுந்தரிஓர் இளமங்கை ஆடியிலே முகம்காணச்
சூழ்வ தைப்போல்
விந்தைமலர்க் கிளைகுனிந்து குனிந்துபுனல் தொடுவதற்கு
விழைய வேண்டும்
அந்திமணப் பெண்ணுக்கே ஆதவனும் மருதாணி
பூசும் போது
செந்தங்க நிறம்பெற்றுச் சிலிர்க்கின்ற மலரெல்லாம்
திகழ வேண்டும்.

இரவினிலே வழிச்செல்வோர் இளைத்தலுத்துச் சோர்ந்திட்டால்
என்கை உள்ள
ஒருவிளக்கு மனம்தேற்றி அவர்கட்கு நம்பிக்கை
ஊட்ட வேண்டும்;
கருமுகில்கள் வானத்தில் கவிழ்ந்தெங்கும் இருளாக்கும்
கணத்தில், அங்கே
விரைவாக மின்னல்ஒளிர்ந் தவர்கட்கென் வீடதனைக்
காட்ட வேண்டும்.

இளங்காலை வருகையினை என்குடிசைச் சிறுகதவே
உணர்த்த வேண்டும்;
குளிர்பனியே அழகுமலர்க் கூட்டத்தைத் தூய்மைசெயக்
குறுகும் போது,
களங்கத்தைக் கரைத்தென்றன் கண்ணீரே எனைத்தூய்மை
செய்ய வேண்டும்;
தெளிவற்ற துயர்க்குரலே என்னுடைய வேண்டுதலாய்த்
திகழ வேண்டும்.

மோனத்தில் என்அழுகைக் குரல்மிகவும் உயரத்தே
முனைந்து சென்று
வானத்து மீன்பயணக் குழுவிற்கு மணியொலியாய்
ஒலிக்க வேண்டும்;
மானத்தோ டன்புள்ள மனங்களைஎன் அழுகை, அழச்
செய்ய வேண்டும்;
ஈனத்தில் மனம்மயங்கிக் கிடப்பவரை உணர்வூட்டி
எழுப்ப வேண்டும்!

அவள் செய்த உதவி

கவுஸ்

கையைப் பிசைந்துகொண்டு தன் அறைக்குள் குறுக்கும் நெடுக்குமாய் நடந்து கொண் டிருந்தார் காதர் ஹுசைன்.

"ஹூம், பத்து வருஷத்திற்குப் பிறகு இந்த மானக்கேடா? பெரிய பாருங்கல்லே யே தூக்கிப் போட்டு விட்டானே! இவனைப் பெற்றதற்கு ஒரு குளவிக் கல்லைப் பெற்றிருக்கலாம். பிள்ளையாம் பிள்ளை!'' ஆக்ரோஷத்தால் அவரு டைய சரீரம் நடுங்கிக் கொண் டிருந்தது.

"முன்கூட்டியே தெரிந்திருந் தால், நான் உனக்கு அப்பன் இல்லை; நீ எனக்குப் பிள்ளையு மில்லை என்று ஒரு மட்டாகக் கையைக் கழுவி விட்டிருப்பேன். இவ்வளவு பாடுபட்டு எல்லா ஏற் பாடும் செய்துவிட்டு......''

தற்செயலாக அடுத்த அறை ஜன்னல் பக்கம் எட்டிப் பார்த் தார்.

சற்றேனும் சலனமின்றி எழி லோவியமாக நாற்காலியில் அமர்ந்து, ஒரு தமிழ்ப் பத்திரி கையில் படம் பார்த்துக் கொண்டிருந்தாள் அவள். அவனும் சற்றுத் தள்ளி துணிமணிகளை அடுக்கிக் கொண் டிருந்தான. அடுத்த நாள் இரு வரும் வெளியூர் போகவேண்டி யவர்களாச்சே!

"தூ, இந்த மூதேவியை நடு வீட்டில் கொண்டுவந்து வைத் திருக்கிறானே, அயோக்கியப் பயல்!'' ஆத்திரம் பொங்கிற்று அவருக்கு.

தன் முதுகுப்புறம் ஏதோ அரவம் கேட்ட அவள் திரும்பிப் பார்த்தாள். வீட்டிற்குப் பெரிய வரைக் கண்டதும் புன் முறுவ லுடன், மரியாதைக்கு எழுந்து நின்றாள்.

"முகரக்கட்டையைப் பாரு'' என்று தனக்குள்ளேயே சொல் லிக்கொண்டு வெளியே வந்து விட்டார் காதர் ஹுசைன். தான் மனம் குழம்பித் தவிக்கும் போதெல்லாம் வழக்கமாக நடந்து செல்லும் அதே நீண்ட ரஸ்தாவில் விடுவிடு என்று நடந் தார். இத்தனை வருஷம் அவர் வாழ்ந்த வாழ்க்

கை அவர் சிந்தனையை நிரப்பிற்று.

துள்ளித் திரிந்து கொண்டிருந்த ஒரே மகன் மஹ்மூதை, மைத்துனர் முஹம்மது இஸ்மாயிலுடன் மலேயாவிற்கு பத்து வருஷத்திற்கு முன் அனுப்பும் போது, அவர் கொஞ்சமும் அஞ்சவில்லை; கலங்கவில்லை. ஒரு சில வருஷங்களில் மகன் ஆயிரக் கணக்கில் அக்கரைச் சீமையில் புரட்டப் போகிறான் என்ற எண்ணம், அவருடைய புத்திர வாஞ்சையைக்கூட அமுக்கிவிட்டது. ஒரு காலத்தில் இஸ்மாயிலும் கையை வீசிக்கொண்டு போனவர்தான்; இப்பொழுது சொந்தக் கடையே வைத்திருக்கிறார்!

ஆனால் பன்னிரண்டு வயது வரை, தாயில்லாப் பிள்ளையான மஹ்மூதை வளர்த்த குல்சும் பீவிக்கு மட்டும், மனம் தாளாமல் கண்ணீர் பொலபொலவென்று கொட்டிற்று. கணவர் பிரிந்து செல்லுகிறாரே, என்ற துயரம் வேறு அவளுக்கு.

"யார் கூடம்மா போறான் உன் மருமகன்? மச்சான்கூட தானே போறான்" என்று தன் தங்கையைத் தேற்றினார் காதர் ஹுசைன்.

எட்டி இருக்க இருக்க அன்பு வளர்ந்துகொண்டே போகும் என்பார்கள். ஆனால் காதர் ஹுசைனைப் பொருத்த மட்டில் அன்பிற்கு அடிப்படை வேறாக இருந்தது. அவளுடைய எண்ணத்திரையில் தீட்டப்பட்டிருந்த மகனின் பால் வடியும் முகம், காலப் போக்கில் கொஞ்சம் கொஞ்சமாக அழிந்துகொண்டே போய் மறைந்தது. ஏதோ மகன் மலேயாவில் சம்பாதிக்கிறான்; அந்த மட்டில் சரி.

தனிமை அவரை நாளடைவில் வாட்ட ஆரம்பித்தது. தன்னைப் பற்றியும் தன் சூழ் நிலையைப் பற்றியும் தீவிரமாகச் சிந்திக்கலானார். அவ்வளவுதான்; சொல்லிவைத்தாற் போல் அடுத்தடுத்து அவருடைய வாழ்க்கையில் பல மாற்றங்களும் திருப்பங்களும் ஏற்பட்டன. மறு கல்யாணமே வேண்டாமென்று ஒரே பிடியாக இருந்தவர், தம் முடிவைச் சற்று தளர்த்திக்கொண்டு, மறு விவாகம் செய்துகொண்டார். அதோடு மனைவிக்குத் தகப்பன் வீட்டுச் சொத்தில் பங்கைச் சண்டை போட்டு வாங்கிவிட்டார்.

நாலைந்து வருஷத்தில், அவருக்கு இரண்டு குழந்தைகள் பிறந்தன. குடியிருக்கும் வீட்டைத் தவிர வேறொன்றும் இல்லாதிருந்தவருக்குக் கொஞ்சம் நிலநீச்சைக் காணவும், மேலும் சொத்து சேர்க்க வேண்டுமென்ற ஆசை தோன்றி, அது வளர ஆரம்பித்தது அதற்காக வேண்டிய திட்டங்களும் வரிசைக் கிரமமாக அவருடைய மனதில் உருவாகிக் கொண்டே வந்தன. உள்ளூரில் புளியமரக் குத்தகை எடுத்துப் பொருளீட்டிக் கொண்டிருந்தார்.

இந்த சமயத்தில் ஒருநாள் திடீரென்று, மைத்துனர் இஸ்மாயில் விஷ ஜுரத்தால் இறந்து விட்டார்

அமைதி கெட்டது வீட்டில் மட்டுமல்ல; ஊர் முழுதுமே கொந்தளித்தது. சொல்லம்புகள் சரமாரியாகப் பாய்ந்து வந்தன. இவ்வளவுக்கும் காரணம் ஒரு சீனப் பெண். ஆனால், அவனும் அவளும் ஒரு சிறிதாவது அசைந்து கொடுக்காததுதான் ஆச்சரியம்!

என்று செய்தி வந்தது. வீட்டில் உள்ளவர்கள் எல்லாரும் குய்யோ முறையோ என்று கதறினர். ஊர் பூராவும் துக்கத்தில் ஆழ்ந்தது. கணவரின் மரணச் செய்தியைக் கேட்டதும் மயக்கமுற்று விழுந்த குல்சும் பீவி மூன்று நாள்வரை பிரக்ஞையற்றுக் கிடந்தாள். ஆனால் காதர் ஹுசைன் மட்டும், ''உன் நஸீபு அவ்வளவுதான்; நாம் என்னம்மா செய்யலா''மென்று வாயால் சமாதானப் படுத்தினாரே ஒழிய, மலேயாவில் இருக்கும் மைத்துனரின் கடையை, மகன் பெயருக்கு எப்படி மாற்றலாமென்ற திட்டத்தைத் தீட்டிக் கொண்டிருந்தது அவர் மனம். இவரே மைத்துனர் கடைக்கு ஒரு கிரயம் வைத்து, மாதா மாதம் ஒரு தொகையைக் குல்சும் பீவிக்குத் தந்து விடுவ்தாகப் பேசி முடிவு செய்து, இதுகாறும் தனக்கு உறுதுணையாயிருந்த ஒரே தங்கையையும், அவள் மகள் ஜுபைதாவையும் தனியே ஒரு வீட்டில் குடி வைத்து விட்டார்.

அடுத்த வருஷம் பெரிய புளியந் தோப்பு ஒன்று குத்தகைக்கு வந்தது. குத்தகை எடுப்பதற்கு கையில் பணமில்லாமல் தவித்தார்; இல்லை பாசாங்கு செய்தார். வீட்டை விற்றாலொழிய, குத்தகை எடுத்து பிழைப்பு நடத்த முடியாது என்ற அளவிற்கு நாடகம் நடத்திக்காட்டி விட்டார். அவர் மாத்திரம் விற்கத் தயாராயிருந்தால் போதுமா? சொத்துக்கு வாரிசுதாரான குல்சும் பீவியும் சம்மதித்தாகணுமே! அண்ணன் படும் அவதியைப் பார்த்த தங்கைக்கு மனது சங்கடப்பட்டது. நம்மைக் கட்டிக் காக்கும் சகோதரனுடைய பிழைப்பிற்கு உதவாத சொத்தா என்று இருவரும் ஏக மனதாக விற்றுவிட்டனர். ஆனால் அதற்குப் பிறகு அவர் கையில் ஏராளமான பணம் புரண்டும், அவ்வீட்டைத் திரும்பி வாங்க முயலவில்லை. அதற்கு பதிலாக ஒரு பெரிய வீட்டைக் கிரயம் கொடுத்துத் தன் பேரில் வாங்கிக் கொண்டார். பழைய வீட்டை வாங்கி தங்கைக்கும் பாகம் கொடுக்க வேண்டுமென்ற நிர்ப்பந்தம் ஏற்பட்டு விட்டால், அப்புறம் அவருடைய திட்டமும் திறமையும் என்ன ஆவது? குல்சும்



அதைப் பற்றி எப்பொழுதாவது பேச்சை எடுத்தால், 'அது கிடக்கிற தம்மா, தரித்திரம் பிடித்த வீடு; நம் கையை விட்டுத் தொலேந்த பிறகு தான் நமக்கு நல்லகாலம் பிறந்திருக் கிறது', என்று தட்டிக் கழித்து விடுவார்.

இப்படியாக, காதர் ஹுசைனு டைய திட்டங்கள் ஒவ்வொன்ருக, அவருடைய அலாதியான திறமை யால் நிறைவேறிவரும் போது, மகன் மஹ்மூதின் கல்யாணப்பேச்சு ஊருக்குள் அடிபட்டது. தகப்ப னிடம் நிறைய பணமும், மகனிடம் மலேயாவிற்குப் பாஸ்போர்ட்டும், அங்கு சொந்தக் கடையும்கூட இருக் கிறதென்ருல், மாப்பிள்ளேயின் மதிப்பு உயராமல் இருக்குமா? நான், நீ என்று பல பணக்காரர்கள், பெண்ணேக் கொடுக்க முன் வந்த னர். ஆனல் காதர் ஹுசைன் நல்ல



புள்ளியாகப் பார்த்துக்கொண்டிருந் தார். அதாவது தான் மகனுக்குக் கொடுக்கப்போகும் சொத்தளவிற்கு, இந்தக் கல்யாணத்தினுல், அவர் கைக்கு ரொக்கம் கிடைக்கவேண் டும்! அந்தப்படிக்கு நாகூர் கனி வீட்டில் பெண் பேசி முடிந்தது. ரொக்கம் பத்தாயிரம் தந்துவிட வேண்டும். அதற்காக முன்பணம் இரண்டாயிரமும் வாங்கிவிட்டார். பூரா விபரத்தையும், கண்டு மகனுக் குக் கடிதமும் எழுதி விட்டார்.

மஹ்மூத் அடுத்த கப்பலில் வந்து இறங்கினுன். பத்து வருஷத்திற்குப் பிறகு வந்தவன் சும்மா வரவில்லே; பெரிய பழியையும் சுமந்து வந்து விட்டான். தன்னேடு ஒரு 'சீனப் பெண்ணே'யும் அழைத்துக் கொண்டு வந்து காதர் ஹுசைன் முகத்தில் கரியையும் பூசிவிட்டான் அவன்.

ஊருக்குள் எல்லார் வாயிலும், அச் சீனப் பெண் அடிபட்டாள். அவரவர்கள் கசமுசவென்று தங்களுக்குள் பலவிதமாகப் பேசிக் கொண்டார்களே ஒழிய, மஹ்மூத் வந்திறங்கி இரண்டு நாள் ஆகியும், ஒருவருக்காவது அவனே நேரே விசாரித்து விபரம் தெரிந்துகொள்ள தைரியம் வரவில்லே. சங்கோஜ மென்றுதான் சொல்ல வேண்டும். சட்டென்று மரியாதைக் குறை வாக, வாய்த்துடுக்காய் ஏதாவது சொல்லிவிட்டால், என்ற பயம். அவனேக் காண வீடு தேடி வந்த ஒன்றிரண்டு கிழடு கட்டைகளும், சீனப் பெண்ணேப் பற்றிப் பேச்சை எடுக்காமலே, பேசிவிட்டுப் போய் விட்டனர். வீட்டுப் பெண்களோ, எட்டவே இருந்தனர். அவன் கொண்டுவந்திருந்த துணிமணி களும், சாமான்களும் சிந்துவா ரற்றுக் கிடந்தன.

அன்றிரவு, இஷாவிற்குப் பிறகு, அவ்வூர் பள்ளியில் பெரிய பஞ்சா யத்து ஒன்று கூடிற்று; மஹ்மூதின் ஆபாசச் செயலேப் பற்றித் தீர விசாரித்துத் தீர்ப்பு கூறத்தான்! ஊரில் உள்ள பெரிய மனிதர்களெல் லாம் ஆஜராயிருந்தனர் — ஷரீப்,

மஜீது, முஹையதீன், நாகூர் கனி, சாக்கி சத்தார் உள்பட மொத்தம் நாற்பது பெயர். சத்தார் ஆஜரா காத பஞ்சாயமே கிடையாது. எதற்கெடுத்தாலும் "சாட்சி உண்டா; சாட்சி உண்டா" என்று கேட்கும் நியாய உணர்ச்சி கொண்டவராதலால், அவருக்கு "சாக்கி சத்தார்" என்ற பட்டப் பெயர் வழங்கிற்று.

சுற்றுப்பக்கத்திலிருந்த வீடுகளில் பெண்களும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர். பாவா இராவுத்தர்தான் பஞ்சாயத்திற்குத் தலைமை வகித்தார்.

சற்று நேரம் வரை கூட்டத்தில் நிசப்தம் நிலவிக் கொண்டிருந்தது. பேச்சை முதலில் எப்படி ஆரம்பிப்பதென்று எல்லாரும் சும்மா இருந்தனர். ஆகையால் மஹ்மூதே முதலில் பேச்சை ஆரம்பித்தான்.

"ஏன் வெட்டிப் பொழுதைப் போக்குகிறீர்கள்? கேட்க வேண்டியதைக் கேட்டு சட்டு புட்டென்று முடியுங்களேன்!"

"இந்த மாதிரி ஒரு அன்னிய ஸ்திரீயை மஹல்லாவில் கொண்டு வந்து வைத்துக் கொள்வது இது தான் முதல் தடவை. நமக்கெல்லோருக்குமே பெருத்த அவமானத்திற்குரிய விஷயம். இதை இப்படியே விட்டு விட்டால், அக் கரைக்குச் செல்லும் ஒவ்வொரு இளைஞனுக்கும் துளிர் விட்டுப் போகும். ஒவ்வொருவனும் ஒருத்தியை நெஞ்சில் கொஞ்சமும் பயமில்லாமல் இழுத்துக்கொண்டு வந்துவிடுவான். இதைத் தீர விசாரித்து, மஹ்மூதின் அபசாரத்திற்குத் தக்க தண்டனை கொடுப்பதோடல்லாமல், இனி எந்தக் காலத்திலும் எவரும் இப்படிப்பட்ட காரியத்தில் இறங்காமலிருக்க, தக்க பரிகாரம் செய்தாக வேண்டும். அதற்காகத்தான் இந்தப் பஞ்சாயத்து, மஹ்மூத் இதற்கு பதில் சொல்லட்டும் முதலில்" என்று ஆரம்பித்து வைத்தார் தலைவர்.

இம்மாதிரி கூட்டங்களுக்குப் போகிறவர்கள், சும்மா இருந்தாலும் இருப்பார்கள். யாராவது ஒருவன் வாயைத் திறந்துவிட்டால் போதும்; அப்புறம் ஆளாளுக்குப் பேச ஆரம்பித்து விடுவார்கள். பதில் கூற வாயெடுத்த மஹ்மூதையும் முந்திக் கொண்டு திசைக்கொருவராக தங்கள் தங்கள் குற்றச் சாட்டை தாக்கல் செய்தனர்.

"இந்த மானங்கெட்ட பிழைப்பிற்குப் பதிலாக அவளை இஸ்லாத்தில் சேர்த்து, ஒருமட்டில் நிக்காஹ் செய்து கொண்டு ஒழியிறதுதானே! அதற்கு இஷ்டமில்லை என்றால், எங்கேயாவது கண் காணாமல் ஓடிப் போகட்டும்" என்று பிரரேபித்தார் முஹையதீன்.

ஸ்ரீ அம்பிகா பனியன்களையே

அணியுங்கள்

அவைகள்

தரம், வனப்பு, உழைப்பு முதலியவற்றிற்கு நிகரற்றவை.

தமிழ்நாட்டிலும், மற்றும் இந்தியா முழுவதிலும் எல்லா மொழி ராஜ்யங்களிலும், எல்லா ஊர்களிலும் கிடைக்கும்.

தயாரிப்பாளர்கள் :

ஸ்ரீ அம்பிகா டெக்ஸ்டைல்ஸ்

பல்லடம் ரோடு, திருப்பூர். S. I.

“ஆமாம் அது தான் சரி; இது, மகா கேவலம்”— இது மஜீதின் ஆமோதிப்பு.

“ஓடிப்போவது அப்புறமிருக்கட்டுமய்யா; சினப்பெண்ணை இழுத்துக் கொண்டு வந்ததற்கு முதலில் பரிகாரத்தைச் சொல்லுங்கள்”–ஷரீப் ஜோராகக் கையை ஆட்டிக்கொண்டு பேசினார்.

கூட்டத்தில் ஒரு மூலையில் உட்கார்ந்திருந்த நாகூர் கனிக்கு மனம் துடித்திக் கொண்டிருந்தது. “முடிவு எப்படியானாலும் சரி, இந்த ஒழுங்கு கெட்ட பயலுககு, என் மகளை வேறு பேசியிருக்கு. கெட்ட கேட்டிற்கு ரூபாய் பத்தாயிரம் வேண்டுமாம். இரண்டாயிரத்தை முன் பணமாகக் கொடுத்திருக்கிறேன். இந்த நிமிஷமே தொகையை எண்ணிக் கீழே வைக்கணும். இவனுக்குப் பெண் கொடுக்க முடியாது”–நாகூர் கனியின் குரலில் கண்டிப்பு தொனித்தது.

இந்த கட்டத்தில் தலைவர் குறுக்கிட்டார்.

“அது வேறு பிரச்சினை; உங்கள் சொந்த விஷயம்; எடுத்துக் கொண்டிருக்கும் ‘கேசு’க்குச் சம்பந்தமில்லாதது. அதைப்பற்றி நீங்கள் இருவரும் பேசி ஒரு முடிவுக்கு வர முடியாவிட்டால், பிறகு பஞ்சாயத்திற்கு வரலாம். இப்பொழுது இருக்கும் பிரச்சினையைக் கவனிப்போம்”—இப்படி ஒரு போடு போட்டார் தலைவர் பாவா இராவுத்தர். காதர் ஹுசைன் பக்கம் இரண்டொருவர் திரும்பிப் பார்த்தனர். பரிதாபமாகத் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தார் அவர்.

மறுபடியும் சபையில் நிசப்தம்; எல்லாரும் திரு திருவென்று விழித்துக் கொண்டிருந்தனர்.

“நீங்கள் ஒருவரும் முடிவு சொல்லாமலிருப்பதால், நான் ஒரு முடிவு சொல்லுகிறேன். இந்த ஈனச்செயல் செய்ததற்காக ரூபாய் ஐநூறு அபராதம் பள்ளிவாசலைச் சேரவேண்டியது. அந்தச் சீனப்பெண்ணையும் பத்து நாட்களுக்குள் அப்புறப்படுத்த வேண்டியது. அப்படிச்செய்யத்தவறினால், காதர் ஹுசைன் குடும்பம் மஹல்லாவை விட்டு வெளியேறணும்” என்றார் ஷரீப்.

“ஆமாம் அது தான் சரி; அதுதான் முடிவு. என்ன சொல்லுகிறார் என்று அவுகளைக் கேளுங்கள்”—ஏககாலத்தில் எல்லோருமே குரலெழுப்பினர். தொடர்ந்து தங்களுக்குள் சள சளவென்று பேசிக்கொள்ளத் தொடங்கினர். இரைச்சல் அதிகமாகிக் கொண்டே வந்தது. ஒரே குழப்பம். பலர் கேட்ட கேள்விகள் தலைவர் காதிலே விழவில்லை. இந்தக் குழப்பத்தின் நடுவில் சாக்கி சத்தார் கேட்ட கேள்வியான “அவள் சீனப் பெண் தான் என்பதற்கு சாட்சி உண்டா?” என்ற கேள்வியும் பேரிரைச்சலில் மூழ்கிவிட்டது. தலைவர் பாவா இராவுத்தர் எழுந்து நின்றுவிட்டார்.

“மஹ்மூதின் வாக்குமூலத்தைக் கேட்காமல் முடிவுக்கு வரமுடியாது. நீ என்னப்பா சொல்லுகிறாய்?”

"அட அறிவு கெட்ட ஜனங்களே! சீனப்பெண்ணை நான் இழுத்துக்கொண்டு ஓடி வந்து விடவில்லை. தமிழ்நாட்டைச் சுற்றிப் பார்க்க வேண்டுமென்ற ஆசையால் ஆண் துணை வேண்டுமென்று என்னோடு வந்தாள். நான் ஒழுங்கு கெட்டவனாக இருந்தால், ஒருவன் தன் மகளை, என்னை நம்பி தனியே அனுப்புவானா, இது தெரியலையே உங்களுக்கு" என்று பளார் பளாரென்று கன்னத்தில் அறைந்தாற் போல் கேட்டுவிடத் துடித்தான் மஹ்மூத். ஆனால் அச் சமயம் ஏனோ அவனால் வாயே திறக்கமுடியவில்லை.

நிஷ்களங்கமாக இருந்தும், அவன் தன் நிரபராதித் தனத்தை எடுத்துச் சொல்லவில்லை. வாயடைத்துப் போனதற்குப் காரணம் விதியைச் சொல்லுவதா, அல்லது அவனது மதியைத்தான் சொல்லுவதா; அவனுக்கே புரியவில்லை. ஆனால் இந்தக் குழப்பத்திலிருந்து வெளி வரும் முடிவு தனக்குச் சாதகமாக இருக்குமென்று மாத்திரம் அவனுடைய உள்ளுணர்வு உணர்த்திக்கொண்டே இருந்தது.

ஆகவே மறுபேச்சு ஒன்றும் பேசாமல் அபராதத்தை எண்ணி வைத்தான் மஹ்மூத், "பள்ளிவாசல் ரிப்பேருக்காக நானே ரூபாய் ஆயிரம் தரலாமென்றிருந்தேன். எந்த ரூபத்தில் கொடுத்தால் என்ன?" என்றான் மஹ்மூத்.

"அபராத ரூபாய் ஐநூறுக்குமேல் ஒன்றும் வாங்க முடியாது. பஞ்சாயத்தின் முடிவை அமல் நடத்திய பிறகு குற்றவாளியிடமிருந்து பள்ளிவாசலுக்கு வேண்டுமானால், நன்கொடை பெற்றுக் கொள்ளலாம்."

TEL. Majestic ESTD. 1910

MAJESTIC DIAMOND WORKS
199, BIG BAZAAR
TIRUCHIRAPALLY.1. S.INDIA

"ஆனால் ஒரு கோரிக்கை" என்றதும், எல்லார் முகங்களும் மஹ்மூத் பக்கம் திரும்பின.

"அச்சீனப் பெண்ணை வெளியேற்ற பத்துநாள் போதாது. குறைந்தது மூன்று மாதமாவது வேண்டும்!"

"முடியாது; முடியாது" பல திசைகளிலிருந்தும் ஏகப்பட்ட குரல்கள் முழங்கின. அதே சமயத்தில், "இல்லை, கூட கொஞ்சம் டயம் கொடுக்கலாம்" என்ற குரல்களும் எழும்பின. கடைசியாக ஒன்றரை மாத அவகாசம் கொடுக்கலாமென்ற முடிவு ஏற்பட்டது. மஹ்மூதும் ஒப்புக்கொண்டான். ஒரு மாதமே அவனுக்குப் போதுமானது!

மஹ்மூத் பதினைந்து நாள் சுற்றுப் பிரயாணத்திற்குப் பிறகு, அன்று ஊருக்குத் திரும்பியதும், முதற் காரியமாகத் தன்னை வளர்த்த மாமி குல்சுமைக் காண அடுத்த தெருவிற்குப் போய்க்கொண்டிருந்தான். அவனுக்கென்றுதான் ஜுபைதா பிறந்திருக்கிறாள் என்று அந்தக் காலத்தில் சொல்லிக் கொள்வார்கள். காதர் ஹுசைன்கூட அப்போது அவர் இருந்த நிலையில் "உன் மகளை வேறெங்கேயும் கொடுத்துவிடக் கூடாது" என்று தங்கைக்கு அடிக்கடி எச்சரிக்கை செய்வார். ஆனால் மைத்துனர் இஸ்மாயில் இறந்த பிறகு தன்னுடைய அந்தஸ்து உயரவும் அவ்வளவையும் அடியோடு மறந்து விட்டார்.

ஜுபைதா!.........மஹ்மூத் எப்படியெல்லாம் அந்தக் காலத்தில் அடித்திருக்கிறான்; தலையில் குட்டியிருக்கிறான். மச்சான் அடிச்சுட்டானென்று அழுது கொண்டே போவாள் அவள். அவனுக்குத்தானே வாழ்க்கைப் படப்போறே என்று சொல்லி யாராவது கேலி செய்தால், ஒன்றும் தெரியாத ஜுபைதா, "நான்மாட்டேன்; சும்மா குட்டிக்கொண்டே இருக்கும்" என்பாள். அவளை அழு[illegible] விடுவதில்தான் எவ்வளவு ஆனந்தம் அவனுக்கு! இந்த இன்பப் புல்லரிப்பை அவனுடைய மனம் இயக்கிக்கொண்டிருந்தது.

"வாங்கத்தா," ஆசையோடு வரவேற்றாள் குல்சும். சிறு வயதிலிருந்தே, அவனை வாங்க போங்க வென்று அழைப்பதுதான் அவளுக்கு வழக்கம். மருமகனுச்சே!

ராஜ வைத்தியர்
Dr. C.A. ஜெயராம்

மூல ஆப்ரேஷன் வேண்டாம்

21 வகை மூலங்களையும் நிர்மூலமாக்கும்.

No 1, நாகபஸ்பம் காட்டுக்கருணைலேகியம் ஸ்பெஷல் களிம்பு, மூன்று மருந்துகள், யாழ்ப்பாண சுவாமிகளின் 60 வருட அனுபவ மருந்துகள். மூலம், இரத்தமூலம், சீழ்மூலம், பவுந்திரம், முளை, கடுப்பு, தடிப்பு, நமைச்சல் நீங்கும்; ஆரோக்கியம்தரும். பத்தியமில்லை. குணத்துக்கு உத்திரவாதமானது. ஒரு செட் ரூ. 7—8—0 (V. P. P. செலவுதனி) எமது ஏஜண்டுகளிடமும்கிடைக்கும்

யாழ்ப்பாணசாமி வைத்தியசாலை, பழநி.

தாதுபுஷ்டிக்கு டானிக்பில்ஸ் குளிகை

நாடி நரம்புகளை வலுவுண்டாக்கி விந்துவைக் கட்டும். இல்லற இன்பம் அநுபவிக்க அபார சக்தி தரும். இன்றே பரிக்ஷியுங்கள்.

100 குளிகை ரூ. 6. 25 குளிகை ரூ. 2. (V. P. P. 1—5—0)

யாழ்ப்பாணசாமி வைத்தியசாலை, பழநி. (S. I.)

ஜுபைதா மஹ்மூதின் தலையைக் கண்டதும், கதவிற்குப் பின் ஓடி ஒளிந்து கொண்டாள். முன்போல் அவனைத் துரத்திக் கொண்டு, ஓட முடியுமா? பருவம் என்ற சுவரல்லவா எழும்பி நிற்கிறது!

"என்னத்தா, நான் கேள்விப் படுவதெல்லாம்"......என்று இழுத் தாள் குல்சும்.

"மாமி, நீங்ககூட அதை நம்புறீங்களா...?"

"எங்கிட்டாவது கல்யாணம் பண்ணிக்கொண்டு நல்லபடியாய் இருந்தால் சரி. இதுவே எனக்குச் சந்தோஷம். எம் பெண்ணுக்கு என்ன ஏற்பாடு செய்து வைத்திருக்கிறாரோ, அண்ணன்; தெரியலே. உங்கள் காரியமெல்லாம் முடிந்த பிறகு, எல்லாருமாகச் சேர்ந்து இதையும் கொஞ்சம் கவனியுங்க."

மஹ்மூதிற்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. அவன் கண்கள் அழவில்லையே தவிர மனம் அழுதுகொண்டே இருந்தது.

"நான் யதீம்; அதிலும் விதவை. பெண் பாகம் இல்லை என்று எனக்கு மண்ணடித்து விட்டார் அண்ணன். போகட்டும். நல்லாயிருக்கட்டும். ஜுபைதாவை ஒரு இடத்தில் கொடுத்து விட்டால், எனக்கென்ன கவலை அப்புறம். அண்ணன் வீட்டு உறவுதான் அற்றுப்போச்சு."

"மாமி, அத்தா செய்திருந்த நிச்சயார்த்தம் முறிந்து விட்டது. இத்தனை குழப்பத்திற்குப் பிறகும், நீங்கள் ஜுபைதாவை எனக்குக் கொடுக்கத் தயாராயிருந்தால், நான் அதைக் கட்டிக்கொள்ளுகிறேன். அத்தாவும் குறிப்பிட்ட தேதியில் கல்யாணத்தை நடத்திவிடுவார். என்னை நம்புங்கள்."

இதைக் கேட்ட குல்சும் ஸ்தம்பித்து நின்றுவிட்டாள்,

"எப்படியிருந்தால் என்னத்தா, அச் சீனப்பெண்ணை வேண்டுமானாலும் இஸ்லாத்தில் சேர்த்துக் கட்டிக் கொள்ளுங்கள். ஜுபைதாவையும் இரண்டாந்தரமாகக் கட்டிக் கொள்ளுங்கள். என் பெண் வாழ்ந்தால் தானே, உரிமையோடு நான் உங்கள் வீட்டிற்கு வர முடியும்."

ஆயிரமாயிருந்தாலும், இரத்த பாசமல்லவா? அதோடு, வளர்த்த பசம் வேறு சேர்ந்துகொண்டது அப் பேதை குல்சுமுக்கு.

மஹ்மூதிற்கு இரண்டு சொட்டுக் கண்ணீரே வந்து விட்டது! "மறுபடியும் அச் சீனப்பெண் பேச்சை எடுக்கிறீர்களே, மாமி" என்று சொல்லிக்கொண்டே எழுந்து போய்விட்டான்.

ஏற்கனவே குறித்திருந்த அதே தேதியில், மஹ்மூதிற்கும் ஜுபைதாவிற்கும் திருமணம் நடந்தது

சுற்றுப் பிரயாணம் முடிந்திருந்தால், முதற் கப்பலுக்கே புறப்பட விருந்தஅச் சீனப் பெண்ணை, தன் கல்யாணத்திற்கு நின்றுவிட்டுப் போகும்படி நிறுத்திவைத்திருந்தான் மஹ்மூத்.

கவலை

எதைப் பற்றியாவது சதா கவலைப்பட்டுக் கொண்டிருப்பதுதான் உங்கள் சுபாவம் என்றல், பிறரிடம் வேண்டுமானுலும் கொஞ்சம் கவலை கடன் வாங்கிக்கொள்ளுங்கள். ஆனுல் (உங்கள் கவலைகளை) பிறருக்குக் கடன் கொடுக்க முற்படாதீர்கள்.

ருட்யர்ட் கிப்லிங்

''விசா'' முடிவு தேதி நெருங்கவும் தன் நாட்டிற்குக் கிளம்பினள் சீனப் பெண். ஜுபைதாவுக்கு நன்றிப் பெருக்கால், ஒரு சொட்டுக் கண்ணீரே வந்துவிட்டது. ''உங்கள் வரவால்தான் எங்கள் விவாகம் நடந்தது'' என்றள். மஹ்மூத் அதை மொழி பெயர்த்துக் கூறியதும், சீனப்பெண் சிரித்துக் கொண்டாள். கடைசிவரை அங்கு நடந்த விவகாரங்களின் விபரம் ஒன்றுமே அவளுக்குத் தெரியாது.

அன்றிரவு தகப்பனும் மகனும் எதிரெதிரே திண்ணையில் படுத்துக் கிடந்தனர். காதர் ஹுசைனுக்கு ஏற்பட்ட அவமானத்தாலும், ஏமாற்றத்தாலும் அடங்கி ஒடுங்கிப் போயிருந்தார் மனுஷன்.

''ஏண்டா உன் மாமி மகளைக் கட்டிக் கொள்ள வேண்டுமென்ற பிரியமிருந்த போது, முதலிலேயே என்னிடம் தெரிவிப்பதற்கு என்ன? பெற்ற தகப்பனை இப்படி அவமானப்படுத்த எத்தனை நாளாய் காத்திருந்தாய்?'' என்ருர் காதர் ஹுசைன்.

''வேண்டுமென்று நான் ஒன்றும் செய்து விடவில்லை. ஊருக்குக் கிளம்பும்போது, நான் கடை வைத்திருந்த இடச் சொந்தக்காரர், ஊர் சுற்றிப் பார்க்க ஆசைப்பட்ட தன் மகளை என்கூட அனுப்பிவைத்தார், என்னுல் தட்ட முடியவில்லை. அச் சீனருக்குத்தானே, நம் கடையை விற்றிருக்கிறேன்.''

''ஆங்......கடையை விற்றுவிட்டியா? என் திட்டங்கள் எல்லாம் மண்ணுய்ப்போச்சு!''—காதர் ஹுசைனுக்கு மூச்சு நின்றுவிடும் போலிருந்தது. முன்னைப்போலிருந்தால் குதி குதி என்று குதித்திருப்பார். இப்பொழுதோ உள்ளமும் உடலும் சோர்வுற்றுக் கிடந்தார்.

''அத்தா, நம்முடைய திட்டங்களுக்கெல்லாம் மேலான ஒரு திட்டத்தை 'ஒருவன்' வகுத்துக் கொண்டிருக்கிருன் என்பதை மறந்துவிட்டீர்களா? பெண் சொத்து இல்லை என்று மாமிக்குப் பாகத்தைப் பிரித்துக் கொடுக்காமல், மண்ணடித்தீர்களே, அப்போது எங்கே போனுர்கள் இந்த பஞ்சாயத்துக்காரர்கள்; யோக்கியர்கள்! உங்களுடைய அந்த நீசச் செயலுக்கு, நான் இப்படி ஒரு பரிகாரம் செய்ய வேண்டுமென்பது அவனுடைய நாட்டமாக இருக்கும்போது, உங்களுடைய திட்டம் எப்படி நிறைவேறும்?''

காதர் ஹுசைன் ஒரு பெருமூச்சு விட்டார்.

''பெண் சொத்துரிமை எங்கள் இஸ்லாத்தில் பல நூறு வருஷங்களுக்கு முன்பே ஏற்பட்டுவிட்டது; ஆனல் இப்பொழுதுதான் இன்றைய பல நாடுகளுக்குப் புத்தி வந்து அவ்வுரிமையைச் சட்டமாக்கிக் கொண்டு வருகிருர்கள் என்று நாம் பெருமைப் பட்டு என்ன பயன், உங்களைப்போல் பலர் நம் சமூகத்தில் இன்னும் இருக்கும் போது?'' என்றுன் மஹ்மூத்.

காதர் ஹுசைன் காதில் இச் சொற்கள் விழு முன்பே, அவர் கண் அயர்ந்து தூங்கிவிட்டார். ★

பிராண மித்ரா

ஜீவ சக்தி

பலஹீனத்தையும் நபும்சகத்தையும் போக்கி, ரத்த ஓட்டத்தைப் பெருக்கி, நரம்புத் தளர்ச்சியைக் களைந்து, சிறுநீர் கழிக்கும்போது ஏற்படுகிற எப்படிப்பட்ட வலிகளையும், வெள்ளை, வெட்டைகளையும் நீக்கி, தாது விருத்தியை யூட்டவல்ல வீரிய சக்தி படைத்த மருந்துகள். இல்லற வாழ்க்கையில் விளைந்துள்ள எல்லாக் கஷ்டங்களையும் இவை உடனே நிவர்த்தி செய்துவிடும். பத்தியமே கிடையாது.

•

'பிராணமித்ரா' (3 மருந்துகள் சேர்ந்த ஸெட்) 40 நாட்களுக்கு, விலை 18·75. 20 நாட்களுக்கு, ரூ. 12·75· முன் பணம் அவசியம் ரூ. 10/- அனுப்பவேண்டும். 40 நாள் மருந்து: இலங்கை (சுங்கத் தீர்வையுட்பட) ரூ 25.87. மலாய் நாட்டுக்கு 40 ஷிலிங் (பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர்) ஏர்மெயில் ரிஜிஸ்டர் கவரில் வைத்து அனுப்பவும். முன்பணமின்றி ஆர்டர்கள் கவனிக்கப் படமாட்டா.

தனிப்பட்ட நபர்கள் தமக்குரிய பூரா வியாதியைத் தெரிவித்து, 15 நயா பைசா ஸ்டாம்பு வைத்து எழுதவும். மலேயாவாசிகள் 1 ஷிலிங் B. P. O. அனுப்பவேண்டும். எமது கேட்லாக் தேவைப்படுவோர் 15 ந. பை. ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

DR. K. K. RAMAN (REGD)
INDIAN MEDICAL PRACTITIONER
Kerala Vaidya Sala

டாக்டர் கே. கே. ராமன் (ரிஜிஸ்) (பி)
இந்தியன் மெடிகல் பிராக்டிஷனர்
கேரள வைத்திய சாலை

POST BOX 473, CHOOLAI, MADRAS-7 தபால் பெட்டி 473, சூளை, சென்னை-7

உருவமா, உள்ளமா?

இஸ்மாயீல்கனி

உலகிலே உடைக்கு மதிப்புக் கொடுப்போரும் உருவத்திற்கு மதிப்புக் கொடுப்போரும் அதிகமுண்டு. ஆனல் உயர்ந்த பண்பைப் பேணும் நாவுக்கும், உள்ளத்திற்கும் மதிப்புக் கொடுப்போர் சிலரே உளர். மனுக் குலத்தில் சிறந்தவர் யார்? தரம் குறைந்தவர் யார்? என்பதை நிர்ணயிக்க உருவத்தையும் உடையையும் உத்தியோகத்தையும் மட்டும் பார்ப்பதில் பயனில்லை. வெளித் தோற்றத்தையும் ஆடம்பரத்தையும் விரும்புபவர், 'அந்த உயர்ந்து வாட்டசாட்டமான கம்பீரத்தோற்ற முடையவர் என் நெருங்கிய நண்பர்,' 'அந்த நீண்ட கால்சட்டையும் மேலங்கியும் அணிந்திருப்பவர், அரசாங்க அலுவலகத்தில் பொறுப்பான பதவி வகிப்பவர்; இங்கு வந்தால் என்னைச் சந்திக்காமல் போகமாட்டார்,' என்று பெருமையாகப் பேசித் தன்னையும் குறிப்பிடும் மனிதரையும் உயர்வாக மதிப்பிட்டுக் கொள்வார். ஆனல் உருவத்தில் சிறியவராளுலும் உள்ளத்தில் நல்லவரை, ஆடையலங்காரத்தில் அதிக அக்கரையில்லா விட்டாலும் அடக்கமாகப் பேசுவதில் அதிக அக்கரையுள்ளவரை, குட்டை என்பதற்காகவும் அவருடன் பழகினல் தரக்கட்டை என்று பிறர் எண்ணுவர் என்பதற்காகவும் தாழ்வாக மதிப்பிட்டு விடுகின்றனர், இந்த அரை குறை அளவினர். அதிலும் தோற்றக் குறைவை சபை நடுவே தூற்றிப் பேசும் போது, அடக்கத்தை அதிகம் பேணுபவர் அமைதியாக இருந்து விடுகின்றனர்; கொஞ்சம் ஆத்திர முள்ளவர் சொற்சாதுரியமாகப் பேசுந்திறமையுள்ளவராளுல் அந்தக் குறை மதிப்பிடுவோரை வார்த்தையம்புகளால் வஞ்சம் தீர்த்துக் கொள்கின்றனர். இதை பொட்டிய இரண்டு புலவர்களுடைய சிறு வரலாற்றைக் கீழே காணுவோம்.

உருவத்தில் குள்ளமான கவிஞர் ரஷீதுத்தீன் வத்வத், எந்த நேரத்திலும் சிரமமின்றி கவிபுனைவதில் ஆற்றல் பெற்றிருந்ததோடு, எந்தச் சந்தர்ப்பத்திலும் சாதுரியமாகப் பேசி எதிரியை மடக்குவதிலும் வல்லவராக இருந்தார். ஆனல் கொஞ்சம் ஆத்திர சுபாவ முள்ளவர். பல்கு நாட்டில் பிறந்தாலும், சமர்க்கந்தில் வளர்ந்த வத்வத், கவிஞர் அத்ஸிஸ் கவாரிஸ்ம் ஷா காலத்தில் மிதந்த செல்

சென்ற இதழ் "புலவரும் போட்டியும்" தொடர்ச்சி

வாக்குப்பெற்று விளங்கினர். ஒரு நாள் வத்வத் ஒரு சபையில் 'காரமாக'த் தர்க்கம் செய்து கொண்டிருந்தார். அவருக்கு முன்னால் ஒரு மைக்கூடு இருந்தது, குள்ளமான உருவத்தின் வாய்த்தொட்டியி லிருந்து கொட்டும் வார்த்தை வெள்ளத்தில் ஆச்சரியப் பட்டுப் போன அத்ஃபிஸ், பரிகாசம் செய்ய எண்ணியவராய்,

"முன்னுள்ள மைப்புட்டி தன்னையே விலக்கிடும்
பின்னின்று பேசுபவர் யாரென்று பார்க்கட்டும்!"

என்றார்.

மைக்கூட்டை விலக்கி வைக்க வேண்டும். அது பின்னாலிருப் பவரை மறைத்துக் கொள்கிறதாம். அவ்வளவு குட்டையாம் அவர். இக் கிண்டல் கவிதையைச் செவியுற்ற வத்வத் ஒரு குதி குதித்து கீழ்வரும் அராபிய நீதி மொழியை எடுத்துக் காட்டினார் :

உருவல்ல உயர்மனு: உள்ளம் நா வென்னும்
இருசிறு உறுப்பின் இறைவழி பண்பாம்!

உருவத்தினால் மட்டும் ஒருவர் சிறந்த மனுவாக–மனிதனாக–முடி யாது. இறையளித்த மறையுரைக் கொப்ப இருதயத்தையும் நாவை யும் பேணும் மனிதரே சிறந்த மனிதராவார். ஆம். உடலின் சிறு உருப்புக்களாகிய இருதயம், நா ஆகிய இரண்டின் இறைவழிக் கொப்ப இயங்கும் பண்புதான் சிறந்த மனுவின் அடையாளமாகும். பின்னர் அத்ஃபிஸின் வாய் தர்க்கம் முடியும் வரை அடைபட்டு விட்டது.

இவ்வாறு அத்ஃபிஸின் வாயையடைத்த வத்வத் வேறோர் இடத்தில் யோசிக்காமல் ஆத்திரப்பட்டுப் பேசிவிட்டு, எதிரியிடம் அகப்பட்டு வாயடைபட்டு வந்த வரலாற்றையும் கீழே பார்ப்போம்.

ஒரு சமயம் வத்வத் சக புலவர் ஆதில் ஸபீரைப்பார்க்கச் சென் றிருந்தார். அப்பொழுது கடும் பனிக் காலம். அந்த வேளை வத்வத் திடம் வாதிட்டுத் தொந்தரவை ஏற்றுக் கொள்ள விரும்பாத ஸபீர், தம் பணியாளனிடம் தாம் வெளியே சென்றிருப்பதாக வத்வத்திடம் கூறும்படி சொல்லி விட்டு வீட்டினுள் இருந்து கொண்டார். வத் வத் பணியாளனின் பேச்சைக் கேட்டு ஏமாற்றமடைந்து உரக்கக் கூவினர்;

வெண்பனி கொட்டுமிவ் வேளையில் வெளியிலே
செல்பவன் தரணியில் முழுமுட்டாள ல்லவோ?

பனி மழைபோல கொட்டுகிறதே. இவ்வேளையில் வெளியே செல் பவன் உலகில் முழு முட்டாளல்லவா? என்று அலுத்துக் கொண் டார் வத்வத். இதைக் கேட்டவுடன் ஸபீர், வீட்டிற்குள்ளிருந்து கொண்டே பதில் கூறினர்,

இவ்வேளை வீட்டினுள் ளிருப்பவன் நானே தான்
இவ்வீட்டின் வெளியிலே இருப்பவர் நீரன்றோ?

வீட்டை விட்டு வெளியே செல்பவன் முட்டாள் என்றால் ஸபீர் தானே வீட்டிற்குள் இருக்கிறார்; வத்வத் தல்லவா வெளியில் இருக் கிறார்? எனவே, அவர் வார்த்தைகளைக் கொண்டே முட்டாள் பட்டத்தை வத்வத்தின் மீது திருப்பிச் சுமத்தினர் ஸபீர், வத்வத் தின் வாய் அடைபடாமல் வேறென்ன செய்ய முடியும்? ★

துப்பறியும் விஞ்ஞானம்

அ. அப்துர்ரஹீம்

விஞ்ஞானம் வளரவளர அதனுடன் தொடர்பில்லாததெனக் கருதப்பட்ட பிற துறைகளில் அது புகுந்துவருகிறது. விஞ்ஞானத்தின் துணையால் கலைகளும் வளர்வதைக் காண்கிறோம். உண்மைக் குற்றவாளியைக் கண்டுபிடிக்கும் துப்பறியும் தொழிலை ஒரு கஷ்டமான கலையாகக் கருதிய காலமுண்டு. ஆனால் தற்காலத்தில் துப்பறியும் முறைகள் விஞ்ஞான அடிப்படையில் அமைக்கப்பட்டு, கருவிகளைக் கொண்டே குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் வாய்ப்பு அமைந்திருக்கிறது,

சிறு பொருள்களைப் பெரிதாக்கிக் காட்டும் பூதக்கண்ணாடி கண்டுபிடிக்கப்பட்டு, நம் கைவிரல்களின் ரேகைகளின் அமைப்பு ஒருவருக்கொருவர் வேறுபடும் உண்மையும் உணரப்பட்ட பின் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க ஒரு குறுக்கு வழி கிடைத்தது. குற்றவாளியெனப் பிடிப்பட்டவன் உண்மையில் குற்றவாளிதானா என்பதை அவனுடைய கைவிரல் ரேகைகளையும், குற்றம் புரிந்த இடத்தில் பதிந்திருக்கும் குற்றவாளியின் கைவிரல் ரேகைகளின் புகைப்படத்தையும், ஒப்பிட்டுக் கண்டுபிடிக்கும்முறை இப்பொழுது பழக்கத்தில் இருக்கிறது.

இத்தகைய சாதாரண முறைகளை அறிந்த குற்றவாளிகள் இவ்வகை உபாயங்களால் தங்களைக் கண்டுபிடிக்காதிருக்க கைகளில் உறையணிந்துகொண்டு கொலை, களவு போன்ற குற்றங்களைச் செய்வதுண்டு. எனினும் செய்யப்பட்ட குற்றங்களுக்கேற்ப பல முறைகளையும் கையாண்டு குற்றவாளிகளைக் கண்டுபிடித்து விடுகின்றனர் விஞ்ஞானத் துப்பறிவாளர்கள். அம்முறைகளிற் சிலவற்றை இங்கே காண்போம்.

ஒருவருக்கொருவர் கைவிரல் ரேகைகளின் அமைப்பு வேறுபடுவதைப் போன்றே, தலை மயிரின் அமைப்பும் ஒருவருக்கொருவர் வேறுபடுவதாகச் சமீப காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. மிக மிகப் பெரிதாக்கிக் காட்டும் பூதக் கண்ணாடியில் ஒரு மயிரைப் பார்த்தால் அதன் மேற் பரப்பு வழவழப்பாக இல்லாமல் சொறசொறப்பாகவும், கோடுகள் நிறைந்தும், கரும்புத் தண்டைப்போன்று கணுக்கள் நிறைந்தும் காணப்படுகின்றது. ஒரு கொலை நடக்கும்போது கொலையுண்டவனுக்கும் கொலை செய்தவனுக்கும் நடந்த போராட்டத்தில் கொலையாளியின் தலை மயிர்களிற் சில கொலையுண்டவனின் கையில் சிக்கி இருப்பதுண்டு. குற்றவாளி அணிந்த தொப்பிபோன்ற பொருள்களில் சிறு மயிர்த்துளிகள் கிடைத்தாலும் போதும். இவற்றை பூதக் கண்ணாடியில் ஆராய்ந்து பிடிபட்டவனின் மயிரின் அமைப்புடன் ஒப்பிட்டு உண்மைக் குற்றவாளியைக் கண்டுபிடித்து விடுகின்றனர்.

கொலை செய்தவரின் ஆடையில் கொலையுண்டவனின் இரத்தக் கறைகள் புதிதாய் இருப்பதாக வைத்துக்கொள்வோம். அது ஆடு கோழி போன்ற பிராணிகளின் இரத்தம் என்று கூறி கொலையாளி தப்பிவிட முடி

யாது. ஏனெனில் அது மனித இரத்தம் தானா என்பதைக் கண்டு பிடித்து விடமுடியும்.

இதற்காக சிறிதளவு மனித இரத்தத்தை உரையவைத்து அதில் வழியும் சீரம் (SERUM) என்னும் ஊண் நீரை ஒரு முயலின் இரத்தக் குழாயில் செலுத்தி விடுகின்றனர். சில தினங்களில் முயலின் இரத்தத்தில் மனித இரத்தத்தை எதிர்க்கும் ஒரு பொருள் தயாராகிவிடுகிறது. பின்பு அம் முயலின் இரத்தத்தை வெளியில் எடுத்து அதன் ஊண் நீரைப் பிரிக்கின்றனர். இதற்கு 'மனிதனுக்கு எதிரான சீரம்' என்று பெயரிட்டுள்ளனர். இம் முறையில் எவ்வகைப் பிராணியின் எதிர் சீரத்தையும் தயாரித்து வைத்துக் கொள்ளலாம். ஒருவகைப் பிராணியின் எதிர் சீரத்தை அவ்வகைப் பிராணியின் இரத்தத்துடன் கலந்தால் அவ்விரத்தம் திரைந்து வெண்மையாகும். இம் முறையில் ஆடையில் பட்ட ஒரு துளி இரத்தத்தையும் சோதித்து அது மனிதனின் இரத்தமா அல்லது எந்த பிராணியின் இரத்தம் என்பதைக் கண்டுபிடிக்க முடிகிறது.

இரத்தப் பரிசோதனை மூலம் இருவருக்கிடையேயுள்ள இரத்த உறவைக் கண்டுபிடிக்கலாம். சொத்துப் பிரிவினைத் தகராறுகளில் ஒருவனைத் தந்தையென உறவு கொண்டாடும் மற்றொருவனைத் தன் மகனல்ல என்று முன்னவன் நிராகரிக்கலாம். தங்களுக்குப் பிறக்காத குழந்தையைத் தங்கள் குழந்தையெனக் கூறும் பெற்றோர்கள் உண்டு. உடன் பிறந்த சகோதரனை மாற்றான் என்று கூறி சொத்தில் பங்கில்லை எனக் கூறுவதுபோன்ற உறவுத் தகராறுகளும் நீதி மன்றத்துக்குள் நுழைவதுண்டு. இத்தகைய சச்சரவுகளில் உண்மையைத் துப்பறிய நிபுணர்கள் இரத்தப் பரிசோதனையைக் கையாளுகின்றனர்.

கறுப்பன் என்றும் வெள்ளையன் என்றும் மனிதரிடையே வேற்றுமை நிலவினும் தோலுக்குள்ளே ஓடும் இரத்தம் எல்லோருக்கும் சிவப்பாகவே இருக்கிறது. எனினும் உலக மக்கள் அனைவரையும் அவரவர்களின் இரத்த வேற்றுமையைக் கொண்டு நான்கு வகையினராகப் பிரிக்கலாம். மனித இரத்தத்தில் இரண்டு வித பொருள்கள் காணப்படுகின்றன. விஞ்ஞானிகள் ஒரு பொருளுக்கு 'A' (ஏ) என்றும், மற்றொன்றுக்கு 'B' (பி) என்றும் சுருக்கமாகப் பெயரிட்டுள்ளனர். சிலர்

கோபால் பல்பொடி

பல் வலி, பல் அரணை, வாய்நாற்றம் பல்களில் இரத்தம் வடிதல் முதலிய பல் வியாதிகளை குணப்படுத்தி பல்களுக்கு வெண்மையும் பலத்தையும் தருகிறது.

தயாரிப்பவர்கள்: எஸ்.பி.எஸ்.ஜெயம் அன் கோ.,
25, கீழ நாப்பாளையத் தெரு, மதுரை.

இரத்தத்தில் 'A' இருக்கிறது. சிலரின் இரத்தத்தில் B இருக்கிறது. சிலரின் இரத்தத்தில்இரண்டும் (AB) (ஏபி)இருக்கின்றன. சிலருக்குஇரண்டுமே இல்லை. இவர்கள் பூஜ்யப் பிரிவினர் (O) என்று அழைக்கப் படுகின்றனர். உலகிலுள்ள எந்த மனிதனும் இந்த நான்கில் ஒரு பிரிவினனாகவே இருக்கிறான்.

உடலில் இரத்தம் தேவைப் படுபவர்களுக்கு இரத்த தானமளிப் போரின் இரத்தத்தைப் புகுத்தும் போது இருவரின் இரத்தப் பிரிவையும் ஆராய்ந்து ஏற்றதாக இருந்தால்தான் இரத்தத்தை உட்செலுத்த வேண்டும். ஏனெனில் ஒவ்வாத இரத்தம் உடலில் செலுத்தப்பட்டால் இரத்தம் திரைந்து உடனே மரணம் சம்பவிக்கும். தன் பிரிவினரின் இரத்தத்தையே ஒருவர் ஏற்றுக்கொள்ள முடியும். தன்னிடமில்லாத பொருளுள்ள இரத்தத்தை ஒருவர் ஏற்றுக் கொள்ள முடியாது. A பிரிவினர் A பிரிவினரிடமிருந்து இரத்தம் பெறலாம். B பிரிவினரிடமிருந்து பெற முடியாது. B பிரிவினர் B பிரிவினரிடமிருந்து பெறலாம். AB பிரிவினர் எல்லோரிடமிருந்தும் பெறலாம். ஆனால் AB பிரிவினருக்கு மட்டுமே கொடுக்கலாம். O பிரிவினர் எல்லோருக்கும் கொடுக்கலாம். ஆனால் O பிரிவினரிடமிடந்து தான் பெற்றுக்கொள்ள முடியும்.

பெற்றோர்களில் ஒருவரின் இரத்தத்திலாவது A இல்லாமல் குழந்தைகளின் இரத்தத்தில் A இருக்க முடியாது. இவ்வகை இரத்தப் பரிசோதனை மூலம் ஒருவர் மற்றொருவரின் தந்தையாக இருக்கலாம் என்று கூறலாமேயொழிய, தந்தை தான் என்று அறுதியிட்டுக் கூற முடியாது. ஆனால் தந்தையல்லவென்று தெரிந்தால் அதை அறுதியிட்டுக் கூற முடியும். இதைப் போன்றே வேறு சில இரத்தப் பரிசோதனைகளும் இருக்கின்றன. அவற்றையும்துப்பறிவதற்குப்பயன் படுத்தி வெற்றி காண வழிகளுண்டு.

ராஜா பார்லி
பிஸ்கட்ஸ்
குழந்தைகளுக்கு சிறந்த ஆகாரம்
PROP:- A சங்குபிள்ளை. 115 திண்டுக்கல்ரோடு மதுரை

குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும் என்பார்கள். இதைப் போன்றே, விசாரணை செய்யும் போது குற்றவாளியின் இருதயம் ஒருவிதமாகத் துடிக்கும். குற்றம் புரியாத நிரபராதி சந்தேகப்பட்டு விசாரிக்கப்படும்போது பயத்தினால் அவனது இருதயம் படபடக்கும். ஆனால் அது வேறுவிதமாகத் துடிக்கும் என்று உளநூல் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்திருக்கின்றனர். இருதயத் துடிப்பை எழுதிக் காட்டும் ஒரு கருவியைக் கொண்டு உண்மைக் குற்றவாளியைக் கண்டுபிடிக்கின்றனர்.

கொலை செய்யப்பட்டவனின் சடலத்தை ஆராய்வதால் கொலை நிகழ்ந்த விதத்தை நிர்ணயிக்க முடிகிறது. தற்கொலை, கழுத்தை நெறித்துக் கொல்லுதல், விஷமிட்டுக் கொல்லுதல், போன்றவற்றை சோதனையால் கண்டு பிடிக்கலாம். பிணத்தின் வயிற்றில் உள்ள உணவில் ஒரு துளி ஆர்சனிக் விஷம் கலந்திருந்தாலும் அதைக் கண்டு பிடித்துவிட முடியும். இவ்வகையில் துப்பறிவதற்கு மருத்துவமும் ரசாயனமும் பெரிதும் பயன்படுகின்றன.

விஞ்ஞான முறையில் துப்பறியும் முறைகளைத் தெரிந்த குற்றவாளிகள் தங்களைக் கண்டுபிடிக்க முடியாதவாறு திட்டமிட்டுக் குற்றம் புரிந்து விடுகின்றனர். நிரபராதி குற்றவாளியாகப் பிடிக்கப் படுவதுண்டு. எனினும் முற்காலத்தைவிட தற்காலத்தில் விஞ்ஞானத்தின் உதவியால் குற்றவாளிகளைக் கண்டு பிடிப்பது எளிதாக இருக்கிறது. ★

ரோஜா முள்

—முன் கதை—

வைகறையின் முதற் குரலாம் பாங்கோசை முழங்குமட்டும் பேசியே பொழுதைக் கழித்தபின், 'சுயமே சம்பாதிக்கவேண்டும்' என்ற மனைவியின் கனவை நனவாக்குவதாகக் கூறி, கடன் பெற்று, பர்மாவுக்குப் பயணமாகிறார் அப்துஸ்ஸலாம்.

விடிவானின் விந்தை மாறுதல்களை கவனித்துக் கொண்டிருந்த ரஸாக்கின் காதில் அவனைப் பற்றி உறுத்தோடு வினவும் ஜுபைதாவின் குரல் விழுகிறது. ஜுபைதாவைப் பற்றிய நினைவுகள் அவன் உள்ளத்தில் சலனத்தை ஏற்படுத்துகின்றன. ரஸாக்கும், ஹனீபும் பேசிக்கொண்டிருக்கும்போது தற்செயலாக ரஸாக் பார்வை, வீதியை நோக்கிய ஜுபைதாவின் பார்வையைச் சந்திக்கிறது. ரஸாக்கின் நெஞ்சில் நேசம் மலர்கிறது.

பணமற்றவர்களை தாழ்வாகக் கருதும் ஜைனுல் ஆபிதீன் கல்லூரி விழாவிலே ஏழை ரஸாக் பெற்ற பரிசுகளைக் கண்டு மனம் புழுங்கி தன் 'மக்கு' மகனை—ஹனீபை—பழிக்கிறார். எனவே ரஸாக்கின் பாடக்குறிப்பில் கிடைத்த ஒரு பெண்ணின் படத்தைக் கொண்டு அவனைப் பழிவாங்க எண்ணுகிறான் ஹனீப். குறிப்பைப் பெற்றுப் போக வந்த ரஸாக் தனக்கும் அந்தப் படத்திற்கும் சம்பந்தமில்லை என்று கூறவே ஹனீப் மகிழ்ச்சியுடன் அதைத் தனக்கு உரிமையாக்கிக் கொள்கிறான். அப்போது அங்கு வந்த ஹனீபின் தங்கை மும்தாஜ் ஊரே போற்றும் ரஸாக்கைக் கண்டு நெஞ்சம் பூரிக்கிறாள்.

பரீட்சைக்குப் பணங்கட்டவேண்டுமே என்ற கவலையுடன் வீடு வந்த ரஸாக், தந்தையின் இதயவேதனையைத் தாங்கி வந்த கடிதத்தைக் காண்கிறான். நெருக்கடியான அந்த நேரத்தில் தன்னைக் காட்டிக் கொள்ளாமல் பணவுதவி செய்கிறாள் ஜுபைதா. உண்மை வெளிப்பட்டபோது வேதவாக்கைக் கூறி உதவிய தொகையை வாங்க மறுக்கிறாள். இச்சம்பவம் ரஸாக்—ஜுபைதா நெஞ்சங்களை நேசத்தால் பிணைக்கிறது.

ஹனீப் மறைத்துவைத்த புகைப்படம் மும்தாஜின் கையில் சிக்கி ஜுலைகாவின் கண்ணில் படுகிறது. மகனின் ஒழுக்கத்தைப் பற்றிய கவலையால் அவன் கலியாணத்தைத் துரிதப் படுத்துகிறாள் ஜுலைகா. கலியாணப் பேச்சோடு தன் கபட நோக்கையும் சாதிக்கிறார் ஜைனுல் ஆபிதீன். கள்ளமற்ற லதீபா தன் அண்ணன் விரித்த வலையில் விழுகிறாள்.

பர்மாவில் சொந்த ஊர்க்காரர்களால் ஒதுக்கப்பட்ட அப்துஸ்ஸலாம், சோலியாப் பள்ளியில் அறிமுகமான அலீமுல்லாவின் மூலம் எதிர்பாராத உதவி பெற்று சொந்தத்தில் கடை திறக்கிறார். அலீமுல்லாஹ் வீட்டில் ஒரு படத்தைக் கண்டு ஆச்சரிப்பட்ட ஸலாம், அதிலுள்ளவரின் பெயரைக் குறிப்பிட்ட போது அதிர்ச்சியடைகிறார் அலீமுல்லாஹ்.........

தந்தையின் கண்டிப்பும், தாயின் கண்ணீரும் கலியாணத்திற்கு ஹனீபின் கட்டாயச் சம்மதத்தைப் பெற்று விடுகின்றன. கடனைப் பெற்றுக்கொள்ள மறுக்கும் ஜுபைதா, கலியாணத்தைப் பற்றிக் கொண்டுள்ள மனநிலையறிந்து, கலங்குகிறாள் ஜமீலா. ஹனீப்—ஜுபைதா மணச்செய்தி கேட்டு மனமுடைந்த ரஸாக், அன்னையின் வேண்டுகோளால் மணவிழாவில் கலந்து கொள்கிறான். 'நிக்காஹ்' சபையில் அவனைப் பேச அழைக்கிறார், ஹாபிஸ் அப்துஸ்ஸத்தார்.........

காலச் சுவடு

அலீமுல்லாஹ் பங்களாவில் கண்ட ஹாஜி அப்துல் மஜீது படத்திற்கும், அலீமுல்லாஹ்விற்கும் என்ன சம்பந்தம் என்று சிந்தித்தது அப்துஸ்ஸலாமின் மனம். அப்துல்மஜீது உயிரோடிருக்கையில் பர்மியர்கள் மத்தியிலும் அதிக செல்வாக்குடையவர். இவ்விதமான சிந்தனையில் வயப்பட்டிருந்த அப்துஸ்ஸலாமை நோக்கி,

'உங்களுக்கும் ஹாஜிஅவர்கள் ஊர் தானா?' என்று கேட்டார் அலீமுல்லாஹ், வியப்புடன்!

'ஆமாம்...என்ன விஷயம்? ஆச்சரியத்துடன் கேட்கிறீர்களே?'

'ஹாஜி அவர்கள் குடும்பத்தில் எல்லோரும் 'ஆபியத்து' தானே?'

அலீமுல்லாஹ்வின் கேள்வியில் ஒரு வகையான தனி ஆவலும், பரிவும் கனிந்திருக்கக் கண்டார் அப்துஸ்ஸலாம். எங்கேயோ வெகுதொலைவில் வாழும் ஓர் அந்நியர், முன்பின் அறிமுகம் இல்லாத தம் ஊர்க்காரர்களைப் பற்றி, அக்கரையுடன் விசாரிக்கிறாரே என்ற வியப்புக்குள்ளானார் அப்துஸ்ஸலாம்.

'அல்லாஹ்வின் அருளால் அவர்கள் குடும்பத்தில் எல்லோரும் நலம் தான்......இம்......அவர்களைப்பற்றி இவ்வளவு அக்கரையாகக் கேட்கிறீர்களே; அவர்களை உங்களுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லையே?'

'நீங்கள் கூறுவது உண்மைதான். ஆனால் அவர்களைப்பற்றித் தெரிந்து வைத்துள்ளேன். கண்ணாரக் கண்டால் தான் அவர்கள் அன்புக்குரியவர்களாவார்களா? கண்ணால் காணாதவர்கள்மீதும் அன்பு செலுத்த முடியாதா, ஸலாம்? அக்குடும்பம் எங்களுக்கு வேண்டியவர்களாயிற்றே?' என அமைதியாகப் பேசினார் அலீமுல்லாஹ்; ஆனால் அவர் பேச்சில் ஆழம் இருப்பதைக் கண்டார் அப்துஸ்ஸலாம்.

'உங்களுக்கும் அவர்களுக்கும் எப்படித் தொடர்பு ஏற்பட்டது?'

'நாங்கள் இந்த நிலைமையில் இருப்

பதற்குக் காரணமே ஹாஜி அவர்கள் தான்.'

'நானும் அப்படித்தான் நினைத்தேன்' என்று தலை அசைத்தார் அப்துஸ்ஸலாம்.

ஹாஜியின் ஆதரவையும், உதவியையும் நன்றிமறவாது நினைவில் பசுமையாக வைத்திருக்கிறாரே, அலீமுல்லாஹ்! மேலே ஏற உதவிய ஏணியை, காரியம் முடிந்ததும் எட்டி உதைப்பவர்களைத் தானே வாழ்க்கையில் ஏராளமாகப் பார்க்கிறோம். இந்த நிலைமையில் அந்நிய நாட்டில் நன்றி பாராட்டும் ஒருவரைக் கண்டதில் அப்துஸ்ஸலாம் வியப்பிலாழ்ந்து விட்டார். அலீமுல்லாஹ்வின் உயர்ந்த பண்புகளும், உன்னதமான பேச்சுகளும் ஸலாமின் உள்ளத்தைத் தொட்டுவிட்டன.

'நாங்களும் குடும்பத்தோடு உங்கள் நாட்டிற்கும், ஊருக்கும் ஒரு முறை வந்து விட்டுப்போக நாடியிருக்கிறோம்; வருடக் கணக்காக எண்ணி வருகிறோம். முடியவில்லை' என்றுமேலும் தொடர்ந்து சொன்னார் அலீமுல்லாஹ்.



'எங்கள் ஊருக்கா?'

'இதிலென்ன ஆச்சரியமிருக்கிறது? நீங்கள் இங்கு வருகிறீர்களே, அதே மாதிரி என்று வைத்துக்கொள்ளுங்கள்!'

'நாங்கள் உங்கள் நாட்டிற்குப் பிழைப்புத் தேடும் நோக்கத்தில் வருகிறோம். ஆனால் நீங்கள் எங்கள் ஊருக்கு வர ஆசைப்படுவதின் நோக்கம் என்னவென்று அறியலாமா?'

'நாங்கள் அங்கு வர நாடுவது ஹாஜி வீட்டாரையும், உறவினர்களையும் பார்த்துவிட்டு வரத்தான். ஒருவேளை உங்களோடு உறவும் கொள்ளலாமென எண்ணுகிறோம்..' என்று சொல்லிவிட்டு அலீமுல்லாஹ், அப்துஸ்



ஸலாமைக் கூர்ந்து நோக்கினார்.

'உறவு கொள்ளவா?...'

'ஆமாம்......பெண் கொள்ளத்தான்...நீங்கள் இங்கு பெண்கொள்வதில்லையா? அதே மாதிரித்தான்!'

'நீங்கள் கூறுவதின் அர்த்தம் எனக்கு விளங்கவில்லை!'

'இந்தியர்கள் இந்த நாட்டில், கல்யாணம் செய்துகொண்டு குடும்பத்தோடு வாழும்போது, நாங்கள் ஏன் உங்கள் நாட்டில் சம்பந்தம் கொள்ளக்கூடாது?'

'இவ்வளவு தொலைவில் உள்ள உங்களை நம்பி எங்கள் பக்கத்தில் யாரும் அதற்கு முன்வர மாட்டார்களே?'

'எங்கள் நாட்டவர்கள், உங்களை நம்பவில்லையா? உங்கள் நாட்டிலிருந்து வருகிறவர்கள், இந்த நாட்டிலேயே குடும்பத்தோடு வாழ்கிறார்கள். அவர்கள் இரு விதமான தவறுகளைப் புரிந்து விடுகிறார்கள். சிலர், இங்கேயே கல்யாணம் புரிந்து குடும்பம் நடத்தி, ஊரையும், ஊரிலுள்ள மனைவி மக்களையும் ஒரேயடியாக மறந்து அவர்களைக் கைவிட்டு விடுகிறார்கள். வேறு சிலர், இங்கு கல்யாணம் செய்துகொண்டு, சில காலம் வாழ்ந்துவிட்டு, அவர்களை உதறிவிட்டு, சொல்லிக் கொள்ளாமலேயே ஊருக்குச் சென்று விடுகிறார்கள். இந்த இரண்டு தவறுகளுக்கும் இடம் கொடாமல் இருந்தால், உங்கள் ஊரைச் சேர்ந்தவர்களுடன் நாங்கள் உறவு கொள்வதில் என்ன சங்கடமிருக்க முடியும், அப்துஸ் ஸலாம்?'

'நீங்கள் பேசுவது கேட்பதற்கு உவப்பாக இருக்கிறது. ஆனால் அந்த எண்ணத்திற்கு கால, தேச, வர்த்தமானங்கள்தான் இடைஞ்சல்களாக இருக்கின்றன!'

'முஸ்லிம் கால, தேச, தூர எல்லைகளை வென்றவன். அகில உலக முஸ்லிம்கள் அனைவரும் ஒரே குடும்பத்தினர்தான். நீங்கள் மனத்திலுள்ளதை வெளியிடத் தயங்குவதை நான் புரிந்து கொள்கிறேன், நாட்டைப் பொறுத்த வரையில்.

மொழியைப் பொறுத்த மட்டில் நாங்கள் அந்நியராக இருந்தாலும், வாழ்க்கையின் இலட்சியங்கள், நடைமுறை பற்றியவை மட்டில் நாம் இருவரும் தூரப்போனவர்களில்லையே? எனவேதான் நம் மகா கவி இக்பாலும்,

சீனமருபியா
நம்மதுவே
செல்வம்
சேரிந்துஸ்
தானமும்
நம்மதுவே
ஆனவிந்
நாமனை
வோருமுஸ்லிம்
களிவ்
வகில உலகமும்
நம்மதுவே,

என்று முஸ்லிம்களின், அகில உலக ஒற்றுமைப் பண்பைப் பற்றிப் பெருமிதமாகச் சொல்கிறார்.'

பெருமானாரின் பொன்மொழிகள்

எவன் கல்வியைத் தேடி ஒரு பாதையில் நடக்கின்றானோ, அவனுடன் சொர்க்கத்துப் பாதைகளிலே அல்லாஹ் நடக்கிறான். அமரர்கள் தங்கள் இறக்கைகளை கல்வியைத் தேடுபவன் மீது மகிழ்வுடன் விரிக்கிறார்கள். வானங்களிலுள்ளவையும், பூமியிலுள்ளவையும், நீரின் அடித்தளத்திலே வாழ்பவையும் கல்விமானுக்காக பிழை பொறுக்கத் தேடுகின்றன. நிச்சயமாக வணங்குபவனை விட வளர்கல்வி தேர்ந்தோரின் மேன்மை எல்லா நட்சத்திரங்களையும் விட பதினான்காம் பிறைச் சந்திரனின் மேன்மையைப் போன்றது. உறுதியாக கல்வியாளர்கள் நபிமார்களின் வாரிசுகள் ஆவர். இன்னும் திடமாக நபிமார்கள் தீனார்களையோ, திர்ஹங்களையோ (பொன் வெள்ளி நாணயங்கள்) விட்டுச் செல்லவில்லை; நற்கல்வியைத் தான் விட்டுச் சென்றார்கள். ஆகவே அதை அடைபவன் தேவையான செல்வத்தைத் தேடி அடைந்தவன் ஆவான்.

ஸுனனு அபீ தாவூத்

மகாகவி இக்பாலின் உணர்ச்சி மிக்க பாடல்களை அலீமுல்லாஹ் உர்தூ மொழியிலேயே பாடிக் காட்டினார். அப்போது அவருடைய முகத்திலும், கண்களிலும் மின்னொளி பளிச்சிடுவதையும், அவருடைய மொழியில் உள்ளத்து உணர்ச்சியின் ஆவேசம் பாய்ந்து வருவதையும் அப்துஸ்ஸலாம் கண்டு வியந்து, மெய்மறந்து விட்டார்.

'நீங்கள் சொல்கிறபடி நடந்து விட்டால் நல்லதுதான்.'

'ஏன், நடக்காது? அல்லாஹ்வின் நாட்டமும் அப்படியே ஆகுமேயானால் அந்த மாதிரியான உறவுகள் ஏற்படுவதை நாம் மனப்பூர்வமாக வரவேற்கவேண்டும். வாழ்க்கையில் வசதி படைத்தவர்கள், இந்த முறையிலே செயலாற்றுவது அகில உலக முஸ்லிம்களுக்குள் நெருங்கிய தொடர்பும் நட்பும் ஏற்பட வழி கோலும்.........' என்று உள்ளம் திறந்து பேசிய அலீமுல்லாஹ், 'ஹாஜி அவர்களுக்கு இந்த ரங்கூனில் ஒரு குடும்பம் இருந்தது என்பதை நீங்கள் அறிவீர்களா?' என்று கேட்டுவிட்டு, அப்துஸ்ஸலாமின் பதிலுக்காகக் காத்திருந்தார்!

காலமெனும் மணற்பரப்பில் என்றோ பதிந்துவிட்ட சுவடுகள், மறதி எனும் காற்றுப் புழுதியில் மறைந்து விட்டன. எனவே அப்துஸ்ஸலாமின் நினைவு மங்கலாகத் தோன்றியது.

'ஆமாம்......ஊரில் அவர் மனைவி இறந்த பிறகு இங்கு அவர் வேறு ஒரு கல்யாணம் செய்துகொண்டார் எனக் கேள்விப்பட்டிருக்கிறேன்....

மேலும் அவருக்கு ஒரு மகள் உண்டு என்பதுகூட எனக்கு நினைவு இருக்கிறது!'

இதற்கு அலீமுல்லாஹ் அளித்த பதில் அப்துஸ்ஸலாமை ஆச்சரியத்திலாழ்த்தியது!

'அந்தப் பெண்ணை ஹாஜி அவர்கள் எனக்குத்தான் 'நிக்காஹ்' செய்து கொடுத்தார்கள். இப்போது சொல்லுங்கள்......நாங்கள் உங்கள் ஊரில் உறவு கொள்ள எண்ணுவது சரியா, தவறு?'

'அது யோசிக்கவேண்டிய விஷயம் தான்!'

'நாங்கள் உங்கள் நாட்டிலேயே நிரந்தரமாகத் தங்கவேண்டுமென்று முடிவு கட்டி விட்டாலும், நீங்கள் எங்களைத் தள்ளிவிட மாட்டீர்களே? ஏனெனில் உங்களூர்க்காரர்களே உங்களை உதறுகிறார்களே?' என்று நகைத்தார் அலீமுல்லாஹ்.

அந்த நகைப்பின் எதிரொலி போல, உள்ளேயும் சிரிப்பொலி எழுந்தது! அலீமுல்லாஹ், ஹாஜியின் மருமகன் என்றதும், அப்துஸ்ஸலாமுக்கு என்ன பதில் சொல்வது என்றே தெரியவில்லை. அவர் உள்ளத்திலே பலவிதமான எண்ணங்கள் அலைமோதலாயின.

'உங்களின் நல்லெண்ணத்தை நாயன் நிறைவேற்றித் தருவானாக' என வாழ்த்தினார் ஸலாம்.

புகுந்த வீடு

புதுமணப் பெண் ஜுபைதா, புகுந்த வீட்டிற்கு விளக்குப்போல் விளங்கினாள். அந்த வீட்டின் ஒரே மறுமகளாக நுழைந்த ஜுபைதாவை அக்குடும்பத்திலுள்ளோர் ஒவ்வொருவரும் வெவ்வேறு விதமாக் வரவேற்றனர். அவர்களுடைய உள்ளக்கிடக்கையை அவர்

தந்தி : 'ஜுவல்லர்ஸ்' போன் : 49

பவுன், தங்கம், வெள்ளி நகைகளுக்கு

எல். கே. எஸ். ஜுவல்லர்ஸ்

பெரியகடை வீதி :: திருச்சிராப்பள்ளி

✻

பிராஞ்சுகள் :

'தங்க மாளிகை'—யாழ்ப்பாணம் — போன் : 281

137, 2-ம் குறுக்குத் தெரு–கொழும்பு – போன் : 5658

65, N. S. C. போஸ் ரோடு–மதராஸ் { போன் : 2321 ,, வீடு : 55675 }

ஜனதா டைமண்ட்ஸ்–பெரியகடை வீதி திருச்சி – போன் : 549

ஒளி-ஹாஜி அப்பா தைக்கா தெரு, காயல்பட்டணம் – போன் : 4

198312

கள் அப்பட்டமாக, ஜுபைதா வுக்குத் தெளிவாகத் தெரியும் அளவுக்குக் காட்டிக் கொள்ளவில்லையென்றாலும், அவள் அவர்களின் போக்குகளை உன்னிப்பாகவே கவனித்து வந்தாள்.

ஜுபைதாவின் வரவைக்கண்டு புத்தம் புதுப் புடவையும், பூவையும் அணிந்து கொண்டவள் போல பூரித்துப்போனாள் ஜுலைகா; வராத கடன் வட்டியும் முதலும் சேர்ந்து வந்து விட்டது போல பாவித்தார் ஜைனுல் ஆபிதீன்; அழகுப் போட்டியில் கலந்து கொள்பவர்கள், ஒருவரை யொருவர் பொருள் பார்த்து உள்ளம் புகைவது போன்ற அனுபவம் மும்தாஜின் இதயப்பரப்பில் படர்ந்தது; ஜுபைதாவைக் கட்டிக் கொண்ட கணவனான ஹனீபுக்கோ, உருப்போட்டும் மூளையில் ஏறாத பாடத்தை வலுக்கட்டாயமாகத் திணிப்பதுபோன்ற கசப்பான அனுபவம் தோன்றியது!

வாழ்க்கையைப்பற்றி ஜுபைதா எவ்வளவோ கனவுகள் கண்டு கொண்டிருந்தாள். ஆனால் அவளுடைய மணவாழ்வின் ஆரம்பமே கசப்புத்தான்! முதற் கோணல் முற்றிலும் கோணலாகி விடுமோ, என்னவோ? நல்ல தண்ணீர் என்று எண்ணி தாகத்துடன் அள்ளிக் குடிக்கும்போது, அது உப்பு நீராக இருந்து விட்டால்....அப்படித்தானிருந்தது, ஜுபைதாவின் இல்லறவாழ்வின் ஆரம்பம். தன்னுடைய விருப்பம் நிறைவேறுமற்போனதற்காக அவள் வருந்தியதுண்டு. ஆனால் அதற்காக தன் வாழ்வே முடிந்து விட்டதாக அவள் கருதியதில்லை. தன்னுடைய தாயின் மகிழ்வுக்காகத்தான், ஜுபைதா ஹனீபை மணந்து கொள்ள மறுப்புச் சொல்லவில்லை.

ஒவ்வொரு பக்கத்திலும்
திருமறையின் பொன்மொழிகள் பொறிக்கப்பெற்ற

திரு குர்ஆன் நாட்குறிப்பு – 1958

(முஸ்லிம் முரசு டயரி)

இஸ்லாமிய அடிப்படைக் கொள்கைகளும் இன்னும்
பல முக்கிய செய்திகளும்

விலை ரூ. 1–25. தபால் செலவுடன் ரூ. 1–50

6 பிரதிகளுக்கு மேற்பட்ட ஆர்டருக்கு
வியாபாரக் கமிஷன் 20%

அன்பு நூல் நிலையம்
18, ராமசாமித் தெரு, மண்ணடி,
சென்னை - 1.

ஆனால் அது ஜுபைதாவுக்குமகிழ்ச்சி தருவதாக இல்லை. பணமும், பங்களாவும் இருந்துவிட்டால் மட்டும் மகிழ்ச்சி வந்துவிடுமா? பார்ப்பதற்குப் பெரிதாக இருக்கும் மலரில் பொதுவே மணம் இராது; சிறிதாக இருக்கும் பூ வாசமுள்ளதாக இருக்கும். குடிலிலும், கூரை வீட்டிலும் தான் அன்புமலருமா? புகுந்த வீட்டிலும், அப்பங்களாவில் அன்புக்கும் பஞ்சமா? ஒரு பெண்ணுக்கு அன்பை விட வேறென்ன வேண்டும்? நகையும், நட்பும், பட்டும் காசை வீசிப் பெற்று விடலாம். ஆனால் அன்பை விலை கொடுத்து வாங்க முடியாதே? வாழ்க்கையில் வருந்திப்பயனில்லை. என்று கருதி, முறையான மச்சான் ஹனீபுடன் மனமொத்து வாழவே முடிவு கட்டினாள் ஜுபைதா. ஆனால் மனமொத்துப் போக இருவரும் இசைந்து வரவேண்டுமே?

ஜுபைதாவிடம், ஹனீப் மனம் ஒன்றிப்பழகவுமில்லை; பேசவுமில்லை. அவள் அவனைத் தனக்குரியவனாகக் கருதினாலும் அவன் அவளைத் தனக்குரியவளாகக் கொள்ளத் தவறிவிட்டான். எனவே அவன் போக்கில் ஒருவிதமான கடுமை காணப்பட்டது. இதை எண்ணி அவள் உள்ளம் புண்ணாகும். அப்போதெல்லாம் கண்களில் நீர் சுடும்; முகத்திலே ஒரு வித சோகம் நிழல் பெய்யும். மிகவும் சாதுரியமாக, மற்றவர்கள் தன்னிடம் தோன்றும் மாறுதல்களைக் கண்டு கொள்ளாதவாறு நடந்து கொள்வாள் ஜுபைதா. குடும்பவாழ்வில் பண்பட்டுப்போன ஜுலைகா, ஜுபைதாவின் உள்ளக் குமுறலையும், வேதனையையும் ஓரளவு புரிந்து கொண்டாள். அன்புள்ள மாமி தன்பால் காட்டும் பரிவும், பாசமுமே, அவளுக்கு புண்ணில் போட்ட பச்சிலை போல, ஆறுதலளித்தன!

ஹனீபின் அறைப் பக்கமாகச் சென்று கொண்டிருந்தாள்

ESTD. 1929

Tele { Gram : 'KADIRIA'
Phone No. 94

BEST IN
THE MARKET

KADIRIA MATCH FACTORY

P. O. Box No. 15

KOVILPATTI (S. Ry.)

ஜுபைதா. அறையில் மும்தாஜ் நின்றுகொண்டே, சுவரில் தொங்கிய படம் ஒன்றை, கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தாள்.

அவளுடைய சுட்டுவிரல் அப்புகைப் படத்தின் நடுவில் ஊன்றியிருந்ததை தள்ளி நின்ற வாறே கண்டுகொண்டாள் ஜுபைதா. மும்தாஜின் பெயரைச் சொல்லிக் கொண்டே உள்ளே நுழைந்தாள்.

பெருமானரின் பொன்மொழி

ஒரு மனிதன் நாயகத் திருமேனியை அணுகி "இறைவனின் திருத்தூதே! நானொரு துர்க்குணம் படைத்தோன். என் மனைவியை என் நாவினால் காயப்படுத்திவிடுகிறேன். (ஏசிப் பேசி விடுகிறேன்)" என்று தெரிவித்தார்.

அதற்கு பெருமானர் அவர்கள், "தன் மனைவிக்கு கஷ்டம் விளைவிப்பவன் என்னதான் நன்மைகள் செய்தபோதிலும், காலமெல்லாம் நோன்பு நோற்றாலும், அடிமைகள் பலருக்கு விடுதலை வழங்கினாலும் அந் நன்மைகளை அல்லாஹ் அங்கீகரிக்கமாட்டான்," என்று அறிவித்தார்கள்.

ரௌலுல் பவாயிக்

மும்தாஜின் கள்ளமனம் அவள் முகத்திலே எழுதி ஒட்டியிருந்தது. அப்புகைப்படத்தை ஜுபைதாவும் கூர்ந்து நோக்கினாள்.

'இந்தப் படத்தையே அவ்வளவு நேரமாகப் பார்த்துக் கொண்டிருக்க அதில் அப்படி என்ன அதிசயம் இருக்கு, மும்தாஜ்?'

'ஒன்றுமில்லே, மதனி! சும்மா தான் பாத்துக் கொண்டிருந்தேன்!'

கல்லூரி ஆண்டு இறுதியின் போது எடுக்கப்பட்ட புகைப்படம் அது. கல்லூரி முதல்வரும், ஆசிரியர்களும் முதல் வரிசையில் அமர்ந்திருந்தனர். மாணவர்கள் எல்லாம் பின்னால், நான்கு வரிசைகளில் நின்று கொண்டிருந்தனர். கல்லூரி முதல்வருக்குப் பின்னால், ரஸாக் அடக்க வொடுக்கமாகவும், ஆனால் கம்பீரமாகவும் நின்று கொண்டிருந்தான். ஹனீபின் உருவத்தைத் தேடின ஜுபைதாவின் கண்கள், புகைப்படத்தின் ஓரத்தில், இரண்டாவது வரிசை முடிவில், மாணவிகள் அமர்ந்திருப்பதற்குப் பின்பு, விறைப்பான, நிமிர்ந்த காலருடன். நெற்றியில் சுருண்டமயிர் வளைய வர, மிடுக்குடன் காட்சி தந்து கொண்டிருந்தான். அக்கோலத்தை காணவே அவள் கண்கள் கூசின.

'உன் அண்ணன், தேடிப் பிடிச்சு நிற்கிற இடத்தைப்பாரு, மும்தாஜ்?' என வெறுப்புத் தொனிக்க உரைத்தாள் ஜுபைதா.

'அதுக்கென்ன? அங்குதான் இடம் கிடைச்சிருக்கும்!' என இழுத்தாள் மும்தாஜ்.

'நீதான் மெச்சிக்கணும், மும்தாஜ்'–கசப்பும், வேதனையும் அவள் பதிலில் கலந்திருந்தன. அதே நேரம் அவள் நெஞ்சில் ஒரு கேள்வி சுழித்தது. 'இவள் ஏன் அப்படி அந்தப் படத்தை நீண்டநேரம் ஆராய வேண்டும்?' என்பதே அக்கேள்வி. அப் படத்திலிருப்பவர்களில் மும்தாஜுக்குத் தெரிந்தவர்கள் இருவர் தாம். ஒருவர் உடன் பிறந்த தமையன்; மற்றவர் அவள் தந்தையிடம் கடன்பட்டுள்ள குடும்பத்திலுள்ள ரஸாக்! அப்படியானால் அவள் ரஸாக்கைத்தான் அவ்விதம்......கவனித்துக் கொண்டிருந்திருக்கலாமோ? இதனை எண்ணவே ஜுபைதாவின் மனம் சஞ்சலப்பட்டது.

நெஞ்சகத்தில் வளர்த்த நேசத்தின் நினைவு அவள் உள்ளத்தில் சலன மூட்டியது! நீண்ட பெருமூச்சு அவளை ஆட்கொண்டது. அந்த அறையை விட்டும் ஒரு தீர்மானத்துடன் வெளியேறினாள் ஜுபைதா. அவர்கள் இருவரும் சந்தித்தற்குப் பிறகு அவனிடம் கேள்விகேட்கக் கூடிய தருணம் அவளுக்கு இப்போது தான் வாய்த்திருக்கிறது! அதற்கான துணிவை தன் உள்ளத்தில் வரவழைத்துக் கொண்டாள் ஜுபைதா.

'இதென்ன முறை?' என்று துவங்கினாள் ஜுபைதா.

'எதைப்பற்றிச் சொல்கிறாய்?,

ஜுபைதா புகைப்படத்தையும், ஹனீப் நிற்குமிடத்தையும் சுட்டிக் காட்டினாள்.

'இதிலென்ன தப்பு இருக்கிறது? அந்தப்பக்கத்தில் நிற்பதற்கும்...... ஆள் வேண்டாமா?'

'அதற்கு நீங்கள் தான் முன்வர வேண்டுமா?' இப்படிச் சொல்வதற்கு உங்களுக்குக் கூச்சமில்லை!' ஜுபைதாவின் சொற்களில் வெறுப்புக் காணப்பட்டது.

'நிறுத்து! அனாவசியமாக இந்த மாதிரி விஷயங்களில் நீ தலையிட வேண்டாம்...... மேலும் சொல்கிறேன்...' என்று அவன் தொடர்ந்து கூறியவற்றை அவளால் காது கொடுத்துக் கேட்கமுடியவில்லை. அச்சொற்கள் அவளுடைய பூப்போன்ற மென்மையான இதயத்தை ரம்பம் போல அறுத்து விட்டன! தன் கணவனிடம் எதுவும் பதில் சொல்லாமல் வேதனை பொங்கும் உள்ளத்துடன் அந்த அறையைவிட்டும் வெளியேறிவிட்டாள் ஜுபைதா! அவள் கண்கள் கலங்கின: உள்ளம் படுகாயம் கண்டது. வாழ்க்கையெனும் ரோஜாச் செடியில் துயரமெனும் கூரியமுட்கள் தான் அதிகமாக இருக்கின்றனவா? அவள் வாழ்வில் இத்தகைய முட்களே இடம் பெற்று விடுமோ! மலருக்கு இடமில்லையோ? இதை எண்ணிப்பார்க்கையில், ரஸ்தர் 'ரோலரில்' நசுங்கும் கற்களின் அனுபவமே தனக்கு எதிர்காலத்தில் காத்திருப்பதாக ஜுபைதா அஞ்சினாள். பிடித்தமில்லாக் கணவனுடன் அவள் வாழ்நாள் முழுவதும் உயிரோடு, உயிரற்றவளாக வாழவேண்டுமே? தன்னுள்ளத்திலுள்ளதைக் கொண்டவனிடம் கேட்கக் கூட உரிமையற்றுவிட்டாள் என்பதை எண்ணும் போது ஜுபைதாவுக்கு பெருத்த ஏமாற்றமாகவும், துயரமாகவும் இருந்தது. ஹனீபின் கடுமையான சொற்கள் கொடுக்குப்போல, அவள் உள்ளத்திலும், உடலெங்கிலும் கொட்டிக் கொண்டிருக்கும் போது,

E. S. அப்துல் சத்தார் சைக்கிள் Co.,

நாங்கள் சைக்கிள், கிராமபோன், பெட்ரோமாக்ஸ் லைட் முதலியவைகளைக் குறித்த காலத்தில் பழுதுபார்த்துத் தருகிறோம்.

விவரங்களுக்கு:

E. S. அப்துல் சத்தார் சைக்கிள் Co.,

சோலை ஹால் ரோடு, திண்டுக்கல்.

மணவிழாவின் போது அப்துர்ரஸாக் பேசிய இனிமையான பேச்சு அவள் நினைவில் ரீங்காரித்துக் கொண்டிருந்தது. கணவன், மனைவி உறவு பற்றி கூறும் 'குர்ஆன்' ஆயத்தை எவ்வளவு அழகாக விளக்கினுன், ரஸாக்.

பெண்கள் ஆண்களுக்கும் ஆண்கள் பெண்களுக்கும் 'ஆடை'யாகப் படைக்கப்பட்டுள்ளனர் என்பது வேதம் தரும் உயரிய கருத்தாகும். ஆடை மனிதனுடன் நெருக்கமாக ஒட்டி இருப்பது போன்று, ஆணும், பெண்ணும், கணவன், மனைவியாக நெருங்கிய உறவுடன் விளங்கவேண்டும். ஆடை மானத்தைக் காக்கும் கவசம். இந்த உண்மையையும். குர்ஆன் வசனத்தையும் நினைவிற் கொண்டே, மகாகவி இக்பாலும், 'பெண், ஆணின் மானங்காக்கும் ஆடை' என்று போற்றிப்பாடினுர். மேலும் ஆடை பயனுள்ளதென்பதினுல், அன்பின் அடையாளமாகப் பரிசாக வழங்குகிறேம். மணமகனுக்கு சேரியல்களையும், துப்பட்டிகளையும் அணிவித்து, நம் அன்பையும், மகிழ்வையும் வெளியிடுகிறேம். நாயகத்திருமேனி அவர்களும், தங்களின் உற்ற தோழர்களுக்கும், பகைவருக்கும் கூட தாங்கள் புனைந்த ஆடையை அனுப்பிய செய்திகளை வரலாற்றிலே காண்கிறேம். அதே போன்றே கணவனும் மனைவியும் ஒருவர் மற்றவர்க்கு அன்புச்சின்னமாக விளங்குகிறுர்கள் என்பதையும் இந்த குர் ஆன் 'ஆயத்தி'ன் மூலம் விளங்க முடிகிறது. முடிவிலே, ஆடைநெய்வதற்கு, நூலிழைகளை ஊடுபாவு போலப் போடாமல் முடியாது. இழைகளுக்குப் பசை ஏற்றியபின், தறியிலே இழைகள்பின்னுகின்றன. இந்த இழைகள் தனித்திருக்கும் போது வலுவிழந்தும், இணையும் போது ஆடையாக உருவாகி, வலுவுடனும், பயனுடனும் விளங்குகின்றன. இந்த உதாரணத்தில் ஆணும், பெண்ணும் அறிய வேண்டிய உண்மைகள் பல இருப்பதைப் பார்க்கலாம்.........

அப்துர்ரஸாக்கின் பேச்சு அமைதியாகவும், ஆற்றெழுக்குப்போலுமிருந்தது. சிறிதும் அவன் வருத்தத்திற்கு இடம் கொடுக்கவில்லை. ஹனீபும், ஜுபைதாவும் ஒருவர்க்கொருவர், இறை இலக்கணப்படி, நல்லாடையாக, உள்ளம் ஒன்றி வாழவேண்டுமென்று, நெஞ்சுருக வாழ்த்தியதும், ஜுபைதாவின் இதயமே நெக்குருகியது. 'புதிய கருத்துக்கள்' எனப் பாராட்டினுர் ஹாபீஸ் ஸத்தார். அவற்றேடு, ஹனீபின் வார்த்தைகளை ஒப்பிட்டுப் பார்த்தால்......

"என் மன விருப்பப்படி உன்னை நான் மணந்து கொள்ளவில்லை. இந்த மண விஷயத்தில் என் தாய் தந்தையர் சொல்படியே நான் நடந்து கொண்டேன். எனவே என்மனம் உன்பால் வாஞ்சை கொள்ளவில்லை என்றுல், அதற்கு நான் பொறுப்பல்ல. என் மனம் கோணுமல் நீ நடக்கவேண்டுமென்று நான் எதிர்பார்க்கமாட்டேன். என் பெற்றேர் மனம் நோகாமல் நீ நடந்துகொண்டால் போதும். என்னுடைய விஷயங்களில் நீ தலையிடுவதை நான் அனுமதிக்கமாட்டேன். என் எண்ணங்களுக்குக் குறுக்கே நிற்கும் எதையும், எவரையும் நான் சட்டை செய்யப் போவதில்லை. இதை இப்போது நீ நன்ருகத் தெரிந்துகொள், ஜுபைதா! இதற்கு இஷ்டமிருந்தால் நீ இங்கு இருக்கலாம்....இல்லாவிட்டால் இருக்கவே இருக்கிறது உன் பிறந்த வீடு......"

இவற்றை நினைக்கவுமே அவள் நெஞ்சில் பூகம்பம் தோன்றிவிடும். புகுந்த வீட்டின் குடும்பத்தைப் பற்றி எண்ணத் தொடங்கிவிடுவாள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதம். பட்டமரத்தின் பயனற்ற வறி நிழலைப்போன்று பராமுகத்துடன் வந்து போகும் ஜைனுல் ஆபிதீன்; நேற்று வந்தவர்களுக்கு அன்பும், பரிவும், பாசமும் காட்டு

கிருளே, என்று தாயின் மீது கசப பும், ஜுபைதாவின் மீது புழுக்கமும் கொண்டு முகம் சுழிக்கும், நெருஞ் சிப் பூப்போன்ற மும்தாஜ்; வாக்கி லும், போக்கிலும் கடுமையையே விதியாக்கிக்கொண்ட கணவன் என்ற கருவேல முள்! இத்தனைக் கும் இடையில் தன்பால் எந்த நேரத்திலும் அன்பே காட்டும் மண முள்ள மலர் போன்று விளங்கும் மாமி ஜுலைகா! இந்த அன்பு மட்டும் அந்த வீட்டில் இல்லாதிருந் தால் இதற்குள் ஜுபைதா......

இரண்டு மூன்று நாட்களாக முகத்திலே அருள் இன்றி மறுமகள் காணப்படுவதைக் கண்டு ஜுலைகா வுக்கு என்னவோ போலிருந்தது. அந்த வீட்டிற்கு வந்ததிலிருந்து, ஜுபைதாவின் முகத்திலே எவ்வித மான மாற்றமுமில்லை. ஆனால் இப் போது ஜுலைகா காண்பது? வேதனை ஜுபைதா உள்ளத்தில் வெகு ஆழமாக ஊன்றி யிருக்க வேண்டும் என்பதையல்லவா அவள் முகம் காட்டுகிறது!

'என்னம்மா ஜுபைதா, உன் முகத்திலே சந்தோஷத்தையே காணலே?'

'ஒண்ணுமில்லே மாமி!''

'உள்ளதைச் சொல்லு. மனசிலே போட்டுக்கொண்டு கஷ்டப்படக் கூடாதம்மா!'

'மனசிலே கஷ்டமிருந்தால்தானே ....'

'பின்னே உன் முகம் வாடி யிருக் கக் காரணம்? அவன் கோபித்துக் கொண்டானு?'

'இல்லே......மாமி!'

'அவன் வரட்டும்...நான் கேட்டு விடுகிறேன்......'

'அவங்களிடம் ஒண்ணும் கேட்க வேண்டாம்......' என்று பதறிய வாறு பேசினுள் ஜுபைதா.

'ஏன்?'

'எனக்கு என்ன கொடுத்து வைத் திருக்கோ, அதுதானே கிடைக்கும், மாமி!'

'நீ சொல்றதை விளங்கச் சொல், ஜுபைதா!'

'நான் அதைச் சொல்ல மாட் டேன்; அதை நீங்கள் கேட்கவும் கூடாது......' என்றுகூட ஜுபை தாவால் சொல்ல முடியவில்லே; குரல் அடைத்துக்கொண்டது; கண் களினின்றும் கண்ணீர் உருண் டோடி விட்டது! அவள் முகத்தில் இருள் நிழலிட்டது. இதனைக் கண்ட ஜுலைகாவின் உள்ளம் இடிந்துவிட்டது. ஜுபைதாவை ஹனீப் பழிவாங்க ஆரம்பித்து விட்டானு? அப்படி என்னதான் இருவருக்கும் நடந்திருக்கும்? ஜுலைகா மூச்சே நின்று விட்டது போல, வாயடைத்து, மெய் உணர்வு மறந்து தூண்போல நின்ருள்.

ஆனல் ஹனீபோ பயணத்திற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தான்.

(தொடரும்.)

பன்னீர் மணம்

மரத்தின்மேல் விழும் கோடரி யின் ஒவ்வொரு வெட்டும் மர த்தை வீழ்த்திக்கொண்டிருப்பது போல, மனித உடலின்மேல் விழும் ஹிருதயத்தின் ஒவ்வொரு துடிப்பும் மனிதனை வீழ்த்திக் கொண்டே போகிறது என்பதை அறியாமல், இந்த உலக மக்கள் வாழும் சொற்ப நாட்களைக்கூட மகிழ்ந்து வாழ்வதில்லையே.

—உமர்கய்யாம்

இதுபோன்ற ஆயிரக் கணக் கான பன்னீர்த் துளிகள் நிறைந் தது இந்த அறிஞரின் வாழ்க்கை.

இவைகளை எல்லாம் ஒன்ருகத் தொகுத்துக் கொடுக்கிருர்

ஆசிரியர் **ஆர். பீ. மல்லாரி**

அவைகளை எல்லாம் நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டாமா? இன்றே பிரதிக்கு முந்துங்கள்.

பன்னீர் மணம்

பிரசுரம்: **தாஜ் பதிப்பகம்**

11, சுபேதார் ஹுசைன் தெரு

சென்னை-14

பாத்திரம் அறிந்து......

படைப்பின் இரகசியத்தையும், இறை தத்துவத்தையும் அறிய பெரியார் துன்னூன் மிஸ்ரீயை அணுகினுன் ஒரு மனிதன். அதற்கான பரிபக்குவம் அவனிடம் இல்லாததால் ஒன்றும் பேசா திருந்து விட்டார்கள் அப்பெரியார்,

ஒன்றரை ஆண்டு துன்னூன் மிஸ்ரீயவர்களிடம் தங்கியும், அவனுக்கு ஒரு போதனையும் கிடைக்கவில்லை. இது அவன் பொறுமை யையே சோதித்து விட்டது. எனவே ஒருநாள், "ஹலரத்! இனியும் என்னுல் பொறுக்க முடியாது. இப்பொழுதே பிரபஞ்ச இரகசியங்களை எனக்கு போதிக்க ஆரம்பியுங்கள்," என்று பெரிதும் வலியுறுத்திக் கேட்டான் அம்மனிதன்.

"அதற்கான பக்குவம் உனக்கு வரவில்லையே!" என்று பொறுமை இழந்து நிற்கும் அவனுக்கு எப்படி விளக்குவது? அதற்கொரு உபாயத் தைக் கைக்கொண்டார்கள் துன்னூன் மிஸ்ரீ

மூடிய பாத்திரமொன்றை அவன் வசம் ஒப்புவித்து, அதனைக் குறிப்பிட்ட ஓர் ஆள்வசம் கொடுத்து வருமாறு அவனை அனுப்பிவைத் தார்கள்.

அப்பாத்திரத்தினுள் என்ன பொருள் இருக்கும் என்று தெரிந்து கொள்ள ஆவலுள்ளவனுய், இடைவழியில் அதன் மூடியைத் திறந் தான் அவன். அவ்வளவு தான். சொல்லி வைத்தாற் போல சுண்டெலி ஒன்று அதன் உள்ளிருந்து வெளியே தாவிக் குதித்து ஓட்டமெடுத்தது.

ஹலரத் துன்னூன் மிஸ்ரீ அனுப்பி இருப்பது அரும் பொருளாக இருக்குமென்று எதிர்பார்த்த அவன் கண்களுக்கு எதிரே சுண்டெலி சரேலெனப் பாய்ந்து ஓடியது அவன் உள்ளத்தில் சுரீர் என்று தைத் தது. அடங்காக் கோபங் கொண்டான் அவன்.

உடனே துன்னூன் மிஸ்ரீயவர்களிடம் திரும்பி வந்து, "என்னைப் பார்த்தால் உங்களுக்குப் பரிகாசமாகப் படுகிறதா? ஒரு சுண்டெலியைத் தானு என் வசம் ஒப்படைக்க வேண்டும்?" என்று பொரிந்து தள்ளினுன்.

இப்படி நடக்கும் என்பதை ஏற்கனவே அறிந்திருந்த அப்பெரி யார், "கேவலம் ஒரு சுண்டெலியைப் பாதுகாக்கத் தகுதியில்லாத உன்னை நம்பி, பிரபஞ்ச இரகசியங்களையெல்லாம் எப்படி நான் ஒப்படைப்பேன்?" என்று மிகவும் சாந்தமாகப் பதிலளித்தார்கள்.

மூலம்:
நுஸ்ஹத்துல் மஜாலிஸ்

தமிழாக்கம்:
ஜைனுல் ஆபிதீன்.

சீர்வரிசையும், கைக்கூலியும், பெற்று வளர்த்தவர்களுக்குச் சேரவேண்டியவை. ஆனால், பெண் கணவனுக்குரியவள். இந்த விவேகமான முடிவை மாற்றிவிடும் அளவுக்கு என்னதான் நடந்தது?

ஜேயெம்

"அப்படி நடந்திருந்தால்?..." அடிக்கடி மனதில் எழும் அந்தக் கேள்வி அன்றைய தினமும் இத்ரீஸின் உள்ளத்தில் எழுந்தது.

சென்ற ஐந்து ஆண்டுகளாக அவனும் எத்தனையோ தடவைகள் முயன்றிருக்கிறான்— இந்தக்கேள்வியை மறந்து விடவேண்டுமென்று. ஆனால் வெற்றிதான் கிட்டவில்லை. அழகிய காட்சிகளைக் காணும் போது, இயற்கையின் இணையிலாத நடனத்தில் உள்ளம் தாழ்த்தும் போது, கற்பனை வெளியில் மனம் தன்னை மறந்து ஈடுபடும் போது அவனையுமறியாமல் அந்தக் கேள்வி எழுந்து விடுகிறது. அந்தக்கேள்வி இலேசாகத்தலைகாட்டினால்போதும்; அதைத் தொடர்ந்து நீண்ட காட்சிகள் அவன்மனவெளியில் இடம்பெற்றுவிடும்.

இன்றும்அப்படித்தான். தபாலில் வந்திருந்த 'மகிழம்பூ' மாதப் பத்திரிகையின் விசேஷ மலரைப் புரட்டிக் கொண்டிருக்கையில் 'ஜோடிப் பொருத்தம்' என்ற தலைப்புடன் ஓவியன் தீட்டியிருந்த அந்தப் படத்தைப் பார்த்ததுதான் தாமதம். உடனே 'அப்படி நடந்திருந்தால்...' என்ற கேள்வி இத்ரீஸின் மனதில் எழுந்து விட்டது. அந்த ஓவியத்தில் காட்சியளித்த பொருத்தமான ஓர் அழகிய தம்பதியின் தோற்றம் அவன் மனதில் பழைய நினைவுகளைக் கொண்டுவரும் காரணமாக விளங்கியது.

'மகிழம்பூ' மலர் பிரித்தது பிரித்தபடியே இருந்தது. இத்ரீஸின் கண்கள் அந்த அழகிய ஓவியத்திலேயே நிலைபெற்றிருந்தன. ஆனால் மனம்மட்டும் எங்கெங்கேயோ சுற்றித் திரிந்தது. ஐந்து வருஷகாலத்தை ஒரு வினாடியில் தாண்டி

விட்டது. அப்போது நிகழ்ந்த அந்தச் சம்பவம் தெளிவாகத் தெரிந்தது.

இத்ரீஸுக்கு பெண்தேடும் வேலையில் ஈடுபட்டிருந்தார்கள் அவன் பெற்ருேர்கள். எங்கெங்கேயோ வெளியூர்களில் பெண்களைப் பார்த்துக்கொண்டிருந்த அவர்களுக்கு, சற்று தொலைவில் உள்ள ஒரு பெரிய ஊரில் ஒரு பெரிய வீட்டில் இருந்த ஓர் அழகிய பெண் பிடித்திருந்தாள். மேஜர் பஞ்சாயத்திலிருந்து வளர்ந்து முனிசிபாலிடியாகிவிட்ட அந்தப் பெரிய ஊர் அவர்களுக்குப் பிடித்திருந்தது. ஏழ்மையிலிருந்து முன்னேறி புதுப் பணக்காரராக மாறிவிட்டிருந்த அந்தப் பெண்ணின் தகப்பனும் தாயாரும் அவர்களுக்குப் பிடித்திருந்தார்கள். கம்பீரமாகக் காட்சியளிக்க அந்த மாடி வீடும் பிடித்திருந்தது. சீர்சாமான்களெல்லாம் மாப்பிள்ளை வீட்டாரின் விருப்பப்படியே செய்து விடுவதாக அவர்கள் சொன்ன பேச்சும் பிடித்திருந்தது. இத்தனை விஷயங்கள் பிடித்த பிறகு பெண் மட்டும் எப்படிப் பிடிக்காதிருக்க முடியும்? பெண்ணை பணத்திற்காக மட்டும் கட்டிக் கொள்ளலாம் என்ற எண்ணம் அங்கே நிலவ இடமில்லை. காரணம் பெண் உண்மையிலேயே அழகாக இருந்தாள். நல்ல சிவந்த நிறம். எடுப்பான மூக்கு; நீண்ட கண்கள்; முகத்திலே எப்பொழுதும் மங்காது காட்சியளிக்கும் களை—பெண் ஏன் பிடிக்காதிருக்கும்? "சொத்தும் வேண்டாம்... சீரும் வேண்டாம். பெண்ணின் அழகுக்காகவே அவளைக் கட்டிக் கொள்ளலாமே" என்று இத்ரீஸின் தாயார் அபிப்பிராயப்பட்டாள். இது பேச்சளவுக்குச் சொல்லப்பட்டதே தவிர உண்மை என்று எடுத்துக் கொள்ளக்கூடாது. "அப்படியானல் பெண்ணைக் கட்டிக் கொள்ளுங்கள். சீர் சமான்கள் இல்லை" என்று பெண்ணின் பெற்ருேர்களும் சொல்லவில்லை. அப்படிச் சொல்லியிருந்தாலும் "சும்மா ஒரு பேச்சுக்கு அப்படிச் சொன்னேன். சீரில் குறைத்து விடாதீர்கள்" என்று தான் சம்பந்தி அம்மாள் சொல்லுவாள். பெண் பார்த்துக்கொண்டிருந்த இத்ரீஸின் அம்மாவின் கண்களுக்கு கொஞ்ச தூரத்தில் ஓடியாடி வேலை செய்துகொண்டிருந்த இலட்சணமில்லாத ஒரு பெண் காட்சியளித்தாள் 'யாரோ வேலைக்காரி போலிருக்கிறது' என்று அவள் நினைத்துக் கொண்டிருந்தாள் அந்தப் பெண்ணைப் பற்றி.

எந்தவித தகராறும் இல்லாமல் கலியாணம் முடிவு செய்யப் பட்டது. சிக்கனத்தை உத்

தேசித்து மாப்பிள்ளை வீட்டார்கள் பெண் வீட்டுக்குப் புறப்பட்டுச் சென்றார்கள். அமர்க்களமான விருந்துகள். அழகிய ஊர்வலம். அதைத்தொடர்ந்து 'நிக்காஹ்'. "காதர் மூசாராவுத்தரின் மகன் இத்ரீஸை ஐநூறு தங்க மஹருக்கு நிக்காஹ் செய்துகொள்ள பல்கீஸுக்கு சம்மதமா?" என்ற கேள்வியை யாரோ ஒரு கிழவர்

பெண் இருந்த அறைக்கு அருகில் தமக்குக் கூட விளங்காத குரலில் முணுமுணுத்தபோது "கபூல்... கபூல்" என்ற பெண்களின் குரல் வேகமாகக் கேட்டது. மணப்பெண் மனதிற்குள் நினைத்துக் கொண்டிருக்கலாம். ஆனால் வெளியில் சொல்ல வெட்கப்படலாம். அவளுக்கு 'இரவல் குரல்' கொடுப்போம் என்ற தாராள மனப்பான்மையால்தான் தாங்களே 'கபூல்' சொல்லிவிடுகிறார்கள் போலிருக்கிறது இந்தப் பெண்கள்!

ஒருவழியாய் நிக்காஹ் முடிந்தது. "பெண்ணையும் மாப்பிள்ளையும் உட்காரவையுங்கள். பார்க்க வேண்டும்" மாப்பிள்ளையின் அம்மா தமது விருப்பத்தைத் தெரிவித்துக் கொண்டாள். உண்மையில் அது தான் ஊர்ப்பழக்கமும். ஆனால் பெண்ணின் உறவினர்கள் பக்கத்திலிருந்து ஆட்சேபம் எழுந்தது. 'எங்கள் ஊரில் அந்தம்பழக்கம் இல்லை...'' இது ஒரு கிழவியின் குரல். "இது புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பழக்கமா இருக்கட்டுமே...'' ஒரு புதுமைப் பெண்ணின் கிண்டல் மொழி இது. "பெண்ணுக்குப் பூ மயக்கம். அதனால் படுத்திருக்கிறது. இப்போது கலாட்டா செய்யவேண்டாம்.'' மத்தியஸ்தம் செய்யவந்த ஒரு மதியூகிப் பெண்ணின் அடக்கமான பேச்சு இது. பெண்வீட்டார் வெற்றி பெற்றார்கள்.

'நிக்காஹ் முடிந்த அன்றுகாலையில் அந்தச் செய்தி கொஞ்சநேரத்தில் மாப்பிள்ளை வீட்டார் எல்லோருக்கும் தெரிந்து விட்டது! மாப்பிள்ளை அம்மாவின் முகத்தில் ஈ ஆடவில்லை. ஏமாற்றப்பட்டோம் என்ற அவமான உணர்ச்சிஅந்த அம்மாவை நிலைகுலையச் செய்து விட்டது. இத்ரீஸின் தகப்பனார் கோபத்தில் துள்ளிக் குதித்தார். "எங்களையா ஏமாற்றினார்கள்? நான் யார் என்று காட்டி விடுகிறேன். என்னை ஏமாற்றியதற்கு பழிக்குப் பழி வாங்கி விடுகிறேன்.'' என்று அவர் கர்ஜித்தார். இத்ரீஸின் அம்மாவின் மனவெளியில் பெண்பார்க்கப் போயிருந்தபோது

தான் பார்த்த பல்கீஸ் என்ற அழகிய உருவமும் ஓடியாடி வேலை செய்து கொண்டிருந்த, தான் வேலைக்காரி என்று நினைத்த பெண்ணின் உருவமும் திரும்பத் திரும்பக் காட்சியளித்தன.

வளரும் ஆசை

> பேராசை கடல்நீரைப் போன்றது; நீங்கள் அதிகம் அதைக் குடிக்கக் குடிக்க, உங்களுடைய தாகம் வளர்ந்துகொண்டே வரும்.
>
> **டென்னிஸன்**

மாப்பிள்ளை இத்ரீஸ் சிலைபோல அமர்ந்திருந்தான். விஷயம் பூராவும் அவனுக்கு விளங்கிவிட்டது. பெண் பார்க்கப் போயிருந்த போது ஆள் மாருட்டம் நடந்து விட்டது. பெண்ணின் தங்கையை "இவள் தான் மணப்பெண் பல்கீஸ்" என்று காட்டி விட்டார்கள். உண்மையில் பல்கீஸ் ஓடியாடி வேலை செய்து கொண்டிருந்தாள். அவளை வேலைக்காரி என்று நினைத்தார்கள் பெண் பார்க்கப் போயிருந்தவர்கள். சீர் சாமான்களும், பணமும் நிறைய வேண்டும் என்ற ஒரே நோக்கத்தில் இருந்த இத்ரீஸின் பெற்ருேர்கள் சந்தேகப்படவே இடமில்லை!

இத்ரீஸுக்காகப் பார்த்த பெண்ணின் பெயர் பல்கீஸ்தானே! அவளைத்தான் அவன் திருமணம் செய்துகொண்டிருக்கிருன்! "பல்கீஸ்" என்ற பெயரோடு கொஞ்சநேரம் இத்ரீஸின் தாயார் முன்பு காட்சியளித்தவள் அவள் தங்கை—குல்ஸூம். பல்கீஸ் அழகு குறைந்தவள். நல்ல கருப்பு. நீண்ட பற்கள். முகத்திலே அம்மைத் தழும்புகள். அவளது உருவம் உள்ளத்திலே ஆசையை மூட்டாது; கிளர்ச்சியை எழுப்பாது; கனவுத் தொடரைத் துவக்கி வைக்காது. திருமண வயதை எட்டியும் ஐந்து வருஷங்களுக்கு மேல் விட்டிலேயே இருந்தாள். அவளை யாரும் விரும்பிப் பெண் கேட்கவில்லை. அவள் தங்கை குல்ஸூம் அக்காவுக்கு எதிரிடையாக விளங்கினுள். அழகும், கவர்ச்சியும் போட்டியிட்டுக் கொண்டிருந்த அவளையே பெண் கேட்டு வந்தார்கள் பலர். நேர் வழிகள் எதுவும் பயன்படாமல் போய்விடவே, ஆள் மாருட்டத்தின் மூலம் வெற்றி கிட்டியது அவளது பெற்ருேர்களுக்கு.

பெண் பார்த்து விட்டு வந்த அம்மா, பல்கீஸைப்பற்றி சொன்ன விபரங்களைக் கொண்டு ஒரு கற்பனைச் சித்திரம் தீட்டிப் பார்த்திருந்தான் இத்ரீஸ். அந்த உருவம் கவர்ச்சி அளித்தது. ஆனுல் இப்போது அவன் கேள்விப்பட்ட இந்த விஷயம் எத்தனை ஏமாற்றத்தைக் கொடுத்து விட்டது! அழகில்லாதவளோடு வாழ்க்கை முழுவதும் ஒன்றி வாழ முடியுமா?

"நம்மை வேண்டுமென்றே ஏமாற்றி விட்டார்கள். தகுந்த பாடம் கற்பிக்க வேண்டும். எழுந்திரு. நாம் ஊருக்குப் போய் விடுவோம். மேற்கொண்டு செய்ய வேண்டியதை பிறகு யோசித்துக் கொள்ளுவோம்."—இத்ரீஸின் தகப்பனுர் பையனிடம் சொன்னுர்.

திருமணம் முடிந்து விட்டது. இப்போது அவள் அவனுடைய மனைவி. சட்டபூர்வமாக அவனேடு இணைக்கப்பட்டவள். அவளைப் புறக்கணித்து விடுவதா?

ஆள் மாருட்டம் செய்யப்பட்டது என்னவோ உண்மைதான். அதற்கு பல்கீஸா பொறுப்பாளி? அவள் பெற்ருேர்கள் தாம் அதற்குக் காரணம். பெற்ருேர்களைத் தண்டிப்பதற்காக, குற்றமில்லாத அவளையா தண்டிக்க வேண்டும்?

ஆள் மாருட்டம் செய்யப்படுகிறது என்பது பல்கீஸுக்குத் தெரியாமலா இருக்கும்? அவள் ஏன் அதற்குச் சம்மதித்தாள்? பெண் உள்ளம் பருவத்தின் தலை வாசலில் அடி எடுத்து வைத்ததிலிருந்து ஆசையோடு நினைப்பது ஒரு விஷயத்தைப்பற்றித்தான். தனது திருமணம், தனக்கு வர இருக்கும் கணவன், அவனோடு தான் நடத்தப் போடும் இன்ப வாழ்க்கை—இதைப் பற்றியே சதா சிந்திக்கிறது. திருமணம் நடக்காமல் காலம் தாழ்த்திப் போகும் போது அந்த உள்ளக் கடலின் கரைகளிலே எத்தனை சோக அலைகள் முட்டி மோதுகின்றன தெரியுமா? வாழ்க்கையை வீணுகி விடுகிறது என்பதைப் போன்ற துன்ப எண்ணங்கள் அங்கே தோன்றுகின்றன. இனிமேல் நமக்கு எங்கே திருமணம் நடக்கப் போகிறது என்ற விரக்தி எண்ணமும் எழுந்து விடுகிறது. அத்தகைய உள்ளத்துக்கு நம்பிக்கை உண்டுபண்ணி ஒளி ஏற்றுவது சாதாரண காரியமா?

என்ன இருந்தாலும் பல்கீஸ் இனிமேல் தன்னுடைய மனைவி தானே? அவளைப் புறக்கணித்து சோகச் சுழலிலே சிக்கித் தத்தளிக்குமாறு விட்டுவிடுவது அறிவுடைமை யாகுமா?

"என்ன இத்ரீஸ் பேசாதிருக்கிருய்?"—அவன் தகப்பனுர் திரும்பவும் பையனுக்கு நினைவு படுத்தினுர்.

"ஊருக்குக் கிளம்ப வேண்டியது தான். தனியாக அல்ல. பல்கீஸையும் அழைத்துக் கொண்டு தான்" அவன் அமைதியாக பதில் சொன்னுன்.

"என்ன...? அவர்கள் நம்மை ஏமாற்றிவிட்டார்கள் என்று தெரிந்த பின்பும் அந்தப் பெண்ணை அழைத்துக் கொண்டுபோவதா...?" என்று இரைந்தார்.

"உங்களை ஏமாற்றவில்லையே..... சீர்சாமான்களும் மற்ற அயிட்டங்களும் சரியாகக் கொடுத்துவிட்டார்கள். மேற்கொண்டும் இரண்டாயிரம் ரூபாய் வரையில் கையில் கொடுத்திருக்கிருர்கள்........அப்படியிருக்கும் போது..."

"பெண் விஷயம்...?"

"பெண்ணோடு வாழ்க்கை நடத்துவது நான். அவளை எனக்குப் பிடித்திருக்கிறது."

விஷயம் முடிந்தது. இத்ரீஸ்—பல்கீஸ் திருமண வாழ்க்கை ஆரம்பமாகியது.

பல்கீஸ் பம்பரமாக சுழலுவாள் வீட்டு வேலைகள் செய்யும் போது. அவளது கைக்கு இத்தகைய வேகம் எங்கிருந்து வருகிறது என்று

தமிழ்நாட்டின் முஸ்லிம் பேரறிஞர்கள்
அழகிய முறையில் எழுதும்

"காயிதே மில்லத் மலர்"

விரைவில் வெளிவருகிறது. குறைவான பிரதிகளே வெளியிடுவதால் உங்கள் பிரதிக்கு முந்திக்கொள்ளுங்கள்.

விவரங்களுக்கு: C. I. அல்லாபிச்சை
பதிப்பாசிரியர்
தளபதி பதிப்பகம், கோட்டை, கோயமுத்தூர்.

சொல்ல முடியாது. நொடிப் பொழுதில் சமையல் வேலைகளை முடித்து விடுவாள். வீடு கண்ணாடி போல காட்சி யளிக்கும். கணவன் நலனைப் பேணுவதில் தனது சுகத்தைப் பொருட் படுத்த மாட்டாள். குடும்ப வாழ்க்கையின் ஆரம்பத்தில் பல்கீஸின் உள்ள நிலையை இத்ரீஸ் புரிந்து கொள்ள வில்லை. அவளை அலட்சியமாகக்கூட சில சமயங்களில் நினைத்துக் கொண்டான். ஆனால் போகப் போக அவளது உயர்வை, மனத் தூய்மையை, கணவனுக்குத் தொண்டு செய்யும் மனப் பண்பை அவன் அறிந்து கொண்டான். தனது வீட்டில் எப்பொழுதும் தூய்மையான மகிழ்ச்சி விளக்கை அவள் ஏற்றிக் கொண்டிருப்பது தனது பாக்கியமே என்றும் கருத ஆரம்பித்தான். திருமணம் முடிந்த மறு வருஷத்தில் பிறந்த ஆண் குழந்தை இந்த இன்பத்தை அதிகமாக்கியது. இந்த மகிழ்ச்சியான எண்ணங்களுக்கிடையே தனது மனைவியின் கருமை, அழகின்மை இவற்றைப்பற்றி நினைக்கவே அவன் மறந்து விட்டான். அவளது புறத்தோற்றம் அவனிடம் எவ்வித மாறுதலையும் செய்து விடவில்லை.

திருமணம் முடிந்து மூன்று ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. இதற்கிடையில் எப்பொழுதாவது குல்ஸூமைப் பற்றிய எண்ணம் இத்ரீஸின் மனதில் எழும். அவள் தான் பல்கீஸ் என்ற எண்ணத்தில் அவளைப் பற்றி தன் தாயார் சொன்ன வருணனைகள் அவன் நினைவில் எழும். அதைத் தொடர்ந்து அவன் கற்பனை செய்து வைத்திருந்த அழகிய உருவம் அவன் மனக்கண் முன் தோன்றும். மறையாமல் அப்படியே நின்றுகொண்டிருக்கும். அந்த உருவத்தின் தோற்றத்தில் இன்பம் இருக்கும். தன் தாயார் கண்டபடி அவளே பல்கீஸாக இருந்து, தான் அவளையே மணம் செய்து கொண்டிருந்தால் எத்தகைய இன்பம் அளிக்கும்... "அப்படி நடந்திருந்தால்..." இந்த வினா அவன் மனதில் எழுந்து விடும். கஷ்டப்பட்டு நினைவை வேறு திசைக்கு இழுத்துச் சென்று விடுவான். அப்போதெல்லாம் அவன் மனதில் எதையோ பறிகொடுத்து விட்டதைப் போன்றதொரு நிலைமை ஏற்படும்.

சென்ற வருஷம் குல்ஸூமுக்கு திருமணம் நிச்சயமாயிற்று. இத்ரீஸும் பல்கீஸும் சென்றிருந்தார்கள். எத்தகைய அழகை இறைவன் குல்ஸூமுக்குக் கொடுத்திருக்கிறான். சகோதரிகள் இருவருக்குமிடையே இத்தகைய பரந்த வேறுபாட்டை எப்படித்தான் ஆண்டவன் உண்டுபண்ணினானே!" என்று அதிசயப்பட்டான் இத்ரீஸ்.

குல்ஸூமுக்கு நிக்காஹ் முடிந்துவிட்டது. கணவன் வீட்டுக்குப் போய்விட்டாள். அவள் கணவன் எவ்வளவு அதிருஷ்டசாலி என்று இத்ரீஸ் எண்ணி, எண்ணி வியந்தான்.

இத்ரீஸின் குடும்பம் அமைதியாக இருந்தது. அன்றாட வாழ்க்கை குளத்து நீரைப் போல சுழிகள், அலைகள் இன்றி நிம்மதியாக இருந்தது. குழந்தை தன் பாட்டுக்கு மழலை இன்பத்தை ஊட்டிக்கொண்டிருந்தது. பல்கீஸின் கவனத்தினால் குடும்பத்தில் இன்பம் துள்ளியது. ஆனால் இத்ரீஸின் மனத்தில் மட்டும் ஏதோ ஒரு குறை. எல்லாம் இருக்கின்றன. ஆனால் ஏதோ ஒன்று இல்லை. அது என்ன?

குல்ஸூமைப் பற்றி எப்பொழுதாவது எண்ணுவான். சிறந்த இன்பம் எதையோ இழந்து விட்டோமே என்றதொரு திருப்தியற்ற நிலை அவன் உள்ளத்திலே எழும். இதழ்க்கடையிலே முறுவல் மிளிர, வீட்டில் அங்குமிங்கும் சுற்றி வரும் குல்ஸூமைக் கண்டதும் "அப்படி நடந்திருந்தால்..." என்ற எண்ணமும் அதைத் தொடர்ந்து விவரிக்க

முடியாத சோகமும் அவன் சிந்தையில் நிறைந்து விடும்.

“அத்தா...அத்தா...வாங்க சாப்பிட” பையன் எழுப்பிய பிறகே இத்ரீஸ் விழித்துப் பார்த்தான். “மகிழம்பூ” மலர் பிரித்தது பிரித்த படியே இருந்தது. “ஜோடிப் பொருத்தம்” என்ற அழகிய படம் அவனைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தது.

ஒரு மாதம் கழிந்திருக்கும்.

தெருவில் குதிரை வண்டி வந்து நின்றது.

அதிலிருந்து குல்ஸூம் இறங்கினாள் கையில் ஒரு பெட்டியுடன். வண்டி சென்றுவிட்டது. குல்ஸூம் வீட்டுக்குள் நுழைந்தாள்.

“வா குல்ஸூம்”–பல்கீஸ் மகிழ்ச்சியோடு வரவேற்றாள். இத்ரீஸ் வெளியில் நோக்கினான். குல்ஸூமின் அழகிய உருவம் பளிச்சிட்டது. ஆனால் அந்த உருவத்தில் இப்பொழுது ஏதோ மாறுதல் காணப்பட்டது. பார்த்தது சிறிது நேரம் தான் என்றாலும் அதற்குள் அந்த மாறுதல் தென்பட்டு விட்டது. முன்பு காணப்பட்டதைப் போன்ற களையும், ஒளியும் அங்கே இல்லை. மெல்ல நகைக்கும் சோகம் அங்கே திரை விரித்ததைப்போல தோன்றியது.

குல்ஸூம்வந்துஒருவாரமாயிற்று. வீடு கலகலப்பாக இருந்தது. அவளது குறும்புப் பேச்சும், அழகிய தோற்றமும் கலகலப்புக்கு மெருகூட்டியது. அன்று பகல் சாப்பாட்டுக்குப் பிறகு இத்ரீஸ் தன் அறையில் உட்கார்ந்து ஏதோ படித்துக்கொண்டிருந்தான். வீட்டுத் தாழ்வாரத்தில் பல்கீஸூம், குல்ஸூமும் உட்கார்ந்து என்னென்னவோ பேசிக் கொண்டிருந்தார்கள்.

மெதுவாக வெளியில் கவனித்தான். அவர்கள் பேசிக்கொண்டிருந்த காட்சி அவனுக்குத் தென்பட்டது. முழுமதி போன்ற குல்ஸூம் முகத்தாமரையில் தேங்கிக் கிடந்த அழகு; காப்பியம் படிக்கும்

ஹோமியோபதி

இந்த ஜர்மன் வைத்திய முறையை, உங்கள் ஓய்வு நேரங்களில், வீட்டில் இருந்தபடியே, தமிழிலோ, ஆங்கிலத்திலோ கற்றுத் தேர்வு பெறலாம். பாடங்கள் எளிய நடையில் மிகவும் விரிவாகத் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. இவ்வளவு விரிவான பாடங்கள் இதுவரை வெளிவந்ததில்லை. விபரங்கள் இலவசமாக அனுப்பப்படுகின்றன. உடனே எழுதுங்கள்.

HEALTH SCIENCE INSTITUTE

Post Bag No. 5070,

MADRAS-1.

நமது மலாயா பிரதிநிதி:

HOMOEOPATHY INSTITUTE,

Post Box No. 363,

PENANG, MALAYA.

கண்கள்-இன்னொரு பக்கத்தில் அமாவாசை இரவைப்போன்ற கருமை—அங்கேயே பார்த்துக் கொண்டிருந்தான் இத்ரீஸ்.

"குல்ஸூமை நான் மணந்து கொண்டிருந்தால்......!"

"அம்மா நினைத்தபடியே நடந்திருந்தால்......!"

எண்ணங்கள் தொடரவில்லை. காரணம் பெண்கள் பேசிக்கொண்டிருந்தது அவன் செவியில் எட்டியது.

கணவன் வீட்டிலிருந்து கோபித்துக்கொண்டு வந்து விட்டதாக குல்ஸூம் சொன்னாள். அதற்கான காரணங்களையும் விவரித்தாள்.

"மாமியார், நாத்தனாரின் அதிகாரம் அதிகமாயிருந்தது. அது எனக்குப் பிடிக்கவில்லை. நானும் சளைக்காமல் அவர்களுடன் சண்டையிட்டுக் கொண்டுதானிருந்தேன். ஆனால் வீட்டில் என் கணவர் எனக்கு சாதகமாயில்லை. அவர் தன் தாயாரின் பக்கம் ஏற்றுக் கொண்டு எனக்கு புத்தி சொல்ல ஆரம்பித்தார். எனக்கு கோபம் அதிகமாகியது. எத்தனையோ வழிகளில் அவரை என் பக்கம் கொண்டுவர முயற்சி செய்தேன். ஆனால் முடியவில்லை. கடைசியில் ஒருநாள், "மேலும் நான் இங்கே சேர்ந்திருக்க முடியாது. நீங்கள் குடும்பத்திலிருந்து பிரிந்து வந்து விடுங்கள். தனிக் குடித்தனம் வைத்துக் கொள்ளுவோம்" என்று கணவரிடம் சொன்னேன். அவர் ஒத்துக் கொள்ளவில்லை. பிடிவாதம் செய்தேன். பயனில்லை. மேற்கொண்டு அங்கே வாழவும் விருப்பமில்லை. கோபித்துக் கொண்டு வந்துவிட்டேன். நான் வருவதைப்பற்றி அவர் கொஞ்சங்கூட கவலைப்படவில்லை." குல்ஸூம் கதையை முடித்தாள். சற்று நேர யோசனைக்குப் பிறகு பல்கீஸ் பேச ஆரம்பித்தாள்.

"கணவனும் மனைவியும் ஒற்றுமையாக, சேர்ந்து வாழ்வதில்தான் சிறப்பு இருக்கிறது. சதா கணவனோடு எதிர்வாதம் செய்வது குடும்பப் பெண்ணுக்கு அழகல்ல. மாமியாரும் நாத்தனாரும் என்னதான் கொடுமையுள்ளவர்களாக இருந்தபோதிலும் அன்பினாலும் சகிப்புத் தன்மையினாலும் அவர்களது மனதை மாற்றிவிட முடியும். அன்பும், நற்பண்பும்தான் குடும்பப் பெண்ணின் இலட்சியமாகும். அதற்குப் புறம்பான முறையில் வாழ்க்கை நடத்த முற்பட்டால் தோல்விதான் ஏற்படும்......" பல்கீஸ் பேசிய ஒவ்வொரு வார்த்தையும் தெளிவாக இத்ரீஸின் காதில் விழுந்தது.

அவள் வார்த்தைகளுக்கு அவள் நடத்தும் வாழ்க்கையே ஓர் எடுத்துக் காட்டு அல்லவா? இந்த ஐந்து வருஷ வாழ்க்கையில் அவள் என்றாவது முகம் சுளித்திருக்கிறாளா? கணவனுக்கு எதிராக ஏதாவது பேசியிருக்கிறாளா? அவனது அபிப்பிராயத்துக்கு எதிரிடையாக நடந்திருக்கிறாளா? இல்லவே இல்லை. புறத் தோற்றத்தில் கவர்ச்சியில்லை. உண்மைதான். ஆனால் அகம் எவ்வளவு பரிசுத்தமானது! இத்ரீஸின் உள்ளத்தில் இந்த எண்ண அலை சுழன்றது.

"அப்படி நடந்திருந்தால்......?" இந்த வினா திரும்பவும் எழுந்தது. குல்ஸூம் அழகாகக் காட்சியளிக்கிறாள். ஆனால் உள்ளத்திலே அந்த அழகைக் காணவில்லை. நேர்மையில்லை; அன்பு இல்லை. பெண்மைக்கு வேண்டிய பண்புகள் இல்லை. "அவளை அவன் திருமணம் செய்து கொண்டிருந்தால்......?" வாழ்க்கை இப்போதிருப்பதைப்போல இன்பமானதாக இருக்குமா? எப்படி இருக்க முடியும்?

இத்ரீஸ் வெளியில் கவனித்தான். குல்ஸூமின் உருவம் அவனுக்குத் தோன்றவில்லை. பல்கீஸின் உருவமே எங்கும் நிறைந்திருந்தது. அடிக்கடி குழப்பமும் பலஹீனமும் நிலவிய அவனது மனதிலே நிறைவு நிலைபெற்றது. "அப்படி நடந்திருந்தால்......?" என்ற கேள்வி அந்த நிமிஷத்திலிருந்து மறந்தேவிட்டது. புதுமையான இன்பம் அவன் உள்ளத்திலே கிளர்ந்து எழுந்தது. ★

இன்றல்ல ! நேற்றல்ல !!

48 ஆண்டுகளாக ஒப்பற்ற சேவை.
பொதுமக்களின் நம்பிக்கையையும், ஆதரவையும்
பெற்றுள்ள பொன்விழாவை சமீபித்துவிட்ட
ஸ்தாபனம்

★

பொதுமக்கள், வியாபார பெருமக்களின்
சௌகரியத்திற்காக
16-12-57 முதல் சென்னை தேவராஜமுதலித்தெரு,
111 எண் கட்டிடத்தில் ஒரு விற்பனை நிலையம்
திறக்கப்பட்டு செயல்படுகிறது என்பதை
தெரிவித்துக் கொள்ளுகிறோம். சென்னை
யிலும், சுற்றுப்புறங்களிலும் உள்ளவர்கள்
இந்த நிலையத்தில் எங்கள் கம்பெனி விலைக்கே
பெற்றுக்கொள்ளலாம்.

ஆர். எஸ். பதி மருந்து

(REGD.)

தலைவலி, ஜலதோஷம், சுரம் முதலியவை
களுக்கு சிறந்த மருந்து.

புட்டி 1-க்கு விலை 62 காசுகள்
அல்லது 10 அணா

மேரிராம் பற்பொடி

பல் வியாதிகளைப்போக்கி பற்களை
உறுதியாக்குகிறது.

டின் 1-க்கு விலை 25 காசுகள்

லேடிடால் ஹேர் ஆயில்

குளிர் தாமரை போன்ற மூலிகைகளினால் தயாரிக்கப்பட்ட
சிறந்த கூந்தல் தைலம். எண்ணெய் ஸ்நானத்திற்கும்
உகந்தது.

புட்டி 1-க்கு விலை ரூ. 1·25

விரிவான இலவச கேட்லாக் வேண்டுவோர் எழுதவும்.

ஆர். எஸ். பதி அண்டு கோ

(ஸ்தாபிதம் : 1909)

த. பெ. எண் 99. *214 & 215 மேலமாசி வீதி, மதுரை.*

மதுரை பிரசுரம்

TEL : { 22969
27823

CABLE : "PAKISTAN"

INDO PAKISTAN TRADING Co.,

IMPORTERS & EXPORTERS,

RUBY DIAMOND & PRECIOUS COLOUR
STONE, GENUINE, SYNTHETIC AND
GLASS STONE DEALERS AND
JEWELLERS.

Head Office:

159, CROSS STREET,
SINGAPORE-1.

Branch :

Dealers in
Wollen, Sharkskin &
Dackron Textiles.

24, CHULIA STREET,
SINGAPORE-1.

TEL : 20715

சோதிடன் கற்ற பாடம்

★

கலீபா அலீ பெருமகனாரின் ஆட்சி காலத்தில் ஒரு கிறுத்தவ சோதிடன், தான் வருங்காலத்தை வழுவற உரைப்பவன் என்று சொல்லி, பலரை நம்புமாறு செய்து கொண்டிருந்தான். முஸ்லிம் களில் சிலரும் அவன் வாக்குவன்மையிலும், மாயசக்தியிலும், மதி யிழந்து அவனைச் சுற்றித் திரிவதைக் கண்ட அலியாருக்கு பெரும் வருத்தம் ஏற்பட்டது. ஆகவே அவன் கூற்று ஆதாரமற்றது; அவன் பெருமைப் பேச்சு ஏமாற்று வித்தை என்பதை அம்பலப் படுத்தி, அந்த ஒரு சில முஸ்லிம்களின் உறுதியிலே படிந்திருக்கும் மாசைப் போக்க தமக்குள் ஒரு திட்டம் வகுத்துக் கொண்டார்கள் ஹலரத் அலீ.

அன்று கலீபா அலீ பெருமகனாரின் இல்லத்திலே விருந்தொன் றுக்கு ஏற்பாடாகியிருந்தது. சோதிடனும், அவன் அபிமானிகளும் அவ்விருந்திலே கலந்து கொள்ளுமாறு அழைக்கப்பட்டிருந்தனர். தன் "ஜோஸ்ய கலாஞானத்"திற்கு கலீபா கண்ணியமளிக்கிறார் போலும் என்று கருதிய சோதிடன் முகத்திலே ஆனந்தம் பொங்கி வழிந்தது.

விருந்திலே ரொட்டி உட்பட பல பண்டங்கள் பரிமாறப்பட் டிருந்தன. அவற்றின் நடுவே பெரியதொரு காலிப்பாத்திரமும் வைக் கப்பட்டிருந்தது. விருந்தினர் உற்சாகத்தோடு பற்பல பண்டங்களை யும் ருசி பார்க்கலாயினர். ரொட்டி உண்ணும் முறை வந்ததும் விருந் தினர் தம்முன் படைக்கப்பட்டிருந்த ரொட்டியைத் துண்டிக்க ஆரம்பித்தனர். திடீரென்று அதிகாரமான ஒரு குரல் ஒலித்தது.

"ஒவ்வொருவரும் தம் தம் துண்டுகளை அந்தப் பாத்திரத்திலே வீசுங்கள்," என்று அந்த காலிப் பாத்திரத்தைச் சுட்டிக் காட்டிக் கட்டளையிட்டார்கள் கலீபா,

ஆணையிட்டவர் விருந்து தருபவர்; அதிலும் நாடாளும் கலீபா; ஆகவே அவர்தம் கட்டளையை சிரமேற் கொண்டு "நான் முந்தி, நீ முந்தி," என்று சோதிடன் உட்பட விருந்தினர் அனைவரும் ரொட்டித் துண்டுகளை மடமடவென்று வீசினர், கலீபாவும் தம் ரொட்டித் துண்டை வீசத் தவறவில்லை. விசித்திரமான இந்நிகழ்ச் சிக்குப் பிறகு வேறு என்ன நடக்கப் போகிறதோ என்று ஆவலே உருவாக, விருந்தினர் காத்திருந்தனர்,

"இப்பொழுது உன் ரொட்டித்துண்டை மட்டும் தனியாக எடு," என்று சோதிடனைப் பணித்தார்கள் கலீபா.

"எந்தத் துண்டு எப்பொழுது வீழ்ந்தது, அது எவருக்கு குரியது என்று யாருக்குத் தெரியும்?"—பாத்திரம் முழுவதும்

நிரம்பிக் கிடந்த துண்டுகளில் தன்னுடையதை மட்டும் தனியாக எப்படிப் பிரித்து எடுப்பது என்று திகைப்புற்றுக் குழம்பினன் சோதிடன்.

"இவற்றுள் என் துண்டு எதுவென்று எனக்கெப்படித் தெரியும் ?"—பரிதாபமாகக் கேட்டான் சோதிடன்.

இதனை ஏற்கெனவே எதிர்ப்பார்த்த கலீபா, "கேவலம் ஓர் ரொட்டித்துண்டு—அதுவும் உன் கையால் இந்த விநாடியில் வீசப்பட்டு, இதோ இந்தப் பாத்திரத்தினுள் நிச்சயமாகக் கிடப்பது—இதனைக் கண்டுபிடிக்க முடியாத நீ, இதுவரை தோன்ருது, இனிமேல் தான் தோன்றவிருக்கும் எதிர்காலத்தைப் பற்றியும் அதில் நடைபெறப் போகும் நிகழ்ச்சிகளைப் பற்றியும் தனக்குத் தெரியும் என்று தம் பட்டம் அடித்துக் கொள்வது நியாயமா ?" என்று வினவினர்கள்.

சோதிடன் வாய் திறக்கவில்லை !

மூலம் : *[அரபி நூல்:]* **நுஸ்ஹத்துல் மஜாலிஸ்**

தமிழாக்கம் : **மௌலவீ எஸ். ஏ. ஜைனுல் ஆபிதீன்.**

"அரேபியாவிலே சில நாள்"

வில்லியம் லூயி

இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளில் ஒன்று மக்கா யாத்திரை. கிடைத்தற்கரிய இத்தகைய பேறு பெற்றவர்களில் வில்லியம் லூயியும் ஒருவர். சரித்திர முக்கியத்துவம் பெற்ற மக்காவையும் அதன் தேவாலயத்தையும் அவர் எத்தகைய எண்ணத்தோடு, உணர்ச்சியோடு கண்டுகளித்திருக்கிருர் என்பதைப் பார்க்கும்போது நமக்கே வியப்பாக இருக்கிறது. மௌலவி, எஸ். அப்துல் வஹ்ஹாப் (பாகவி) அவர்கள் தமக்கேயுரிய இனிய தமிழில் மொழிபெயர்த்திருக்கிருர்.

ஒவ்வொருவரும் அவசியம் படிக்கவேண்டிய நூல்.

விலை ரூ. 1.00

தனிப்பிரதி வேண்டுவோர் ரூ. 1.50 அனுப்பவேண்டும்.

எஸ்ஸேவி பதிப்பகம்

36/37, அங்கப்ப நாயக்கன் தெரு,

சென்னை-1.

பிறையே வாழ்க!

எம். ஸி. எம். ஸுபைர்

★

'பிறை'யே நீ வாழ்க!
வான் மகளின் வனப்பொளிர் நுதலில்
வளம்பெற ஒளிரும் வண்ணப் பிறையல்ல நீ!
வையத்தை வாழவைக்கும் வழிபுகலும்
வல்லுனராம் நல்லறிஞர், நற்கவிஞர்
நயந்தரு கதாசிரியர் நெஞ்சினிலே
அரும்பித் தழைக்கும் அருங்கருத்துக்களால்
ஒளிபெற்று, உயிர்பெற்று, உணர்வூட்டும்
உயர்கலைச் சுடர்வீசும் ஒண்பிறை நீ!
ஓராண்டுக் குழந்தையென உலகமிசைத் தவழ்ந்திடினும்
நூருண்டுக் கலைச்செல்வந் தனைநுகரத் தந்தனை நீ!
உன் வள்ளன்மை உயர்மலைத் தீபமாய் ஒளிவீசுக!
'தித்திக்கும் திருமறை'யின் தேனூன கருத்துக்கள்
முத்திக்கு வழிகாட்டும் மூதறிஞர் நல்லுரைகள்
ஒன்றித்துக் குறைதீர்த்து, மன்னித்து, மாண்புயரப்
பண்புற்றுச் சமுதாயத் துயர் அங்கத் தினராக
நன்ருய்ந்து அறிவுணர்த்தும் நற்கதைகள்,
உளத்தூய்மை தனையாக்கி உரமூட்டி
உயர்வூட்டும் திறனுளர் சரித்திரங்கள்,
கருத்தொளிரும் கவிதைகள்
எனப்பலரும் விழைந்தருந்தும் பல்சுவையின்
படைப்புகளாற் பெருவிருந்தே யளிக்கின்ருய் நீ!
அருளாளன் அல்லாஹ்வின் அருமறையின்
சிறப்புணர்த்தி
அகிலத்துச் சமத்துவமும், சாந்தியதும் நிலைத்தோங்க
அருந்தூதர் வகுத்தநெறி அருமருந்தா மெனக்காட்டி
சிறியதொரு 'பிறை' யென்று பெயர்பெற் ருெளிர்ந்
தாலும்
அழகொளிர் முழுநிலவெனக் கலைச்சுடர்பரப்பி
அகத்திருள் போக்கி, அறிவு மலர்ந்திடும்
அரும்பணி தன்னில் அகங்களித்திடுக!
அருள்மழை பொழிவோன் திருவருள் பெருகப்
'பிறை' யொளி தருக! புவியிருள் மறைகவே!

கொடுத்த குரல்களுக்கு உள்ளேயிருந்து பதில் வராமல் போக, சாய்மான நாற்காலியில் நிமிர்ந்து உட்கார்ந்தார் காதர் சுல்தான் ராவுத்தர். மூலையில் சாத்தியிருந்த கைப்பிரம்பை எடுத்து பக்கவாட்டில் ஊன்றி, சிரமத்துடன் எழுந்தார். வலது காலை இழுத்து, இழுத்து நடந்து சென்றார்.

வெளியே தபால்காரன் நின்று



பிரிவும் பரிவும்

சீதக்காதி

கொண்டிருந்தான்.

அவன் நீட்டிய கடிதத்தை வாங்கிக்கொண்டு, மெது மெதுவாகத் திரும்பி வந்து தமது இருக்கையில் அமர்ந்தார். உறையைக் கிழித்து, கடிதத்தை வெளியெடுத்து, படிக்க விரித்தார்.

சென்னையிலிருந்து வந்திருந்தது கடிதம். அவர் மகன் எழுதியிருந்தான். மறுநாள் காலையில் கப்பல் ஏறப்போவதாகவும், அவர் சொல்லிவிட்ட விஷயத்தை நினைவு வைத்திருப்பதாகவும் நறுக்காக நாலு வார்த்தைகள் தாம். ஆனால் அவை செருகிய அவர் நினைவுத் தூண்டில் காலக் குளத்திலிருந்து சென்றுபோன பல சம்பவங்களை நெஞ்சக் கரைக்குச் சுண்டி இழுத்து விட்டது.

கடிதத்தின் மீது அவர் கண்கள் மீண்டும் ஊர்ந்தன. பிறகு அதை அருகில் இருந்த மேசை மீது வைத்துவிட்டு, நாற்காலியில் சாய்ந்தார். கோத்த கைகளில் தலையை வைத்தவராக, சிந்தனையில் மூழ்கினார்.

பதினைந்து, பதினாறு வருஷங்களிருக்கும். அவரும் சுமார் மூன்று வயதான அவர் மகனும் பர்மாவிலிருந்து இந்தியா வந்தனர். இப்போது அவர் மகன் மட்டும் தனியாக கடல் கடந்த பயணத்தில் ஊரிலிருந்து புறப்பட்டுப் போய்விட்டான்; தந்தைக்கு ஒரு வாக்குக் கொடுத்தவனாக! அதை அவன் நிறைவேற்றுவதில் தான் பல ஆண்டுகளாக வேதனையில் உழன்று கொண்டிருந்த அவர் மனதுக்கு நிம்மதி கிடைக்க வழியிருந்தது; சிந்தித்துப்

பார்த்து செயலாற்றும் பொறுமையில்லாத வாலிபப் பிராயத்தில் அவர் செய்த தவறுக்கு மாற்று இருந்தது.

அதுவும் இலேசான தவரு? வெகு சாதாரணமாக எண்ணிச் செய்தது அவர் வாழ்வையே சுற்றிச் சூழ்ந்து விட்டது. நீர்ப் பாம்பு என நினைத்து விளையாட்டாக எறியத் தூக்கியது நச்சரவமாகக் கொத்தியது. அதன் விஷத்தை நீக்குவதற்கான அருமருந்தைத் தேடியே அவர் மகன் சென்ருன், கதையில் வரும் ராசகுமாரனைப்போல. அந்த முயற்சியில் அவன் வெற்றி காண்பாஞ?

நினைப்பின் அயர்வில், அவர் கண்ணயர்ந்தார்......

மகன் சென்னை புறப்படுவதற்கு முன்னிரவு. சாப்பாடெல்லாம் முடிந்த பிறகு, அவனைத் தம்மிடம் அழைத்துவைத்துப் பேசிக்கொண்டிருந்தார் கர்தர் சுல்தான் ராவுத்தர்.

பேச்சுக்கிடையே மகனை ஏறிட்டுப் பார்க்கும்போதெல்லாம் அவர் கண்கள் கலங்கின. ஆனுல் தொலை தூரம் போகிற அவன் சந்தோஷமாகப் போக வேண்டும் என்ற எண்ணத்தில் தமது உணர்ச்சியைக் கட்டுப் படுத்திக் கொள்வார். உற்சாகமாகப் பேசுவார். என்ருலும் தகப்பஞரின் மன நிலையை மகன் ஒருவாறு உணர்ந்து கொள்ள முடிந்தது. அவன் முகமும் வாடியது.

"உன்னை விட்டுப் பிரிவது எனக்கும் கஷ்டமாகத்தானிருக்கிறது. ஆனுல் உன்னுடைய நன்மைக்காகவே உன்னை ரங்கூனுக்கு அனுப்புகிறேன். அல்லாஹ் உதவியால் நல்லவிதமாகப் போய் வா, மகனே! விரைவில் என் பொருப்பை மாற்றும் வகையில் வேலையைக் கற்றுக்கொள். உன் கவனத்தைத் தவருன வழியில் செலுத்திவிடாதே, அப்பா. ஆமாம், உன்னை ரங்கூனுக்கு அனுப்புவதற்கு இன்னும் ஒரு காரணம் இருக்கிறது. உன் அம்மாவுக்குப் பெரிய தீங்கு செய்துவிட்டேன்........."

தந்தையை வியப்புடன் நோக்கிஞன், தனயன்.

அம்மாவுக்குத் தீங்கு செய்து விட்டாரா? இறக்கும்போது அவள் எவ்வளவு நிம்மதியாக இறந்தாள்? வாழ் நாளில் ஒருவார்த்தையாவது அத்தாவைப் பற்றி கசப்புடன் சொல்லக் கேட்டதில்லை.

தகப்பஞரின் பேச்சினூடே அவன் குறுக்கிட விரும்பவில்லை. அவர் மேலே சொல்லப் போவதை எதிர்பார்த்திருந்தான்.

"...அவளுக்கு நம்பிக்கைத் துரோகம் செய்துவிட்டேன். அதற்குப் பரிகாரமாகவே என்னுடைய தள்ளாத நிலையில் உன்னை ரங்கூனுக்கு அனுப்புகிறேன், அப்பா!"

அம்மாவுக்கு துரோகம்? அதற்குப் பரிகாரமாகத் தன்னை ரங்கூனுக்கு அனுப்புவது? மகனுக்கு ஒன்றும் விளங்கவில்லை.

அம்மா எவ்வளவு நல்லவள்? எவ்வளவு பிரியமுடன் அவனை வளர்த்தாள்? கேட்டதெல்லாம் கொடுத்தாள். கெட்டவனுகாது காத்தாள். தன் கண்ணுள்ள போதே அவனுக்கு கல்யாணம் செய்து பார்க்க வேண்டும் என்ற ஆசை அவளுக்கு. மகள் இல்லாத குறையை தனது அக்கா மகளைத் தன் மறுமகள் ஆக்குவதன் மூலம் நீக்கிக்கொள்ள விரும்பினுள். கணவனிடமும் சொன்ஞள். தன் எண்ணம் நிறைவேறும் என்று நம்பி வந்தாள். இப்போது அவன் பெரியம்மா ரங்கூனில் இருந்தார். ஒருவேளை கல்யாணத்திற்குத் தான் அவனை அங்கு அனுப்பி வைக்கிருரோ தந்தையார்? அவருக்கு அந்த சம்பந்தம் பிடித்தமில்லாமல் இல்லை. ஏதோ ஒரு காரணத்துக்காக ஒத்திபோட்டு வந்தார். அதற்கிடையில் எதிர்பாராமல் அம்மா

இறந்து விட்டால், அவர் நம்பிக் கைக்குத் தந்தையார் துரோகம் செய்துவிட்டார் என்று சொல்ல முடியுமா?

என்ன யோசித்தும் அவனுக்கு ஒன்றுமே மட்டுப்படவில்லை.

"என்ன சொல்கிறீர்கள், அத்தா? அம்மாவுக்குத் துரோகமா? என்னால் நம்ப முடியவில்லை. நானறிய அவர்களை நல்லபடியாகத்தானே நடத்தி வந்தீர்கள்?" என்று தகப்பனாரைக் கேட்டான்.

குனிந்த தலையை நிமிர்த்துப் பார்த்தார் அவர்.

"நீ அம்மா என்று நினைத்திருப்பவள் உன்னைப் பெற்றவள் அல்ல, அப்பா! உன்னை வளர்த்தவள்..."

எவ்வளவு புனிதமான அன்புடன் அவனை வளர்த்தாள் அவள்! மற்ற தாய்மார்கள் பொறாமைப்படும்படி அவ்வளவு பரிவுடன் வளர்த்தாள். அவள் அம்மா அல்ல என்றால்...?

அப்போது அவன் இதயக்குகையினூடே நினைவுக்கதிர் ஒன்று ஊடுருவிப் பாய்ந்தது.

ஆம், அவனுக்கு இப்போது புரிந்தது, ஏன் பலர் தன்னை அடிக்கடி 'பர்மாக்காரி பிள்ளை' என கூப்பிட்டார்கள் என்று.

"ஹே அமீன்கா பா!" என்ற அவள் ஓலம் விண்ணைப் பிளந்தது.

ஆனால் அவனை வளர்த்தவள் அதை எவ்வளவு நாசூக்காக மறைத்து விட்டாள்! குழந்தையின் மனம் புண்பட்டு விடக்கூடாதே என்ற அக்கறை அவளுக்கு. அவள் ரங்கூனிலிருக்கும்போது பிறந்தானாம்! அந்த ரங்கூனைப்பற்றிக் கதை கதையாகச் சொல்லியிருக்கிறாள்.

அவ்வளவு பாசமுடன் வளர்த்த தாய் போய்விட்டாள். இறந்த அவளை நினைத்து அவன் உள்ளம் நன்றி கூர்ந்தது. பிறகு தன்னைப் பெற்றவளைப் பற்றி அவன் சிந்தனை ஓடியது...

"உன்னைப் பெற்றவளுக்குத்தான், அப்பா, நான் துரோகம் செய்துவிட்டேன். சின்னஞ்சிறு வயதிலேயே உன்னை அவளிடமிருந்து பிரித்துவிட்டேன்," என்று மேலே பேசிச் சென்றார் காதர் சுல்தான் ராவுத்தர். உணர்ச்சி அவர் தொண்டையை அடைத்தது.

எதற்காகப் பிரிந்தார்? ஒருவேளை, குழந்தையில்லாத அவர் அவனை விலை கொடுத்து வாங்கினாரோ? அதனால் அவனைப் பெற்றவளுக்கு என்ன துரோகம் இழைத்திருக்க முடியும்? அவ்வளவு தூரம் அவன் மீது அன்பு காட்டி வளர்த்த அவர் தான் யார்? அவனைப் பெற்றவர் இல்லையா? பையனுக்கு ஒரே குழப்பமாக இருந்தது. உள்ளத்தின் நிலையை வெளிக்காட்டிய கண்களுடன் பெரியவரைப் பார்த்தான் அவன்.

அவரும் அவனை ஒரு கணம் மௌனமாகப் பார்த்தார். பிறகு பேசஆரம்பித்தார்.

"ஆமாம், அதை இன்னும் எத்தனை நாளைக்குத்தான் நெஞ்சில் புதைத்து வைத்திருப்பது? இனியும் உன்னிடம் மறைத்து வைக்க விரும்பவில்லை. எல்லாம் விபரமாகச் சொல்கிறேன், கேள்," என்று துவக்கினார்.

"இது தான் நடந்தது. நான் உன் அம்மாவைப் பார்ப்பேன் என்று நம்பவில்லை. நீதான் எப்படியாவது அவளைக் கண்டு பிடித்து ஆதரிக்க வேண்டும்," என்றார், பச்சாதாபத்துடன்.

பெற்றவளை நினைத்து பிள்ளையின் உள்ளம் ஏங்கியது. அந்த ஏக்கத்திலே அவளைக் கண்டு பிடிக்க வேண்டும் என்ற உறுதி பிறந்தது.

"நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாதீர்கள், அத்தா! அம்மாவை எப்படியும் கண்டு பிடிக்க முயலுகிறேன். அவர்கள் உயிருடன் இருக்க வேண்டும்" என்றான் மகன்.

"அல்லாஹ் உனக்குத் துணை செய்யட்டும்!" என்றார் தந்தை.

"பிழைத்துக் கிடந்தால், ஒரு நாள் உன் மகன் உன்னிடம் நிச்சயம் திரும்பி வருவான். என்னை நம்பு!"



காதர் சுல்த்தான் ராவுத்தர் அபிராமத்தை அடுத்த நத்தத்தில் வாழ்ந்து கெட்ட குடும்பம் ஒன்றிற்குத் தலைமகனைகப் பிறந்தார். உலக மறியாத பிராயத்தில் தந்தையை இழந்தார். அவரையும் அவருடைய இரண்டு தம்பிமார்களையும் அவர்களது தாய் தான் கஷ்டப்பாடு பட்டு வளர்த்தாள். மூத்த மகன் வாலிபப் பருவத்தை அடைந்த போது, அவளுக்குத் தெரிந்த பெரிய மனிதருடன் ரங்கூனுக்கு அனுப்பிவைத்தாள். அவர் முயற்சியில். காதர் சுல்தானுக்கு 'போட்' கம்பெனியொன்றில் கூலி மேஸ்திரி வேலை கிடைத்தது. அதிகமாக ஒன்றும் படிக்காவிட்டாலும், நாலு விஷயங்களையும் நல்லபடி தெரிந்து கொள்ள வேண்டுமென்ற துடிப்பு இருந்தது, காதர் சுல்தானுக்கு. வெகு சீக்கிரத்தில் 'வத்தல்' மராமத்து சம்பந்தமாக விஷயங்களைத் தெரிந்து கொண்டார்.

புரட்சி ஆலிம்களின்
புதுமைக் கருத்துக்கள்!
புத்துணர்ச்சியூட்டும்
புதிய கட்டுரைகள்!
அன்பியாக்களின் அரிய சாதனைகள்!
யாவும் ஒருங்கே தாங்கிவரும்
மாத சஞ்சிகை

'குர்ஆனின் குரல்'

1-1-'58-ல் வெளிவருகிறது.

இன்றே இரண்டு ரூபாய் அனுப்பி வருட சந்தாதாரராக உங்கள் பெயர்களைப் பதிவு செய்துகொள்ளுங்கள்.

நிர்வாகி,
'குர்ஆனின் குரல்' காரியாலயம்
56, தாசில்தார் பள்ளிவாசல் தெரு,
மதுரை.

அந்த நிலையில் சில வருஷங்களுக்குப் பிறகு ஊர் திரும்பியவர், தாயாரின் விருப்பத்துக்கிணங்க அவளது ஒன்றுவிட்ட தம்பி மகளைக் கலியாணம் செய்து கொண்டார்; சம்பந்தம் பண்ணிய இடம் சற்று பசையுள்ள இடம். அவர் மனைவி நல்ல நகை, நட்டுடன் வந்தாள்.

கலியாணம் முடிந்த கொஞ்ச காலத்தில் காதர் சுல்தானுக்கு ரங்கூனில் அவர் நண்பர் ஒருவரிடமிருந்து கடிதம் வந்தது: நாலைந்து 'வத்தல்கள்' சொற்ப விலைக்கு வருவதாகவும், அவர் ஈவுக்கு ஒரு இரண்டாயிரம், மூவாயிரம் கொண்டுவந்தால், இன்னும் ஒருவரையும் பங்காகச்சேர்த்துக்கொண்டு சொந்தத்தில் தொழில் ஆரம்பிக்கலாம் என்று எழுதியிருந்தார். அதன் பேரில் காதர் சுல்தான் தமது நெடுநாள் ஆசையைத் தாயிடம் சொல்ல, அவளும் தனது பூர்வீகச் சொத்தான ஒரே வீட்டை மட்டுமின்றி, மருமகளின் காசு மாலை, ஒட்டியாணத்தையும் ஈடு வைத்து பணம் வாங்கித் தந்தாள். ரங்கூன் போய் சீக்கிரத்தில் திரும்பும்படியும் சொல்லி விட்டாள்.

"ஆகட்டும்" என்று சொல்லி வந்தவர் நாலைந்து வருஷங்கள் தொடர்ந்து ரங்கூனில் தங்கிவிட நேர்ந்தது. ஒன்றன் பின் ஒன்றாக "வத்தல்"களை "டாக்கில்" ஏற்றி மராமத்து செய்ய வேண்டிய தாயிற்று. அதன் காரணமாக நாள் கணக்கில் அக்கரையில் தல்தாகுதாம்பிலேயே காதர் சுல்தான் தங்கிவிடுவார். மணமான புதிதிலேயே தூரதேசம் வந்தவர் எத்தனையோ இரவுகளைத் தனிமையின் வேதனையில் கழித்திருக்கிறார். பருவத்தின் சபலத்திற்கு "பெரிய மனுஷர்" ஒருவர் தூபமிட, குதாம்பு அருகில் அப்பம் சுட்டு விற்று வந்த 'மா கைரூன்' என்ற பெண்ணை அந்தரங்கமாக 'நிக்காஹ்' செய்துகொண்டார். ஏழை என்றாலும் யோக்கியமானவள்.

அவளுக்கு அண்ணன்மார் இருவரும் தங்கையொருத்தியும் இருந்தனர். நரஸாபூர்காரர்கள் என்றாலும், பல தலைமுறைகளாக பர்மாவில் பிறந்து வளர்ந்த குடும்பமாதலால், அவர்கள் நடை, உடை பாவனைகள் எல்லாம் பர்மிய முஸ்லிம்களைப் போலத் தான்.

வடிவில் வேகமாய் ஓடும் வத்தலைப்போல காலமும் விரைந் தோடியது.

அந்த வடிவின் இறக்கத்திலே வண்டல் படிந்த ஆற்றுச்சரிவு தென் படுவது போல, காலப் போக்கில் காதர் சுல்த்தானின் ரங்கூன் திரு மணம் பகிரங்க ரகசியமாகியது. 'பர்மாக்காரி'யைக் கலியாணம் செய்து, அவருக்கு ஒரு பிள்ளையும் இருக்கிறது என்ற செய்தி ஊர்வரை யும் எட்டிவிட்டது.

அப்போது ஊரிலிருந்து ஒரு கடி தம் வந்தது. நோய் வாய்ப்பட்டுக் கிடந்த அவர் தாய் எழுதியிருந் தாள்.

கல்யாணமாகியும் உன்னிடம் ஒரு சுகத்தையும் அறியாத ஒருத்தி இங் கிருக்கிறாள் என்பதை நீ மறந்து விட்டாயா? நீ இன்று இருக்கும் நிலைமைக்கு அவள் செய்த உதவியை நினைத்துப்பார். அவளுக்கு நீ செய்த நன்றி இது தானா? உன்னைப் பெற்று எடுத்து வளர்த்த நான் சந் தோஷமாகக் கண்மூட நீ விரும்பி னால், உடனே ஊர் புறப்பட்டுவா! நம் பாஷை தெரியாத பர்மாக்காரி யுடன் நீ கூத்தடித்தது போதும். அந்த மாய்மாலக்காரியைத் 'தலாக்' சொல்லி விட்டு, பிள்ளையைக் கொண்டு வந்துவிடு"—இது தான் அந்தக் கடிதத்தின் சாரம்.

அம்மாவின் கைப்பிள்ளையாக வளர்ந்து விட்டதால் தானோ, அல் லது தனக்காக தன் முன்னேற்றத் துக்காக, அவள் பட்டிருக்கும் பாட் டுக் கெல்லாம் கைம்மாறு செய்யும் முறையில் கடைசி நேரத்தில் அவ ளைப்பகைத்துக் கொள்வது சரியல்ல என்ற எண்ணமோ; ஊர் போக விரும்பினார் அவர். அதே நேரத்தில் ஒரு பாவமுமறியாத மாகைளுனைத் 'தலாக்' செய்யவும் அவர் இஷ்டப் படவில்லை. ஆகவே அம்மாவைத் திருப்திப் படுத்தும் முறையில் பிள்ளையுடன் மட்டும் ஒருமுறை ஊர் போய் வந்து விட்டால் என்ன? ஆனால் பிள்ளையைப் பிரிந் திருக்க மாகைளுன் மனதாரச் சம் மதிப்பாளா? தன்னைத் தள்ளி விடு வதற்கான திட்டம் அது என அவள் நினைத்துவிட்டால், விபரீதம் ஏற் படுமே?

எப்படி நடந்து கொள்வதென்று தெரியாமல் மனதை அலட்டிக் கொண்டிருந்த நிலைமையில், ஊரில் அம்மா சீக்காக இருப்பதாகவும் மாகைளுனிடம் அவர் லேசாகப் 'போட்டு' வைத்தார்.

ஒரு வியாழக்கிழமையன்று மாலை நேரம். ஆற்றங்கரையில், வத்தலை

உயர்தர ஸெண்ட், அத்தர், பினுயில், மூட்டைப்பூச்சி மருந்துகளும் மற்றும் வாச னுதி திரவியங்கள் உற்பத்தி செய்வதற்குரிய தலைச் சரக்குகளும் எங்களிடம் கிடைக்கும்.

KAZURA CO., Private LTD.
128, NAINIAPPA NAICK ST.,
MADRAS-3.
Phone: 3095

வெள்ளோட்டம் பார்ப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந் தார் காதர் சுல்தான் ராவுத்தர். அப்போது அவரைச் சந்தித்த ஊர்க் காரர் ஒருவர் தாம் மறுநாள் ஊர் புறப்படுவதாகக் சொன்னார். அதைக் கேட்ட மாத்திரத்தில் காதர் சுல் தான் ராவுத்தர் மனதில் ஓர் எண் ணம் லேசாக நிழலாடியது. பிறகு, ஆழ்ந்து வரும் அந்தியிருள்போல அவர் உள்ளத்தில் அது வியாபித் தது.

''இரவு வீட்டுக்கு வாருங்கள்!'' என்று சொல்லி, மீண்டும் வேலையில் ஈடுபட்டார்.

''சரி,'' என்று சென்ற ஊர்க் காரர் காதர் சுல்தான் வீட்டுக்கு இரவில் வந்து போனார்.

அவர் போனபின், காதர் மா கை ரூனை அழைத்தார்.

''இப்போது வந்து வீட்டுப் போனாரே; அவர் எங்கள் ஊர்க் காரர். எனக்கு ரொம்ப வேண்டிய வர். நாளை ஊர் புறப்படுகிறார். காலையில் அவருக்கு நம் வீட்டில் விருந்து சொல்லி இருக்கிறேன். கப்பலில் ஒன்பது மணிக்கு ஆள் எடுக்கிறார்களாம். ஏழரை, எட் டுக்குள் எல்லாம் தயார் செய்து விடு,'' என்றார்.

''ஆகட்டும்,'' என்றாள் மா கை ரூன்.

மறுநாள் விடிந்தது. அதி காலையி லேயே பஜார் கூடையை கையில் மாட்டிக்கொண்டு வெளியே சென் றாள். கோழி, தேங்காய், கோதுமை மாவு, மற்றும் சில்லரைச் சாமான் கள் வாங்கிவந்து, பரோட்டா, குர்மா தயாரிப்பதில் மும்முரமாக ஈடுபட்டாள்.

ஏழரை மணியாகியது.

''என்ன, இன்னும் ஆளைக்காணோ மே! நான் போய்க் கூட்டி வருகி றேன்,''என்று சொல்லி, அப்போது தான் எழுந்து அம்மாவிடம் காப்பி குடித்துவிட்டிருந்த பையனையும் தூக்கித் தோளில் சாய்த்துக் கொண்டு சென்றார் காதர் சுல்தான் ராவுத்தர்.

எல்லாம் சமைத்து முடிந்தது. மாகைரூன் தட்டை, கோப்பைகளைச் சடுதியில் கழுவிச் சுத்தம் செய்தாள். ஈச்சம்பாய் விரித்து, அதன் மேலே தான் அருமையாகச் செய்த பண்டங் களை, அவற்றிற்கேற்ற பாத்திரங்க ளில் இட்டு மூடி, அழகாகப் பரப்பி வைத்தாள்.

ஏழரை எட்டரை யாயிற்று. வெளியே போனவர்கள் திரும்பி வர வில்லை. விருந்தாளியையும் காணோம். அப்படி என்ன தாமதம்?

தெருவாசலுக்கும் உள்ளுக்கும் நடந்துகொண்டிருந்தவள் என்ன நினைத்தாளோ, அண்டையிலிருந்த தாய்வீட்டுக்குச் சென்றாள். பக்கத் துத் தெருவில் போய்ப் பார்த்துவர தங்கையை அனுப்பி வைத்தாள்.

அவள் கொண்டு வந்த செய்தி மாகைரூனை அப்படியே தூக்கி வாரிப் போட்டது.

''மச்சான் அங்கு வரவில்லையாம்! அந்த வீட்டுக்காரர் ஏழு மணிக்கே கப்பலடிக்குப் போய்விட்டாராம்.''

அப்படியானால், விருந்துக்குச் சொல்லவில்லையா? சொல்லாத விருந் தைச் சொன்னதாக ஏன் சொல்ல வேண்டும் அவர்? அழையாத விருந் தாளியை அழைத்து வருவதாக ஏன் போகவேண்டும்? அவர் மட்டும் போகாமல், பிள்ளையையும் தூக்கிச் சென்றாரே; ஏன்?

உள்ளத்தில் கவிந்த கேள்வி மேகத் திடையே ஊரிலிருந்து வந்த கடிதம் பற்றிய நினைவு பளிச்சிட்டது. ஒரு விநாடியில் உண்மை விளங்கிவிட் டது. அவளிடம் சொல்லிக்கொள் ளாமலே அவர் ஊருக்குக் கிளம்பி விட்டார்! அவர் போனால்போகட் டும். ஆனால் பிள்ளை......? போனால் திரும்பி வருவான் என்பது என்ன நிச்சயம்?

அவள் நெஞ்ச வட்டத்திலிருந்து ஈரல் குலையையே பிய்த்துக்கொண்டு போய்விட்டதுபோல் இருந்தது, அவளுக்கு.

"என் பிள்ளையைக் கொண்டு போய் விட்டாரே!" என்று தன்னையுமறியாமல் அலறிவிட்டாள்.

காலில் எதுவும் மாட்டிக்கொள்ளவில்லை. சால்வையை எடுத்து மேலே போட்டுக்கொள்ள மதி இல்லை. ஆற்றங்கரையை நோக்கி ஓடினாள்.

அவள் நெஞ்சத்திலே பிள்ளைப் பாசம் பெருக்கெடுத்தோடியதைப் போல, ரங்கூன் ஆற்றிலும் பெருக்கெடுத்துக் கொண்டிருந்தது—சமுத்திரத் தாய் நதிக்குழந்தையை வாரி அணைத்துக்கொள்ள வரும் பாவனையில்!

பெருக்கின் ஏற்றத்திலே, பாலத்திலிருந்து கப்பல் நகர்ந்துவிடும். அதற்குள் அவள் அங்கு போய்ச் சேரவேண்டும்!

மரப்பாலத்தடியில் காத்திருந்த 'சம்பான்' ஒன்றில் சுணங்காமல் குதித்தாள். ஊர்ப்பாலத்தை நோக்கி விடும்படி படகோட்டியைத் துரிதப்படுத்தினாள் மாகைருன். அவள் நினைவெல்லாம் அங்குதான் இருந்தது.

ஆற்றின் குறுக்கே தன்னால் முடிந்தவரை வேகமாகச் சம்பானை வலித்துச் சென்றான் படகோட்டி. படகின் இருமருங்கிலும் விம்மி எழுந்த அலைகள் மாகைருனின் உள்ளத்தின் நிலையை எடுத்துக் காட்டுவனபோல் இருந்தன.

மறுகரையைப் படகு அடைந்தது. மடியிலிருந்து கைக்குக் கிடைத்த சில்லரையை எடுத்து, அவசர அவசரமாக படகுக்காரன் கையில் எண்ணிப் போட்டுவிட்டு, கரையில் பாய்ந்தாள். ஊர்ப்பாலத்தின் வாசலை நோக்கி ஓடினாள். தலைவிரி கோலமாக ஒரு பெண் ஓடுவதைக் கண்டு வழியில் இருந்தவர்கள் வியப்புடன் பார்த்தனர் அதைப் பற்றி கவலைப்படும் நிலையிலா அவள் இருந்தாள்?

அழகு பொருந்தியவர்களுக்கு நூதன காணிக்கை!

அசோகா ராயல் டால்க் பௌடர் டீலக்

சர்மத்தை மிருதுவாகவும், பிரகாசமாகவும் செய்யக் கூடிய வஸ்துக்கள் இதில் சேர்க்கப்பட்டுள்ளன.

நாள் முழுவதும் சரீரத்தில் உற்சாகத்தைக் கொடுக்கக் கூடிய வாசனைத் திரவியங்கள் சேர்த்துத் தயாரிக்கப்பட்டது.

புதிய முறையில் தயாரித்த இந்த பௌடர்—உயர்ந்த வஸ்துக்களால் நிபுணர்கள் தயாரித்தது. நாள் முழுவதும் புதிய உற்சாகமும், மன அமைதியும், குளிர்ச்சியும் மிகுந்த பரிமளமும் உண்டாவதற்கு உங்களுக்கு உதவியளிக்கிறது. இன்றே உபயோகியுங்கள்.

அழகுள்ள இரண்டு சைஸ்களுள்ள டப்பிகளில் கிடைக்கும். உடனே உங்கள் டீலர்களை விசாரிக்கவும்.

விஜயா கெமிகல்ஸ், சென்னை–7.

அதோ பாலத்தருகில் வந்துவிட்டாள். இன்னும் கொஞ்ச தூரத்தில் தான் கப்பல் அணைந்து கிடந்தது. அதன் பக்கவாட்டிலே மாட்டியிருந்த படிகளில் இரண்டொரு பிரயாணிகள் ஏறிக்கொண்டிருந்தனர். உள்ளேயிருந்து கூலிகள் 'திமு திமு' எனத் திரும்பி வந்துகொண்டிருந்தனர்.

மாகைரூனின் இரண்டு கண்களும் இரண்டாயிரம் கண்களாக, அங்குமிங்கும் வலை போட்டுத் துழாவின.

கப்பலின் மேல் தளத்தில் ஒரு மூலையில் காதர் சுல்தானைப் பார்த்துவிட்டாள்! பிள்ளை அவர் தோள்மீது சாய்ந்து கிடந்தான்.

பிள்ளையிடம் போய்ச் சேரும் வெறியிலே தலை தெறிக்க ஓடினாள்.

ஆனால்......அவள் கப்பலோரம் போவதற்குள் 'சிகிடி'யைத் தூக்கிவிட்டார்கள். 'பூம், பூம்' என்று ஊதியவாறு, கப்பல் பாலத்திலிருந்து நகரத் துடங்கியது. அவள் பாலத்தின் ஓரத்தை அடைவதற்குள், சற்று தூரம் அப்பால் விலகிச் சென்று விட்டது!

"ஹே, அமீன்கா பா!" என்ற அவள் ஓலம் விண்ணைப் பிளந்தது. பிள்ளையை இழந்த சோகத்தின் வேதனை அவள் குரலில் பாய்ந்து வந்தது.

ஏதோ கவனமாக நின்ற காதர் சுல்தான் ராவுத்தரின் உள்ளத்திலே அது துளைத்துச் சென்றது. மாகைரூன் தன் கைகளை நீட்டிய வண்ணம், மதி மயங்கி நின்ற கோலம் அவர் மனதைப் பிளந்தது. கரைக்குத் திரும்பிவிடத் துடித்தார். பிள்ளையுடன் ஆற்றில் குதித்துவிடலாமா என்றுகூட யோசித்தார். ஆனால் ரங்கூன் ஆற்றின் வேகமான கொடும் சுழல்களைப் பற்றிய நினைவு வர, அவர் தன்னைப் பற்றிக் கவலைப்படவில்லை. குழந்தையின் உயிருக்கு ஆபத்து வந்துவிடக் கூடாதே என்று அஞ்சினார். அவருக்கு என்ன சொல்வதென்று புரியவில்லை. மாகைரூனைப் பார்த்து மனமிடிந்து நின்றார். மறுகணம் கையிலிருந்த மகனைத் தூக்கி, அவளிடம் காட்டியவராக, "பிழைத்துக் கிடந்தால், ஒரு நாள் உன் மகன் உன்னிடம் நிச்சயம் திரும்பி வருவான். என்னை நம்பு!" என்று கத்தினார்.

அது அவள் காதில் விழுந்ததோ என்னவோ, "என் பிள்ளை போகிறானே! என்னைத் தவிக்க விட்டுப் போகிறானே! என்று கைகளில் முகத்தைப் புதைத்தவளாக விம்மியழுதாள். உணர்ச்சி மீற, மூர்ச்சித்துக் கீழே விழுந்து விட்டாள்.

வெகு நேரம்வரை கிராதியிலே சாய்ந்தவராக கண்கலங்கி நின்றார் காதர் சுல்தான் ராவுத்தர்.

படுக்கையாகக் கிடந்த அம்மா

விடம் பிள்ளையைக் காட்டிவிட்டு, எப்படியாவது சீக்கிரம் ரங்கூன் திரும்பிவிடலாம் என்ற எண்ணத்திலே ஒருவாறு தம்மை ஆறுதல் படுத்திக்கொண்டார் அவர்.

ஆனல் அவர் நினைத்தது ஒன்று, நடந்தது வேருக இருந்தது!

அம்மா படுக்கையிலிருந்து எழுந்து நடமாட, மகன் படுக்கையில் கிடக்கும்படி வந்துவிட்டது. எதிர்பாராத விதமாக, பக்கவாதம் அவரை 'அடித்து'ச் சாய்த்துப் போட்டு விட்டது. பணத்தைப் பணம் என்று பாராமல் செலவழித்தும், ஒரு கையும் ஒரு காலும் விளங்காமல் போய்விட்டன. அத்துடன் "ஆஸ்த்துமா" வேறு தன் கைவரிசையை அவரிடம் காட்டத் தொடங்கிவிட்டது. பலத்த சிகிச்சைகள் நடந்ததன் பயனுக, ஏதோ ஒரு விதமாக நடமாடித் திரிய முடிந்தது. தம்பிமார்களை ரங்கூன் காரியாதிகளைக் கவனித்து வரும்படி செய்து, அவர் ஊரிலேயே தங்கிவிட்டார்.

இருந்தாலும், தமது நெருங்கிய ஒரு சில நண்பர்கள் மூலம் மறைமுகமாக மாகைளுனைப் பற்றி விசாரிக்க முனைந்தார்.

தல்லாவிருந்து குடும்பமே மாறிப் போய் விட்டதாகவும், எங்கு சென்ருர்கள் என்பது தெரியவில்லையென்றும் தகவல் வந்தது.

மீண்டும், மீண்டும் ஏதும் துப்புக் கிடைக்குமா என்று முயற்சி செய்தார். வருஷங்களும் ஓடிக்கொண்டிருந்தன. அதற்கிடையில் பூகம்பம், 'கோரங்கி'க் கலகம், இந்து - முஸ்லிம் கலகம், பர்மா–முஸ்லிம் கலகம் போன்ற பல சம்பவங்கள் நடந்துவிட்டன. ரங்கூன் நகரிலும் சுற்றுவட்டாரங்களிலும் இடமாற்றங்கள், ஜனமாற்றங்கள் ஏற்பட்டன. அந்த மாற்றங்களின் விளைவாக மாகைளுன் எங்கு சென்ருளோ?

இதயத்தின் அந்தரங்கத்தை வெளியில் சொல்லக் கூசியவராக, உள்ளுக்குள் புழுங்கியவாறு காலத்தை ஓட்டிவந்தார்.

பிள்ளைகளும் குட்டிகளுமாக வீட்டில் கலகலப்பாக இருக்க வேண்டுமென்று விரும்பியவர் அவர். ஆனல் அவருக்கு அமீனைத்தவிர வேறு சந்ததி ஏற்படவில்லை. பிள்ளை பெருமலே அவரின் ஊர் மனைவி இறந்துவிட்டாள். வீட்டுக்கொரு சரியான தலைவி இல்லாமல் போயிற்று. வயது வந்த விதவைத் தமக்கையாரும், ஓரிரண்டு வேலைக்காரர்களுமே அவ்வளவு பெரிய வீட்டில் அவருக்காக இருந்தனர்.

என்ருலும், தம் அன்பை எல்லாம் கொட்டி வளர்த்த ஒரே மகனை எப்போதுமே தம்மிடம் வைத்திருக்க முடியுமா? அவனை நல்ல விதமாக வளர்த்தார். நல்லவிதமாக படிக்க வைத்தார். அவன் பிற்கால வாழ்வும் நல்லபடியாக இருக்கவேண்டும் என்று விரும்பினுர். அனுபவக் குறைவினுல் தமது மகன் தமக்குப் பின்னுல் தவிக்கக் கூடாது; நாளை வகை தெரியாமல் நடந்து, நடுத்தெருவில் நிற்கக் கூடாது அல்லவா?

ஆகவே, தமது கண்ணுள்ள போதே காலாகாலத்தில் மகன் தொழில் முறைகளைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்று எண்ணினுர். தம்முடைய மனதைக் கட்டுப் படுத்திக் கொண்டு, அவனை ரங்கூனுக்கு அனுப்ப முடிவு செய்தார்.

அதனுல் அவனும் வளர்ந்த ஊரிலிருந்து பிறந்த ஊருக்குப் புறப்பட்டுப் போனுன்.

"பிழைத்துக் கிடந்தால், ஒரு நாள் உன் மகன் உன்னிடம் வருவான்!" என்ற அவரது வாக்கை நிறைவேற்றப் போய்விட்டான். அவன் அதிர்ஷ்டத்தாலாவது, மாகைளுனைப் பற்றிய தகவல் கிடைத்துவிடாதா?

மகன் ஊரிலிருந்து புறப்பட்ட நாளிலிருந்து அவருக்கு அதே நினைவு தான்.

சென்னையில் கப்பல் ஏறியதிலிருந்து அம்மாவைப்பற்றிய எண்ணக் கடலிலே தனது உள்ளத்தை மிதிக்க விட்டவனாக இருந்தான் அமீன். தன்னைப் பெற்றவளைப் பார்க்கக் கொடுத்து வைக்க வேண்டுமென்ற துடிப்பு அவனுக்கு. ரங்கூன் போனவுடன் முதல் காரியமாக அம்மாவைக் கண்டு பிடிப்பதற்கான எல்லா முயற்சிகளையும் எடுக்க வேண்டுமென்று என்னவெல்லாமோ திட்டமிட்டான். அவ்வளவு காலம் கழித்துச் செய்யும் அம்முயற்சிகள் வீணாகப் போய் விடக் கூடாதென்று ஆயிரமாயிரம் பிரார்த்தனைகள் அவன் இதயத்தில் அலைகளைப் போல அடுத்தடுத்து எழுந்தன.

அது கடலில். அந்தக் கடலுக்கு அப்பால்...

ஒரு நாள், ரங்கூனையடுத்த இன்ஸீனில் ரயில்வே ஸ்டேஷனுக்குப் பக்கத்திலிருந்த 'சாயா'க் கடையில் இருவர் நுழைந்தனர்.

'கேக்'கும் 'சாயா'வும் கொண்டு வரச் சொல்லி விட்டு, ஏதோ பேசிக் கொண்டிருந்தனர்.

'கல்லா'ப் பெட்டிக்கு அருகில் பிஸ்கத், மிட்டாய் போன்ற தின்பண்டங்களுடன் வரிசையாக அடுக்கப்பட்டிருந்த பாட்டில்களுக்குப் பின்னால் நின்றுகொண்டிருந்த ஒரு நடுத்தர வயதுள்ள மாதின் கவனம் அவர்கள் மீது சென்றது. அவ்விருவரில் ஒருவர் மீது அவள் பார்வை சற்று நிலைத்து நின்றது. அந்த முகத்தை எங்கோ, எப்போதோ பார்த்தது போல் இருந்தது, அவளுக்கு. யோசித்துப் பார்த்தாள்.

காதர் சுல்தான் முதலாளியைப் பார்க்க அவரது தல்லாவீட்டிற்கு சமயா சமயங்களில் வந்து போன ஒரு வாலிபனின் முகச் சாயலாக இருந்தது. ஆள் இப்போது மீசை வளர்த்து, சற்று தடிமனாக இருந்தான்.

'விடு, விடு' என்று அவ்விருவரும் இருந்த மேசைக்கு வந்தாள் அவள்.

"பாய், உங்களைத்தானே! நீங்கள் நத்தமா?" என்று தயங்கியபடி கேட்டாள், அந்த மீசைக்கார ஆசாமியிடம்.

"ஆமாம்!" என்று பதில் சொன்னவன், அந்தப் பெண்ணை வியப்புடன் நோக்கினான். அவள் முகத்தை எங்கேயோ பார்த்த நினைவுதான் அவனுக்கும். எவ்வளவு யோசித்தும் நிதானிக்க முடியவில்லை என்பதை அவன் முகம் காட்டியது.

அதைக் கவனிக்காதவள் போல, அந்தப் பெண், "உங்களுக்கு எங்கே வேலையோ?" என்று கேட்டாள்.

"இரங்கூனில் எங்களூர்க்காரர் ஒருவரின் போட் கம்பேனியில் தான்!"

"காதர் சுல்தான் ராவுத்தர் கம்பெனியிலா?"

"ஆமாம்!"

"அப்படியா? மூத்தவருக்கு ரங்கூனில் பிறந்த பையன் உண்டே?"

"யார், அமீனையா சொல்கிறீர்கள்?"

"ஆம், அமீனைத்தான்! பையன் சௌக்கியமாக இருக்கிறானா?"

"சௌக்கியம் தான். அடுத்த வாரம் அவர் ரங்கூன் வருகிறார்!"

"அவர் பாபா?"

"அவருக்குப் பதிலாகத்தான் அமீன் வருகிறார். சச்சாமார்களுடன் கம்பெனி வேலைகளைக் கவனிப்பார்."

"அவர் தகப்பனார் இங்கே வரமாட்டாரா?"

"வரமாட்டார். அவருக்கு வாதப் பிடிப்பு ஏற்பட்டு ரொம்ப கஷ்டப் பட்டுப் போய் விட்டார். கம்பெனி வேலையிலிருந்து ஓய்வெடுத்துக் கொண்டார்."

"யா அல்லாஹ்! இதென்ன சேதி?" என்று சொன்னவள், வியர்வை வழிந்த முகத்தை சால்வையால் துடைத்துக் கொண்டாள்.

"அது சரி, இவ்வளவு தூரம் விசாரித்தீர்களே! உங்களைப்பற்றிச் சொல்லவில்லையே? நீங்கள் யார்?"

"நானா...? அமீனுக்குச் சொந்தம் தான்," என்று சொன்னவள், சிறிது யோசித்தாள். பிறகு, "பையனுக்கு நான் சின்னம்மா வேண்டும்!" என்றாள்.

மீசைக்கார ஆசாமியின் முகத்தில் ஐயக்குறி தோன்றி மறைந்தது. 'ஆம், பெண் எவ்வளவு மாறி விட்டாள்! காலம் செய்த கோலம் போலும்!' என்று நினைத்துக் கொண்டான்.

"ரொம்ப சந்தோஷம். எத்தனையோ வருஷங்களுக்கு முன்பு உங்களைப் பார்த்தது. ஆமாம், அமீனின் தாயார் எங்கே? உங்களுடன் தான் இருக்கிறார்களோ?"

"எங்களுடன்தான் இருக்கிறார்கள். இப்போது வெளியில் போயிருக்கிறார்கள்."

"அப்படியா? அவர்களிடம் அமீன் வரும் விஷயத்தைச் சொல்லி விடுங்கள்!"

"சரி. உங்களைப் பார்த்தது எவ்வளவோ நல்லதாகப் போயிற்று!" என்று சொல்லி மீண்டும் தன் இடத்துக்குப் போய்விட்டாள் அந்தமாது. மீசைக்கார ஆசாமியும் அவர் நண்பரும் சாப்பிட்டதற்கு பணம் வாங்க மறுத்து விட்டாள்.

மதறாஸ் கப்பல் ரங்கூன் சேர்ந்த சாயந்திரம். ஐந்து மணியிருக்கும். பர்மிய உடையணிந்த பெண்ணொருத்தி முகல் வீதியில் ஒரு பெரிய கட்டிடத்தின் முன் வந்து நின்றாள். முதலில் தயங்கியவள், பிறகு துணிந்து உள்ளே சென்றாள்.

முன் ஹாலில் நுழைந்தவுடன் அங்கொரு மேசைக்கு முன் அமர்ந்து யாருடனோ பேசிக்கொண்டிருந்த வாலிபனைக் கண்டு ஒரு கணம் திகைத்தாள். மறுகணம் அவள் கண்கள் அந்த ஆண்கள் கூட்டத்தில் எவரையோ தேடின.

இரண்டொரு மேசைகளுக்கப்பால் மீசைக்கார ஆசாமியிருப்பதைக் கண்டதும் அவள் முகம் மலர்ந்தது. அவனிடம் சென்றாள்.

"அமீன் வந்தாச்சா? எங்கே பார்க்கலாம்," என்று இந்துஸ்தானியில் கேட்டாள்.

மீசைக்கார ஆசாமி சிரித்துக் கொண்டே எழுந்தான்.

"ஆம்! அதோ, அவர்தான் அமீன்!" என்று அந்த வாலிபனைச் சுட்டிக் காண்பித்தான். அவளைத் தன்னுடன் அழைத்துச் சென்று, ஊரிலிருந்து வந்த முதலாளி மகனிடம் அறிமுகம் செய்து வைத்தான்.

கிஷோராமிர்தம்

ஆயுர்வேத கிரைப்வாட்டர்.

குழந்தைகளுக்கு அஜீர்ணம், கணை, பால்கட்டி, இருமல், பலவீனம், கூட்டு-மார்பு, வாயுத் தொந்திரவுகள். முதலிய வியாதிகளை குணப்படுத்தவும் வாராமல் தடுக்கவும் மிகச் சிறந்த ஒரே டானிக்.

கோலா & மைசூர், ஏஜண்டுகள்: SAMMU & CO; எர்ணாகுளம்.

தயாரிப்பாளர்கள்:
நேஷனல் பார்மஸி,
195, வக்கீல் புது தெரு, மதுரை.

நேவி ஆர்ட்ஸ் மதுரை.

"இவர்கள் உங்கள் சின்னம்மா வாம். உங்களைப் பார்க்க வந்திருக் கிறார்கள்!" என்றான்.

அன்பு ஒளிரும் கண்களுடன் தன்னைப் பார்த்து நின்றவளை அமீன் மரியாதையுடன் வரவேற்றான். அருகிலிருந்த நாற்காலியை இழுத் துப்போட்டு, உட்காரச் சொன் னான். 'ஓட்டை' உர்தூவில், ஊர் பள்ளிக்கூடத்தில் உர்தூ முன்ஷி யைக் 'கோட்டா' பண்ணிய அவ னுக்கு அந்த அளவாவது பேசத் துணிவு வந்ததே!

"பரவாயில்லை! உன்னைப் பார்த்து நின்றாலே போதும் என்றிருக்கிறது. சின்னப் பிள்ளையாகப் போனவன், எத்தனை வருஷங்களுக்குப் பிறகு வந்திருக்கிறாய்!" என்றாள்.

சின்னம்மாவைப் பார்த்து மகிழ்ந்த வாலிபனின் உள்ளம் அம் மாவின் உருவத்தை கற்பனை செய்து பார்த்தது. அவளை நேரிலே பார்க் கத் துடித்தான் அவன்.

"அம்மா எங்கே? அவர்கள் வர வில்லையா? உடம்புக்கு ஏதாச்சும்... ...?"—ஆதுரத்துடன் கேட்டான் பையன்.

"இப்போது உடம்புக்கு என்ன குறை? நீ வருவதாகக் கேள்விப் பட்டவுடனேயே நோயெல்லாம் ஓடிப் பறந்து விட்டது, அப்பா!"

"அப்படியிருந்தும் ஏன் வர வில்லை? ஆமாம். அவர்களுக்கு என் னைப்பார்க்க எப்படி மனம் வரும்? இத்தனை வருஷமாகத்தான் அவர் களைத் தவிக்க விட்டிருந்தேனே!

அவர்களைத் தேடி நானல்லவோ போகவேண்டும்? நொந்து போயிருக்கும் அவர்கள் மனங்குளிரச் செய்ய வேண்டும். அவர்களிடம் மன்னிப்பு கேட்க வேண்டும். அவர்களிடம் என்னைக் கூட்டிச் செல்லுங்கள், சின்னம்மா!''

"விதியின் கொடுமைக்கு மனி தரை நொந்து என்ன பயன்? நீ உன் அம்மாவை எங்கும் தேடிப் போக வேண்டியதில்லை. உன் மழலைப் பேச்சுகளைக் கேட்டு மகிழ முடியாமல் போய்விட்டாலும், உன் அன்பு மொழிகளையாவது கேட்கக் கொடுத்து வைத்தேனே! இதோ இருக்கிறேன், உன் அம்மா! உன் சின்ன அம்மா! நீ தான் இப்போது என்னை விட எவ்வளவு பெரியவனாக வளர்ந்து விட்டாய்,'' என்று சிரித்துக் கொண்டே சொன்னாள் மாகைரூன்.

பாசம் பொங்கிய தாயின் கண்களும் அன்பு ததும்பிய மகனின் நயனங்களும் சந்தித்தன.

"அம்மா!''

தாயின் அன்புக்கரங்கள் மகனை அணைத்தன. அந்த இன்பப்பிணைப்பிலே அவர்களின் இதயங்கள் ஒன்று கலந்தன. ஆனந்தப் பரவசத்திலே மௌனமாக ஒருவரை ஒருவர் தழுவி நின்றனர் தாயும் மகனும். அவர்களின் நெஞ்சத்து உணர்ச்சியெல்லாம் கண்ணீராக வழிந்தது. அவர்களின் கரங்களில் வீழ்ந்து சுட்டது.

"உங்களை இப்படியே நிற்கவைத்துக் கொண்டிருந்தால்...? வாருங்கள், மேலே போகலாம்!'' என்ற மகனின் குரல் மாகைரூனை நினைவுலகத்துக்குக் கொண்டுவந்தது.

மறுநாள் அதிகாலையிலேயே ஊருக்குத் தந்தி பறந்தது, தேடிப் போன தாய் தானே வந்த நல்லசேதியைத் தாங்கியவாறு.

அன்று மத்தியானச் சாப்பாட்டுக்குப் பிறகு கிழவர் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தார். தந்தியை வாங்கிய தமக்கையார் தம்பியை அவசரமாகக் கூப்பிட்டாள். பதிலைக் காணோம். "தம்பீ'' என்று வந்து தட்டி எழுப்பினாள். ஆனால் அவர் எழுந்தபாடில்லை. மூக்கிலே கை வைத்துப் பார்த்தாள். நாடியைப் பிடித்துப் பார்த்தாள். தேகத்தைத் தொட்டுப் பார்த்தாள். 'ஆ' என்று அலறினாள்.

மனிதர் இறந்து விட்டிருந்தார்.

உலகத்தில் அவர் உள்ளத்துக்குக் கிட்டாத நிம்மதியை நோக்கி அவர் ஆத்மா சென்றுவிட்டது! ★

மலாயா நண்பர்களுக்கோர் நற்செய்தி!

உங்களுக்கு மிகவும் திருப்தியளிக்கக்கூடிய வகை வகையான இந்திய, ஹாலந்து வாசனைத் திரவியங்களும், நயமான அகர்பத்தி தினுசுகளும், மேகநீர், நீர்க் கடுப்பு, கணை, மாந்தம், இருமல், இளைப்பு, பித்த ஜுரம், பித்தமயக்கம் முதலிய பல வியாதிகட்கும், பிரக்யாதி பெற்ற பரங்கிப்பேட்டை "முஹம்மதியா மெடிக்கல் ஹாலில்'' தயாரிக்கப்பட்ட அபூர்வ மருந்துகளும், ஆண் பெண் இருபாலரது உடுப்புகளுக்குக் கண்கவர் கலர்களில் இன்ஷியல் டேப்புகளும் (இன்ஷியல் டேப்புகள், ஆர்டர் கொடுத்த ஏழு வாரங்களுக்குள் இங்கிலாந்திலிருந்து தருவித்துக் கொடுக்கப்படும்.) சில்லரையாகவோ, மொத்தமாகவோ எம்மிடம் வேண்டிப் பெறலாம். மேற்கொண்டு விபரங்களுக்கு பத்து காசு ஸ்டாம்புடன் விண்ணப்பிக்கவும்.

தங்கள் ஆதரவை நாடும், M. E. முகம்மது அலி,
அத்தர் மர்ச்சண்ட் & கமிஷன் ஏஜண்ட்.
39, ரம்பாஸ்திரீட், கிள்ளான்.

நான்கு அங்கங்கள்!

மனிதன் படைப்புகள் அனைவற்றிலும் சிறந்தவன். இறைவன் அவனுக்குக் குறிப்பாக நான்கு அங்கங்களைத் தந்துள்ளான். அதே அங்கங்கள் மிருகங்களிடமும் உள்ளன. ஆனால் மிருகங்கள் அவற்றைப் பயன்படுத்துவதுபோல் மனிதன் அவற்றை உபயோகிக்கக் கூடாது. இறைவணக்கத்தையும் இறைஞானத்தையும் மட்டுமே குறிக்கோள்களாய்க் கொண்டு உலக வாழ்க்கையில் ஈடுபடுபவர்கள் இதை நன்கு கவனிக்க வேண்டும். அவர்கள் செல்வது மலர் தூவிய பாதையல்ல; பயங்கரமான பாதை, பக்தர்களின் பாதை. இந்தப் பாதையில் பிரவேசிப்பவர்கள் அந்த நான்கு அங்கங்களைப் பற்றியும் அவற்றின் உபயோகத்தைப் பற்றியும் நன்கு அறிந்திருக்கவேண்டும்; உரிய காரியத்திலே அவற்றைப் பயன்படுத்த வேண்டும்.

இப்போது அந்த அங்கங்கள் யாவை என்று பார்ப்போம்.

முதல் அங்கம் கண். இது மனிதனுக்கு மட்டுமல்ல; மிருகங்களுக்கும் அருளப்பட்டிருக்கிறது. இதன் உதவியால் அவை பல்வேறு செயல்கள் புரிகின்றன. இரையை நோக்கிப் பாய்கின்றன; எதிரியைத் தாக்கி வீழ்த்துகின்றன; காமத்தைத் தணிக்க விரைகின்றன. ஆனால் மனிதன் அந்தக் கண்ணை மிருகங்களைப் போன்று துஷ்பிரயோகம் செய்யக் கூடாது. இந்நூலில் நான் குறிப்பாகப் பக்தர்களைப் பற்றியே எழுதுகிறேன். அவர்கள் நேத்திரச் செல்வத்தின் விஷயத்தில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். உலகிலே எத்தனையோ தீய செயல்கள் நடைபெறுகின்றன. அவற்றில் பெரும் பகுதி கண்ணினால் தான் விளைகிறது. கண்ணைத் தவறான முறையில் பயன்படுத்துவதால் தான் மக்களின் உள்ளத்தில் இருள் சூழ்ந்து வருகிறது. இதை நீ சற்று ஆராய்ந்துபார். அப்போது உனக்கு உண்மை புலப்படும்.

ஆகவே தான் அறிஞர் அலி (றலி) அவர்கள், "தன் கண்ணை நல்ல முறையில் பயன்படுத்தத் துணியாதவன் தன் உள்ளத்தின் சிறப்பை இழந்து விட்டான்!" என்று கூறியுள்ளார்கள். ஆம், உண்மைதான்; சந்தேகமே இல்லை. உள்ளம் என்ற அரசனுக்கு எத்தனையோ மந்திரிகள் இருக்கிறார்கள். அவர்களில் மிகவும் சிறந்தவர், கண். இந்த மந்திரியின் உதவியால் தான் இதய அரசனுக்கு வெளி விஷயங்கள் கிடைக்க வேண்டும். ஆனால் இந்த மந்திரி அப்படி இல்லையே! உலகில் நன்மைகள் எவ்வளவோ இருக்க, அவற்றை எல்லாம் விட்டுவிட்டு இவர் தீமையிலல்லவோ கவனம் செலுத்துகிறார்! இவர் செலுத்திய அதே கவனத்தை—இவர் சிந்தித்த அதே சிந்தனையைத் தன் அரசனுக்கு உடனே அனுப்பி விடுகிறார். பாவம், உள்ளத்தரசன் என்ன செய்வான்? அவனால் எதுவுமே

மூலம்:
இமாம் கஸ்ஸாலீயின்
"பக்தர்களின் பாதை"

தமிழாக்கம்:
மௌலவீ எஸ். அப்துல் வஹ்ஹாப்
(பாகவீ)

செய்ய முடியவில்லை. மந்திரியின் உதவியின்றி தனக்குத் தானாக விஷயத்தைக் கிரகிக்கும் ஆற்ற லும் அவரிடம் கிடையாது. மந் திரி கூறுவதைத் தானே கேட் டாக வேண்டும்!

"அரசே! பெண்ணின்பம் மிக வும் உயர்ந்தது. நீங்கள் அவசியம் அனுபவிக்க வேண்டும். அவளை நான் என் கண்ணால் பார்த்தேன். மறு விநாடியே மயங்கி விட் டேன்!" என்பார் மந்திரி. அரச ருக்கு இதை மறுத்துப் பேசத் துணிவில்லை,

"அரசே! சூதாட்டம் தான் எத்தனை சுவாரஸ்யமாக இருக் கிறது! நேரம் போவதே தெரிய வில்லையே!" என்று மறுபடியும் உபதேசிப்பார். அரசர் ஆமோ திக்க வேண்டியதாகத் தானிருக் கும். அவருக்குத் தான் மந்திரி யின் உதவியின்றி இயங்கத் தெரி யாதே!

இரண்டாவது அங்கம் நாவு. இந்த அங்கத்தினால் உலக வாழ்க் கையில் உனக்கு எத்தனையோ நன்மைகள் உள்ளன. நீ உலகில் வாழ்ந்ததினால் ஏற்படும் பெரிய பலன் இதன் உதவியால்தான் உண்டாக முடியும். இதை நீ ஒரு புதையல் என்று எண்ணிக் கொள். இறை வணக்கம், இறை தியானம், திருமறை ஓதுதல் முதலிய நற்கிரியைகளுக்கு அது மிகவும் தேவைப்படுகிறது என்று உனக்குத் தெரியும். நாவினை நல்ல வழியில்—நேர்மை யான பாதையில் பயன்படுத்திய வர்கள் வெற்றிக் கொடி நாட்டி விட்டார்கள். இந்த முறையைத் தவிர்த்து எதிர்முறையைக் கையாள்பவர்கள் வாழ்க்கையில் கைசேதப்பட வேண்டியவர்கள். சொல்லப்பட்ட ஒன்று, சொல் லப்படாத ஒன்றாக எக்காலத்தி லும் மாறாது. இந்த அங்கத்தைச் சிலர் புறம்பேசுதல், பொய்யுரைத் தல் முதலிய காரியங்களில் ஈடு படுத்துகிறார்கள். இவர்களைப் பற்றி நான் ஒன்றும் சொல்வதா யில்லை. சுருங்கச் சொன்னால் இவர்கள் பரிதாபத்திற்குரியவர் கள், இவர்கள் ஒரே ஒரு வார்த் தையைத் தான் கூறுகிறார்கள். அந்த வார்த்தையினால் ஓர் ஆண் டின்—ஏன் ஐந்து, பத்து ஆண் டின் நன்மைகள் அழிக்கப்பட்டு விடுகின்றன. உள்ளத்தை அடக் கியாண்டு செயலாற்றப்பட்ட நன்மைகளெல்லாம் பாழாகின் றன! நன்மையைத் தின்மையால் அழிக்கும் இவர்களைப் பற்றி நாம் என்ன சொல்ல முடியும்? அந்தோ பரிதாபம்!

"உலகில் கடுந்தண்டனை அளிப் பதற்கு ஒன்று உண்டென்றால் அது நாவாகத்தான் இருக்க வேண்டும்!" என்று சிலர் கூறி யதை நீ கேட்டிருப்பாய். அந்த நாவை நேரிய முறையில் பயன் படுத்தினால் எதையும் அடைய லாம். இறையன்மை கூடப் பெறலாம். 'பக்தன்' என்ற பெய ரையும் பெருமையையும் அடை யலாம். அதை வீணாக துஷ்பிர யோகம் செய்தால் கேடுதான். மறுமையில் மட்டுமல்ல இம்மை யிலும் அவன் தலைதூக்க முடி யாது.

நபி யூனுஸ் (அலை) அவர் களிடம் ஒருவர் வினவினார்: "நபியவர்களே! நாங்கள் இறை வணக்கத்தில் எப்போதும் ஈடுபடு கிறோம். அதில் இன்பம் காண் கிறோம். எங்கள் உள்ளங்களை அடக்கியாள்கிறோம். ஆனால்

எங்கள் நாவுகளை மட்டும் எங்களால் கட்டுப்படுத்த முடியவில்லை. இடைவெளி உள்ள வணக்கங்களில் பேசாமலிருப்பது மிகவும் சிரமமாக இருக்கிறது..."

நபியவர்கள் ஆமோதித்தார்கள்; "ஆமாம், இயன்றவரை அடக்கியாளுங்கள். அதனை முழுக்க முழுக்க ஒடுக்கி விட்டால் வெற்றிதான், உங்கள் உள்ளங்களைக் காப்பாற்ற விரும்பினால் முதலில் உங்கள் நாவுகளைக் கட்டுப்படுத்துங்கள். தேவையான—நன்மையான காரியங்களைத் தவிர்த்து வேறு எதிலும் உபயோகிக்காதீர்கள்! இதை மனதில் பதித்துக்கொண்டு செயலாற்றுங்கள்."

அறிவை விரும்பும் மனிதனே, எண்ணிப்பார். உன்னிடம் இந்த அரிய அங்கம் உண்டு. அதை நீ எப்படிப் பயன்படுத்துகிறாய்? வீணான விஷயங்களிலும் தவறான உரையாடல்களிலும்தான் அதை உபயோகிக்கிறாய். இதனால் உனக்கு நீயே தீங்கிழைத்துக் கொள்கிறாய். இது போன்ற விஷயங்களில் உன்னுடைய பல மூச்சுக்களைச் செலவிட்டிருப்பாய். அத்தனையும் இப்போது வீணாகிவிட்டன. உனக்குக் கடுகளவும் பயனில்லை, ஆனால் அதற்குப் பதிலாக, "இறைவா! என் குற்றத்தை மன்னித்தருள்" என்று மன்றாடிக் கொண்டிருந்தால் எவ்வளவு நல்லது! உன் வேண்டுகோள் உடனே அங்கீகரிக்கப்பட்டு விடுமல்லவா? இதில் சந்தேகமில்லை. உன் குற்றங்கள் யாவற்றையும் இறைவன் மன்னித்துக் கொள்வான். அவன் மன்னிக்கும் மாமன்னனல்லவா? உன் தலையில் விழுந்து கிடந்த பாவச் சுமை இறங்கி விடும்.

இப்படியும் நீ நடக்கா விட்டால் "லாஇலாஹ இல்லல்லாஹ்" என்று சொல்லிக் கொண்டிரு. நீ கனவிலும் எதிர்பார்த்திராத அளவிற்கு இதனால் உனக்கு நன்மை உண்டாகும். அல்லது, "இறைவா! எனக்கு நல்ல ஆரோக்கியத்தைத் தந்தருள்வாயாக" என்று இறைவனிடம் இறைஞ்சிக் கொண்டே இரு. ஒருகால் உன் வேண்டுகோள் நிறைவேற்றப்படலாம். அப்போது உனக்கு இம்மை, மறுமை ஆகிய இரண்டிலும் பூரண ஆரோக்கிய நிலை கிட்டிவிடும். உலகத் துன்பங்கள், துயரங்கள் எதுவும் உன்னை பாதிக்காது. நீ மிகவும் கவனமாக இருக்க வேண்டும். இத்தனை முறைகளையும் நான் விளக்கி விட்டேன். இதன் பிறகும் நீ செயலாற்றவில்லையானால் உன்னை விடக் கேடுகெட்டவன், மூடன் இருக்க முடியாது. இதனால்தான் அறிஞர் ஒருவர் "நீ ஏதேனும் பேச விரும்பினால் இறைவனின் திருப்புகழை ஓதுவாயாக!" என்று கூறியிருக்கிறார்.

மூன்றாவது அங்கம் வயிறு. மனித வாழ்க்கையின் குறிக்கோள் வணக்கம் என்று ஆரம்பத்திலேயே கூறினேன், மனிதனின் கிரியாம்சைகளுக்கெல்லாம் வித்தைப் போன்றது உணவு. உணவு இல்லையேல் எதுவுமில்லை; இறை வணக்கமுமில்லை. இறை வணக்கத்திற்கு யாதொரு தடங்கலும் ஏற்படக்கூடாது என்பதற்காகவே இறைவன் வயிற்றையும் அதற்குரிய உணவையும் படைத்தான். வயிறு என்ற

நிலத்தில் உணவு என்ற வித்தை இடவேண்டும். அப்போதுதான் இறைவணக்கம் என்ற கனியை அடைய முடியும். இல்லையேல் உன்னால் வணங்கவும் முடியாது; உன் குறிக்கோளும் நிறைவேறாது.

மஃரூப் கர்கீ (ரஹ்) அவர்கள் கூறியுள்ளார்கள், "நீ நோன்பு நோற்க விரும்பும்போது, அந்த நோன்பை எந்த உணவில் முடிக்க வேண்டும் என்பதையும் எண்ணிப்பார்" என்று.

வணக்கத்திற்கு உணவு அவசியம் என்று உணர்கிறாய். ஆனால் உணவு உட்கொண்டவர்களெல்லாம் இறைவணக்கத்தில் ஈடுபட்டு விடுவார்கள் என்று மட்டும் எண்ணிவிடாதே. ருசிமிக்க உணவு வகைகளை உட்கொள்பவர்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். அவர்கள் இறைவனை எண்ணியும் பார்ப்பதில்லையே! எனவே மானிடனே, நீ நன்கு ஆராய வேண்டும். உனக்கெதிரில் வைக்கப்பட்டிருக்கும் உணவைப் பற்றி நன்றாக சிந்திக்க வேண்டும். அந்த உணவை உட்கொள்வதால் உன் உள்ளத்தில் வேகமும் இறைவணக்கத்தில் உற்சாகமும் உண்டாவதானால் அதை நீ தாராளமாக உட்கொள்ளலாம், இல்லையேல், அந்த உணவிற்கு உன்னை நீயே ஒரு பையாக ஆக்கிக் கொள்கிறாய், தினம் தினம் பொழுதைப் போக்கி உன் மரண எல்லையை நெருங்குகிறாய். வயிறு நிரம்பியவர்களில் அனேகர் இறைவனை வணங்குவதில்லை என்று நாம் உணர்ந்திருக்கிறோம். இது இயற்கை விதியல்ல. மனிதன் தனக்குத் தானாக ஏற்படுத்திக் கொண்ட செயற்கை விதி. இதற்கு எதிராக நீ வர வேண்டும். 'இறைவனை வணங்குவதற்கே உணவை உட்கொள்கிறேன்' என்ற எண்ணம் உனக்கு எந்நேரத்திலும் இருக்க வேண்டும்.

ஆனால் இதற்கெல்லாம் உன் உள்ளம் இடம் கொடுக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. ஏனெனில், நேரிய பாதையைப் பார்த்து அது எப்போதுமே நடுங்கிக் கொண்டிருக்கிறது! இந்த நிலையில் நீ உள்ளதை அடக்கியாண்டு அதை பலவந்தமாக வணக்கத்தில் நுழையச் செய்யலாம். ஆனால் இப்படிச் செயலாற்றப்படும் வணக்கம் கண்டிப்பாய் இன்பமுள்ளதாக இருக்காது. வணக்கத்திற்கேயுரிய தனிப் பெரும் ஆனந்தம் இந்த நிர்ப்பந்தத்தில் உண்டாக முடியாது.

ஆகவே அறிஞர்கள், மேதைகள் உணவு விஷயத்தில் ஒரு வரம்பையும் உண்டாக்கி விட்டார்கள். அந்த வரம்போடு நீ உணவருந்தினால் உன் குறிக்கோள் தவறிப் போகாது. இறைவணக்கத்திற்கும் பங்கமேற்படாது. அந்த இன்பம் குறையாது. அதிலுள்ள அறிஞர்கள், "நீ வணக்கத்தில் இன்பம் காண விரும்பினால் அதிகமாக உணவருந்தாதே!" என்று கூறியிருக்கிறார்கள்,

இப்ராஹீம் இப்னு அத்ஹம் அவர்கள் கூறினார்கள்;

லப்னான் என்ற மலையில் நான் வாசம் செய்தபோது எத்தனையோ பக்தர்களிடம் பழகியிருக்கிறேன், அவர்கள் அனைவரும் தங்கள் வாழ்க்கை

முழுவதையும் இறைவனுக்கே அர்ப்பணித்திருந்தார்கள். அவர்களில் சிலர் என்னிடம் கூறினார்கள், "அபூ இஸ்ஹாக், நீர் மக்களிடம் சென்றால் இந்த நான்கு விஷயங்களையும் மறந்து விடாமல் கூறும். (1) அதிகமாக சாப்பிடுபவன் வணக்கத்தில் இன்பம் காண முடியாது. (2) அதிகமாகத் தூங்குபவன் தன் வாழ்க்கையில் வளர்ச்சியைப் பார்க்க முடியாது. (3) மக்களின் விருப்பத்திற்குக் கூத்தாடுபவன் இறை விருப்பத்தைப் பெற முடியாது. (4) வீண் வார்த்தை பேசுபவன் ஈமானோடு மரணிக்க முடியாது" என்று.

இந்த நான்கு விஷயங்களையும் நீ சற்றுச் சிந்தித்துப் பார். எத்தனை உண்மை! இந்த நான்கையும் ஒரு மனிதன் கவனித்து நடந்தால் அவன் வானோங்க உயரலாம். இதில் எள்ளளவும் ஐயமில்லை.

நான்காவது அங்கம் உள்ளம். இது முந்திய மூன்று அங்கங்களைப் போன்றதல்ல. இதைக் கட்டுப்படுத்துவது மிகவும் சிரமமான காரியம். ஆனால் இது ஒன்றைக் கட்டுப்படுத்திவிட்டால் போதும், எல்லாவற்றையும் எளிதில் கட்டுப்படுத்தி விடலாம்.

உள்ளம் அரசனைப் போன்றது. மற்ற அங்கங்கள் அவனுக்கு பணியாட்கள். அரசன் நேர்மையாக நடக்க ஆரம்பித்து விட்டால், பணியாட்களைப் பற்றியோ பிரஜைகளைப் பற்றியோ கவலைப்பட வேண்டியதில்லை. அவர்களும் தாங்களாகவே தங்கள் மன்னனின் பாதையில் வந்து விடுவார்கள். மன்னன் முறை தவறி நடந்தால் அவனைப் பணியாட்களால் திருத்த முடியாது. போகப் போக மன்னனின் துன்மார்க்கத்தைப் பணியாட்களும் பின்பற்றத் துவங்கி விடுவார்கள்.

கண், நாவு, வயிறு ஆகிய பணியாட்கள் நல்ல வழியில் இயங்கி வந்தால், உள்ள மன்னர் நேரிய வழியில் செல்கிறான் என்று பொருள். இவற்றில் தவறு தெரிந்தால் அது உள்ளத்

உண்மைக்கும் உறுதிக்கும் ஒப்புயர்வுற்ற இடம்

பாம்பே ஆப்டிகல்ஸ்

கோயமுத்தூர்

★

நவீன மாடல் பிரேம்களை நாள் தோறும் வரவழைத்து மக்களுக்கு வழங்குவதில், எங்களுக்குத் தனி இன்பம். ஒருமுறை வருகை தந்து உண்மை அறியவும்.

Prop. V. M. MOHAMED YAKKOOB
Ophthalmic Opticians
17/6, BIG BAZAAR STREET
(Town Hall Corner)
COIMBATORE.

தின் தவறு என்று உணர்ந்து கொள்ளலாம். உள்ளத்தின் கோளாறுகள் கொஞ்ச நஞ்சமல்ல; மிகவும் அதிகம். அவற்றை எல்லாம் இப்போதே விவரிக்க முடியாது.

ஆகவே மேலே நான் குறிப்பிட்டவற்றை வைத்துக் கொண்டு உன்னை நீயே திருத்திக் கொள். உண்மையை அறிய விரும்பும் மானிடனுக்கு இது போதும் என்று எண்ணுகிறேன்.

மூதாட்டியின் நீதி மொழி

*

நேர்மையற்ற அதிகாரி ஒருவனின் தூண்டுதலால் நிரபராதி ஒருவனைச் சிறையில் அடைத்து வைத்திருந்தார், அம்ரு இப்னு-லேது என்னும் கவர்னர். அவனை விடுவிக்க அவன் தாயார் எடுத்துக்கொண்ட முயற்சிகள் அனைத்தும் வீணாயின. தயாராக எழுதி வைத்திருந்த மனுவுடன் அவர் செல்லும் வழியிலே ஒருநாள் காத்திருந்தாள் அவள். குதிரை மீது கம்பீரமாக வந்துகொண்டிருந்தார் அம்ரு. அவருடன் வந்திருந்த காவலாளிகளோ அவளை நெருங்கவிடாதபடி தடுத்துக் கொண்டிருந்தார்கள். பெரு முயற்சி செய்து எப்படியோ குதிரையின் பக்கமே அவள் வந்துவிட்டாள். அவளைக்கண்டு குதிரையும் கூட மருண்டது.

''யார் இவள்? ஏனிப்படிப் பிடிவாதம் செய்கிறாள்?'' என்று கோபம்மிகுந்து அம்ரு கேட்டார்.

''சிறையிலே கிடக்கும் இளைஞனின் தாய் இவள்'' என்றனர் உடனிருந்தவர்கள்.

அவளும் ''பிரபுவே, என் மகன் நிரபராதி. அவனுக்கு விடுதலை தாருங்கள்'' என இறைஞ்சி நின்றாள்.

தன்னை வழிமறித்து வாதம் செய்யும் மூதாட்டியின் செய்கையால் பெருஞ்சினங் கொண்ட, அம்ரு.

''கிழவியே, உன் மகனுக்கு நூறு கசையடி கொடுத்து, பிறருக்கும் ஒரு பாடமாக ஊரைச் சுற்றி இழுத்து வரும்படி தண்டனை விதிக்கிறேன்'' என்றார்.

''இது யார் விதிக்கும் தண்டனை என்று சொன்னீர்?'' என்று என்று கேட்ட அவளை கர்வத்தோடு, நோக்கி அம்ரு, ''ஏன், நான் விதிக்கும் தண்டனை தான்'' என்று உரைத்தார்.

''உங்கள் மனம்போன போக்கிலே நீங்களே நீதி வழங்கி விட்டால், இறைவனின் நீதி என்னாவது?'' என்று இடித்துரைத்தாள் அவள்.

இறைநெறிக்குப் புறம்பாகதான் வழங்கும் நீதி முறையற்றதென்பதை உணர்ந்துகொண்ட அம்ரு இப்னு லேது, சிறையில் வாடிய இளைஞனுக்கு உடனே விடுதலை தந்து, தன்னை பாவத்தினின்றும் காப்பாற்றிய மாதரசியை மனமாரவாழ்த்தி அனுப்பி வைத்தார்.

—இனயத்.

ஜமீலா

வாழ்க்கையில் கணக்கில்லா இடர்களினால் அவதிப்படும் ஜீவராசிகளுக்கு நிம்மதி அருளிய நித்திரா மங்கையை மஞ்சத்தில் விட்டு விட்டு பொன்னிறக் கதிர்களை பொழிந்துகொண்டு அவனியில் பவனி வர ஆதவன் புறப்பட்ட சுப வேளையில், தன் தந்தை உரைத்த மங்களச் செய்தியைச் செவிமடுத்த ஹலீமா குளம் பூத்த தாமரை போல் உளம் பூத்த நெஞ்சோடு வீட்டிற்குள் துள்ளிக் குதித்துக் கொண்டே ஓடினாள். புனலாடி புத்தாடை பூண்டு இரண்டு ''ரகாஅத்'' தொழுது அல்லாஹ்த்த ஆலாவிற்கு தன் நன்றியைத் தெரிவித்தும் அவ்வனிதையின் மனப் பதற்றம் அடங்கினதாகக் காணோம்! கட்டுக்கடங்காத களிப்பின் பீரிட்டெழுச்சியினால் அக்காரிகையின் தளிர்மேனி வாடையில் சிக்கிய வஞ்சிக்கொடிபோல் நெளிந்தாடிற்று. குங்கும இதழ்களில் குறுநகை நர்த்தனமிட, மதுர விழிகளில் மகிழ்ச்சி தவழ்ந்தாட ஆவலாடும் மஞ்ஞையைப்போல் ஆடியவண்ணம் அறைக்குள் புகுந்தாள். ஊதுவத்திகளைக் கொளுத்தி அந்தச் சேல்விழியாள் செருகினதுதான் தாமதம்; 'கும்'மென்று எழுந்த மனோகரமான சுகந்தம் இல்லமெங்கும் பரவலாயிற்று.

அந்த எழிலரசிக்கு உண்டான உவகைக்கு முக்கிய காரணம் அவ்வணங்கின் மணவாளன் ஐ. ஸி. எஸ். பரீட்சையில் தேறி விட்டதுதான்! அன்றைய நாள்முதல் ஒரு கலெக்டரின் 'பேகம் சாஹிபா'வாக தான் மாறிவிட்டதை எண்ணிப் பார்த்ததும் அக் குலக்கொடியின் மாதுளை கன்னங்கள் 'குப்'பென்று சிவந்து விட்டன.

''ஹலீமா இங்கே வாம்மா?'' தந்தையின் குரலைக் கேட்டதும் தரையில் தவழ்ந்தாடிய ஜிமிக்கி போட்ட தாவணியின் தலைப்பை சட்டென்று சிரத்தின் மீது இழுத்துப் போட்டுக் கொண்டாள்.

''ஆண்டவன் எவ்வளவு தயாளன் பார்த்தாயா!''—என்றார் ரஹ்மத்துல்லா மிக்க உணர்ச்சியுடன். ''என் அருமை மகளே! இவ்வளவு உயர்ந்த பாக்கியத்தை நீ பெற்றதற்குக் காரணம் என்ன தெரியுமா? தங்கமான உன் குணம், மாசற்ற உன் மனம், பொறுமை, அடக்கம்—இவைதான் உன்னை அண்டினவனை 'யானைமேல் ஏற்றி வைத்து' விட்டன! நீ நல்லா இரு'' என்று தன் மகளை ஆசிர்வதித்தார்.

சாதாரண ரெவின்யூ இன்ஸ்பெக்டராக பணியாற்றி வந்த ரஹ்மத்துல்லாவுக்கு அவர் நல்லதிர்ஷ்டம் அதே தென் ஆற்காடு ஜில்லாவில் கலெக்டராக உத்தியோகம் வகித்த சென்னை வாசியான கான்பகதூர் வஹாப் ஸாஹிப் அந்த எளியவருக்கு சம்பந்தியாக வாய்த்து விட்டார்! ஹலீமாவை தம் மருமகளாக ஏற்றுக்கொள்ள தன் எஜமானராகிய அந்த கலெக்டர் ஸாஹிப் தம் வீட்டிற்கு ஒருநாள் வலிய வந்ததும் தாம் உண்மையில் இந்த உலகத்தில் இருக்கிறோமோ என்ற பிரமை ரஹ்மத்துல்லாவுக்கு உண்டாயிற்று! ஜில்லா முழுவதும் 'தர்பார்' நடத்தும் கலெக்டர் எங்கே? அவர் முன்னால் சலாம்

ஹலீமா பேசினாள்

போட்டுக் கொண்டு சேவகம் புரியும் ரெவின்யூ இன்ஸ்பெக்டரான தான் எங்கே? ரஹ்மத்துல்லாவுக்கு தலை கிறுகிறுத்தது. யாவும் கனவுபோல் தோன்றிற்று. அவ்வளவு பெரிய இடத்தில் சம்பந்தம் வைத்துக் கொள்வதை நினைத்ததும் அவருக்கு ஒரு சிறிது அச்சம் கூட உண்டாயிற்று.

மார்போடு மார்பு தழுவி 'போஸா' கொடுத்துக் கொண்டு, "வருகின்ற ஷவ்வால் மாதம் பிறை இருபது முதல் நாம் சம்பந்திகளாகப் போகிறோம் ரஹ்மத்துல்லா ஸாஹிப்!'' என்று ஆனந்தத்துடன் நவின்று கலெக்டர் வஹாப் விடை பெற்றுக் கொண்ட போது, ரஹ்மத்துலாவின் காலும், கையும் வெட வெடவென்று அடித்துக் கொண்டன!

பண்ருட்டியில் கலெக்டர் வஹாப் 'காம்ப்' போன போது ரஹ்மத்துல்லாவை சந்திக்கும் சந்தர்ப்பம் உண்டாயிற்று. வழக்கத்துக்கு மாறாக வஹாப் தம் துணைவி ஆமீனுவை தம்முடன் அழைத்துக் கொண்டு அவ்வூருக்குச் சென்றிருந்தார். அந்தக் காலத்து 'மாமூல்' வழக்கப்படி ரெவின்யூ இன்ஸ்பெக்டராக இருந்த ரஹ்மத்துல்லா தம் வீட்டிலே தயாரித்த சாப்பாட்டையும், ருசிகரமான பதார்த்தங்களையும் மூன்று வேளைகளும் கலெக்டர் பங்களாவிற்கு அனுப்பிவரத் தவறவில்லை. ஒரு டஜன் கோழிகள் ஒரே வாரத்தில் 'கப்சிப்' என்று மறைந்தன!

ரஹ்மத்துல்லாவின் நேர்மையும், பணிவும், அன்பும் வஹாப் ஸாஹிபை மாத்திரமல்ல; அவர் வாழ்க்கைத் துணைவியையும் கவர்ந்தன.

"ஸாஹேப்! தங்கள் பேகம் ஸாஹிபாவை நேரில் பார்த்து மரியாதையைத் தெரிவிக்க என்வீட்டார் இங்கே வர விரும்புகிறார்கள்'' என்று கலெக்டரிடம் தம் விருப்பத்தை நரூஸாக வெளியிட்டார் ரஹ்மத்துல்லா.

"அதெற்கென்ன. அழைத்துவாருங்களேன்,'' என்றாள் மகிழ்ச்சியுடன் அந்த கலெக்டரின் மனைவி. இந்த ஒரு சுப நிகழ்ச்சி தான் ரஹ்மத்துலாவின் வாழ்க்கையில் ஒரு திருப்பத்தைக் கொடுத்தது என்று சொல்லிவிடவேண்டும். மறுநாள் சாயங்காலமே தம் இல்லக்கிழத்தியையும் மகளையும் படுதாக் கள்கட்டப்பட்ட மாட்டு வண்டியில் ஏற்றிக் கொண்டு கலெக்டரின் பங்களாவிற்கு அழைத்துச் சென்றார் ரஹ்மத்துல்லா. அந்த ரெவின்யூ இன்ஸ்பெக்டர் பெற்றெடுத்த தங்கப் பதுமையைக் கண்டதும் அப்படியே மலைத்துப் போனாள் ஆமினா. எழிலே உருவெடுத்தாள் போல் தம் முன் நிற்கும் அந்த வடிவழகி ஹலீமாவை பாதாதி கேசம் வரை ஏற இறங்கப் பார்த்ததும் அவளுடைய நெஞ்சம் நெகிழ்ந்தது; பாச உணர்ச்சி இதயத்தில் சுரந்தது. இரண்டு வாரங்கள் அச்சிறுமியுடன் பழகுவதற்குள் ஆமினாவின் உள்ளத்தையே ஹலீமா பறித்துக் கொண்

டாள். "அந்த குணவதியை—பொறுமையின் நல்லணியை ஏழை வீட்டில் பிறந்த அந்த ஏந்திழையை தன் மருமகளாக ஏன் ஏற்றுக்கொள்ளக் கூடாது?" என்ற விசித்திர எண்ணம் அக்கலெக்டர் மனைவியின் நெஞ்சில் குமிழியிடலாயிற்று!

'காம்ப்'பை முடித்துக்கொண்டு கடலூருக்குத் திரும்பிய பின் தன் மனத்தின் அடித்தளத்தில் பொதிந்து கிடந்த ஆசையை தன் கொழுநனியிடம் ஆமினா வெளியிட்டதும் வஹாப் ஸாஹிபுக்குத் தூக்கி வாரிப் போட்டது! தாயின் எண்ணத்தை அறிந்த இரு பெண் மக்களும் மதுவருந்திய காட்டெருமைகள்போல் வீறுகொண்டெழுந்தார்கள்.

"என்னம்மா...உங்களுக்குப் பித்துப் பிடித்து விட்டதா! நம் அந்தஸ்து என்ன? குடும்ப நிலை என்ன? அந்தக் குடும்பத்தோடு கல்யாண சம்பந்தம் வைத்துக்கொள்ளவா நினைத்தீர்கள்? தம்பியின் வாழ்வையே பாழ்படுத்தவா நாம் பிறந்தோம்?" என்று இருவரும் ஒரு குரலாக தங்கள் எதிர்ப்பை தாயிடம் காட்டினார்கள். பிடிவாதக் காரியான ஆமினா துளிக்கூட விட்டுக் கொடுத்ததாகக் காணோம்! உண்மையைச் சொல்லப் போனால் புத்திரிகளின் வற்புறுத்தலும் எதிர்ப்பும் அதிகரிக்க அதிகரிக்க, ஆமினாவின் 'ஜபர்தஸ்தும்; பிடிவாதமும் நீர் ஊற்றிய சிமெண்ட்போல் இறுகிக் கொண்டே வந்தது.

ஜில்லாவில் 'இரும்புத்தலை' என்று கியாதி பெற்ற வஹாப் சாஹேப் வீட்டிலோ மூச்சு விடமாட்டார். தாய்க்கும் சேய்களுக்கும் நிகழும் போராட்டத்தில் தமது குல்லாவைக் காட்டாது ஒதுங்கியே நின்றார் அவர். கடைசி மகனாகப் பிறந்த கரீம் பிறவியிலே ஒரு சாது. அப்பாவி. படிப்பில் சூரப்புலியாகத் திகழ்ந்தாலும் பெற்றோரின் முன் ஓர் ஆடுபோல் காட்சியளித்தார். அவர்களுடைய வார்த்தையை அவன் ஒன்றுமே மீறினதில்லை. சகோதரிகளின் கிடுக்கித் தாக்குதல் கரீமை அசைத்துவிடவில்லை. தம்பியிடமும் தங்கள் "பாச்சா" பலிக்காததைக் கண்டு வேதனை அடைந்த சகோதரிகள் உலக வழக்கப்படி தங்கள் கணவன்மார்களுடன் பெட்டி படுக்கையோடு அவ்வீட்டை விட்டு 'முறைத்துக் கொண்டு' கிளம்பி விட்டார்கள்.

அன்பார்ந்த பாய்மார்களே! விட்டது கவலை என்று எண்ணி விடாதீர்கள்!

ஷவ்வால் மாதம் விரைந்து வந்து கொண்டிருந்தது. தம்மால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு பணத்தையும் கொட்டி மகளின் கல்யாணத்தை கோலாகலமாக நடத்தி விட வேண்டும் என்ற ஆசை அந்த ரெவின்யூ இன்ஸ்பெக்டர் ரஹ்மத்துல்லாவுக்கு உண்டாயிற்று. தம் சொந்த வீட்டையே மூவாயிரம் ரூபாய்க்கு விற்றுவிட்டார். 'பண்ட்' பணத்தில் பெரும் தொகையைப் பெற்றுக் கொள்ள வழி செய்துகொண்டார். தம் நண்பர் கடோத்கஜ நாயுடுவிடம் 'நோட்' எழுதி ஐந்து பச்சை நோட்களை எளிதில் பெற்றுக் கொண்டார். மகளின் செவிகளை அலங்கரிக்க புஷ்பராகக் கற்கள் பதித்த ஜிமிக்கிகளையும், கழுத்திற்கு 'சவுன்ஸரா' மாலை, 'கல்ஸர்' மாலையும், மூக்குக்கு பேஸர் நத்தும், புல்லாக்கும் குழலுக்கு ராக்கடியும், கரங்களுக்கு கங்கன், பஹுஞ்ச்சி வளையல்களையும், பாதங்களுக்கு பட்டை கொலுசுகளும் கோணக் காப்புகளும் செய்து தரும்படி பொற்கொல்லரிடம் பொன்னும் வெள்ளியும் கொடுத்துவிட்டார். புதுச்சேரிக்குப் போய் பனாரஸி புடவையையும், 'குல்பதன்' பாவாடையையும், வண்ணத் தாவணிகளையும், ஜரிகை வைத்துத் தைத்த சோலிகளையும், அத்தர் புட்டிகளையும் வாங்கி வந்தார். இந்த களேபரத்தில் நிக்காஹ் விருந்துக்காக தேவையான பலசரக்கு சாமான்களை வாங்கும்போது அப்படியே நன்றாக கொழுத்த குறிஞ்சிப்பாடி செம்மறியாடுகள் இரண்டை ஓட்டிக் கொண்டு ஊருக்குத் திரும்பினார்!

புதுச்சேரி பாண்டு ஜாம் ஜாமென்று முழங்க, ஆற்காடு நௌபத் வாத்தியங்கள் சக்கைப்போடுபோட செல்வி ஹலீமா பேகத்துக்கும் கரீம் ஸாஹிபுக்கும் அல்லாஹுத்த ஆலாவின் பேரருளால் நிக்காஹ் நிறைவேறியது.

இந்த மங்களகரமான வைபவத்தின் துயரம் தோய்ந்த நிரல் என்னவென்றால் மாப்பிள்ளையின் இரு சகோதரிகளும் மற்றும் சில உறவினர்களும் கல்யாண கூடத்தில் தலைகாட்டாமல் போனதுதான்.

மருமகளை நிரந்தரமாக தன் வீட்டிலே வைத்துக்கொள்ள ஏற்பாடுகளைச் செய்யலானாள் ஆமினா. அவளுடைய வருகைதான் தன் மகன் எம். ஏ. பரீக்ஷையில் முதலாவதாகத் தேறினதற்குக் காரணம் என்று நினைந்து பூரிப்படைந்தாள்.

கரீமை நல்ல உத்தியோகத்தில் அமர்த்துவதற்கு வஹாப் பெரும் முயற்சிகள் செய்து வந்தும் ஒரு வருஷம் உருண்டோடி விட்டது. இதற்கிடையில் ஐ. ஸி. எஸ். பரீக்ஷைக்கு கரீம் உட்கார்ந்த சமயத்தில் ரத்த அழுத்த வியாதியின் காரணத்தால், ஆமினா படுத்த படுக்கையாகக் கிடந்தாள். தாயின் மோசமான தேக நிலையைக் கேள்விப்பட்டு புத்திரிகள் ஓடோடி வந்தார்கள். இரவும் பகலும் மாமியாருக்குப் பணிவிடைகள் புரிந்து



வந்த அந்த அப்பாவிப் பெண் ஹலீமாவின் மீது நாத்தனார்களுக்கு இருந்த வெறுப்பும் சினமும் சிறிதும் தணிந்ததாகக் காணோம்! வேண்டா விருப்பத்துடன் அந்த 'வாயில்லாப் பூச்சி'யுடன் அவர்களிருவரும் பழகினார்கள். சந்தர்ப்பங்கள் கிடைத்த போதெல்லாம் குதர்க்கமாகவும், சிலேடையாகவும் 'பொடி வைத்து' தங்கள் 'ஓட்டை ஓடிசல்' ஆங்கிலத்தில் பேசிக்கொண்டு அந்த 'பேசா மங்கை'யின் பிஞ்சு உள்ளத்தைப் புண்படுத்தினார்கள். எதிர்த்து ஒரு வார்த்தை கூடப் பேசாது மூலை முடுக்குகளில் நின்று கண்ணீர் விட்ட வண்ணம் நாட்களைக் கழித்து வந்தாள் ஹலீமா. அவளுக்குப் பக்கத் துணையாக தூண்போலிருந்த ஆமினா தன் மணாளனிடம் ஒரு நாள் இறுதி விடை பெற்றுக் கொண்டாள்.

மனைவியின் மறைவுக்குப் பின் கலெக்டர் வஹாபின் பங்களா வெறிச் சோடிக் கிடந்தது. அல்லும் பகலும் மாமியாருக்குச் சேவகம் செய்து வந்த காரணத்தால் ஹலீமாவின் உடல் நலம் குன்றிவிடவே அவளை பண்ருட்டியிலுள்ள தம் சம்பந்தி வீட்டுக்கு அனுப்பி விட்டார் வஹாப். அந்தச் சமயத்தில் தான் கரீம் ஐ.ஸி.எஸ். பரீக்ஷை தேறிவிட்டான் என்ற 'சுப செய்தி'யை பத்திரிகைகள் பறை சாற்றின.

அன்றைக்கு ஒன்றுமில்லாமல் தம் பீவியின் பிரிவு வஹாபை வாட்டி வதைத்தது. அவர் அறிவு சூன்யத்தில் ஆழ்ந்திருந்தது. நெற்றிச் சுருக்கங்கள் நெளிந்தாடின. அங்கங்கள் உணர்வை இழந்தன. நயனங்கள் பனித்தன. அந்தச் சமயத்தில் தான் அவர் அருமை மகள்களான குர்ஷிதும், மைமூனாவும் அவர் முன் காட்சியளித்தார்கள்.

"பாவாஜான்...நாங்கள் ஊருக்குக் கிளம்பும் நாள் நெருங்குகிறது." என்று பேச்சைத் துவக்கினாள் மூத்த மகள் குர்ஷித்.

"சுகமாய் போய் குடும்பங்களை கவனியுங்கள் அம்மா. இந்தக் கட்டை எஞ்சி நிற்கும் நாட்களை எப்படியாவது ஓட்டிவிடும்" என்றார் வஹாப். அவர் குரலில் வேதனை படிந்திருந்தது.

"பாவாஜான். உங்களைக் கவனித்துக் கொள்ள யாருமில்லையே என்ற கவலை தான் என்னை வாட்டுது" என்றாள் இளையவள் மைமூனா.

"முதலில் ஆண்டவன் இருக்கிருன். ஹலீமா இருக்கும் போது எனக்கென்ன குறை?"—

"அந்த நோயாளியா?"—இரு பெண்களும் ஒரே குரலில் இந்தக் கேள்வியை வியப்புடன் எழுப்பினதும் வஹாப் திகைத்து விட்டார்.

"ஏன் இப்படிப் பேசுறீங்க?" என்ருர், கம்மிய குரலில், இலவம் பஞ்சுபோன்ற தாடியை நெருடிக் கொண்டு.

"அவங்களுக்கு புற்றுநோய் வியாதி என்று கேள்விப்பட்டோம். அது குணமடைய எத்தனை வருஷங்கள் ஆகுமோ? ஒன்று மாத்திரம் நிச்சயம். இனிமேல் குடும்ப வாழ்க்கை நடத்த அவர்களால் முடியாது. தவிர லாயக்குமில்லே. ஒரே தம்பியின் 'நஸீப்' இப்படியா போக வேண்டும் என்று நாங்கள் விடாத கண்ணீர் கொஞ்ச நஞ்சமில்லே"—கண்களைக் கசக்கினுள் குர்ஷித்.

வஹாப் ஸாஹிபுக்கு ஒன்றும் தோன்றவில்லே. வலைத் தொப்பியை வெடுக்கென்று எடுப்பதும் பிறகு அதைத் திணித்துக் கொள்வதுமாக தம் மக்களை உற்று நோக்கினுர்.

"ஒரு விஷயத்தை உங்களிடம் சொல்லி, உங்கள்முடிவைத்தெரிந்து கொண்ட பிறகு தான் நாங்கள் புறப்படத் தீர்மானித்திருக்கிறேம்."—என்ருள் மைமூனு நிதானமாக.

"சொல்லம்மா."

"நம் குடும்பத்துக்குத் தூண் போலிருப்பவன் தம்பி கரீம்தான். அவன் படித்த படிப்புக்கும் அடைந்த பதவிக்கும் கைம்மாருக பெற்ரேர்களும் கூடப் பிறந்தவர்களும் துரோகம் செய்யலாமா?" என்று குர்ஷித் ஆரம்பித்ததும் வஹாப் ஒரு கணம் ஸ்தம்பித்து விட்டார்.

"என்ன சொன்னே?"—

"பெண் மக்களாகிய எங்களுக்கு நீங்களும் அம்மாவும் எவ்வளவோ செய்தீங்க. அதுக்கு உயிருள்ள வரை, நாங்கள் நன்றியுள்ளவர்களாகதான் இருப்போம் பாவா ஜான்! எங்களுக்கு நல்ல கல்வி புகட்டி, பெரிய பெரிய ஆபீஸர்களுக்கு நிக்காஹ் செய்து வைத்தீர்கள். ஆனல் தம்பியின் வாழ்வு பாழாப்போச்சே என்று நினைத்துத்தான் நெஞ்சு வெடித்துவிடும் போலிருக்கிறது" என்ருள் மைமூனு பதற்றத்துடன், கைகளை உதறிக் கொண்டு.

"எதைக் குறிப்பிடுறே?" என்ருர் வஹாப் பீதியுடன்.

"கரீமின் வாழ்வுக்கு ஒளியை அள்ளி வீச குத்து விளக்காக நீங்கள் கொண்டுவந்த அந்த அதிர்ஷ்டசாலி மருமகள்தான்!" என்ருள் குர்ஷித் ஏளனமாக.

"அவளுக்கென்ன வந்தது?"—என்ருர் வஹாப். வெறுப்பும் எரிச்சலும் அவர் அதரங்களில் கிளர்ந்து மறைந்தன.

"ஒரு ஏ. பி. ஸி. படிப்புக்கூடத் தெரியாத முட்டாள் ஒருத்தியை கரீமின் கழுத்தில் கட்டிவிட்டு நாம் வேடிக்கை பார்த்தோமே!" —நெற்றியில் ஓங்கி அடித்துக்கொண்டாள் குர்ஷித்.

"அது உன் தம்பியின் விதி!" என்ருர் வஹாப்.

"நாஸீபின் மீது பழியைப் போட்டு விட்டால் குற்றவாளிகளாகிய நாம் தப்பிவிட முடியுமா?"

டிரேட் மார்க்
பேடன்ட்
&
டிசைன்
ரிஜிஸ்டர்

விவரத்திற்கு:

ஐ. ஸி. ஏஜன்ஸி
234, நாயக்கர் புதுத் தெரு,
மதுரை.

"உன் அம்மா செஞ்சவேலை அது. அவளுக்கு அந்தப் பெண் பிடித்து விட்டது.''-பெற்றவள் நினைவாவது பெண்களின் பேச்சை நிறுத்தும் என்று எண்ணினார்.

"அதற்காக? ஒரு தீராத நோயை யுடையவளை மருமகளாக வலுவில் ஏற்றுக் கொள்வதா?''

"உன் தாய் உசுரோடு இருந்த காலத்தில் நீங்கள் தடைபோட்டுத் தடுத்திருக்க வேண்டும்''

"அந்தக்காலத்தில் எதிர்க்காமலா இருந்தோம்? ஒரே தம்பியின் 'நிக்காஹ்' நடந்த போது அந்தப் பந்தலில் நாங்கள் தலையைக் காட்டல் லியே!'' என்றாள் மைமூனா ஆவே சத்துடன்.

"சரி இப்போ என்னதான் செய்ய நீங்கள் நினைச்சிருக்கீங்க? பொறுமையிழந்த வஹாப் வலைத் தொப்பியைக் கழற்றி மேஜைமீது ஓங்கி அடித்தார். ஆத்திரம் சொற்களில் கொந்தளித்தது.

"கரீம் பெரிய பதவிக்கு வந்து விட்டான். இனிமேல் டி. எஸ். பி. டி. டி. எஸ்., ஜட்ஜ் போன்ற ஆபீஸர்களுடன் அவன் பழகும்படி நேரிடப்போகிறது. அந்த ஆபீஸர் களுடைய மனைவிமார்கள் படித்த நாரீமணிகளாகவேதான் இருப்பார் கள். அவர்களுக்கு நடுவில் இந்த உதவாக்கரையை வைத்துக் கொண்டு எப்படித்தான் அவன் சமாளிக்கப் போகிறானோ! அல் லாஹ்வே......!'' அங்காலாய்த்தாள் மூத்தவள்.

"சரி...இப்போ என்னை என்ன செய்யச் சொல்றே குர்ஷித்?''

"உங்களுக்கே தெரியுமே!''

"எனக்கா? ஒரே குழப்பம் தான் எனக்குத் தெரியுது''—விழிகளைச் சுழற்றி சிரத்தைக் கவிழ்த்தார் வஹாப்.

"நன்றாகப் படித்த நம் அந்தஸ்த் துக்குத் தகுந்த நல்ல இடத்துப் பெண்ணை தம்பியிடம் ஒப்படைத் தால் தான் நாம் செய்துவிட்ட பாவம் ஒருவாறு தொலையும்'' என்று குர்ஷித் சொன்னதும் வஹா பின் நெஞ்சு பகீரென்றது. உடல் ஒடுங்கி விட்டது.

"என்ன...இன்னொருத்தியை உன் தம்பியின் தலையில் கட்டும்படி யோசனையா சொல்றீங்க?''—வஹா பின் சொற்கள் குளறியபடி வெளியே வந்தன.

"வேறு வழி ஒன்றும் தெரிய வில்லை''

குடும்பத்துக்கு ஒளி தந்த அந்தத் திரியை அணைக்கவா சொல்றீங்க?

"என் அருமைப் புத்திரிகளே! என்ன பாதகமான பேச்சு''—பிரலாபித்தார் வஹாப், படபடத்த நெஞ்சுடன்.

மலாயா, சிங்கப்பூர், பர்மா, சிலோன் போன்ற இடங்களில் ஏஜெண்டுகள் தேவை.

"அது பாதகமாக இராமல் இருப்பதற்கு வழி வகைகள் இல்லாமலில்லை"—என்றாள் மைமூனா. மூத்தவள் சற்று இளைப்பார அவகாசம் கொடுக்க எண்ணி தானே பதிலுரைத்தாள் அவள்!

"எதைக் குறிப்பிடுறே?"—

"தலாக்"

"யாருக்கு"—ஸ்தம்பித்து விட்டார் கிழவர்.

"ஹலீமாவுக்குத்தான்"

"அடி பாவிப் பெண்களே! வீட்டிற்கு வந்தவளை விவாகரத்துக் கொடுத்து விரட்டவா உபதேசம் செய்கிறீர்கள்?"—ஓலமிட்டார் கலெக்டர் ஸாஹிப். பேரிடிகள் அனைத்தும் ஒரே சமயத்தில் தன் மீது வீழ்ந்தது போன்ற பிரமை அவருக்கு உண்டாயிற்று.

"விவாக ரத்து ஒன்று தான் வழி"—என்றாள் குர்ஷித் தீர்மானமாக.

"வேண்டாம்......வேண்டவே வேண்டாம்......"

உங்கள் தம்பியைப் பெற்றெடுத்தவன் இந்தக் கிழவன்தான். அவன் சுபிட்சம் எனக்குத் தெரியும். அந்த அப்பாவிப் பையனும் உங்கள் நச்சுப் பேச்சைக் கேட்டுத் துடி துடிப்பான்"—வஹாபின் சித்தம் துடித்தது. நெஞ்சு படபடத்தது.

"கரீமை நாங்கள் சரிக்கட்டிக் கொள்கிறோம். காற்றடிக்கும் திசையில் அவன் குல்லா சாய்வது எங்களுக்குத் தெரியாதா?"

"என் அருமை மகனே! அப்படிப் பேசி விடாதே. அந்த 'மர்ஹூம்'—உங்கள் அன்னை—அவள் ஆவிக்கு நிம்மதி இருக்காது. அந்த புண்ணியவதி ஆசையுடன் கொண்டு வந்த மருமகளாச்சே!"—மன்றாடினார் வஹாப்.

"அம்மா வாழ்ந்த காலத்திலே அவர்கள் ஆசையும் பூர்த்தியாயிடுச்சி. நாசமாகிக்கொண்டிருக்கும் தம்பியின் வாழ்வுக்கு என்ன ஜவாப் இப்போது நீங்க சொல்றீங்க? என்று ஆர்ப்பரித்தாள் குர்ஷித் ஆவேசத்துடன்.

"என்னைக் கொல்லாதீங்க. என்னைக் கொல்லாதீங்க—வஹாப் உட்கார்ந்திருந்த கோலம் பார்க்கப் பரிதாபகரமாயிருந்தது!

"தந்தையிடம் முறையிடாமல் வேறு யாரிடம் போய் முட்டிக் கொள்வது? கௌரவமும் கண்யமும் கொண்ட நம் குடும்பத்தில் அமைதியும், சந்தோஷமும், ஒற்றுமையும் நிலைத்திருக்க வேண்டுமானால் நாங்கள் உங்கள் காலடிகளில் வீழ்ந்து மன்றாடிக் கேட்கும் இந்த வேண்டுதலை நீங்கள் உதறித்தள்ளாதீர்கள். 'மெஹர்பானி' காட்டுங்கள் பாவா



Sri Krishna Iron Works

Post Box No. 103

MADURAI



கட்டிடங்களுக்கு வேண்டிய

ஸ்பிரிங் கதவுகள், டிஸைன் ஜன்னல்கள், கண்ணாடி ஜன்னல்கள் காம்பவுண்டு கேட்டுகள், டிரஸ்கள் முதலியன தயார்செய்து கொடுக்கிறோம். விவரங்களுக்கு எழுதுங்கள்.

Telephone: 725 :: Telegrams: 'IRONGATES'

ஜான்''—மிக்க உணர்ச்சியுடன் பேசினுள் மூத்த மகள்.

''அடுத்த வாரம் கரீம் ஊருக்குத் திரும்புகிறுன். அவனுக்கு ஏற்ற நல்ல பெண்ணெருத்தியை நான் ஏற்கெனவே தேர்ந்தெடுத்துவிட்டேன்!''

''யா அல்லாஹ்......!''

கதறிவிட்டார் வஹாப். நழுவிய கைலியை இறுகக் கட்டிக்கொண்டார்.

''போலீஸ் சூப்ரிண்டெண்டின் மகள். பி. ஏ. படித்தவள். கிளி போல இருக்கிறுள். நம் அந்தஸ்த்துக்குத் தகுந்த இடம். நீங்கள் சம்மதித்துத்தான் ஆகவேண்டும்''-வற்புறுத்திவிட்டு தகப்பனை முறைத்துப் பார்த்தாள் குர்ஷித்.

செயலற்று அப்படியே நாற்காலியில் சாய்ந்துவிட்டார் வஹாப் ஸாஹிப்.

ஒரு வாரம் கழிந்தது. கரீம் வந்து சேர்ந்தான். 'போர் ஓய்வு' நிலவிய இல்லத்தில் மறுபடி சமர் உக்ரத்துடன் தொடங்கிற்று. இந்த 'உள் வீட்டுப் போரில்' சிக்கிய கரீம் தத்தளித்துப் போனுன். என்னதான் எம். ஏ. படித்து, ஐ. ஸி. எஸ். தேறியும் அந்த இளைஞன் ஓர் கடைந்தெடுத்த அப்பாவிதான்! இளகிய மனம் படைத்த சாந்த சொரூபியான அந்தக் 'கோழையை' இரு சகோதரிகளும் தங்கள் நாக்கு வன்மையாலும் கண்ணீர் மூலமாகவும் தங்கள் திட்டத்திற்கு நிபந்தனையின்றிச் சரணடையச் செய்து விட்டார்கள்!

சூழ்நிலை சதி செய்தவாறு வஹாப் ஸாஹிப் தம் சம்பந்திக்கு வரைந்த கடிதத்தை மூத்த மகள் தானே எடுத்துச் சென்று தபால் பெட்டியில் சேர்த்தாள்.

தம் சம்பந்தியிடமிருந்து வந்த பயங்கரச் செய்தியை படித்தவுடன் ரெவின்யூ இன்ஸ்பெக்டர் ரஹ்மத்துல்லாவின் உதடுகளும் நாக்கும் உலர்ந்து விட்டன. மதிமருண்டு போன அந்த வயோதிகருக்குத் தான் இருண்ட பாதாளத்தில் உருண்டு வீழ்ந்ததுபோல் பிரமை ஏற்பட்டது. அந்த ஏழையின் மாசற்ற உள்ளம் துடிதுடித்தது. அந்தக் கொடூரச் செய்தியை தன் மகளிடம் எப்படிச் சொல்வது என்று அவர் தத்தளித்துக் கொண்டிருந்த வேளையில் ஹலீமா நின்றுகொண்டிருந்ததைப் பார்த்ததும் அவர் உயிர் நெஞ்சக் கூடைவிட்டு விடுபடத் தயாராகி விட்டது!

''உங்கள் உடம்புக்கு என்ன வந்தது பாவாஜான்? வெயிலில் ஏன் அலைகிறீங்க?'' என்று பாசத்துடன் கடிந்தாள் ஹலீமா.

''எனக்கு ஒன்றுமில்லை அம்மா. இந்தக் கேடுகெட்ட துனியாவுக்குத்தான் 'கியாமத்' வந்துவிட்டது'' என்ருர் ரஹ்மத்துல்லா மனமொடிந்து.

''நடந்ததைக் சொல்லுங்கோ பாவாஜான்'' என்று கெஞ்சும் பாவனையில் கேட்டாள் அப்பேதைப் பெண்.

''அந்த உத்தமர்—''

''யார்?''

''இந்தப் பாவிக்கு கிடைத்த சம்பந்தி''-ரஹ்மத்துல்லாவின் அடிவயிறு கலங்கியது; உள்ளம் குழம்பியது.

''என்ன நடந்தது?''— ஹலீமாவின் நெஞ்சில் பீதி புரையோடிற்று.

''மருமகளான உன்னை உயிரோடு புதைக்க குழி தோண்டி வைத்து விட்டான்''—இமைகள் இறுக மூடியிருந்தும், அவற்றை உடைத்துக் கொண்டு பீறிட்டெழுந்தது கண்ணீர். கவலையின் கோர நிழல் அவர் முகத்தில் தாண்டவமாடிற்று. தொடர்ந்தார், ஒரு திக்கற்ற அபலையின் வாழ்க்கையைப் பாழாக்கிவிட அந்த இரக்கமற்றவன் வழி செய்து விட்டான் அம்மா! என்று அலறினுர்.

(அடுத்த இதழில் நிறைவுறும்)

நமக்கு வடக்கே.....

ஆங்கிலேயன் இந்திய மண்ணைப் பூரணமாக அடிமைப் படுத்தி ஆளுவதற்கு முன்பு, இந்திய சரித்திரத்திலே மகோன்னத செல்வாக்கு பெற்று அரசு செலுத்தி ஆண்ட மன்னர்களின் பரம்பரை ''முகலாய வம்சம்''. தென்னாட்டைப் பொறுத்த வரையிலே, முகலாய வம்சம் தன் ஆட்சியை நிலைநிறுத்த முடியாமற் போனாலும், ஹைதராபாத் வரையிலும் முகலாயர்கள் ஆதிக்கம் எட்டிப் பார்த்ததுண்டு.

என்றாலும் வட இந்தியாவைப் பொறுத்தவரை இஸ்லாமிய ஆட்சி அதை எவ்வளவு சீரும் சிறப்புமிக்கதாக மிளிர வைத்திருந்தது என்பதையெல்லாம் நாம் மறந்துவருகிற நிலையிலே—நினைவிலே கொண்டு, மற்றவர்களுக்கும் தெரிய வைக்கும் பொறுப்பான ஒரு பணியை மேற்கொள்ளும் முறையிலே, அவற்றையெல்லாம் பார்க்கக்கூடிய ஒரு வாய்ப்பு சென்ற ஆண்டு எனக்குக் கிட்டிற்று.

பிரயாணக் கட்டுரை

★

வலங்கைமான் அப்துல்லாஹ்

தெற்கே ஆற்காடு நவாபு முதல் வடக்கே காசுமீர மக்கள் வரையிலே ஆண்டுவந்த பரந்த பூமியிலே எங்கு நோக்கினும், இஸ்லாமிய கலை விற்பன்னர்களின், சிற்ப ஓவியங்களின் திறமைகளை வெளிப்படுத்திக் காட்டும் சிறப்புமிக்க கட்டிடங்களும், நீரூற்றுப் பூங்காக்களும், கோட்டை கொத்தளங்களும், வானளாவிய மனராக்களும், அகழ் கொண்ட அரண்களும், மலையைக் குடைந்து குடைந்து கட்டிய கற்கோட்டைகளும், நினைவு மஹல்களும் நிறைந்து இருப்பதைக் கண்டு, வியந்தும் மகிழ்ந்தும் வந்தேன்.

வியந்து மகிழ்கிற அதே நேரத்திலே தான் வேதனையின் உச்ச நிலையையும் அடைந்தேன். இவ்வளவு பேரும் புகழும் பெற்று, பல நூற்றாண்டுகட்குப் பின்பும் கண்டோர் வியக்கும் வண்ணம் ஆட்சியின் நினைவுகளை நாடெங்கிலும் எழுப்பிக் காட்டும் வன்மை பெற்றிருந்த முகலாயர்களின் ஆட்சி ஏன் அழிந்து பட்டது?

ஆட்சி காலங்களின், ஆட்சிசெலுத்திய மன்னர்களின் மகோன்னதப் பெருமைகளை பறை சாற்றிக்காட்ட மட்டுமல்ல, ஒவ்வொரு மன்னரும் தமக்குள்ள கலைத்திறமைகளைப் போட்டி போட்டுக் காட்டி மக்களைத் திகைக்க வைத்துத் திருப்திப்பட வேண்டும் என்று முயன்றிருக்கிறார் என்பதையும் அறிந்தேன். அந்தந்த மன்னர் ஆண்ட காலங்களை பிற்கால மக்கள் சரியாகக் கணித்துக்கொள்ள வேண்டும் என்றோ என்னவோ ஒவ்வொரு மன்னர் ஆண்டபோதும் அவரவர் பெயர் நிலைத்து நிற்குமாறு நினைவுச் சின்னங்களை நிறுவிச் சென்றிருக்கிறார். தன் அரசு பெருமைப்பட வாழ்ந்தது என்ற நினைவைத் தன் சந்ததியார்கட்குக் காட்ட முயன்ற அவர்கள், தங்களின் பரம்பரை இந்திய மண்ணில் நீடூழிகாலம் இருக்க வேண்டும் என்றே எண்ணியிருந்திருக்கிறார்கள். ஆனால் அந்த ஆசைக் கனவுகள் யாவும் ஏன் கன

காலமானார்

இராஜகிரி பெரியார் எம். எ. முகம்மது ஹுசைன் அவர்கள் 15-12-57 ஞாயிறன்று இறைவனளவில் சேர்ந்தார்கள் (இன்னு லில்லாஹி) என்பதை மிக வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

அன்னார் இவ்வூர் முஸ்லிம் லீக், வாசகசாலை, நூல் நிலையம், நேயர்கள் மன்றம், பெரிய பள்ளி பரிபாலன சபை, வர்த்தக சங்கம் ஆகிய நிறுவனங்களை நிர்மாணிக்க காரணகர்த்தாவாக இருந்தார்கள். பெரிய பள்ளி கட்டுவதற்காக மலேயா சென்று பொருள் திரட்டி வந்து சேவை செய்தவர்கள். இராஜகிரியின் எல்லாப் பொதுப் பணிகளிலும் ஈடுபட்டு இருபது ஆண்டு காலமாக அளப்பரிய சேவை செய்தவர்கள்.

அவர்கள் பிரிவால் வருந்தும் குடும்பத்தினருக்கும், நேயர்களுக்கும், பொறுமையை அளிக்கவும் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் அல்லாஹ்விடம் பிரார்த்திப்போமாகவும்.

என். பி. எம். ஹுஸைன்,
கூட்டுச் செயலாளர்.
நேயர்கள் மன்றம், இராஜகிரி.

வாகவே கரைந்து போயின?

இவற்றையெல்லாம் எண்ணுகிற வேளையிலே எனக்கு ஏற்பட்ட மனவேதனை கூற இயலாது. மாட மாளிகைகளையும், வானத்தை முட்டி நிற்கிற கோட்டை மினார்களையும், கருங்கல்லிலே சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய அழகு மிளிரும் அரண்மனைகளையும் கட்டியாண்ட மன்னர்கள் எல்லாம் இன்று எங்கே? எண்ணி எண்ணிப் பார்த்தேன். ஏதோ ஒரு வகையான முடிவைக் கண்டேன்.

ஸிராஜுத்தௌலாவை "பிளாசி" யுத்தத்தில் சந்தித்தான் ராபர்ட் கிளைவ். பீரங்கிப் படைகளைக் களத்திலே பெருமளவில் கொண்டு நிறுத்தியிருந்த இந்திய ராணுவ வீரர்களைக்கொண்டே எதிர்த்து புறமுதுகோடிடச் செய்தான் ஸிராஜ். என்றாலும் வெற்றி கிட்டுகிற வேளையிலே ஏமாந்தான். அதுகூட அல்ல— நயவஞ்சகன் மீர் ஜாபரால் காட்டிக் கொடுக்கப்பட்டான். மீர்ஜாபரைப் போன்ற மிலேச்சர்களும் இஸ்லாமிய ஆட்சியை இந்தியாவிலேயே ஒழிக்க உதவியிருக்கிறார்கள். பதவிக்கும், பணத்துக்கும் இச்சைப்பட்டு நன்றிகொன்ற துரோகிகளும் நம்மிடையே வாழ்ந்து இருந்திருக்கிறார்களே என்று எண்ணும் பொழுது நெஞ்சு வெடித்துவிடும் போலிருந்தது.

அரசர்கள் அழிந்துபட்டாலும் அவர்களின் பெருமை கூறி நிற்கும் கலைக் கருவூலங்கள் சரித்திரச் சாலையிலே காலம் என்னும் சேவகன் ஏற்றி வைக்கும் தூண்டா மணி விளக்குகள் அல்லவா?

இவ்வாறு புகழ்பெற்ற நகரங்களில் ஒன்றுதான் ஆலம்கீர்பாதுஷா ஔரங்கஜேப் மன்னரின் பெயர் கொண்ட அவ்ரங்காபாத் என்ற நகரம்.

சரியாகக் காலை ஆறு மணிக்கு அவுரங்காபாத் நகரின் ரயிலடியில் இறங்கினேன். 'தக்காணத்து டெல்லி' என்று புகழப்படுகிற இப்பட்டினம் ஒரு காலத்தில் பதினைந்து இலட்சம் மக்கள் சிறப்பாக வாழ்ந்த செல்வத் திரு நகராக இருந்தது. ஆனால் இன்று அவ்வளவு மக்கள் வசிக்காவிட்டாலும் லட்சக் கணக்கான மக்கள் நாடெங்கிலிருந்தும், உலகமெங்கிலிருந்தும் வந்துபோகும் நவீன நகரமாக விளங்குகிறது.

இராஜ்ய சீரமைப்புக்கு முன்பு அவ்ரங்காபாத், ஹைதராபாத் நிஜாம் ராஜ்யத்தின் ஒரு பகுதியாக இருந்தது. இப்போது பம்பாய் மாகாணத்தின் ஒரு பகுதியாகவும், சென்ட்ரல் ரயில்வேயின் பெரிய

யாத்திரத் தலங்களில் ஒன்ருகவும் விளங்குகிறது.

புகழ்பெற்ற 'அஜந்தா—எல்லோரா' குகைகளைக் காண வருவோர் யாவரும் இங்கே வந்துதான் செல்ல வேண்டும். அவ்ரங்காபாதிலிருந்து எல்லோரா 15 மைல் தூரத்திலும், அஜந்தா அறுபது மைல் தூரத்திலும் உள்ளது. இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும் உல்லாசப் பிரயாணம் செல்லும் மாணவர்களின் தொகை இங்கு அதிகம்.

அவ்ரங்காபாத் இன்றும் பெரிய நகரமாகவே விளங்குகிறது. கடல் மட்டத்துக்குமேல் சுமார் ஆயிரம் அடி உயரத்தில் இது இருப்பதால் தட்ப வெட்ப நிலை எந்த நாளும் இதமாகவே உள்ளது. இந்திய சர்க்காரின் (டூரிஸ்ட் இன்பர்மேஷன் ஆபீஸ்) சுற்றுப் பயண விவரங்களைத் தெரிவிக்கும் செய்தி நிலையம் ஒன்றும் இங்கே உள்ளது. புகைப்படங்களோடு தகவலறிவிக்கும் புத்தகத்தையும் பெற்றுக்கொண்டு நகருக்குள் நுழைந்தேன்.

அவ்ரங்காபாதின் புகழை, இன்று உலகெங்கும் பறை சாற்றும் பிரதான கலைக்கட்டிடமான 'பீபிகா மக்பரா' என்ற தக்காணத்து 'தாஜ் மஹல்' சூரிய ஒளியிலே வெள்ளை வெளேரென்ற சலவைக்கல் ஒளியால் வரவேற்றது.

'பீபிகா மக்பரா'வின் வரலாற்றுப் பெருமையே சுவையானது.

ஔரங்கஜேப் ஆலம்கீர் பாதுஷாவை ஆங்கிலேயனின் சரித்திரம் எவ்வளவு கேவலமாகச் சித்திரித்துக் காட்டியதோ, அதற்கு நேர்மாருன

தாது புஷ்டிக்கு நிகரற்றது. 25 வருஷங்களுக்கு மேல் லக்ஷக்கணக்கான மக்களால் வாங்கி உபயோகிப்பது பழனி K. S. பதி

சிட்டுக்குருவி லேகியம்

நரம்புத் தளர்ச்சி, பலஹீனம், ரத்தக் குறைவு, ஜீரணசக்தி குறைகளை நீக்கி நீண்ட தாது புஷ்டியும், தம்பன சக்தியும் உண்டாக்கி உங்களை ஆனந்திக்கச் செய்கிறது.

30 வேளை லேகியம் விலை ரூ. 15—0—0 (மலரைக் குறிப்பிட்டு எழுதுபவர்களுக்குமட்டும் குறைந்த விலை ரூ. 13—0—0.)

மூலகோடாலி லேகியம் & கருநாக பூபதி

சாப்பிடுங்கள். [ஆபரேஷன் தேவையில்லை]

நீடித்த மூலம், சீழ் மூலம், ரத்த மூலம், வரள் மூலம், வெளி மூலம், ஆசனத் தடிப்பு, குத்தல், வலி, மலச்சிக்கலை அறவேயொழித்து நிர்மூலமாக்கும். பரம்பரை அனுபவம். கை கண்டது.

இரண்டு மருந்துகளும் 30 வேளைக்கு ரூ. 20—0—0.

கே. எஸ். பதி வைத்தியசாலை, பழனி S. I.

சிங்கப்பூர், கோலாலம்பூர், பினங்கு முதலியவைகளுக்கு நாணயமான ஏஜண்டுகள் தேவை.

குணங் கொண்டவர் அப்பேரரசர். நியாயமான மார்க்கத்துக்கு இசைந்த (ஹலாலான) வருமானத்தை உண்டு, நாட்டு மக்களுக்கு நன்மை செய்யும் தொண்டனுகவே இருந்து,வாழ்ந்து, அரசு செலுத்தியவர் ஔரங்கஜேப்.

ஆக்ராவிலே பெருமையுற ஆண்ட ஷாஜஹான் சக்கரவர்த்தியின் குமாரரான அவுரங்கர் தமது தலைநகரை தக்காணத்து மண்ணின் மத்தியிலே நிலைநாட்ட வேண்டுமென்று விரும்பி அவ்ரங்காபாதை தேர்ந்தெடுத்தார். அசோகர் காலத்துக்கு முன்பிருந்தே அதன் சுற்று வட்டாரங்கள் பழம் பெருமை

பொருமை

பொருமை என்பது பொறுக்க முடியாமை என்று பொருள்படும். பொருள், புகழ், அதிகாரம், அனுபோகம் என்ற நான்கு வகையில் தனக்கு மேலாகவோ, தனக்குச் சமமாகவோ, பிறர் இருப்பதை அறியும்போது அதைப் பொறுக்கமுடியாத ஒரு குறுகிய எல்லையை யுடைய மயக்கமான மனோ நிலையே பொருமை யாகும்.

பொருமை ஏற்பட்ட நெஞ்சத்தவனுக்கு தான் எவ்வளவுதான் சிறப்பாக வாழ்ந்தாலும் அதில் திருப்தி ஏற்படாது. பிறருடைய நிலையைக்கண்டு பொருமைப் பட்டுக்கொண்டே இருப்பதால் தனது ஆற்றல் குறைந்து, கடமை மறந்து நாளா வட்டத்தில் பயனற்றவனுகவும் மாறிவிடுகிருன். மேலும் அவனுடைய முயற்சியில் பெரும்பகுதி பிறர் அடையும் இன்பங்களைக் கெடுத்து அவருக்குத் துன்பத்தை விளைவிக்கவே செலவாக நேரிடுகின்றது.

இதைத் தொடர்ந்து சமுதாய வாழ்வில் மக்களுக்குப் பலவிதமான துன்பங்களும் ஏற்படுகின்றன; பெருகுகின்றன. ஆகவே நல்வாழ்வை விரும்பும் எவரும் தன்னிடம் பொருமை என்பது ஏற்படும் போதே அதைக் கூர்ந்தறிந்து போக்கிக் கொள்ள முயல வேண்டும்.

அன்பொளி: அக் '57.

வாய்ந்த பல அரசர்களின் உழைப்பைப் பெற்றிருந்ததும் ஒரு காரணமாகலாம். ஏனெனில் அவுரங்காபாதை அடுத்துள்ள எல்லோரா குகையை ஒட்டிய பல இடங்களில் அரசர்கள் வாழ்ந்து வந்ததற்கடையாளமான அரண்மனைச் சுவர்களும், புத்தர் சிலைகளும், அகழ்களும் கொண்ட பகுதிகள் காணப்படுகின்றன. இந்தக் காரணங்களால் அவ்ரங்கர் தம் ஆட்சியின் தலைநகராக அவ்ரங்காபாதைக் கொண்டார் என்றும் கொள்ளலாம்.

ஔரங்கஜேப் வாழ்ந்த வாழ்வு, நெறியான வாழ்வு என்றும், 'திருக் குர்ஆன்' வகுக்கும் வழிமுறைகளுக்கொப்ப அவருடைய வாழ்வு அமைந்திருந்தது என்றும் பல சரித்திராசிரியர்கள் சான்று பகர்கிருர்கள். ஏனெனில் தம் கையாலேயே 'குர் ஆனின்' பிரதிகள் எழுதியும், வருமானத்துக்குக் குல்லா தைத்தும் வாழ்ந்தவர் என்பது மட்டும் அல்ல, இந்துக்களின் புனிதத் தலமான 'வாரணசி' என்று இன்று அழைக்கப்படுகிற காசியில் தம் பெயர் கொண்ட பள்ளிவாசலுக்குக் கீழேயும், பக்கத்திலேயுமுள்ள இடங்களை இந்துக்களுக்கு அளித்தார் என்றும், தமிழ்நாட்டு முனிவர் குமரகுருபரருக்கு மானியங்களை அளித்தவர் என்பதும் நமக்கும், நம்மைச் சேர்ந்த

மற்ற சமய நண்பர்களுக்கும் புதுமையான செய்தியாகும். மேலும் அரசபோகங்களிலே சுகித்து வாழ வேண்டிய சந்தர்ப்பங்களையும், நேரங்களையும் துச்சமாக மதித்து வாழ்ந்த பெருமை அவுரங்கஜேபுக்கு உண்டு.

தந்தையார் ஷாஜஹான் அரசரின் ஆணைப்படியே தம் திருமணத்தை முடித்துக்கொண்டார் அவுரங்கர். பாரசீக அரசகுமாரியான 'தில்ராஸ் பானு'வை ஔரங்கஜேபுக்கு ஆக்ரா நகரிலேயே திருமணம் செய்து வைத்தார் ஷாஜஹான். 'தில்ராஸ் பானு'வை "ராபியத்துத் தவ்ராணி" அதாவது "காலத்தின் விளக்கு" என்றும் அழைப்பார்களாம்.

இருபது ஆண்டுகாலம் சீரும், சிறப்போடும் வாழ்ந்த ஔரங்கஜேப்-தில்ராஸ்பானு தம்பதிகட்கு ஐந்து குழந்தைகள் பிறந்தன.

ஐந்தாவது குழந்தை பிறந்தபின்பு ஔரங்கர் தன் ஜீவ ஒளியை இழந்தார். 'காலத்தின் விளக்கை' காலமெனும் காற்று அணைத்துவிட்டது.

தந்தைக்கு எந்தவிதமான கதி ஏற்பட்டு இன்னலுற்றாரோ, அதே போலத் தனக்கும் ஏற்பட்டதே என்று வருந்திய அவுரங்கரை யாராலும் சமாதானப்படுத்த முடியவில்லை. அமைச்சர்களும், அரசரின் மெய்க்காவலர்களும் எவ்வளவு ஆறுதல் கூறினும் 'தில்ராஸ்பானுவின்' வாழ்நாளிலே இருந்துவந்தசெழுமை நினைவுகளை அவர் மறந்தாரில்லை. பாரசீக மன்னன் தம் மகளை இழந்த துக்கத்தைப் பகிர்ந்து கொள்ள வந்தபோது மாமனாரைக் கண்டதும் கோவென்று கதறியழுதாராம் அவ்ரங்கர். வாழ்நாளிலேயே எதற்கும் கலங்காத அவ்ரங்கர் மனைவிக்காக ஒரே ஒரு முறை கண்ணீர் விட்டுக் கலங்கியது—இல்லறத்துக்கு அவர் எவ்வளவு மதிப்பைக் கொடுத்தார், தம் வாழ்க்கைத் துணைவியை எவ்வளவு மதித்தார் என்பதற்குச் சான்றாகும்.

தாயாருக்கு தந்தையார் ஷாஜஹான் சக்கரவர்த்தி நிர்மாணித்த 'காதல் நினைவு மஹல்' போல தாமும் தம் மனைவி தில்ராஸ்பானுவுக்காகக் கட்டவேண்டும் என்று எண்ணினார் அவ்ரங்கர். வேறு விதமான எந்த நினைவுச் சின்னமும் பொருத்தமாக இராது என்று அமைச்சர்களும் ஆமோதித்தனர். அதன் காரணமாகத்தான் இன்று வெண் சலவைக் கற்களாலும் பாரசீகக் கலைஞர்களின் கைத்திறமையாலும், ஆயிரக்கணக்கான மக்களின் அன்புயர் உழைப்பாலும் பெருமையுற்று, காதல் கருவூல நினைவு மஹலாக நிற்கிறது 'பீபிகா மக்பரா!

'பீபிகா மக்பரா'வை அவ்ரங்கர் கட்டத் துவங்கியதை முடித்தாரா? அல்லது வேறு யார் கட்டினார்கள்? பீபிகா மக்பராவை ஒட்டி அரை மைல் தொலைவிலே அழகான பெரிய பள்ளிவாசல் ஒன்று நீரூற்றுக் காட்சியுடன் தெரிகிறதே அது என்ன? இவற்றைப் பற்றியெல்லாம் அடுத்த இதழில் காண்போமே!

(தொடரும்.)

வியாபார பிரமுகர்களுக்கு

★ அதிக பக்கங்கள்

★ அழகான அச்சுவேலை

★ உயர்ந்த காகிதம்

★ குறைந்த விலை

★ நிறைந்த விஷயங்கள்

ஆகிய அம்சங்கள் நிரம்பிய எமது

"ஜில்லா வழிகாட்டி"களில்

விளம்பரம் செய்யுங்கள்

ரேட் விவரங்களுக்கு :

பீ. பீ. குப்புராஜு

தமிழ் நாட்டின் எல்லா ஜில்லாக்களுக்கும் கைடுகள் வெளியிடுபவர்

109, சந்தை ரோடு :: திண்டுக்கல்.

குடுகுடுப்பாண்டி சொல்லும் கதை

இந்த உலகத்துலே பலனை எதிர் பார்க்காமே வேலை செய்றவங்களே இல்லியா? எனக்கு ரொம்ப ஆச்சரியமா இருக்குதுங்க. சின்ன வயசுலே நான் எவ்வளவோ ஒத்தாசை செஞ்சிருக்கேங்க பல பேருக்கு—ஒரு பிரதிபலனும் கருதாமே! இப்போ பாருங்க எல்லாம் பிஸினெஸாப் போச்சு!

ஒரு கலியாணத்தை எடுத்துக்குங்க—அதுலே எல்லாந்தான் எவ்வளவு பாலிஸி ஒளிஞ்சுக்கிட்டிருக்குது! பொம்பளைங்களுக்குத்தான் பணம் சேக்கிற ஆசை இருக்கும்பாங்க. அந்தக் காலம் மலை ஏறிக்கிட்டு வருது. இப்போ, அவுங்களுக்கு என்ன கவனம் தெரியுமோ—இந்தப் பணத்தை எப்படி செலவு செஞ்சா பிறர் கவனத்தைக் கவர முடியும்ங்குறதான்! பணம் சேக்குற ஆசை எல்லாம் இந்த ஆணுங்க கிட்டேதான் மண்ட ஆரம்பமாயிடுச்சு! அதுவும் கல்யாணம் செஞ்சுக்கிறப்போ ஒரு செக் புஸ்தகத்தையே லாட்டா அடிச்சிடலாம்னு ப்ளான் போடுறுங்களே! செக் செலாவணியாகாட்டியும்பரவா இல்லே, செக் கிடைச்சிடணும்!

ஹிந்துக்கள்ளேதான் வரதக்ஷணை ஸிஸ்டம் இருந்துச்சுன்னு கேள்வி. அதுக்குக்கூட என்னென்னமோ சட்டம் வரப்போவதுன்னு சொன்னுங்க. வந்துச்சோ வரலையோ அதுவும் தெரியாது. ஆனா, நம்மவங்க கூட, வரதக்ஷணைன்னு சொல்லிக்காமே, வரதக்ஷணையை அடிக்கப் பாக்குறுங்களே, அந்தக் கதையைச் சொல்லுங்க! மனச்சாட்சி இருந்தா இப்படிச் செய்வாங்களா?

மனச்சாட்சிங்குறது இப்பப்போ ரொம்ப சீப்பா போயிடுச்சுங்க! மனசாட்சி, சில சமயம், குத்திப் பாக்குற முள்ளாவும் மாறிக்கிட்டு வருதே! இதனாலே எவ்வள பேர் காயமடையுறுங்கன்னு கேக்குறீங்களா? வரதக்ஷணை வாங்குற ஒரு புது மாப்பிள்ளையே காயமடையலைன்னு அப்புறம் பாத்துக்குங்களேன்!

4. சீர் வரிசை

எனக்குத் தெரிஞ்ச ஒரு வீட்டிலே கல்யாணம் நடந்துச்சுங்க. மாப்பிள்ளை பர்ஸியாவுக்குப் போய் சம்பாதிச்சுட்டு வந்தவர். படிப்பு ஒண்ணும் அவ்வள இல்லே. ஆளும் சாதாரணந்தான். ஆனா, கையிலே ரொக்கமா ஒரு இருபத்தஞ்சாயிரம் இருக்கும் போல இருக்குது! ஒரே ஆட்டம் போட ஆரம்பிச்சார். இருபத்தஞ்சாயிரம் இருந்துச்சோ இல்லியோ அது வேற விஷயம்! ஆனா, அவர் போட்ட ஆட்டம் ரெண்டு லக்ஷத்துக்குக் காணும்.

பொண்ணைப் பெத்தவங்க அவர் வீட்டுப்பக்கம் நடக்க ஆரம்பிச்சாங்க. எல்லாம் காசு செய்ற வேலை. அவர்கிட்டே காசு இல்லாமே இருக்கட்டும், சீந்துவாங்களா? ஆனா நம்ம மாப்பிள்ளை அவ்வள சுலபமா இணங்கிடுவாரா? ரயில்லே, சாமான் வைக்கிற மேம்பலகையிலே ஏறிப் படுத்துக்கிட்டு, யார் தலை தெரியுது காலை ஊணிக்கிட்டு எறங்கலாம்னு யோசனை செய்வாங்களே, அந்த

வகையிலே யோசனை செய்ய ஆரம்பிச்சாரு.

தன்னோட தகுதி பற்றி பிரமாதமா 'டூப்பு' விட ஆரம்பிச்சாரு. இந்தக் காலத்துலே டவுண் பக்கத்துலே ரொம்ப சல்லிசா கிடைக்குறது டூப்பு ஒண்ணுதானே—அதுலே வாங்கி குரோஸ் கணக்கா விட்டாருன்னு வேணுமானா வெச்சுக்குங்!

அவர் ஒரு கண்டிஷன் போட்டாரு.

தனக்குப் பொண்ணு தர்றவங்க—இவ்வள எடை பவுன், இவ்வள மரசாமானுங்க, இவ்வள பித்தளை சாமானுங்க, இவ்வள வெள்ளி சாமானுங்க, இவ்வள துணி மணிங்க......இத்யாதி எல்லாம் கொடுத்து, ரொக்கமா இவ்வள பாங்குலே போடணும்னு ஒரு பெரிய பட்டியல் தயார் செஞ்சாரு. இவ்வளவும் செஞ்சுட்டு மோட்டார் சைகிள் ஒண்ணுஎவ்வளவோ ஹார்ஸ் பவர்லே வேணும்னுகூட சொன்னதாகக் கேள்வி! இந்த விசயத்துலே ரொம்ப கரூரா—வெறித்தனமாகக்கூட நடந்துக்கிட்டாரு.

மனுசனுக்கும் மிருகத்துக்கும் ரெண்டு விதத்துலே ஒத்துமைங்குறது ரொம்ப சாரியாப்படுது—ஒண்ணு வெறி; இன்னொண்ணு பதுங்கி இருந்து எதிரியை வீழ்த்த நெனக்கிறது. இந்த மாப்பிள்ளை ரெண்டுலேயும் கைதேர்ந்தவரா இருந்தார். தன்னோட வருங்கால மாமனாரை விரோதிபோல நெனச்சுட்டாரு, இவ்வள சீர்வரிசை கொடுன்னு கேட்குறது, பதுங்கி இருந்து தாக்குறது போலத் தாங்களே?

ஆனா, இதுபோல ஆசாமிகளுக்கு, அதுக்குத் தகுந்த மாமனாருங்க தானே கிடைப்பாங்க! "இவ்வளவும் வேணும்!"ன்னு மாப்பிள்ளை ஆர்டர் போட்டதும் "ஆஹா தர்றேன்!" னார் மாமனார்.

ஆர்.பி.மல்லாரி

தர்றப்போல்ல அந்தப் பேச்சு! உண்மைக்கும் பொய்க்கும் நெஞ்சுக்கும் வாய்க்கும் உள்ள தூரம்ன்னு சொல்றது ரொம்ப சரியா இருக்குது! பொய்யைக் கலையா பயில்றப்போ தானே ஒரிஜினல் ஒரிஜினலா கற்பனை உதயமாவது! அதுபோல மாமனார் கற்பனை கற்பனையா செஞ்சு வச்சிருந்தாரு!

மொதல்லே நிச்சயதார்த்தம் நடந்தது. அதாவது கூட்டமாபோய் சுத்திரியா(ன்) எல்லாம் தின்னுட்டு டீ குடிக்கிறது— அதாவது பெண் வீட்டார் பெண்கேட்கும் ஆரம்ப படலம், இரண்டு கட்சிக்காரங்களும் ரொம்ப பேச்சுப்போல பேசினாங்க. இந்த உலகத்துலே பாருங்க, எங்கே எங்கே எல்லாம் மேக்அப் இருக்குதோ அங்கேருந்து எல்லாம் விலகிக்கிறது தான் புத்திசாலித்தனம். மனுசன் தன்னையே 'மேக்அப்' செஞ்சுக்கிட்டு வந்தா, நிஜஉருவத்தைக் காட்டலைன்னு அர்த்தம். தன் செயல்களை "மேக்அப்" செஞ்சு காட்டினா, ஊரை ஏமாத்தருன்னு அர்த்தம். பேச்சுலே 'மேக்அப்' இருந்தா பொய்னு அர்த்தம். கண்டிப்பா விலகிக்கணும். வருங்கால மருமகப்பிள்ளையோட பேச்சிலே 'மேக்அப்' இருந்ததை உணராம வருங்கால மாமனார் விலகிக்கிடாம இருந்திட்டாரு. இல்லே அப்படி மேக்அப் செஞ்சாரோ என்னவோ?

அப்புறம் 'மங்னா' நடந்தது! அதான் பரிசம்! அதுக்கு பலாச்சோறு எல்லாம் ஆக்கிப் போட்டாங்க. ஒரு பக்கத்துலே ஜரிகை புடவை வரும்படி. இன்னொரு பக்கத்துலே எரநூறு ஐநூறு வரவு! நானூறு ஐநூறு பேர்களுக்கு வயிரார உணவு!

அதுக்கப்புறந்தான் சடங்குக வரிசையா இருக்குதே! பந்தக்கால் நடுறது, மஞ்சள் பூசறது,

கல்கண்டுத் துண்டை மாப்பிள்ளை வீட்டுலேருந்து பொண்ணு வீட்டுக்கும், பொண்ணு வீட்டுலேருந்து மாப்பிள்ளை வீட்டுக்கும் கொண்டு போறது; 'மொய் தொகை' வைத்து ஓதிக் கொடுக்கிறது, நிக்காஹ் ஊர்வலம், நிக்காஹ், கல்யாணம் முடிஞ்சதும், விருந்து, பொண்ணு மாப்பிள்ளை விளையாட்டு, பல்லாங்குழி விளையாடுவது, மாப்பிள்ளையை பர்தாவின் ஒரு பக்கத்தில் உட்கார வைத்து, அவரை சலாம் சொல்லச் சொல்லி சலாமிக்காக நூறு, ஐம்பது என்று பணம் வைக்கிறது கங்கன் தாவத், லொட்டு லொசுக்கு, முதல் வெள்ளிக் கிழமையிலிருந்து அஞ்சாவது வெள்ளிக் கிழமைவரை தடபுடல் தர்பார்—இதுக்குள்ளே மாப்பிள்ளையை அழைச்சுப்போறது, பொண்ணை அழைச்சுப் போறது—இப்படி ஆயிரக்கணக்கா சம்பிரதாயங்க இருக்குது! ஒரு காலத்துலே பொண்ணும் மாப்பிள்ளையும், பொண்ணு வீட்டுக்காரங்களும் மாப்பிள்ளை வீட்டுக்காரங்களும்—எல்லாரும் ஒற்றுமையா இருக்குற மனசு பூரிப்புலே இதை எல்லாம் செஞ்சாங்க. ஆனா, இப்போ இதுக எல்லாம் வலுக்கட்டாயமா மாறிப் போயிடுச்சு! ஒவ்வொரு சடங்குலேயும் பொண்ணு வீட்டிலேருந்து எவ்வள கிளப்ப முடியும்ங்குறதுதான் முக்கிய குறிக்கோளா இருக்குது! அதுலேயும் மாப்பிள்ளை வீட்டுக்காரங்களுக்கு இந்த சந்தர்ப்பங்கள்ளே எல்லாம் எங்கேருந்துதான் கோவம் வருமோ—தண்ணியிலே பன்னீர் கலந்து தரலேன்னு கோவம், ஒருத்தர் 'கீர்' தட்டுலே பாதாம் பருப்பு இல்லேன்னு ஆத்திரம், சாயாவுலே நெஜப்பால் கலந்துட்டா பொல்லாங்கு—இவுங்க எல்லாம் புட்டிப்பால் குடிச்சுப் பழகினவங்க!—இப்படித் தொட்டதுக்கெல்லாம் திடீர்க் கௌரவமும், வரட்டு டம்பமும், பகட்டு ஆடம்பரமும் ஏற்பட்டுப் போவுது! இதெல்லாம் ஒரு கல்யாணத்துலே இல்லே, ரெண்டு கல்யாணத்துலே இல்லே நான் தாவத் சாப்பிட்ட எல்லா கல்யாணத்துலேயும், தாவத்துக்குப் போகாத மத்த கல்யாணத்துலேயும் நேராக் கண்டதுங்க! பர்ஸியா தேசத்து மாப்பிள்ளை கல்யாணம் நடந்துச்சே அதுலே இதெல்லாம் ரொம்ப சம்பிரதாயமா பிரமாதமா நடந்துச்சுன்னு சொல்லவே தேவை இல்லே.

கல்யாணத்தை ஆயுள் தண்டனைன்னு சொல்வாங்க! ஒருத்தர் மனசை இன்னொருத்தர் திருடிக்கிட்டதுக்கான தண்டனை! ஆனா, இந்தக்காலத்திலே, மாமனாருக்குதான் ஆயுள் தண்டனையாய்ப் போயிருக்கு! நோன்புப் பெருநாள், ஹஜ்ஜுப் பெருநாளுன்னு ஒண்ணு வரக்கூடாது—தடுக்கி விழுந்ததுக்கெல்லாம் புதுமோதிரம் துப்பட்டா வகையறு கேட்டா, ஏழை மாமனுருங்க என்ன செய்வாங்க! கிறிஸ்மஸ், பொங்கல், ஆவணி ஆவுட்டம், தீபாவளி, நாகூர்தர்க்காசந்தல்—இதுபோல சந்தர்ப்பங்கள்ளேயும் கேக்காமே விடுறுங்களேன்னுதான் சந்தோசப் படவேண்டி இருக்குது!

இந்த மாமனார் ஆசாமிங்க, கல்யாணத்துக்கு பல் உண்டுன்னு சொல்றதுலே ஆச்சரியமில்லே! அகப்பட்ட ஆசாமிகளை எல்லாம் அதாவது பெண்வீட்டுக்கார ஆசாமிகளை—நல்லா கடிச்சுடுதல்ல கல்யாணம்! இதனாலே எத்தனை மாமனுருங்க கையைக் கடிச்சுக்கிட்டு உக்காந்திருக்காங்க!

இந்த ஒழுங்குலே மாப்பிள்ளைங்க மனசாட்சியோட நடந்துக்கிறதா சொல்லிக்கிறுங்க!

மனச்சாட்சிங்குறது என்னங்க? புண்ணியம் நடமாடக்கூடிய பெரிய அரங்கமாச்சே! பணம் பிடுங்கணும்னு ஆரம்பிச்சுவச்ச சீர்வரிசை எல்லாம் முடிவில்லாத "க்யூ" போல ஒண்ணு பின்னுலே ஒண்ணு வர்றப்போ, புண்ணியம் அங்கே இருக்குங்களா?

மாமனார் வீட்டிலே, மொத பிரசவத்துக்குப் பாக்குறுங்க. மகளுக்கும்

மாப்புள்ளைக்கும் பட்டுத்துணி பணிங்க, குழந்தைக்கு சவரன் நகைங்க எல்லாம் வாங்கிதரத்தான் செய்ருங்க. ஆனு, 1950 லே கல்யாணம் நடந்து, 1957 லே ஏழாவது குழந்தை பிறக்குறப்போ கூட இப்படியே செய்யணும்னு முடியுமா? அதுக்கு, யானைப்பண்ணை உள்ள மாமனுரேல்ல வேணும்!

எல்லாம் செய்ருரே ஒண்ணு செய்யலே—சீர் செய்த வரிசைகளைப் பற்றி சரமாரியாகக் கிளம்பிடும். நாற்காலி குள்ளம்! மேசை ஓட்டை! கட்டில் ஹைதர்மாடல்! என்னென்னமோ சொல்ல ஆரம்பிச்சிடுவாங்க!

"இளமை ஒரு கொள்ளை; ஆண்மை ஒரு போராட்டம்; முதுமை ஒரு விசனம்!"னு சொல்றது எவ்வள சரியா இருக்குது! பொண்ணு இளமையோட இருக்கிறதாலே கொள்ளை ஆசை! மாப்பிள்ளையோட ஆண்மை மாமனுர் வீட்டோட அவர் நடத்துற போராட்டங்கள் தெரிறது! முதுமையடைஞ்ச மாமனுருக்கு தான் ஒரே விசனம்!

இப்படி எல்லாம் வரும்னு முன் கூட்டியே தெரிஞ்சிருந்தாலும் மாமனுர் முடிஞ்சவரைக்கும் எல்லாம் தயார் செஞ்சு வச்சிருப்பாரு. ஆனு, கல்யாணம் ஒரு தும்மல் மாதிரி வருது! எப்போ வரும்னு சொல்லவே முடியறதில்லையே! திடீர்னு தும்முனவுடனே 'அல்ஹம்துலில்லாஹ்!'ன்னு சொல்லிக்கிருப்பலேல்ல வருது! நான் ஒரு குடுகுடுப்பைக் காரன் சொல்றேன்னு அசிரத்தையா இருந்திடாதீங்க. இந்த சீர் வரிசை ஆடம்பரம்—இல்லாதவங்க கிட்டேருந்து கொள்ளையடிக்க செய்யப்பட்ட இந்த சம்பிரதாய ஏற்பாடு— இது வேணுங்களா? கொஞ்சம் யோசனைசெஞ்சு பாருங்க! சுய நலத்தை வச்சுகிட்டு ஒரு புது வழக்கத்தை ஆரம்பிக்கிருங்க. ஆரம்பத்துலே அந்த வழக்கம் ஓட்டடை போலத்தான் இருக்குது.

ஜன சமூகத்திற்கு மகத்தான சேவை செய்யும் மும்மணிகள்.

அஞைபரின்

ஜுரம், தலைவலி, பல்வலி, தசைவலி, ஜலதோஷம், தூக்கமின்மை முதலியவைகளுக்கு நிவாரணி.

பிராங்கோடைட்

இருமல், கக்குவான், கபம், மார்புசளி, முதலிய சுவாசகோச வியாதிகளுக்கு நிவாரணி.

மெர்பெக்ஸ் ஆயிண்ட்மெண்ட்

சொறி, சிரங்கு, முக்ப்பரு, படை, வெட்டுக் காயம், சேத்துப் புண், வேனற் கட்டி முதலிய சர்ம வியாதிகளுக்கு நிவாரணி,

தயாரிப்பாளர்கள் :

மெர்குரி பார்மசூடிகல்ஸ்

60, தெற்காவணி வீதி,
மதுரை (S. I.)

அப்புறம் அதே இரும்புச் சங்கிலியா மாறிடுதே! இந்த வேண்டாத பேராசை பிடிச்ச வழக்கங்களை இப்பவாவது நாம கொஞ்சங் கொஞ்சமாக நிறுத்த வேண் டாமா ?

இந்த சீர் வரிசையை விருப்போட தர்றவங்க, தர்ற வகையுள்ளவங்க, தாராளமாத் தரட்டும். ஆனா, திக் கில்லாதவங்க?

விருப்பு வெறுப்பானா, சிரிப்பு நெருப்பாயிடுதே! பொண்ணு கிட் டேயோ, பொண்ணு வீட்டாரு கிட்டேயோ இருந்த சிரிப்பெல்லாம் போற இடம் தெரியலையே! சந்தோ சமா இருக்கத்தானே கல்யாணம்? சண்டை போடணும்னு, கல்யாணம் செஞ்சுக்கிட்டா, சிண்டு தன் கையிலே கிடைச்சபிறகா, சண்டை போடறது? நேருவோட பிடிவாதந் தான் இந்தியாவுலே உள்ள எல்லா அணையைவிடப் பெரிய அணைன்னு சொல்றாங்க நம்ம புது மாப்பிள்ளை களோட பிடிவாதத்தைத் தெரிஞ்சுக் கிடாதவங்க !

இந்த மார்கழி மாதத்துலே சங் கீத ஸீஸன் ஆரம்பிக்கிறாங்களே, ஒண்ணும் காரணம் இல்லாமே செய் யலை! குளிர்காலத்திலே தானே பிர்க்கா தானா உதிரும்! ஆனா கல் யாண ஸீஸன் ஆரம்பமாயிட்டா மாமனார் ஸெட் இதை விடப் பிர மாதமான பிர்க்கா எல்லாம் உதிர்க் கத் தயாரா இருக்காங்களே! கச் சேரிங்க எல்லாம் எந்த மூலை?

வாழ்க்கையிலே, பெண்ணுக்குத் தான் நம்பிக்கை அதிகமா இருக் குது! வாழ்க்கை முழுவதும் ஒரே ஆணை நம்பத்தயாரா இருக்குதே! அப்பேர்ப்பட்ட ஒரு பெண்ணோட மனசை, 'சீர்வரிசை', 'இனாம் வரிசை', 'திருட்டுவரிசை', கொள்ளை வரிசை'ன்னு வரிசைக் கணக்கை சொல்லி, கலங்கச் செய்யலாமா? நீங்களே சொல்லுங்க...அது பாவம் என்ன செய்யும்? மௌனமா கண் ணீர்விடும். சத்தம்போட்டு அழக் கூட பயம் !

கண்பார்வையைப் பார்த்து ஒரு ஆசாமி எப்படின்னு நிதானிச்சுச் சொல்லிடலாம். ஆனா, இந்தக் காலத்துலே கலர்கலரா கண்ணாடி மாட்ட ஆரம்பிச்சுட்டாங்களே ! அதான் உலகமும் வர்ணமா தெரி யுது! சீர்வரிசைபோல உள்ள வர் ணங்களும் ஆரம்பத்துலே பகட் டாத்தான் தெரிறது! சாயம் வெளு க்க ஆரம்பிக்கறப்போல்ல சேதி தெரியும்!

நான் வர்றேங்க......

"மாப்பிள்ளைக்கு இனிமேத்தான் நல்ல காலம் பிறக்கப் போவுது! சீர் வரிசை ஆசையை 'சீ'ன்னு விட் டுட்டா, சந்தோசமா வாழப்போ றாரு...நல்லகாலம் பிறக்குது!... குடு குடு குடு!... குடுகுடுகுடு!... குடுகுடு குடு!......"

கைத்தொழிலை ஆதரியுங்கள்!

ரம்ஜான் பெருநாள் வந்துவிட்டது

தப்பாளி

T. S. ராதாகிருஷ்ணய்யர் & கோ

வாயல், சூரத் ஜான்னடி & பிரிண்டிங் ஜவுளி தயாரிப்பவர்கள்

சாயத்திற்கு உத்தரவாதம்

203, கீழவெளி வீதி,

மதுரை.

தமிழ் கூறும் நல்லுலகுக்குக் **கலைமகள் காரியாலயம்** அறிவிக்கும் நற்செய்தி!

பிரபல எழுத்தாளர் "**ஜமீலா**"வின்
சிறுகதைத் தொகுதியை வெளியிட்டுள்ளோம்.

பெருநாள் பரிசு

"ஜமீலா"

பைந்தமிழ் தவழும் நந்தமிழ் நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் வாழும் இஸ்லாமியச் சமயத்தைச் சார்ந்தோரின் வாழ்க்கையைச் சித்திரிக்கும் அருமையான பதினான்கு கதைகள்கொண்ட அற்புதமான தொகுதியாகும்.

கல்கி, கலைமகள் இதழ்களில் முதற் பரிசுகளைப் பெற்ற இரு கதைகள் அடங்கியுள்ளன.

பிரபல ஓவியர் மணியம் அவர்கள் தீட்டிய நெஞ்சை அள்ளும் வண்ண முகப்பு அட்டை.

நூலுக்குத் தாம் அளித்த கருத்துக்கள் செறிந்த நீண்ட முன்னுரையில் **அறிஞர் டாக்டர் மு. வரதராசனார், M. A., M. O. L., Ph. D.** கூறுகிறார்:—

> "நல்ல சில உணர்வுகள்; அவை வாழ்வில் இயைந்துள்ள இயைபுகள்; அவற்றிற்கு அமைந்த தெளிவான கலை வடிவங்கள்; இவ்வாறு இயன்ற சிறுகதைகளின் தொகுப்புத்தான் இந்த நூல். ஒவ்வொரு கதையும் மனித உள்ளத்துச் சிறந்த உணர்வு ஒவ்வொன்றை அடிப்படையாகக் கொண்டது. அந்தந்த உள்ளமே போற்றி உணரத்தக்கது. இவற்றின் ஆசிரியர் "ஜமீலா" பல்வேறு உணர்வுகளை நன்கு புலப்படுத்தியுள்ளார். இவ்வகையில் இவர் பெற்ற வெற்றி பாராட்டுக்குரியதாகும். மனச்சான்று "பிறைக் கொடி" நாட்டி விளங்கும் கதைகள் இவருடைய படைப்புகள். வெல்க "ஜமீலா"வின் கலைத்தொண்டு!"

விலை: ரூ. 2·50

கிடைக்குமிடம்:

கலைமகள் காரியாலயம்

சென்னை-4

பிறை

சந்தா விவரம்

உள் நாடு (இலங்கை உள்பட)		வெளி நாடு	
1 வருடம்	ரூ. 4·75	1 வருடம்	ரூ 6·00
2 வருடம்	ரூ. 8·75	2 வருடம்	ரூ. 11·00
5 வருடம்	ரூ. 20·00	5 வருடம்	ரூ. 25.00
அரை வருடம்	ரூ. 2·50	அரை வருடம்	ரூ. 3·75
தனிப் பிரதி	40 ந. பை.	தனிப் பிரதி	50 ந. பை.

ஒரு வருடத்துக்கும் அதற்கு மேற்பட்டுமுள்ள சந்தாதாரர்களுக்கு ஈத், மீலாத் போன்ற விசேஷ மலர்கள் சாதாரண இதழ்களின் விலைக்கே அனுப்பப்படும். இலங்கைக்கு மட்டும் சந்தா வி. பி. அனுப்பப்படும்.

விவரங்களுக்கு :

நிர்வாகி, 'பிறை'

192, அங்கப்ப நாயக்கன் தெரு, தபால் பெட்டி எண் 1688

சென்னை-1.

ஏ. எம். மீரான் எழுதிய துப்பறியும் நாவல்கள்

ஒவ்வொன்றும் தனித்தனிச் சுவையுடையது. பத்திரிகைகளெல்லாம் ஒரு முகமாகப் பாராட்டிய அற்புத நாவல்கள்.

1. கண்ணம்மாவைக் காணவில்லை! 1·50
2. தங்கமாளிகை ரகசியம் 1·50
3. நீலத்திரை மர்மம் 1·75
4. குயில் பூங்கா மர்மம் 1·50
5. இருளிலே ஓர் உருவம்! 1·00
6. இரண்டே நாள்! 1·00
7. பழி தீர்ந்தது! 1·00
8. பணத்துக்கு ஓர் உயிர்! 1·25
9. இவனைத் தெரிகிறதா? 1·25
10. மர்ம மாளிகை 1·00
11. அபாயச் சீட்டு 1·00
12. மர்மக் கடிதம் 1·50
13. எமனுக்கு எமன்! 1·25
14. துப்பறியும் குற்றவாளி 1·50

அத்தனை நாவல்களையும் விரும்புபவர்கள் விலையை மட்டும் அனுப்பினால் போதும். தபால் செலவு இனாம்! இலங்கைக்கு மட்டுமே வி. பி. பி. அனுப்பப் படும்.

பிறை நிலையம்

192, அங்கப்பநாய்க்கன் தெரு,

சென்னை-1.

கேள்வி? பதில்!

டி. எம். எம். தாஜுத்தீன்

அபிவிர்த்தீஸ்வரம்

கே: மதம் மக்களுக்கு அபின் என்ருல்......வேதம்?

ப: மதம் மக்களுக்கு மயக்கம் தரும் அபினல்ல. அவர்களுக்கு அது நல்லமுது என்று முஸ்லிம் எழுத்தாளர்களும், பேச்சாளர்களும் எடுத்துரைக்காத நாளே இல்லை. உடல் நலம் வளர்த்து, உள வளம் பெருக்கி, உலக வாழ்வில் அமைதியையும், ஆத்மீகப் பெருமையையும் நிறைவு படுத்தி மாண்புயர் சேவை செய்யும் மாநெறியாம் தூய இஸ்லாம் மாந்தர்க்குத் தெள்ளமுது. அள்ள அள்ளக் குறையாது, பொங்கி வரும் அப் புத்தமுதைத் தேக்கி நிற்கும் பாத்திரம் திருவேதம்.

எஸ். குத்தூஸ்

தூத்துக்குடி

கே: நம் திருக் குர்ஆன் பைபிளுக்குப் பின் உள்ளது என்று சொல்லுகிருர்களே; அப்படியானுல் பைபிள்தான் முதலிலே உண்டானதா?

ப: ஆம்.

ஹலரத் ஈஸா (அலை) அவர்களுக்கு இறைவனுல் அருளப்பட்டதாக பைபிள் (எனும் விவிலிய வேதம்) அமைந்திருந்து, பின்னர் அதில் பல மாற்றங்கள் புகுத்தப் பட்டுவிட்டன. எல்லா நபிமார்களுக்கும் முத்திரையாக இறுதித்தூதர் எம் பெருமானர் அவர்களை இறையோன் உலகுக்கு அனுப்பினுன். அதே போன்று எல்லா வேதங்களிலுமுள்ள எழிலுறு கருத்துக்களின் பிரதிநிதியாக இறுதித் திருமறையாக அல்லாஹ் அருமறையை அஹ்மது நன்னபியின் வாயிலாக அருளித் தந்தான். ஆகவே காலத்தால் திருக் குர்ஆன் பிந்தியது தான்.

வி. எம். ஏ. முஹம்மது அலி

இலுப்பூர்

கே: இஸ்லாமிய பெண்களுக்கு நிக்காஹ் செய்யும் பொழுது தாலியைப் பெண்கள் கட்டுகிருர்களே; ஏன்? மணமகன் கட்டக் கூடாதா?

கேள்வி - பதில்

ஜனவரி 1958

முதற் பரிசு:

K. A. ஷெளக்கத் அலீ
55, புதுத் தெரு
நாகபட்டினம்.

இரண்டாம் பரிசு:

T. M. M. தாஜுத்தீன்
அபிவிர்த்தீஸ்வரம்
கொரடாச்சேரி வழி.

ப: இஸ்லாமியத் திருமணத்தின் போது, (ஷரீஅத்) சட்டப்படி தாலி கட்டுவது முக்கியமல்ல. அதை ஒரு கட்டாயமாக இஸ்லாம் விதிக்கவுமில்லை. தகுந்த சாட்சிகளின் முன்னிலையில் ஆண், பெண் இசைவு தெரிந்து நடத்தப்படும் நிக்காஹ்வில், தாலியை மணவாழ்வின் சின்னமாக இஸ்லாம் நிர்ணயிக்கவில்லை. பல முஸ்லிம் நாடுகளில் இப் பழக்கம் இல்லாததால், இந்திய முஸ்லிம்கள் இச் சடங்கை ஏனைய இந்திய மக்களிடமிருந்தே கடன் வாங்கியிருக்கிறார்கள் என்பது தெளிவாகிறது.

தீமையையோ, ஷிர்க்கையோ இப் பழக்கம் வளர்க்கவில்லை என்ற காரணத்தால்தானோ என்னவோ மார்க்க அறிஞர்கள் இதைப் பற்றிக் கவலைப்படவில்லை. மேலும் மண விழாவில் பெண்களுக்குப் பெரிதும் மகிழ்வு தருவது இது. ஆகவே தான் மணமகனின் சார்பில் அவர் சகோதரி மணப்பெண்ணுக்கு கருமணியோ, தாலியோ கட்டும் பழக்கம் நிலவியிருக்கிறது.

K. A. ஷௌக்கத் அலீ

நாகப்பட்டினம்

கே: உள்ளூர் வெளியூர் வாசிகளின் நன்கொடைகளைக் கொண்டு கட்டப்பட்ட ஒரு பொதுப்பள்ளியில் ஒரு தனி மனிதன் தன் பெயரையும், சில வசனங்களையும் பொறிப்பது ஆகுமா?

ப: நல்ல காரியங்களுக்கு தங்கள் சக்திக்கு ஏற்றபடி உதவி செய்ய பலர் நாடுவார்கள். ஆனால் இதற்காக எவரேனும் முயற்சி எடுத்து அவர்களை அணுகாதவரை, அவர்கள் உதவி நற்கருமங்களுக்குப் பயன் படாமலே போய்விடுகிறது. இத் தகையோர் உதவிகளை ஒன்று திரட்டி, உருவாக்க ஒருவர் முன் வருகிறார்; உதவி செய்ய மனமில்லாதவர்களையும், தயங்குபவர்களையும் அவர் விடுவதில்லை.

''நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்
நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்
அதுவுமற்றவர் வாய்ச்சொ லருளீர்
ஆண்மையாளர் உழைப்பினை
நல்கீர்''

பணம் படைத்தோர் நிதி தாருங்கள்; செல்வங் குறைந்தோர் ஒரு சில புதுக் காசுகளாவது தாருங்கள்; கையிலே காசே இல்லையென்றால் நல்ல வார்த்தை சொல்லி, ஊக்கம் கொடுத்து ஆதரவு தாருங்கள்; உடல் வலுவுள்ளோர் உழைப்பை (சிரம தானம்) தாருங்கள்'' என்று கூறி இடையறாது அலைகிறார்.

இளகிய நெஞ்சோடு, இன்முகம் காட்டி, ''ஈதல், இசைபட வாழ்தல்'', என்னும் கொள்கையுடைய இரக்க சித்தமுடையோர் இல்லம் தேடியும் அவர் செல்கிறார். ''எட்டிக் காய் காய்த்தென்ன, ஈயாத புல்லர் இருந்தென்ன'', என்று கவிஞன் வர்ணித்தானே அத்தகைய காசாசைக் கஞ்சர்களிடமும் செல்கிறார். தன் இலட்சியம் ஈடேற, தான் திட்டமிடும் கல்விக் கூடமோ, வணங்கும் தலமோ, மருத்துவ மனையோ உருவாவதற்காக, ''வாசல் தொறும் முட்டுண்ட தலையில் புண்ணும்...... செஞ்சொல்லை நினைந்துருகும் நெஞ்சிற் புண்ணும்'', கொண்டு ஊரூராக, தெருத்தெருவாக—ஏன் கடல் கடந்தும்கூட அவர் சுற்றுகிறார்.

இடையறாத உழைப்பு அவர் இலட்சியக் கனவை நனவாக்குகிறது. அவர் மனதிலே நிர்மாணித்த பொது மாளிகை மண்ணிலே உருவாகிறது. அந்த ஏழை நெஞ்சம் அம்மாளிகையில் ஓர் இடத்தில் தன் பெயரையும்—தன் உழைப்பின் சின்னமாக—நினைவு படுத்த ஆசைப்படுகிறது. பெருந்தன்மையோடு நாம் அதை அனுமதிக்கக் கூடாதா?

நீங்கள் கோவைக்கு வரும் போது மக்கள் உணவு விடுதியை சந்தியுங்கள்.

இதை வைத்துக்கொண்டு அம் மனிதர் தம் சொந்த நலனில் முன்னேற்றம் காணவோ, அல்லது இதன் மூலம் வேறு ஏதாவது பயன் பெறவோ கருதி இக்காரியம் செய்தால், அவர் செய்கையைக் கண்டிக்கலாம்.

இத்தகைய சுயநல நோக்கங்கள் எவையுமின்றி அவர் பெயரை, தன் உழைப்பின் நினைவாக, பதித்துக் கொள்வதில் பிழை எதுவுமில்லை. சில சமயம் இது மற்றையோரையும் தூண்டி, அவர்களையும் பொதுப் பணியில் ஈடுபடச் செய்யவும் போதும்.

எச். ஸலாஹுத்தீன்

கல்ஹின்னை (ஈழம்)

கே: பிரசித்தி பெற்ற இஸ்லாமிய யுத்தங்களில் முஸ்லிம்கள் தோற்கடிக்கப்பட்டது எது?

ப: தூர்ஸ் யுத்தம்.

ஐரோப்பாவின் தென்பகுதியில் கி. பி. 732ல் ஸ்பெயின் அமீர் அப்துர் ரஹ்மானுக்கும், சுத்தியல் என்ற புனைபெயர் கொண்ட சார்ல்ஸ் மார்ட்டலுக்கு மிடையே இப்போர் நிகழ்ந்தது. ஏழு நாட்கள் நடந்த இப்போரில் முஸ்லிம்கள் பெரும் நஷ்டத்திற்குள்ளாயினர். இஸ்லாமிய வரலாற்றாசிரியர் இப்போர்க்களத்தை "பலாத்துஷ் ஷுஹதா", "வீரசுவர்க்க மடைந்தோரின் தளம்". என்று குறிப்பிடுகிறார்கள். உலகில் இதுவரை நடந்துள்ள பதினைந்து முக்கியமான போர்களில் இது ஒன்றாகக் கருதப் படுகிறது. இதன் பின்னரும் கூட முஸ்லிம்கள் ஐரோப்பாவில் சிற்சில பகுதிகளைக் கைப்பற்றி யிருப்பினும், பரந்த அளவில் இஸ்லாமியப் பேரரசு ஐரோப்பாவில் இடம் பெருமற் போனமைக்கு இப்போர் பெருங் காரணமாகும். "தூர்ஸ் போர்க்களத்தில் முஸ்லிம்கள் வெற்றி பெற்றிருந்தால் பாரிஸிலும், லண்டனிலும் வானுயர் மினுராக்கள் கொண்ட பள்ளிகள் நிலை நின்றிருக்கும்; ஆக்ஸ்போர்ட் முதலிய பல்கலைக் கழகங்களில் பைபிளுக்கு பதிலாக குர்ஆனின் விரிவுரைகள் போதிக்கப் பட்டுக் கொண்டிருக்கும்" என்று கிப்பன் எனும் சரித்திராசிரியர் கூறுகிறார்.

நீங்கள் கோவைக்கு வரும் போது பாம்பே பிரியாணி ஹோட்டலை சந்தியுங்கள்.

K. A. W. முக்தார்

அபிவை

கே: "எம். ஏ", "ஜேயெம்", "ஹஸன்", "இனுயத்", "இப்னு ஜமாலுத்தீன்", "ரஹ்மான்" "மகுதூம்" ஆகியோரின் இயற் பெயர் என்ன?

ப: எழுத்துலகில் இலை மறை காயாக இலக்கிய சேவை செய்யும் இவ்வன்பர்கள் புனைபெயரின் மறைவிலேயே காலங்கழிக்க வேண்டும் என்று விரும்புபவர்கள். எனினும் வாசகர்கள் பல தடவை இவர்களின் இயற்பெயர்களைத் தெரிந்து கொள்வதில் ஆவல் தெரிவித்து வருகின்றபடியால் அவற்றைக் கீழே தருகிறோம்.

"எம். ஏ"—எம். அப்துல் வஹ்ஹாப் எம். ஏ; பி. டி. எச்.

"ஜே. யெம்"—ஜே. எம். ஹுஸைன் பி. ஏ.

"ஹஸன்"—மு. ஸய்யிது முஹம்மது

"இனுயத்"—மு. முஹம்மது ஹஸன்

"இபுனு ஜமாலுத்தீன்"—ஜே. எம். அபூபக்ர்.

"ரஹ்மான்"--அப்துர் ரஹ்மான் [பிரபல எழுத்தாளர் "மஹ்தி"யவர்களின் திருமகனுர்]

மகுதூம்—கே. எஸ். மகுதூம் முஹையத்தீன் பி. ஏ. ★

"இறை தோழர் இப்ராஹீம்"

★

இபுனு ஜமாலுத்தீன்

[இறை தோழர் இப்ராஹீமின் இன்பச் சரிதையை இசைபட எடுத்தோதுகிறது திருக் குர்ஆன். அதன் ஒரு பகுதியை அழகு தமிழில் தீஞ்சுவைக் கவிதையாக ஆக்கித் தந்திருக்கிருர் அன்பர் இபுனு ஜமாலுத்தீன்]

*

"வழிபடும் தெய்வம்யான் யாவரும் என்னையே
வணங்குவீர்" என்று "நம் ரூ"தெனும் மன்னவன்
மொழிந்தனன்; மாந்தரும் பணிந்தனர்; மன்னனே
வணங்கினுன் விண்ணெளிர் மீனினம் தன்னையே.

*

"வழிகெடும் மன்னனும் மக்களும் மீண்டும்நல்
வழிமுறை நிலைபெறும் வழிவகை செய்திட
விழைந்தனர் நபிஇபு ராகீமும் மாந்தர்பால்
விளம்புவார் தூய்மைசேர் நாயகன் மாண்பினை!"

*

மன்னவன் தெய்வமோ ? மனிதனே அல்லனே ?
மனிதனும் தெய்வமோ ? அழிபவன் அல்லனே ?
மன்னிடும் உயிரினம், வான்,புவி யாவுமே
மாண்புடன் ஆக்கிடும் ஏகனே ஆண்டவன்;

*

"மின்னிடும் தாரகை, மதி,கதிர் யாவுமே
மறைவுறுங் குறைநிலை உடையதாம்; ஆகையால்
என்னிறை என்றவை ஏற்றிடேன் அப்பொருள்
யாவையும் ஆக்கிடும் ஏகனே ஆண்டவன்;"

*

"இணையிலான், நிகரிலான், உருவிலான், உறவிலான்,
யாவினும் உறைபவன், யாவையும் அறிபவன்,
துணையிலான், சோர்விலான், துயிலிலான், அழிவிலான்,
தேவைகள் என்றிலான், தூயவன், ஆண்டவன்;"

"அருளினால், அன்பினால், அளவிலா ஆற்றலால்
அனைத்தையும் மாட்சியாய் ஆட்சிசெய் நாயகன்
திருவினும் திருவினன், தெளிவினும் தெளிவினன்,
சிந்தனைக் கெட்டிடாச் சீரினன் ஆண்டவன்;"

*

"இத்தகை மாண்புசேர் இறைவன் ஒருவனே
என்றுமே யாவரும் தொழுவதற் குரியவன்;
வித்தகன், நித்தியன்" என்றனர் மாநபி
வெஞ்சினம் கொண்டனன் வேந்தன்"நம்ரூ"
துமே.

*

துன்புகள் செய்தனன் நாள்தொறும்; துன்பினில்
இன்பமே கண்டனர் ஏந்தலும்; மன்னனும்
வன்புமே லோங்கிட "ஈங்கிவர் தன்னையே
வெந்தழல் வீழ்த்தியே 'கொல்லு"மென் றேவினன்.

*

இறைவனுக் காகவே வாழ்பவர், இறையருள்
எண்ணியே தம்மைத்தாம் இறைவசம் ஆக்கியோர்
உறுவரோ துயர்?வரும் பெருமிடர் உன்னியே;
ஓங்குசீர் மாநபி உள்ளமே குலைவரோ ?

*

வானவர் கோன்ஜிபு ரீல்அவண் தோன்றியே,
"வள்ளலே! மாநபி யே'யுமை வாட்டிடும்
ஈனரை மாய்க்கவோ? எரிதழல் தூர்க்கவோ ?
ஏவுக; செய்குவேன் இக்கணம்" என்றனர்.

*

"என்னிறை எங்கிலை யோர்ந்தவன் மற்றையோர்
எவரையும் நோக்கிடேன், உதவியும் ஏற்றிடேன்"
என்றனர் மாநபி, "எம்நபிக் காகவே
எரிதழல் நீகுளிர்ந் திடுக"என் றான்இறை.

*

வள்ளலை வெந்தழல் வீசினர் வன்கணர்;
வெந்தழற் குண்டமோ தண்பொழில் ஆகவே
விள்ளரும் நாதனை வள்ளலும் வாழ்த்தினர்
வையமும் வானமும் வள்ளலை வாழ்த்தின.

முன்னணியும்

பரந்த பாலைவெளியில் பாளையம் அமைத்து எதிரும் புதிருமாக நிற்கின்றன இரண்டு சேனைஅணிகள். ஒன்றில் மாநபியும், மாண்புயர் தோழர்களும் குழுமி இருக்கின்றனர். மற்றோர் அணியில் எதிரிகளெல்லாம் திரண்டு நிற்கின்றனர். கரத்திலே வாளையும், களத்திலே கருத்தையும் வைத்து இரு படையினரும் நிற்கையில், காலம் வல்லவனை வணங்க வேண்டிய நேரம் நெருங்கி விட்டதைச் சுட்டி காட்டியது!

'வேளை வந்து விட்டதே—ஆணை என்ன?' என்று வினவுவதைப் போல அனைவரின் கண்களும் அண்ணலாரை நோக்கின. 'நிற்பது களம்-நடப்பது போர்-எதிரே பகைவர் படை-நேரமோ தொழுகைக் குரியது, என்ன செய்யப் போகிறார்கள், எங்கள் தளபதி?' என்று எல்லோர் கவனமும் பெருமானார்பால் சென்றது.

மாநபியவர்களோ மணல்வெளியை 'முஸல்லா' வாக்கித் தொழுகைக்குத் தயாரானார்கள். உடனே, மறைநெறி ஒழுகுவோரின் அணி இருபிரிவுகளாகப் பிரிந்தது. ஒரு பிரிவினர் பகைவருக்கு வாளும் தோளும் காட்டி நிற்க, மறுபிரிவினர் வள்ளல்நபியின் பின்னே "இமாம் ஜமாஅத்"தாக அணிவகுத்து நின்றனர்.

தொழவேண்டிய தொழுகை இரண்டு ரகஅத்துகள்—தொழ வேண்டிய தோழர்களோ இரு பிரிவினராக-களத்திலும், கருணை நபியின் பின்னுமாக நிற்கின்றனர்.

பெருமானார் அவர்கள் முதல் ரகஅத்தின் இரு ஸஜ்தாக்கள் (நெற்றியை நிலத்தில் வைக்கும் நிலை) முடிந்ததும் எழுந்து நிலையில் நின்றார்கள்-அப்படியே நின்று கொண்டிருந்தார்கள். பின்னின்று தொழுத பெருவீரர் கூட்டம் தாங்களாகவே இரண்டாம் ரகஅத்தைத் தொழுது 'ஸலாம்' கொடுத்து களத்தின் முன்னணிக்கு முடுகியது. அண்ணல் நபியவர்கள் அப்படியே தான், முதல் ரகஅத்தை முடித்த நிலையில் நின்று கொண்டிருந்தார்கள்.

தொழுகையை முடித்த முதல் பிரிவினர் பாதுகாப்புப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள, தொழாத மறுபிரிவினர் தொழுகைக்காக, நிலையிலேயே நிற்கும் நாயகத்திருமேனியின் பின் அணிவகுத்து நின்றனர். அவர்களுடன் இரண்டாம் ரகஅத்தை தொழ ஆரம்பித்தார்கள் பெருமானார் அவர்கள்.

இரண்டாம் ரகஅத்தின் இறுதியில் சாந்திநபியவர்கள் 'ஸலாம்' கொடுக்காமல் அப்படியே இருப்பில் இருந்து விட்டார்கள். பின்னின்று தொழுதவர்கள் தங்களின் முதல் ரகஅத்தை தொடர்ந்து, தாங்களாகவே எழுந்து இரண்டாம் ரகஅத்தைத் முடிக்கும் தறுவாயில், பெருமானார் அவர்கள் எல்லோருடனும் சேர்ந்து 'ஸலாம்' கொடுத்து தொழுகையை முடித்தார்கள். தொழுகை முடிந்ததும் அனைவரும் களத்தில் அணிவகுத்து நின்றனர்.

தாத்துர் ரிகாஉச் சண்டையில், செருகளத்திலும் சென்னி தாழ்த்தி வல்லவனை வணங்கிய வள்ளல் நபியவர்களின் கடமை ஆற்றிய பண்பு வரலாற்றிற்கு ஒரு புதுமை!—முஸ்லிம்களின் வாழ்க்கைக்கு ஓர் அழகிய முன்மாதிரி!

ஆதாரம்: **புகாரீ**

தருபவர்: **எம். ஏ. அக்பர்**

பின்னணியும்

பிற்பகல் வேளை. கதிரவன் வானவீதியில் வெண்முகில்களை வெள்ளித்தகடுகளாக்கிக் கொண்டே, மேற்கு நோக்கி சிரம் சாய்த்துக் கொண்டிருந்தான். புகாராவின் போர்க்களத்திலே மொகலாயப்படைகளும், பல்கு நாட்டுப் படைகளும் தீவிரமாகப் போரில் ஈடுபட்டிருந்தன. எண்ணிக்கையில் எறும்புகளையும், வெட்டுக் கிளிகளையும், விட அதிகமாக இருந்தனர் பல்கு நாட்டுப் படையினர்!

'அஸர்' (பிற்பகல்) தொழுகை வேளை அண்மித்துக் கொண்டிருந்தது. மொகலாயப் படைத்தளபதியின் விழிகளிலே, மூர்க்கமாக நடக்கும் போர்க்காட்சியும், நெஞ்சிலே தொழுகையின் நினைவும் அலை மோதின. தாம் வீட்டிருந்த யானை அம்பாரியினின்று கீழிறங்கினர் இளவரசர்.

'இளவரசே! பகைவரின் படைகள் ஏராளமாக இருக்கின்றன. எதிர்ப்புசிறிதும்குறையாமல், கடுமையாகிக்கொண்டிருக்கின்றது. இந்த அபாய வேளையில் தாங்கள் இறைவணக்கம் புரிய வேண்டாம்' என்று தடுத்துச் சொன்னார்கள், மொலாய வீரர்கள். இக்கட்டான போரிலே, தலைக்கு எப்போது ஆபத்து ஏற்படும் என்று சொல்ல முடியாதல்லவா? இந்த அபாயத்தையே மறைமுகமாக இளவரசருக்கு உணர்த்தினர்கள் சேனை வீரர்கள். ஆனல் இளவரசரோ அவர்களின் சொல்லை ஏற்காது, அம்மகத்தான தலைவனுக்கு தலைவணங்கத் துணிந்து விட்டார்.

"அல்லாஹு...அக்பர்......தொழுகையின் பக்கம் வாருங்கள்...... வெற்றியின் பக்கம் வாருங்கள்..."போர்வீரர்களின் வார்ட்கள் ஒன்றையொன்று மோதும் சத்தம் கேட்கும் களத்தில், 'பாங்கொலி' எழுந்தது. மனிதனின் வல்லமையை முழக்கிடும் களத்திலே, இறைவனின் வல்லமையை முழக்கும் குரல் ஒலித்து. அதை அடுத்து, அமைதியாகவும், பதட்டமின்றியும் செவ்வனே இறை வணக்கத்தைக் குறைவற நிறைவேற்றினர் அவ்ரங்கஸீப்! இளவரசர் இறைவனைத் தொழுத அற்புதமான, அழகிய காட்சி, மொகலாயப் படையினரின் உள்ளங்களை மட்டுமல்லாமல், பகைவரின் நெஞ்சங்களையும் தொட்டுவிட்டது. இந்த உன்னதமான காட்சியைக் கண்டவாறே தங்கள் காவலனிடம் கூறினர் பல்குநாட்டுப்படையினர். அவ்விந்தை சம்பவத்தைக் கேட்டு வியப்பிலாழ்ந்தான் புகாராவின் புரவலன். காணக்கிடைக்காத அக்காட்சியைக் காண அவனுக்குக்கொடுத்து வைக்காவிட்டாலும், அந்த நிகழ்ச்சி, அவன் நெஞ்சத்தை, அவ்ரங்கஸீபைப் பற்றிய உயர்வான எண்ணங்களால் நிறைத்துவிட்டது. நிறைவுற்ற நெஞ்சத்தில், நேசம் மாய்க்கும் நினைவுக்கிடமேது?

'இத்தகைய மனிதப் புனிதருடன் போரிடுவது, தனக்குத்தானே நாசத்தைத் தேடிக் கொள்வதாகும்' என்று உரத்த குரலில் கூறினன் பல்குநாட்டு வேந்தன், அப்துல் அஜீஸ்கான்; போரை நிறுத்தி, அவ்ரங்கஸீபுடன் சமாதான உடன்பாட்டில் கையெழுத்திட்டான்.

இவ்வரிய நிகழ்ச்சி, இஸ்லாமிய அகிலமெங்கும் ஆலம்கீர் ஔரங்கஸீபுக்குக்கு அழியாப்புகழைத் தேடித்தந்துவிட்டது!

ஆதாரம்:
Studies in AURANGAZEB'S REIGN By Sir J. Sarkar.

தருபவர்:
"மகுதூம்"

வாழ்த்துகிறோம்!

இருளகற்றும் பேரொளியாய்
இறை மொழியை எடுத்துரைக்கும் **பிறை**
இஸ்லாமிய வழிமுறையை
இன்பத் தமிழில் எடுத்துரைக்கும் **பிறை**
கவினுறும் நற்கவிதையையும், கருத்தூறும் கட்டுரையும்
கன்னித் தமிழில் எடுத்துரைக்கும் **பிறை**
சீரிய சிறுகதையும், செம்மையுறு பொன்மொழியும்
சிந்தை குளிர சிறப்பாக்கும் நற் **பிறை**
அரும் பெரும் நூல் மதிப்புரையும் அரிய விஞ-விடையும்
அழகு தமிழில் அள்ளித் தரும் நம் **பிறை**

ஓராண்டு

நிறைவு பெற்று மகிழ்வுறும் இந் நல் வேளையில்
அது பல்லாண்டு வாழ்ந்து பயனுறு நற்சேவை
செய்ய நல்வாழ்த்து வாழ்த்துகிறோம்.

ஜாக் நியூஸ் ஏஜன்ஸி
2, அன்ஸாரி நகர், மதுரை.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
198388

Edited and Published by A. M. Meeran 192, Angappa Naick Street, Madras-1.
Printed by P. S. Venugopalassamy Naidu, at Vinodan Press 33, Jones St.,
Madras-1 TAMIL NAD.